தமிழ் வாழ்க

தமிழிலக்கண நுண்மைகள்

ஆய்வுக்கட்டுரைகள்



பாவலரேறு ச. பாலசுந்தரம்

தமிழ் வாழ்க

தமிழிலக்கண நுண்மைகள்

(ஆய்வுக் கட்டுரைகள்)

ஆசிரியர்

பாவலரேறு ச. பாலசுந்தரம்

(தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகை உரையாசிரியர்)

தாமரை வெளியீட்டகம்

367, மேல வீதி, தஞ்சாவூர் - 613 009.

நூலாசிரியன் சொந்த வெளியீடு
வெளியீடு நாள் : நவம்பர் 2000
பக்கம் : 6+170=176

விலை ரூ. 55

காணிக்கை
தமிழ்க்கடல் இலக்கணப்பேரறிஞர்
திரு. தி.வே. கோபாலையர் அவர்கட்கு

அச்சகம் : சன் ஆப்செட் பிரிண்டர்ஸ், மேலவீதி, தஞ்சாவூர்-9.

முகவுரை

உலகில் மக்களால் வழங்கப்பெற்றுவரும் மொழிகள் பல. அவற்றுள்ளும் மிகத் தொன்மையானவை சில அவையாவும் இலக்கிய இலக்கணங்களை உடையவை ஒரு மொழியின் வளத்தையும் அதனை வழங்கிவரும் மக்களின் வரலாறு நாகரிகம் பண்பாடுகளையும் உலகிற்கு எடுத்துக்காட்டுவன அவ்வம்மொழியாளராற் படைக்கப்பெற்ற இலக்கியங்களும் வகுத்துக் கொண்ட இலக்கண நெறி மரபுகளாகும்.

மொழியிலக்கணங்கள் அவ்வம்மொழியாளர் தம் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் மொழியின் அடிப்படை அமைப்பையும் மரபுகளையும் ஆராய்ந்து அம்மொழிகள் இடவேற்றுமையானும் காலப்போக்காலும் சிதைந்து திரிபுறாமல் காத்து மேலும் வளப்படுத்திக் கொள்ள அமைந்த கருவிகளாகும் மொழியிலக்கணம் என்பது ஒரு நாட்டு மக்கள் வாழ்வாங்கு வாழவும் நெறிபிறழுங்கால் நெறிப்படுத்தவும் குற்றம் புரிவோரை ஒறுத்துத் திருத்தவும் அமைக்கப்பெறும் அரசியல் சட்டசாசனம் போன்றவை மொழியிலக்கண மரபுகள் பெருக்கெடுத்தோடும் ஆறுகள் கால்வாய்களுக்கு இருபுறமும் அமைந்த கரைகள் போலவும் கப்பல்களுக்குக் கலங்கரை விளக்கம் போலவும் அமைந்து மொழியழிந்து சிதையாமலும் தடுமாறாமலும் பாதுகாக்கும் மொழிகட்கு அமைத்த காவலரண்களாகும் வலிமையான இலக்கணக் கோட்டுபாடுகள் வாயாதமொழிகள் காலப்போக்கில் சிதைந்து உருமாறிப்போகும். இலக்கணச் செம்மையுடைய மொழி எத்தகைய இடையூறுகளையும் வென்று நிலை பெறும்.

அம்முறையில் பாரதநாட்டில் வழங்கும் மொழிகளுள் தொன்மையானதும் அறிவியல் நோக்குடையதுமாக அமைந்த மொழி செந்தமிழ் மொழியாகும். தமிழ் இலக்கண நூல்கள் மொழிக்கு அடிப்படையாகிய சொல்லாக்கத்திற்கும் சொற்றொடர் ஆக்கத்திற்கும் இவற்றிற்கு அடிப்படையாகிய ஒசை ஒலி எழுத்துகட்கும் இவற்றைக் கருவியாகக் கொண்டு படைக்கப்பெறும் அகமும் புறமுமாகிய பொருளிலக்கியத்திற்கும் இலங்கியங்களை படைக்கும் முறைமைகளையும் பற்றிய நெறிமரபுகளை எழுத்து-சொல்-பொருள் என மூன்று வகையாக

வகுத்துக் கூறுகின்றன. பொருளதிகரத்திற் கூறப்பெறும் பொருள் யாப்பு உவமஇயல்பு இவற்றைத் தனித் தனியாகக் கொண்டு இடைக்காலத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்தாக வகுத்துக்கூறுவர் தமிழ்மொழியில் அமைந்த இலக்கண நூல்களுள் தொன்மையானதும் முழுமையானதுமாகத் திகழ்வது தொல்காப்பியம்.

இடைக்காலத்து எழுந்த விரசோழியம், நேமிநாதம் நன்னூல் யாப்பருங்கலம் இறையனார் களவியல் நம்பியகம் பொருள். தண்டியலங்காரம் முதலியவை பாலி வடமொழிக் கோட்பாடுகளைப்பின்பற்றித் தமிழ் நெறி மரபுகளுக்கும் அறிவியற்கும் முரணாக எழுந்தவை இவற்றுள் எழுத்து-சொல் பற்றிய கோட்பாடுகளின் ஒவ்வாமையை எனது மடைமாறிய தமிழிலக்கண நூல்கள் என்னும் ஆய்வு நூலில் விளக்கியுள்ளேன் இடைக்காலத் தெழுந்த நூல்களையும் பாணினீயம் முதலாகிய வடமொழிக் கோட்பாடுகளையும் பின்பற்றித் தொல்காப்பியத்திற்கு இளம்பூரணார், சேனாவரையர் நச்சினார்க்கினியர் முதலானோர் உரை எழுதியுள்ளனர் அவ்வுரைகளுள் பொருந்தாதவற்றையும் அறிவியலுக்கு எலாதவற்றையும் சுட்டி உண்மையான தமிழ் நெறி மரபுகளைச் சுட்டித் தொல்காப்பியம் முழுமைக்கும் ஓர் ஆராய்ச்சிக் காண்டிகையுரை வரைந்து வெளியிட்டுள்ளேன் தமிழிலக்கண நெறி முறைகளை நன்கு தெரிந்து கொள்ளும் முறையில் எழுத்து-சொல், பொருள், யாப்புப் பற்றிய இலக்கணக்கலைச் சொற்களைத் தொகுத்து அகர நிரல்படுத்தி ஐந்து அகராதி நூல்களையும், தமிழ்ச் சொற்களின் ஆக்கநெறி மரபுகளை விளக்கிப் இலக்கண நூல்களைத் தென்னூல் என்னும் பெயரில் இரண்டு இலக்கண நூல்கள் வரைந்துள்ளேன் தென்னூல் மூலம் மட்டும் 1991 ஆண்டில் வெளியிட்டேன் காண்டிகையுரையுடன் பின்னர் வெளி வரும் சொற்பொருள் விளங்க ஏறத்தாழ 3000 சொற்களுக்கு விளக்கமெழுதி மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளேன் இவையாவும் தமிழ் இலக்கணக் கோட்பாடுகளை அறிந்து கொள்ள அவாவும் ஆசிரியன்மார் ஆய்வாளர், மாணாக்கர் எழுத்தாளர்கட்குக் கையேடாகப் பயன்படும். அவற்றை ஒட்டி வெளிவருவதே இலக்கண நுண்மைகள் என்னும் இந்நூல்.

இந்நூலுள் வரையப்பெற்றுள்ள கட்டுரைகள் யாவும் தமிழ்ப் பல்கலைகழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் புதுச்சேரி மொழியிலக்கியப் பண்பாட்டுக்கழகம் உலத்தமிழராய்ச்சி நிறுவனங்களில் நிகழ்ந்த இலக்கணக் கருத்தரங்கங்களிற் படிக்கப்பெற்றவை இவற்றுள் பல கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப் பொழிலிலும் மதுரைத் தமிழ்ச் சங்கச் செந்தமிழ் இதழிலும் வெளிவந்தவை இவற்றைத் தொகுத்தளிப்பின் இலக்கண ஆய்வாளர்க்குப் பெரிதும் பயன்படும் என்று கருதியே ஒரு நூலாக வெளியிட்டுள்ளேன். இக்கட்டுரைகள் தமிழ் இலக்கண நுட்பங்களைப் பல கோணங்களில் விளங்கக்காட்டும் என்பது என் கருத்து.

இந்நூலை அழகுற அச்சிட்டளித்த சன் ஆப்செட் பிரிண்டர்ஸ் உரிமையாளர் சிங்காரம் அவர்களுக்கும் அச்சுக்கோப்புச் செய்தளித்த சங்கர்பாபுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவில் இந்நூல் வெளிவர அருள்புரியும் இறைவனை வணங்கி மகிழ்கின்றேன்.

தஞ்சாவூர்
நவம்பர் 2000

இங்ஙனம்
ச. பாலசுந்தரம்

உள்ளுறை

			பக்கம்
1.	மொழியும் மக்களும்	...	1
2.	மொழியாக்கத்தின்கண் மூவிடப்பெயர்கள்	...	21
3.	மொழி முதனிலை இறுதிநிலை எழுத்துக்கள்	...	45
4.	தொல்காப்பிய மெய்ம்மயக்க மரபுகள்	...	64
5.	தொல்காப்பியங்கூறும் எழுத்து வடிவம்	...	97
6.	மெய்ம்மயக்கங்கள்	...	110
7.	எழுத்து வரி வடிவும் திரிபுகளும்	...	116
8.	இலக்கண விளக்கச் சூறாவளி	...	122
9.	தொல்காப்பிய நெறியில் செய்யுள் உறுப்புகள்	...	128
10.	உரிச்சொல்	...	143
11.	எச்சவினைக் கோட்பாடுகள்	...	155

1. மொழியும் – மக்களும்

'மொழி' எனப்படுவது மக்கள் தம் ஐம்பொறி வாயிலாகவும், மனப்புலன் வாயிலாகவும் அறிந்த – உணர்ந்த – சிந்தித்த பொருள்களைப் பற்றிப் பிறர் அறியவும், உணரவும் வெளிப்படுத்தும் ஓர் அருவுருவக் கருவியாகும். அது பேச்சு, இசை, வினையம் (நடிப்பு) என முத்திறப்படும் இவற்றைத் தமிழர் இயல், இசை, நாடகம் என்பர்.

பேச்சு மொழி :

அவற்றுள் பேச்சுமொழியாவது ஒலி உருவங்களான் வாய் வழியாகப் பிறர் செவி கருவியாக உணர, ஒருவர் தாம் எண்ணிய கருத்துக்களைக் கேட்போர் சிந்தையில் தோற்றுவிக்கும் நுண் கருவியாயதோர் ஆக்கப் பொருளாகும். அஃது ஒலியாலும், ஒலி அசையாலும் அமைந்து மணிக்கோவை போலச் சிலவும் பலவுமாகத் தொடரும் இயல்பினதாகும். மற்றும் அஃது எதிர்காலத்தும் பயன்படுமுறையில் கட்புலனாக வரிவடிவு செய்தற்கு உரியதாகவும் நிகழும். இதனை இயல்மொழி என்பர்.

இசைமொழி :

பேச்சுமொழி போலத் தனித்தனி உருக்கொண்டு நிகழாமல் ஒன்றும் பலவுமாகிய ஓசை ஒலிகளைக் கொண்டு நீண்டும், மடங்கியும், சுழன்றும் எடுத்தல், படுத்தல், நலிதல், வகையான், வாயான், வெளிப்பட்டுக் கேட்போர்கண் பல்வேறு உணர்வுகளைத் தோற்றுவிக்கும் தொடரோசையாகும் (கருவியிசை என்பது வேறு) இசை மொழியும் உணர்வுகளைத் தோற்றுவிக்குமாயினும் இசைப்போர் எண்ணிய கருத்துக்களை எல்லாம் கேட்போரிடத்துப் பிழையற உணர்த்தும் ஆற்றல் வாயாமை யானும் எழுத்துருவில் வரிவடிவம் பெற்றுச் சொல்லாக நடைபெறுதலின்மையானும், மொழி என்னும் சிறப்புப் பெயர் பெறுதற்கு ஏலாதாயிற்று.

வினையமொழி :

(நாடக நாட்டியச் செய்கைமொழி) வினையமொழி என்பது இயலிசை மொழிகளினின்றும் பிறப்பால் வேறுபட்டதாகும் இயலிசை மொழிகள் வாய்வழித்தோன்றிச் செவிப்புலனாகுபவை வினையமொழி உடலுறுப் பசைவுகளான் தோன்றிக் கட்புலனாகுவது வினையத்தால் உணர்த்தப்படும்

கருத்துக்கள் இயல்மொழிச் சொல்லுருவங்களாலேயே மனத்தின் வழி உணரப்படும் இம்மொழி முன்னிலையாக அமர்ந்தார்க்கன்றிப் வரிவடிவம் செய்து கொள்ளற்கு ஆகாமையானும் மொழி என்னும் சிறப்பிற்குரிமை பெறாதாயிற்று. எனினும் பேச்சுமொழிக்கு வினையமொழியே அடிப்படையும் மூலமுமாகும், இசை பேச்சு மொழிக்கு முதற் காரணமாகும் வினையம் துணைக் காரணமாகும் உணர்வு நிமித்த காரணமாகும்.

பேச்சு மொழியும் பொருளியையும் :

இயல்மொழி ஆக்கத்தின்கண் ஒலிஓசைகள் மணிமணியாகக் கோவையுற்றுக் கருத்துணர்த்தும் சொல்லுக்கும், உணர்த்தப்படும் பொருளுக்கும் உள்ள இயைபினை உள்ளபடி ஆராய்ந்து காணின் பொருளுக்கும் ஐம்பொறிகளின் செயலாகிய புலனுக்கும் மனவுணர்வாகிய புலனுக்கும் ஏற்படும் தொடர்பினை ஒலி உருவங்களைக் கொண்டு செவியாகிய ஒரே புலனால் உணர மரபுவகையான் உணர்த்தும் அறிவியைபைத் தவிரச் சொல்லுக்கும் பொருளுக்கும் வேறு எவ்வகையான பருமைத் தொடர்புகளும் இல்லை.

சொல் தோன்றுவதற்கு அடிப்படை :

மக்களின் உடம்போடும் உணர்வோடும் தொடர்புடையனவாகத் திகழும் பொருள்களே சொல் தோன்றுவதற்கு அடிப்படையாகும். அப்பொருள்கள் பருப்பொருள், நுண்பொருள், காட்சிப்பொருள், கருத்துப்பொருள், உள்பொருள் இல்பொருள் என்றும் அருவப்பொருள் உருவப்பொருள் அருவுருவப்பொருள் என்றும் பாகுபாடு பெறும். அவற்றுள் அருவப்பொருள் என்பது பண்புப்பொருள் மெய்யுணர்வுப் பொருள் (தத்துவம்) என்றும், இன்மைப்பொருள் என்பது ஒருவழியின்மை முழுதும் இன்மை என்றும் விரிந்துவரும்.

ஐம்பூதங்களின் கலப்பினால் உருப்பெற்றிலங்குவன யாவும் பருப்பொருள்களாம். வெம்மை, குளிர்ச்சி, ஆகாயம், அறிவு, ஆண்மை, என்றாற்போல்வன நுண்பொருள்களாம், அறம், பொருள், இன்பம் என வருபவை உள்பொருள்களாம். குதிரைக்கொம்பு, ஆகாயத்தாமரை என்பவை தனித்தனிச் சொல்லாக நின்றவழிப் பொருளுணர்த்தி உள்பொருளாகவும் இணைந்தவழி இல்பொருளாகவும் அமையும் இவை போல்வன ஒருவழியின்மைப் பொருளாம். ஆயிரந்தலை அரக்கன், ஊமையன் பாடியபாட்டு என்றாற்போல்வன முழுதும் இன்மைப்பொருளாம். கண்ணாற்

காணும் வடிவம், செவியால் நுகரும் இசை, மூக்கால் உணரும் மணம், நாவாற்சுவைக்கும் சுவை உடம்பால் உணரும் வெப்பதட்பம் போல்பவை காட்சிப்பொருளாம். ஈண்டுக் காட்சி என்றது புலனுணரும் அறிவை, மற்று, புத்தேளிர் உலகம் பேய், பூதம், நரகம் என்றாற்போல்வன கருத்துப்பொருளாம். ஆகாயம், தென்றல், மணம் என்றாற்போல்வன அருவப்பொருளாம், இருள், ஒலி என்றாற்போல்வனகட்புலனாகியும் தொட்டுணர்தற்கு இயலாதனவாய் அமைதலின் அருவுருவப்பொருள்களாம், மழையும் நெருப்பும் போல்வனவும், மலைகடல் போல்வனவும் மாவும் புள்ளும் மரமும் செடியும் போல்வனவும் உருவப்பொருள்களாம்.

வாய்மை, பொய்மை, அன்பு, அருள் என்றாற்போல்வன அருவப்பொருள்களுள் குணப் பொருள்களாம், அறம், பாவம், புண்ணியம், மாயை, தெய்வம், கன்மம், கடவுள், ஆன்மா என்றாற்போல்வன அருவருப்பொருள்களுள் தத்துவப்பொருள்களாம். மேற்கூறிய பொருள்களின் செயற்பாடுகளும், நிலைப்பாடுகளும் உள்பொருளாய்ப் பருப்பொருளாகவும் நுண்பொருளாகவும் அடங்கும்.

இப்பொருள்களை இடமாகக் கொண்டு மக்களால் தோற்றுவிக்கப்பெறும் ஒலிக்குறியீடுகளே மொழிக்கு உறுப்பாக ஒன்றுபட்டு நிகழும் சொற்களாகும். இங்ஙனம் சொற்கள் தோன்றுவதற்கு இடனாகிய பொருள்களைத் தமிழ்நூலார் இருவகையாகப் பிரித்து அவை இடமாகச் சொற்கள்இசைக்கும் என்பர். இதனை

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிருதிணையின் இசைக்குமன சொல்லே. (தொல் சொல்.1)

எனத் தொல்காப்பியம் கூறுகின்றது.

தமிழ்நூலார் இங்ஙனம் பொருள்களை இருவகையாகப் பிரித்தமைக்குக் காரணம். மொழியை (சொற்களை) உண்டாக்குபவரும், அதனைப் பயன்படுத்துபவரும், காப்பவரும், வளர்ப்பவரும், நாளும் நாளும் நாகரித்தாலும், பண்பாட்டினாலும் உயர்ந்துவருபவரும் மக்கள் மட்டுமேயாதலின் அவரைத் தனியே பிரித்து உயர்திணை என்றும், பிற யாவற்றையும் அஃறிணை என்றும் குறியீடு செய்தனர். இவ் அறிவியல் நுட்பத்தை உணராத இடைக்காலப் பிற்கால நூலோர் மக்கள், தேவர், நரகர் உயர்திணை எனக்கூறித் தமிழ்நெறியையும், அறிவியலையும் மாசுபடுத்தினர்.

சொற்களின் தோற்றத்திற்குக் காரணம்

உயிர் உணர்வுடைய உயிரினங்களுள் மக்களும் ஓர் இனமே எனினும், இன்ப துன்பங்களையும், நன்மை தீமைகளையும் முக்காலங்களின் நிலைகளையும் படைத்தல், காத்தல், அழித்தல் பற்றிய செயற்பாடுகளையும் உணர்தற்கும், உணர்த்தற்கும் உரிய சிந்தனை என்னும் அகக்கரணத்தையும், அதற்குப் பெட்டகமாகிய மூளை என்னும் உறுப்பினையும் பிற உயிரினங்களினின்றும் வேறுபட்டதாகப் பெற்றிருத்தலானும் எவ்வகைப்பட்ட ஓசை ஒலிகளையும் பலுக்குதற்கு (உச்சரிப்பதற்கு) ஏற்ற வாயமைப்பையும், குரலமைப்பையும் பெற்றிருத்தலானும் மக்கள் தம் கருத்துக்களை ஒலி உருவாக்கி வெளிப்படுத்தும் பேசுதல் என்னும் செயலைப் படிப்படியாகப் பெற்றனர். அங்ஙனம் மக்கள் நிகழ்த்தும் பேச்சுக்களே மொழி என்னும் குறியீடு பெற்றதாகும்.

மக்கள் கண், மூக்கு, செவி முதலாகிய அறிகருவிகளையும் கை கால் வாய் முதலிய தொழிற்கருவிகளையும், மனம் புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் அகக்கருவிகளையும் பெற்று அவற்றான் இன்ப துன்ப உணர்வுகளைக் கொள்பவராதலின் அவ்வுணர்வுகளையும் பிறர் கேட்ப வெளிப்படுத்த எண்ணுங்கால் தோன்றும் ஆர்வமும் முயற்சியுமே பேச்சுமொழித் தோற்றத்திற்குரிய பெரிய காரணமாகும். மற்று மனிதன்தான் செய்து விட்ட பொல்லாங்கான செயல்பற்றியும் செய்யக்கருதும் தீயசெயல்பற்றியும் தன் மெய்ப்பாடுகளால் பிறர் அறியாவண்ணம் தன் எண்ணங்களை மறைப்பதற்காக எழும் அச்சமும் சிறுபான்மை காரணமாகும்.

தமிழ் நூலார் பேச்சுமொழிக்குக் காரணமாகிய உணர்வுகளை மூவகையுள் அடக்கிக் கூறுவர் அவையாவன செவியுணர்வாகிய ஒலிப்புணர்வு, பிறபொறிகளின் உணர்வாகிய சுவையுணர்வு பல்வேறுபட்ட குறிப்புகளை உணரும் மன உணர்வு. இவையே சொற்கள் பிறப்பதற்குரிய காரணம் என்பதைத் தொல்காப்பியம்.

உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின் .....
உயிரும் புள்ளியும் இறுதியாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச் சொற்கிளவி.

(தொல்–எழு–குற்–76)

என்றும்,

உரிச்சொற் கிளவி விரிக்குங்காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும்தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடுமாறி .....

(தொல்–சொ–உரி–1)

முற்றி நிற்கும் என்றும் கூறுகின்றது.

இனி மொழித் தோற்றத்தின் அடிப்படையையும் தோன்றும் காரணத்தையும் தோன்றி வழங்கும் முறைமையையும் அறிவியல் கோணத்திற் காண்போம்.

உயர்திணையும் அஃறிணையுமாகிய பொருள்கள் அகவயமாகவும் புறவயமாகவும் மக்களொடு தொடர்புறும் பொழுது அவற்றின் வடிவம், பண்பு, செயல், தரும்பயன் ஆகியவற்றால் புலன்களின் வாயிலாகச் சிந்தையில் தோன்றும் இன்பமும் துன்பமும் ஆகிய அறிவுணர்வே மொழித்தோற்றத்திற்கு மூலமாகின்றது. அவ்வழித்தோன்றுவது தமக்கு மட்டுமே புலனாகுதலின் அதனை அகமொழி எனலாம்.

அங்ஙனம் இன்ப துன்ப உணர்வுகளான் சிந்தனை வழி உருக்கொண்ட கருத்தினைப் பிறரும் அறிய வாய்வழியாக வெளிப்படுத்தும் செயலினைப் புறமொழி எனலாம் எனவே மக்கள் தம் எண்ணங்களைப் பிறரறிய வெளிப்படுத்தும் விழைவே புறமொழி தோன்றுதற்குக் காரணமாகிறது. இதனைப் பின்வருமாறு கணிக்கலாம்.

இருதிணைப் பொருள் + அறிவுணர்வு → அகமொழி

சிந்தை வழிப்பட்ட கருத்து + வாய்வழி வெளிப்படுத்தும் தொழில் → செவிப்புலனாகும் புறமொழி

இவை இரண்டையும் ஒரு முக்கோணத்திற்காணின்

இருதிணைப் பொருள் + மக்கள் உணர்வு

உணர்வின் கருத்து + வெளிப்படுத்தும் தொழில்

↓

மொழி

இனி மொழியியங்கும் காரணத்தையும் நிலையையும் காண்போம். ஒரு பொருளின் வடிவு – பண்பு – செயல் – பயன் ஆகியவை பற்றி முழுதும் தெரியாமலோ ஒரு கூறு தெரிந்து மற்றைய கூறுகள் தெரியாமலோ உள்ள நிலையில் அப்பொருள் பற்றி அறிய விரும்பும் மன உணர்ச்சியின் வெளிப்பாடு மொழியியக்கத்திற்குரிய காரணங்களுள் ஒன்றாகும். இதனை வினாநிலை என்பர்.

ஒருவர் ஒரு பொருள் பற்றி அறிய விரும்பும் குறிப்பினைக் காணுமிடத்தும் அன்றி ஒருவர் வெளிப்படையாக வினாவை எழுப்ப நேர்ந்தவிடத்தும் அன்றி ஒருவரிடத்துத் தாம் ஒன்றனை அறிவிக்க விழையுமிடத்தும் ஒருவர் நிகழ்த்தும் கருத்து வெளிப்பாடு மொழியியங்குதற்குரிய மற்றொரு காரணமாகும். இதனைச் செப்பு (விடை) நிலை என்பர்.

இங்ஙனம் செப்பும் வினாவுமாகவே மொழிகள் யாவும் இயங்கும் இதனைப் பின்வருமாறு கணிக்கலாம் :–

அறிதலை விரும்பும் வினா + அறிவுறுக்கும் விடை = மொழியியக்கம். மொழி என்பது இங்ஙனம் செப்பும் வினாவுமாகவே நிகழும் என்பதனைத் தமிழ்நூலார் கண்டுணர்த்தி அவை வழாமல் நிகழ்தற்குரிய விதிகளையும் கூறுவர். இதனைத் தொல்காப்பியம்.

செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் (சொல்–கிள–13)
என விளம்புகின்றது.

இனி, புறநிகழ்வுகளான் மக்களிடத்து எழும் உணர்வுகளாவன : அச்சம், சினம், நேயம், பகை, வீறு, அவா, இரக்கம், வெம்மை, தண்மை, துக்கம், மகிழ்ச்சி, வெறுப்பு முதலியவைகளாம்.

அகத்து நிகழ்வான் எழும் உணர்வுகளாவன : பசி, தாகம், காமம், கிளர்ச்சி, அமைதி, நோய் காரணமாக எழும் சோர்வு, வலி அமைதியின்மை, மலசங்களைக் கழிக்கும் உணர்வு முதலியவைகளாகும். அகவுணர்வுகள் எழுதற்குக் காரணம், உயிரோடு கூடிய உடம்பின் இயற்கையமைப்பேயாகும். புறவுணர்வுகள் தோன்றக் காரணம் ஐவகைச் செயற்பொறிகள் (கன்மேந்திரியம்) ஐவகை அறிவுப்பொறிகள் (ஞானேந்திரியம்) ஆகிய

புறத்துறுப்புக்களாகியவற்றோடு மனம் என்னும் அகத்துறுப்பாகியவற்றின் குறிப்புக்களேயாம்.

உணர்வுகள் யாவும் புலன்களாலும் மனத்தினாலும் சிந்தையினிடமாகத் தோன்றுவனவேயாகும். சிந்திக்கும் ஆற்றல் மக்களுடம்பிற்கே சிறப்பாக அமைந்ததொன்றாதலின் மொழியாக்கமும் அவர் கண்ணதாயிற்று பொருளுணர்வுச் சிந்தனைக்குத் தலையாய பொறிகளாகக் கண்ணையும், செவியையும். மனத்தையும் குறிப்பிடுவர் தமிழ் நூலார். இதனைத் தொல்காப்பியம்

> கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரும்
> உணர்வுடை மாந்தர்க்கல்லது தெரியின்
> நன்னயப்பொருள்கோள் எண்ணருங்குரைத்தே (மெய்–27)

என விளம்புகின்றது நுண்ணிதின் *உணர்தலாவது மனப்பொறியான் அதன்* பரப்பெல்லாம் முற்ற உணர்தல்.

சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு :-

சொற்பொருள் தொடர்பினைக் காணுமுன் சொற்கள் தோன்றுதற்கிடனாகிய பொருள்கள் தோன்றுதற்குரிய நில உலகினையும் உலகத்தின் சூழ்நிலைகளையும் ஒரு சிறிது காண்போம்.

உலகம் என்பது மண் முதலியவற்றின் திரண்டதொரு பொருளாயினும் அதன் நில அமைப்பும் நீர்நிலைகளும் பருவ காலங்களும் பொழுதுகளும் கதிரவன் முதலாய கோள்களின் ஒளியும் நாள் மீன்களின் பார்வையும் இடந்தொறும் வேறுபடுதலின் அவ்வச்சூழ்நிலை அமைவிற்கேற்ப ஓரறிவுயிர் முதலாக ஐயறிவுயிர் ஈறாகத் தோன்றும் அஃறிணையயாய கருப்பொருள்களும் ஆறறிவுயிராகிய மக்கள் என்னும் உயர்திணையாய கருப்பொருளும் இயற்கைச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வேறுபடும். அவ்வாறே நீர்நிலைகளும் காடும், மலையும், காற்றும் வெப்ப தட்பங்களும் வேறுபடும். நீர்வாழ் உயிர்களும் நீர்ப்படு பொருள்களும் அந்நிலையினவே.

மனித உணர்வுகள் உலகத்திற்குப் பொதுவாயினும் மேற்கூறிய கருப்பொருள் முதற்பொருள்களின் சூழலுக்கு ஏற்ப மக்களின் அகப்புற உணர்வுகள் மாறுபடும்.

நானிலம் என்னும் சொல் அவ்வேறுபாட்டினைப் பொதுவாக உணர்த்தும். நான்காவன மலைநிலம், காட்டுநிலம், உழுது பயன்கொள்ளுதற்கு ஏதுவாய் நீர்ப்பயன் அமைந்துள்ள மருத நிலம் கடலைச் சார்ந்து கிடக்கும் நெய்தல் நிலமுமாம். இவற்றொடு இவற்றின் இடையீடாகப் பாழ்பட்டுக் கிடக்கும் நிலம் பாலை எனப்படும். பரந்த மணல் வெளியும் பாலை எனப்படும். தமிழ்நூலார் நானிலத்தின் திரிபாக அமையும் பாலையையும் ஒரு நிலமாகக்கூட்டி ஐந்நிலம் என்பர். ஐந்நிலம் இலக்கிய வழக்கில் ஐந்திணை நிலம் எனப்படும்.

ஐவகை நிலங்களில் தோன்றும் மா, மரம், புள், நீர், ஊர் நீர்வாழ் உயிர்கள் உணவுப் பொருள்கள் முதலாகிய கருப்பொருள்களுள் அவ்வந்நிலத்திற்கே சிறப்பாக உரியனவும். கலந்துவருவனவுமாக அமைவதைக் காணலாம். அவ்வாறே கருப்பொருளுள் ஒரு பிரிவான மக்களும் அவர் மேற்கொள்ளும் தொழிலும் ஒழுக்கமும், யாழ், பறை, இசை தெய்வக் கொள்கைகளும் வேறுபடும் என்பதைத் தமிழ் நூலார் நுணுகி நோக்கிச் சிறப்பான வேறுபாடுகள் இன்ன இன்னவை என இலக்கிய நோக்கிற் கூறி இலக்கண விதிகளை வகுத்துள்ளனர்.

நிலமக்கள் ஒருவரோடொருவர் பல்வேறு காரணங்களான் கலப்புறும் கலப்பினானும் பிறவகையானும் அம்மக்களின் தொழில் ஒழுக்கம் முதலாயவை பொதுமைப்படுதலும் மாறி நிகழ்தலும் உண்டு எனவும் கொள்வர். இவ்வேறுபாடுகளின் அடிப்படையின்தான் மொழியாலாகும் இலக்கியங்கள் தோன்றும் தோன்றவேண்டும் என இலக்கியக் கொள்கைகளை வகுத்துள்ளனர். இவற்றைச் சுருக்கமாகத் தொல்காப்பியம் பின்வருமாறு கூறும்,

நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே (தொல்–அகத்–2)

முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறை சிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங்காலை (தொல்–அகத்–3)

முதலெனப்படுவது நிலம் பொழுதிரண்டின்
இயல்பென மொழிப இயல் புணர்ந்தோரே (தொல்–அகத்–4)

தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப (தொல்–அகத்–20)

எந்நில மருங்கின் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும் (தொல்–அகத்–21)

ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே (தொல்–அகத்–22)

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங்காலை திணைக்குரிப் பொருளே (தொல்–அகத்–16)

உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே (தொல்–அகத்–15)

இங்ஙனம் நிலம், நீர், தீ, வளி, வான் என்னும் பூதக் கூறுகளான் அமைந்த உலகும் அவை மயங்கியமைந்த கலப்பினால் தோன்றிய உலகப் பொருள்களும் மக்களுணர்வோடு தொடர்பு படுமிடத்துச் சொற்கள் தோன்றுகின்றன. பேச்சொலியாகிய சொல்லும் ஐம்பூதங்களொடு தொடர்புடையனவாகும் ஊன்றி நோக்கின் மொழி என்பது ஐம்பூதங்களும் மயங்கிக் கலந்துள்ளதொரு உள்பொருள் என்பதைத் தெரியலாம். அஃதாவது

சொல் என்பது செவிக்குப்புலனாகும் நாத வளியாகும் (நாதம் = வெப்பஒலி) ஒலி ஆகாயமென்னும் பூதத்தின் கூறாகும். ஒலி தனியே தோன்றாது பிறவற்றின் அசைவாலும் செறிவாலும் தோன்றுவதாகும் அச்செறிவு மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த வழித் தோன்றும் செங்குழம்பு போலத் தம்மினின்றும் வேறுபட்ட நாதத்தைத் தோற்றுவித்தலின் அது ஆகாய பூதத்தின் காரியமாய் அமைகின்றது. ஒலியாகிய நாதத்தைக் கண்டத்தினின்று வெளிப்படுப்பது உயிர்ப்புக் காற்றாகிய வளியாகும். உயிர்க்காற்றும் நாதமும் தம்முட் பிரிக்கவியலாத நிலையில் மயங்கிக் கலந்து வெளிப்படும். காற்றென்பது தீயும் நீரும் கலந்தமைந்ததொரு பூதக் கூறாதலின் அவற்றின் கூறுகள் பேச்சொலியாகிய சொல்லில் அமைந்துள்ளன.

இனி, சொல்லாகிய ஒலி நாவும் அண்ணமும் பல்லும் இதழும் கண்டமும் மூக்குமாகிய உறுப்புக்களின் தொழிலாற் பிறத்தலின் பிருதுவி என்னும் மண்ணினது கூறும் சொல்லின்கண் அமைந்துள்ளமை விளங்கும். அவ்வாற்றாள் சொல்லானாகும் மொழி என்பது ஐம்பூதங்களின் கலவையால் அமைந்ததொரு பொருள் என்பதும் அது செவிக்குப் புலனாதலான் உருவுடையதென்பதும் வாயுறுப்புக்களின் தொழில்களாற்பிறத்தலின் வடிவம் உடையதென்பதும் நன்கு விளங்கும். அவ்வாற்றான் ஐம்பூதங்களின் கலப்பினால் ஆகும் சொற்களுக்கும் இயற்கை நியதியான் தொடர்புள்ளமை அறியலாம்.

எனினும் சொற்களுக்கும் பொருள்களுக்கும் உள்ள தொடர்பினை இது இதனான் இச்சொற் குறியீடு பெற்றது எனக் காட்சியளவையான் சுட்டிக் காட்டுதல் எளிதன்று. ஆயினும் அவை காரணமின்றித் தோன்றமாட்டா என்பது உணரப்படும்.

இனி எல்லாச் சொற்களும் காரணம் உடையனவே என்பதும் அக்காரணம் பூதங்களின் கலப்பினால் ஆகும் நியதி என்பதும் தமிழ்நூலார் கொள்கையாகும். இக்கொள்கையினை

நிலம் தீநீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும் (தொல்–மரவு–91)

என்றும்,

மொழிப்பொருட் காரணம் விழிப்பத்தோரன்றா (தொல்–சொல்–உரி)

என்றும் கூறுகின்றனர். உதாரணமாக,

ஒருவன் தன்முன் நிற்பவனை அருகே அழைக்கப் பயன்படும் சொல் தமிழில் 'வா' என்பதாகும். இச்சொல் வாயின் கீழிதழ் சிறிது உள்மடிந்த நிலையிற் பிறத்தலான் அம்மெய்பாட்டுக் காட்சியே அச்செயலுக்குரிய சொற்குறியீடாக இருத்தலைக் காணலாம். அவ்வாறே 'போ' என்னும்போது வாயின் ஈரிதழ்களும் முன்னோக்கிக் குவிந்து விரிதலைக் காணலாம்.

தமிழில் பகையை உணர்த்தும் சொல் 'தெவ்' என்பதாகும். 'தெவ்' என்னுமிடத்து மேல்வாயின் பற்கள் மடிந்த கீழிதழை அழுந்தி வெறுப்புக்குரிய

மெய்ப்பாட்டோடு நிற்பதைக் காணலாம். மூ என்னும் போது ஈரிதழும் குவிந்து முன் முன்னிற்கும் உறுப்பு மூக்கு எனக்குறியீடு பெறுவதைக் காணலாம் 'க்கு' என்பது விடுப்போசையாதலின் அவையும் சேர்ந்தே இச்சொல் ஆக்கப் பெற்றுள்ளது. காற்று முதலியவற்றால் ஒரு பொருளிடத்து எழும் ஓசை 'ஒல்' எனச் செவிக்குப் புலனாதலின் நாவினின்றும் எழுவதாகிய ஒலி சொல் என ஆக்கப் பெறுகிறது. 'ச்' என்பது நாவைக் குறிக்கும் குறிப்பொலி. சுவை என்பது நாவின் செயலாகிய சுவையைக் குறிக்கும் குறியீடாதலை அறியலாம். ஒலியானது இசை, ஓசை எனக் குறியீடு பெற்றுள்ளமைக்குக் காரணமும் அதுவே.

இவ்வாறே மரம் செடி கொடிகளின் வளர்ச்சி பெறும் பயன் ஆகியவை பற்றியும் விலங்கினம், பறவையினம் ஊர்வன நீர்வாழ்வன பற்றியும் அமைந்துள்ள தொடக்ககாலச் சொற்குறியீடுகள் அவற்றின் குரல்ஒலி, வடிவம், அவை ஏற்படுத்தும் இன்ப துன்பப்பயன்கள், காட்சி, சுவை ஆகியவற்றுள் எழும் மனக்குறிப்பிற்கேற்ப அமைந்துள்ளமை காணலாம். பண்பாடும் நாகரிகமும் முதிரமுதிரப் பழையசொற்கள் மறைந்து அவற்றைக் குறித்து வேறு சொற்கள் தோன்றும், காரணம் அழகுணர்ச்சியும் கற்பனைத்திறனுமாகும்.

இனி மொழி வளர்ச்சியை மூன்று நிலைகளாக வகுத்துக் காணலாம்.

வளர்ச்சி நிலை 1 :-

பழங்கற்காலத்து மக்களின் உணர்வு வெளிப்பாடு ஏனைய விலங்கினம் பறவையினங்களைப் போலவே ஒலிக்குறியீடுகளாகவே நிகழ்ந்திருக்கும். புதிய கற்காலம் தொடங்கி உலோக காலத்தை எட்டும் நிலைக்கு மக்களின் நாகரிகம் வளர்ச்சியுற்ற கால கட்டங்களில் மக்கள் தனிநிலை இணைநிலை (குடும்ப நிலை) வாழ்க்கை முறையினின்று வளர்ந்து கூட்டுநிலை குழுநிலை (சமுதாய நிலை) வாழ்க்கை முறை தொடங்கிய எல்லைகளில், உழவு முதலிய தொழில்களும் வாணிகம் முதலாய செயல்களும் பெருகி அரசும் அதன் அங்கங்களும் ஓவியம், சிற்பம், கட்டிடம் முதலாய கலைகளும், தெய்வ நம்பிக்கையும் அது பற்றிய சமயக் கொள்கைகளும், அறநெறி ஒழுக்கநெறி பற்றிய சட்டதிட்டங்களும் தோன்றிப் பண்பாடும் நாகரிகமும் வளர்கின்ற நிலையில் அவ்வத்துறைகளுக்குரிய குறியீட்டுச் சொற்கள் ஒருசில அடிப்படையில் ஆக்கம் பெற்றுப் பல்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

வளர்ச்சி நிலை 2 :-

வளர்ச்சிநிலை ஒன்றில் தோன்றிய சொற்கள் பெரும்பாலும் ஒரு சொல் ஓரிரு பொருளையே தரும்; வெளிப்படையாக அமைந்திருக்கும். பின்னர், ஆட்சிமுறை – போரிடுதல் – வாழ்க்கை முறை நீதி ஒழுக்கமுறை – சமயநெறி சமயவழிபாடு தத்துவச்சிந்தனை இலக்கியப்படைப்பு – இலக்கணச்சிந்தனை முதலியவை வளரத் தொடங்கிய கால எல்லைகளில் ஒரு பொருள் தரும் பல சொற்களும் பலபொருள் தரும் ஒரு சொற்களும் தோன்றும் இவைபோல்வனவற்றைத் திரி. சொற்கள் என்பர் மற்று ஒற்றாய்தல் தூதுபோதல் முதலாய அரச வினைபற்றி மொழி வேறுபட்ட பக்கத்து நாடுகளோடும் சிறுபான்மை கடல் கடந்த நாடுகளோடும் ஏற்படும் தொடர்புகளாலும், வணிகத் தொடர்புகாளலும் அயல்மொழிச் சொற்கள் ஓரளவு கலப்புறும் அங்ஙனம் திசைச்சொற்களாக வருபவை தற்சமமாகவும் தற்பவமாகவும் கலப்புறும்.

அவ்வாற்றான் காலந்ததோறும் சொற்கள் நுணுகியும் விரிந்தும் செம்பொருள் கொடாமல் குறிப்புப் பொருள்தரும் நிலையும் வளரும். கற்பனை வளம் பெருகப் பெருக ஒப்புமை பற்றியும் சார்பு பற்றியும் சொற்கள் ஆக்கம் பெறும் இந்நிலையில் ஒரு சொல் தோன்றிய காலத்தில் தந்த பொருளோடு பல கோணங்களில் விரிந்து பொருள் தரும். உலகியல் வழக்கொடு நாடக வழக்கும் இணைத்துச் செய்யப்படும் இலக்கியங்களில் புதிய புதிய சொற்கள் ஆக்கம் பெறும். மேலும் ஒரு மொழியில் தோன்றிய இலக்கியம் முதலியவற்றைப் பிறிதொரு மொழியில் பெயர்க்க நேருமிடத்து மொழிபெயர்க்கப் பெறும் மொழிச்சொற்களேயன்றி அம்மொழிக் கோட்பாடுகளில் முரணில்லாதவை பெயர்த்த மொழிகளில் கலப்புறும் மொழி பெயர்ப்பின்கண் புதிய தனிநிலைச் சொற்களும் ஒட்டுநிலைச் சொற்களும் ஆக்கம் பெறும்.

வளர்ச்சி நிலை 3 :-

மக்களின் அறிவின்பத் தேவைகளும் புலனின்பத் தேவைகளும், ஆதிபத்திய மனப்பான்மையும் பெருகப் பெருக இயற்கைப் பொருளைக் கொண்டு பல்வேறு செயற்கைப் பொருளை விளைவிக்கும் விஞ்ஞான அறிவு பெருகப் பெருகப் புதிய கண்டுபிடிப்புகள் நிகழும். வானவியல், கோளியல், கணிதவியல், பொறியியல், கருவியியல் முதலிய பல்வேறு துறைகள் அறிவியியல் துறையில் வளர வளர அவ்வவற்றிற்குச் சொற்கள் ஆக்கம்பெறும். அவை பழைய சொற்களை ஒட்டியும் சிறிது வேறுபட்டும் ஆக்கம் பெற்றுப் பயிற்று முறையில் வழங்கி வரும். விஞ்ஞான வளர்ச்சி காரணமாகச் செயற்கைப்பொருள்கள் காலந்தோறும் பெருகி வருதலான் சொற்களும் பெருகிவரும்.

மொழிபெயர்ப்பும் முட்டுப்பாடும் :-

எந்த ஒரு மொழியாயினும் அம்மொழியாளர் தம் விஞ்ஞான அறிவு வளர்ச்சி காரணமாகத் தோற்றுவிக்கும் புதுப்படைப்புகளின் பெருக்கத்திற்கேற்பவே அம்மொழியில் சொற்கள் ஆக்கமுறும்.

ஒரு மொழியாளர் தம்மொழி வாயிலாக அறிவியல் ஆராய்ச்சி செய்ய முன்வரும் நிலையில், பிற மொழியில் வளர்ந்துள்ள அறிவியல் கருத்துக்களையும், தொழில் நுணுக்கச் செய்திகளையும் தம் மொழியிற் பெயர்த்துக்கொள்ள விழைவது இயல்பே. மொழிபெயர்ப்பு முயற்சியில் ஈடுபட்டு அம்மொழிச் சொற்களைத் தம் மொழியிற் பெயர்க்குமிடத்து அச்சொல்லின் பொருளுக்கு ஒத்த பொருள்தரும் சொல்லால் பெயர்ப்பர், அப்பொருளுடைய சொல்தம் மொழியில் இல்லாவிடின் அச்சொல்லையே தம்மொழி உச்சரிப்பு அமைப்பிற்கேற்பச் சிறிது திரித்து மேற்கொள்ள நேரும். அவ்வகைச் சொற்கள் அம்மொழிக்குப் புதியனவாக அமையும். அன்றி உள்ளவாறே ஒலிபெயர்ப்பின் அஃது அயல்மொழிச் சொல்லாயே நிற்கும். அறிவியற் சிந்தனையாளர் எம்மொழியில் சிந்தித்துப் புதுப்பொருள்களைக் கண்டுபிடிக்கின்றனரோ அம்மொழியிற்றான் அவ்வறிவியற் சொற்கள் ஆக்கம் பெறும்.

சொல்லாக்கமும் தேக்கமும் :-

மொழி மக்களாற் படைக்கப்பெறும் பொருளாகலின் எம் மொழிக்குரியவராயினும் அவர்தம் மெய்யியற் சிந்தனை, அறிவியற் சிந்தனை – தொழில் நுணுக்கம், கலை நுணுக்கம் பற்றிய சிந்தனை – அவற்றின் வளர்ச்சி கண்டுபிடிப்புகள் இலக்கியப் படைப்பு ஆகியவற்றிற்கேற்பவே அம்மொழியிற் சொற்கள் புதியனவாக ஆக்கம் பெறும் அத்துறைகளில் வளராதார் மொழி அவ்வாற்றலை இழந்துவிடும்.

மருத்துவம், பொறியியல், மின்னியல் போன்ற துறைகளைத் தமிழிற் கற்பிக்க இயலவில்லை எனின் அக்குறை அம்மொழியாளர் குறையே தவிர மொழியின் குறையன்று. (எழுத்தொலிகள் குறைவாக உள்ளன எனின் ஆங்கில மொழியாளர் போலச் சிறப்பொலிகளை உள்ள எழுத்துக்களைக் கொண்டே அடையாளம் செய்து கொள்ளலாம்) தாம் முயலாமல் உழைக்காமல் ஒருவர் தம்மொழியின்பால் குறை கூறுதல் தம்மைத்தாம் ஏமாற்றிக்கொள்வதாகும் ஏன் எனில் மொழியை நாம் படைக்கின்றோமே தவிர மொழி நம்மைப் படைக்கவில்லை ஆதலின்.

சொற்பொருள் நிலை :

சொல் ஒவ்வொன்றும் தனித்த நிலையில் ஒவ்வொரு பொருளையே தரும். முடிக்கும் சொற்களுக்கேற்ப வேறு வேறு பொருள் தரும். ஒரு தொடரின் கண் இருபொருள்தராது. அஃதாவது மரம், கடல், வருதல், போதல், என்றாற் போலத் தனித்து நிற்குமிடத்து ஒரு பொருளையே சுட்டும். மா, நீர், புகலுதல், புரிதல் என்றாற் போல்வன முடிவிற்கேற்பப் பொருள் தரும். அஃதாவது மாபூத்தது எனின் மரத்தையும், மா ஓடிற்று எனில் விலங்கையும்—மாநிதி எனில் பெருக்கத்தையும் உணர்த்தும் உண்மை புகன்றான் எனின் சொல்லையும் புகன்ற ஆயம் எனின் விரும்பிய என்னும் செயலையும் உணர்த்தும் மாநன்று, புகற்சி நன்று எனின் பொதுப் பொருளைத் தரும். அடுத்து வரும் அதுபற்றிய தொடர்கள் தான் சிறப்புப் பொருள் தரும். இவ்வகையானவற்றை வினை வேறுபடாப் பல பொருளொரு சொல் என்றும் வினை வேறுபடும் பல பொருளொரு சொல் என்றும் தொல்காப்பியம் வகைப்படுத்தும் இவ்வாறான சொற்கள் ஆக்கம் பெறுதற்குக் காரணம் பொருளின் தன்மையை ஒவ்வொரு நோக்கில் மட்டும் கருதுவதாகும். மா என்பது சுவைக்குறிப்பான் மரத்தையும், ஒலிக்குறிப்பான் விலங்கையும் காட்சிக்குறிப்பான் பெருக்கத்தையும் விளக்கிற்று. இச்சொல்லின் வேறுபொருள்களும் இவ்வாறே அமையும்.

ஒருபொருளையே உணர்த்தும் பலசொற்கள் அமைந்திருப்ப தற்குக் காரணம் ஒருபொருளின் வடிவு, செயல், பயன், நிறம் பற்றிய வேறுவேறு கோணங்களில் நோக்கும் நோக்காகும். அஃதாவது நெருப்பு, தீ, அனல், தணல், அழல் என்பவை ஒரு பொருள் குறித்த பல சொற்களாகும். இவற்றின் பொருட்கோணங்கள் நெருப்பு என்பது தான் பற்றிய பொருளைச் சரசர என்னும் ஒலியோடு சிதைப்பது என்னும் கருத்தினும், தீ என்பது பற்றிய பொருளைத் தேய்த்து அழிப்பது என்னும் பொருளிலும் அனல் (அல்+நல்=அனல்) இருளில் நலம் பயப்பது என்னும் கருத்தினும் தணல் (தண்+அல்=தணல்) தன்மையல்லாதது என்னும் கருத்தினும் அழல் என்பது தன்னைச் சேர்ந்த பொருளை அழியச்செய்வது (பக்குவப்படுத்துவது) என்னும் கருத்தினும் அமைந்தவையாகும், பிறவும் இவ்வாறே.

இனித் தனிச்சொற்கள் பெயரும் வினையுமாகத் தோன்றி இடைச்சொற் கூட்டுறவான் தொடர்ந்து தொகை மொழியாயும் தொடர்மொழி (வாக்கியம்) யாயும் அமையுமிடத்து அவ்வச் சொற்கள் தனிநிலையில் உணர்த்தும் பொருளினின்று வேறுபட்டபொருளினும் வரும். ஆ=பசு, திரை=அலை, ஆதிரை=ஒரு விண்மீன், கரையான் ஆகாயம் முதலியவை அவ்வாறமையும், காலை ஒடித்தான், காலை வந்தான் எனவும் வரும்.

ஒரு வினாவிற்குரிய விடை பிறிதொரு வினாவிற்கு விடையாகவும் வரும் கண்ணா! படித்தாயா? இவ்வினாவிற்கு நேர்விடை படித்தேன் அல்லது படிக்கவில்லை. நெட்டுருவாகவில்லை – புத்தகம் இல்லை என்பவை முறையே படித்தேன், படிக்கவில்லை என்னும் பொருளைத் தருவன. இவை நெட்டுரு வாயிற்றா – புத்தகம் உளதா என்னும் வினாக்களுக்குரியவை எனினும் படித்தாயா என்பதற்கும் விடையாயின.

இனி ஒருவர் ஒருவரைச் சுட்டிக்காட்டித் தன் பக்கத்தில் இருப்பவரிடம் அவரைக் கொஞ்சம் கவனி! என்றால் அத்தொடரின் செம்பொருள் அவரை ஒரளவு பார்த்துக்கொள் என்பதாகும். எனினும் சுட்டப்பட்டவர் மதித்தற்குரியவராயின் அவருக்குத் தக்க மரியாதை செய் என்றும் இரவலராயின் அவர் விரும்பும் பொருளைத் தருக என்றும் ஐயத்திற்குரியவராயின் ஒற்றாய்ந்துகொள் என்றும் பகைவராயின் ஒறுத்தனுப்புக என்றும் பொருள்தரும். இவ்வகைப் பொருள்கள் ஒரு சொல்லுக்குத்தாம் கருதும் பொருளை ஏற்றிப் பல்காலும் பயன்படுத்தி உணரச் செய்த வழக்காகும். இவ்வாறு வருவனவற்றைக் குறிப்பு பெமாழி என்பர், வடநூலார் வியங்கியம் இலக்ணை, தொனி எனக் கூறுவர். இவற்றைத் தொல்காப்பியம்

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"

"தெரிபு வேறு நிலையிலும் குறிப்பிற்றோன்றலும்
இருபாற்றென்ப பொருண்மை நிலையே"

என வகைப்படுத்தும் குறிப்பிற்றோன்றலை பலபடியாக விரித்தும் கூறும்.

மேலும் குழுநிலை வகையிலும், வாணிகம், தொழிலகம் முதலிய துறைகளிலும் சொற்களின் நேர்பொருளை விலக்கிப் பல்வேறு பொருள்களில் அமைத்து வழங்குதல் ஒரு நிலையாகும். இவ்வாறான சொல்லாக்கங்கள் எல்லாம் மக்கள் தம் எண்ணங்களைப்பிற பொருளுக்குரிய சொற்களில் புகுத்தி வழங்கும் சூழலில் ஏற்படுவனவாகும்,

சிலவற்றை அவையல் கிளவி எனத் தாழ்த்தி அவற்றை வேறு பொருளுக்குரிய சொற்களால் மறைத்துக் கூறுக என்பர் இலக்கண நூலார்.

பெயராக வழங்கி வருகின்ற தோடு, கூலி போன்றனவும் அத்தகையனவே. இனி, சில சொற்கள் உயர்வு பெறுவதும் தாழ்வு பெறுவதும் உண்டு. மகிழ்ச்சி என்பது கள்ளுண்டு களித்தலுக்குரிய சொல் பின்னர் உவகை

என்ற உயர்பொருள் பெற்றது கழகம், ஓலை முதலியனவும் அத்தகையனவே. நாற்றம் என்பது மணத்தை உணர்த்தும் உயர்ந்த சொல் இப்பொழுது தீய, தாழ்ந்த வாடையைக் குறித்துக் தாழ்ந்தது.

சொற்கள் இயற்கையோடு பொருந்தியும் சிதைவின்றியும் நடைபெறுமிடத்து உண்மை, வாய்மை, மெய்ம்மை, என்னும் தகவினையும் இயற்கையொடு பொருந்தாதவிடத்துப்பொய்ம்மை என்னும் நிலையினையும் எய்தும் தீயால் எரிந்தது என்பது வாய்மை. நீரால் எரிந்தது என்பது பொய்ம்மை. பொது நலம், மக்கள் நேயம், தூய்மை நேர்மை, ஒழுக்கம் முதலியவற்றில் நோக்கும் செயலுமுடையார் மொழியை உண்மைக்குப் பயன்படுத்துவர் ஒருகால் அவர் பொய்ம்மையைப் பயன்படுத்தின் அதுவும் மேற்கூறிய நோக்கம் பற்றியே நிகழும். தன்னலம் பேரவா, அழுக்காறு, வஞ்சனை முதலியவற்றில் நோக்கமுடையார் மொழியைப் பொய்ம்மைக்கே பயன்படுத்துவர் ஒருகால் உண்மையாகப் பயன்படுத்தினும் அதுவும் மேற்கூறிய அவர் நோக்குப் பற்றியே நிகழும். மொழி இங்ஙனம் கருத்தை வெளிப்படுத்துதற்கும். கருத்தை மறைப்பதற்கும் உரியதாக அமைகின்றது.

மொழியைக் கையாளும் முறையில் பிரியும் மக்கட்பிரிவுகள் :-

மொழி எழுத்துருவில் வரிவடிவம் செய்யப் பெற்றுக் கையாளப்படுதலின் முன்னோரின் மொழி வழிக் கருத்துக்கள் பின்னோர்க்குக் கருத்துச் செல்வங்களாகின்றன அவற்றை முதலாகவும் கருவியாகவும் கொண்டு நிகழ்கால மக்கள் செயலாற்றும் நிலையில் இனவேறுபாடு (வருக்கபேதம்)சாதிமுறை வாணிகம் தொழில் முதலாய பல பகுப்புகள் தோன்றி அமைவனவாயின.

மொழிச்சமயம் (மதம்)

மக்கள் வழக்கில் கருத்துக்களைச் செம்மையாக உணர்த்தும் சொல் வடிவங்களையும் தொடர்களையும் ஒலி, எழுத்து, சொல், தொடர் எனத்தனி ஆராய்ந்து பிரித்து இது சிதைவு, இது செம்மையானது இது வழங்கத்தக்கது இது வழங்கத்தகாதது இதனை இவ்வாறு தான் வழங்கவேண்டும் இவ்வாறு வழங்குதல் குறை அல்லது குற்றம் என்றும், இலக்கியப்படைப்பு இன்ன இன்ன வகையில் தான் அமையவேண்டும் அமைக்கும் முறை (யாப்பு—அணி) இவை என்றும் கூறி அவற்றை மக்கள் வழக்கினின்று வேறுபடுத்திச் சட்டவிதி முறைகளைச் சிலர்கூடி ஆளுவோரின் பாதுகாப்போடு அமைத்துக்கொள்வது,

தெய்வக்கொள்கையுள் சமய வழிபாட்டு நெறிபோல அமையும் மொழிச் சமயமாகும். அங்ஙனம் விதிமுறைகளை அமைத்துக்கூறும் நூல் இலக்கணம் எனப்படும். தெய்வ வழிபாட்டின்கண் பூசாரிகளைப் போல் இலக்கண நூலாசிரியர் செயல்படுவர். இவர்களே வழக்கு மொழி ஒரு எல்லைக்கு மேல் சிதையாமல காத்தும் நிற்பர். அவ்வகையில் இயற்கையாக மொழியை வழங்கும் மக்களினின்று வேறுபடுவர். தம்மை மொழியளவில் உயர்ந்தோராக மேல்வருணத்தவராக எண்ணி ஒழுகுவர்.

உலகியலில் இயற்கை வழக்காக நிகழ்ந்து வரும் மொழிகள் யாதானும் ஒரு முறையில் ஒழுங்குப்படுத்தப்பட்ட நிலையில் ஆக்கம் பெறும், இயற்கையாக வளர்ந்த மரங்களைக் கிளைவளார் முதலியவற்றை நீக்கி நூர்லிட்டுச் செம்மை செய்து கட்டிடங்களுக்குப் பயன்படுத்துவது போலச் சொற்களையும் தொடர்களையும் கொண்டு தாம் வேண்டியாங்கு யாக்கும் செய்யுள் இலக்கியங்களைப் படைப்பர் இவ்வகையான விதிகளை யாப்பியல் அல்லது செய்யுள் இலக்கணம் என்பர் கட்டிடக் கலைஞர் தம்மைப் பொறியாளர், சிற்பியர் என இனம் பிரித்துக் கொள்வதைக் போலவே யாப்பியல் வல்லுநரும் தம்மைப் புலவர், கவிஞர் எனப் பிரித்துக்கொள்வர் இவர்கள் மொழியைத் தம் ஆளுமைத் திறத்தால் கவர்ச்சியுடையதாக்கிக் கேட்போரை வயப்படுத்துவர். இவர்கள் தம்மை அறிவு வழி காட்டிகளாகக் காட்டிக்கொள்வர்.

குறிப்பு :-

ஈண்டு மொழியாக்கம் பற்றிச் சில நிலைமைகளைக் கூறு முகத்தான் இலக்கணம் பற்றியும் செய்யுள் இலக்கியம் பற்றியும் கூறிய கருத்துக்கள், மொழி மக்களை எவ்வாறெல்லாம் ஆட்கொள்ளுகின்றது என்பதை விளக்குவதாகக் கூறப்பட்டனவே தவிர மொழிக்கு இலக்கணம் வேண்டா, விதிமுறைகள் தேவையில்லை என்பதற்காகக் கூறப்பட்டவையல்ல இலக்கணம் ஒருமொழிக்கு அரண் போன்றது மொழியமைப்பின் நுட்பங்களையும் வளர்ச்சி வரலாற்றினையும் காட்டும் கண்

பண்டம் விளைவு செய் பயிர்த்தொழிலாளர் :

இருதிணைப் பொருள்களுக்கும் அவற்றின் இயக்கத்திற்கும் வெளிப்படையாகவும் குறிப்பு வகையாகவும் அமைந்துள்ள சொற்களைச் சிலவும் பலவுமாகப் பயின்று அவற்றை நினைவில் தேக்கி, மக்கள் குறிக்கோள்களையும் உற்றுநோக்கி அவர்கள் உவப்புறும் பாங்கிலும் வெளி

உணர்வுகொள்ளும் முறையிலும் அறிவுப்பயன் கொள்ளும் வகையினும் நலந்தீங்குகளை உணரும் நெறியினும் தம் பேச்சினும் எழுத்தினும் வழங்க முற்படுவோர் பட்டாங்கமைந்த உண்மைகளையும், கற்பனையாக அமைக்கும் பொய்ம்மைகளையும் கலந்து அழகும் சுவையும் ஏற்றிய சொற்களைக் கொண்டு நீதிகளாகவும், அறநெறிகளாகவும் முதுமொழிகளாகவும் சிற்றிலக்கியங்களாகவும் பேரிலக்கியங்காளகவும் கட்டுரைகளாகவும் படைத்து வழங்குவர். அவ்வாற்றான் பொருளும் புகழும் எய்துவர் இவ்வகையினர் – விதை முதலியவற்றைக்கொண்டு உணவுப்பண்டம் முதலியவற்றை விளைவு செய்து வழங்கும் உழவர்களையும், தொழிலாளர்களையும் போல முன்னோர் மொழிக்கருத்துக்களைக்கொண்டு இலக்கியங்களைப் படைக்கும் தொழிலினர் ஆவர். இவர் தம்மை அறிஞர், பேராசிரியர், எழுத்தாளர் எனக் கூறிக்கொள்வர் இவரும் மொழி வழிமேல் சாதியினர் ஆவர்.

மொழிவழி வாணிகர் :-

மொழிப்பண்டங்களை விளைப்போர் விளைத்துப் படைத்தவற்றைப் பல்வேறு வகையில் திரட்டி அவற்றைப் பலதுறைகளாக வகுத்து அவற்றிற்குப் புதிய வடிவங்களைக் கொடுத்து ஆராய்ச்சி என்றும், திறனாய்வு என்றும் ஒப்பாய்வு என்றும் விளக்கக்கட்டுரை என்றும் சிற்றுரை, பேருரை என்றும் பெயர் தந்து வழங்குவோர் பண்ட வாணிகர் போன்று மொழிவழிப்பொருள் வாணிகராவர். இவருள் பெருவாணிகரும் உண்டு சிறு வாணிகரும் உண்டு. இவரான் மொழிப்பயன் பரவலாக மக்களைச் சென்று சேரும்.

சமைப்போரும் பரிமாறுவோரும் :

மேற்கூறப்பெற்ற விளைப்போர், வாணிகர் ஆகியோரான் படைத்து வழங்கப்பெற்றவற்றைக் கொண்டு மக்கள் மாணாக்கராகிப் பல்வேறு துறை அறிவுகளைப்பெறும் வண்ணம் படிப்படியாக அறிந்து கொள்ளும் வகையிற் பாடநூல்களாகச் செய்வோர் ஒருவகை மொழியுரை முதுபோகிகளாவர் இவரை நூலாசிரியர், பாட நூற்படைப்பாசிரியர் என வழங்குவர். அவற்றை மாணாக்கர் பயிலும் வண்ணம் பயிற்றுவோர் ஆசிரியர் கணக்காயர், உபாத்தியாயர் எனவும் வழங்கப்படுவர். அவருள் துறைதொரும் இனப்பிரிவும் ஏற்றத்தாழ்வுகளும் உண்டு. தகுதிச் சான்றிதழ் அரசாங்கமே தரும்.

இங்ஙனம் நூலாக்க நிலையிலும், அவற்றை வழங்கும் நிலையிலும் ஏற்கும் நிலையிலும் மக்களுள் மேலோர், அல்லோர், கீழோர், உயர்ந்தோர், தாழ்ந்தோர்,

கற்றார், கல்லார், படைப்போர், நுகர்வோர் – கற்பிப்போர், கற்போர் – விளைவு செய்வோர் விற்போர் முதலிய பிரிவுகள் நடைமுறையில் அமைந்து வரும் அம்முறையில் மொழியறிவு ஒரு செல்வமே எனினும் ஏனைய பொருட்செல்வங்களைப் போல இதனைப் பொதுவுடமையாக்கவோ சமனுடையதாக்கவோ இயலாது.

ஒருமொழியும் அம்மக்கள் மதிநலமும் :

ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு பொருளைக் கருதி ஆக்கம் பெற்றனவாகும். அவ்ஆக்கம் அம்மொழியாளரின் அறிவாற்றலையும் மதிநுட்பத்தையும் ஓரளவு காட்டி நிற்கும். அவற்றைச் சில தமிழ்ச் சொற்கள் வழி காண்போம்.

இம்மண்ணுலகிற்குரிய பெயர்க்குறியீடுகள் மண்டலம், நிலம், உலகம், ஞாலம், பூ, புவி என்பவை சிறப்புடையவை. இவற்றுள் 'மண்டலம்' என்பதற்கு (மண்+தலம்) மண்ணாகிய இடம் என்பது ஒரு பொருள்; வட்ட வடிவமானது என்பது ஒரு பொருள். 'நிலம்' = கருப்பொருள்கள் தோன்றி நிற்பதற்குரிய ஆதாரம். உலகம் = வலிமையானது திரட்சியுடையது என்பது ஒரு பொருள் ; நிலையின்றி உருள்வது சுழல்வது என்பது மற்றொரு பொருள் ; (உல்→உலை = உள்ளே நெருப்புடையது என்பதுமாம்) ஞாலம் (ஞாலுதல்) = தொங்குதல் கோள்களின் ஈர்ப்பினால் அந்தரத்தில் தொங்குவது – தனக்கோராதாரமின்றிப் பிறவற்றிற்கு ஆதாரமாக இருப்பது. பூ = (பூத்தல்) நீர் சூழப் பூத்து நிற்பது பொலிந்து நிற்பது. புவி = கருப்பொருள்களை விரித்து வெளிப்படுத்துவது (பூ+வி = புவி) மேற்கூறிய சொற்கள் ஒவ்வொன்றும் இம்மண்ணுலகின் பண்புகளை ஒவ்வொரு கோணத்தில் விளக்கி நிற்பதைக் காணலாம். இச்சொற்கள் ஆக்கம் பெற்ற காலத்தில் ஆக்கிய அறிவினர் அவற்றை உணர்ந்து கூறினாரன்றிப்பயில்வோர் பயிற்றுவோரெல்லோரும் இப்பொருள் நுட்பங்களை உணர்ந்தவர் என்றாகாது.

ஒரு மூலத்தினின்றும் கிடைக்கும் சொற்களுள் ஒன்றைக் காண்போம். *'கிள்' என்பது ஒரு நிரம்பிய மூலஉரிச்சொல். கிள்ளல் =* கிள்ளுதல்; தொடையில் கிள்ளினான், இலையைக் கிள்ளினான், கிளத்தல் = நாவினின்றும் சொல் வெளிப்படுதல் கிளவி = நாவினின்று வெளிப்பட்டது (சொல்). கிளி = நாவால் மிழற்றும் சிறுபறவை. கிள்ளை = குதிரை – கிள்ளுதல் போலத் துள்ளிச் செல்லும் விலங்கு. கிள்ளி = சோழன். காடுகொன்று நாடாக்கியவன். கிளை

ஒரு பொருளினின்று பிரியும் பிரிவு – மரக்கிளை. மக்களின் சொல்வழி பிற்காலத்தில் ஆக்கம் பெற்ற சொற்களுள் சில தொடக்ககாலச் சொற்களும் இங்ஙனம அமைந்தவையே.

தருதல் என்பது ஒருவினைப்பெயர். இதற்கு ஈடாகக் கொடுத்தல், ஈதல், அளித்தல், வழங்குதல், நல்கல், வீசல், இடுதல் முதலிய சொற்கள் உள. ஒவ்வொன்றும் தருதலின் பல்வேறு உட்கருத்தை விளக்குவனவாகும். தெய்வக்கொள்கை என்பது கருத்து முதல் வாத அடிப்படையில் தோன்றியது. அவற்றுள் பிரிவுகளும் உண்டு. எல்லாவற்றிற்கும் மேலானது பரம்பொருள் அஃது ஆக்கல் அழித்தல், காத்தல், அருளல், மறைத்தல் என்னும் செயல்புரியும். அப்பேராற்றலைப் பல பெயர்களான் உணர்த்துவர். அதற்குத் தமிழர் அமைத்துள்ள பெயர்கள் இறை(வன்) இயவுள், கடவுள் என்பனவாகும். இவை மிகப்பழைய குறியீடுகள். இக்குறியீடுகளை ஆக்கம் செய்த சான்றோரின் மதிநலம் வியக்கத்தக்கது. 'இறை' என்பதன் பொருள் பிரபஞ்சத்தில் உள்ள காட்சிப்பொருள் கருத்துப்பொருள்யாவினும் நீக்கமற நிறைந்து தங்கியிருப்பது என்பதாகும். 'இயவுள்' என்பதன் பொருள் எல்லாப் பொருள்களிலும், அவற்றினிடமாகத்தங்கி இயங்குவது என்பதாகும். கடவுள் என்பதன் பொருள். எல்லாப்பொருள்களையும் கடவுவது அஃதாவது இயக்குவது என்பதாகும். இச்சொற்களை ஆக்கியோர் பரம்பொருளின் தன்மையை எவ்வெவ்வாறெல்லாம் சிந்தித்துணர்ந்திருந்தார்கள் என்பது விளங்கும். இவை மூன்றும் திணைபால்களுக்குப் பொதுவாக நிற்றலையும் காணலாம். பிற்காலத்தார் இறை என்பதைப் பால் விகுதியோடு சேர்த்து இறைவன் இறைவி என வழங்கினர்.

சில சொல்லாக்கங்கள் ஆளுமை, ஆண்மை, பெண்மை ஆயவற்றுள் ஒன்றை மட்டுமே சிறப்பித்து நிற்கும். மாந்தர் மக்கள் என்றாற் போல்வன ஆளுமை சுட்டி வருபவை ஆயத்தார் என்பதும் அவ்வாறே வரும். இவற்றிற்கு ஆண்பால் பெண்பாற் சொற்கள் ஆக்கம் பெறவில்லை. வேந்தன், மன்னன், காவலன், புலவன் என்றாற்போல்வனவற்றிற்குப் பெண்பாற் சொற்கள் ஆக்கம் பெறவில்லை. மனைவி, இல்லாள், செவிலி என்றாற் போல்வருவனவற்றிற்கு ஆண்பாற் பெயர் ஆக்கம் பெறவில்லை. இவை முறையே ஆண்மைக்கே உரியவாகவும் பெண்மைக்கே உரியவாகவும் அமைந்தவை.

மக்களும் மொழியும் :

கண், வாய், மூக்கு, செவி, மார்பு, வயிறு, கை, கால் முதலியவை ஒரு மனிதனின் உறுப்புக்கள். ஆயினும் அவ்வுறுப்புகளன்றி மனிதன் என வேறு

ஒரு பொருள் இல்லை. இவ்வுறுப்புக்களைக் கொண்ட முழு உடம்பு மட்டுமே மனிதன் அல்லன். உடம்பு மனிதனின் புறத்தோற்றம், புறஉடம்பு. அதுவன்றி மனிதனுக்கு அகவுடம்பும் அகத்தோற்றமும் உண்டு, இரண்டும் இணைந்த நிலையே மனிதன். அகஉடம்பின் உறப்புக்கள் எவை? மனம் புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் செயற்பாடுகளால் நிகழும் எண்ணங்களும் உணர்வுகளுமாகும். எண்ணம் என்பது யாது ? கருத்துக்களே, எண்ணம். கருத்து உருக்கொள்வது மொழி வடிவில் என்பது மேல் விளக்கப்பட்டது. மொழியின் புறவடிவம் சொல். அகவடிவம் கருத்து. அகவுடம்பின்றிப் புறவுடம்பு செயல்படாது. அஃதாவது மொழியுணர்வின்றி மனிதன் செயல்பட இயலாது. மொழியுணர்வின்றிச் செயல்படுபவை விலங்கு பறவை முதலாய அஃறிணைப் பொருள்களே.

மொழி என்பது கருத்துக்களை வெளிப்படுத்தும் கருவியாயினும், அக்கருத்துக்கள் மொழியாகிய வடிவமின்றிப் புலனாகாது. எனவே மொழியும் மனிதனும் ஒற்றுமையும் வேற்றுமையும் (பேதா பேதம்) உடைய ஒருபொருள் என்பது விளங்கும். மொழிவளரின் மக்கள் வளர்வர் சிறப்பர். மக்கள் வளரின் மொழி வளம் பெறும் சிறக்கும். ஒரு மொழி வளரவில்லை எனினும் குறையுடையது எனினும் அது அம்மொழிக்குரிய மக்கள் வளரவில்லை குறையுடையார் என்பதையே காட்டும். ஒரு இனத்தார் மற்றோர் இனத்தவரை அடிமைகொள வேண்டின் அவர் மொழியை அடிமைப்படுத்தித் தம்மொழியை ஆட்சிப்படுத்த வேண்டும். ஓரினம் எவ்வகையான அடிமைத்தளையையும் களைந்து விடுதலை பெற இயலும் மொழிக்கு அடிமைப்படின் விடுதலை பெறல் இயலாது அதன் வாயிலாக மற்றவையும் அவரறியாமலேயே அடிமைப்படும்.

அவ்வாற்றான் மொழி என்பது பிற எல்லாச் செல்வங்களினும், பிறந்த நாட்டினும், ஒழுகும் சமயத்தினும், உற்றார் உறவினரினும் தாய் தந்தை மனைவி மக்களினும் மேலானது மட்டுமன்றித் தன் உடம்பினும் மேலானதாகும். ஒருமொழி அடிமைப்படின் அம்மக்கள் அடிமைப்படுவர், மாசுபடின் மாசுபடுவர் அழியின் அழிவர். ஆதலின் மொழி ஒருவர்க்குத்தம் உயிர்போன்றதன்றி உயிரேயாகும்.

-----

2. மொழியாக்கத்தின்கண் மூவிடப் பெயர்கள்

தமிழ் மொழியின்கண் வழங்கும் மூவிடப் பெயர்களைத் தொல்காப்பிய அடிப்படையில் அறிவியற் கண்ணோட்டத்தோடு ஆய்ந்து காண்பது இக்கட்டுரையின்

நோக்கமாகும். பொதுவாகச் சொற்களைப் பற்றி ஆயுமிடத்துப் பிற மொழிகளோடு ஒப்புநோக்கி ஆராய்தல் முறை. ஒப்பு நோக்கப்படும் மொழிகள் ஒத்த காலத்தனவாயும் ஒத்த நெறியுடையனவாயும் இருப்பின் பெரிதும் துணைபுரியும் ; அல்லாதவை சிறிதளவே உதவும். இற்றைக்குத் தமிழ் மொழியோடு காலத்தான் ஒத்தனவற்றுள் சீனமொழி தவிர்ந்த ஏனையவை உலக வழக் கொழிந்தவை. மேலும் அவை அமைப்பு முறையால் வேறுபட்டவை. தமிழை ஒப்ப இலக்கணத் தொன்மையுடையது சமற்கிருத மொழி. அது பாரதத்தில் வழங்கிய பழைய மொழிகளையும் மேலை ஆரிய மொழிகளையும் அடிப்படையாகக் கொண்டு செயற்கையாகப் படைத்துக் கொண்டதாகும். சமற்கிருத மொழியை உருவாக்குவதற்கு முன்பே தமிழ் இருவகை வழக்கிலும் பயின்று வந்த செம்மொழியாகும். தமிழைத் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்று மொழியியலார் கூறுவர். திராவிடம் என்பது தமிழையும் அதன் கிளை மொழிகளையும் சுட்டியுணர்த்தற்கு அமைந்த குறியீடே தவிரத் திராவிடம் என்னும் பெயருடையதொரு தனி மொழி இல்லையென்பதும், தமிழையே திராவிடம் என்னும் பெயரான் ஆரியர் குறித்தனர் என்பதும் அறிஞர் பலரின் கருத்தாகும்.

திராவிட மொழிகளுள் தமிழ் தவிர்த்த ஏனையவை சமற்கிருத மொழி இலக்கண முறைமையை மேற்கொண்டவையாதலின் அவற்றோடு ஒப்பிட்டுக் காணுதல் ஒரோவிடத்துமட்டும் மேற்கொள்ளப்படும்.

தமிழ் மொழிக்கண் அமைந்துள்ள மூவிடப் பெயர்களை நோக்குமிடத்து, அவை பொருள் பற்றியும், காலம் பற்றியும், குணத்தன்மை பற்றியும் அமைந்துள்ளமையைக் காணலாம். மேலும், அவை யாவும் உயிர் முக்கோணமாகிய அ இ உ என்னும் சுட்டுக்களின் அடிப்படையில் ஆக்கம் பெற்றிருப்பதைக் காணலாம். தொன்னூலார் அவற்றைத் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் இலக்கண முறைமையாலும் செம்மை செய்து அமைத்துள்ளனர். அம்முறைமையால் அவை பொருள்களின் பெயராகவும் அவற்றின் நிலைமைப்பாடுணர்த்தும் வினைக் குறிப்பினவாகவும் அமைந்துள்ளன. அவற்றுள் இடம் பற்றி அமைந்தவை தவிர்ந்த திணைபாலுணர்த்துவன யாவும் படர்க்கைச் சொல்லாகும். முற்று வினையாக நிற்பவை தம் இறுதி நிலையான் இடவேறுபாடுகளைக் காட்டிநிற்கும். அவ் இறுதிநிலை இடைச்சொற்கள் இக்கட்டுரையுள் விகுதி என்னும் குறியீட்டால் வழங்கப்பெறும்.

மூவிடப் பெயர்களும் – மூவிடத்து வினை விகுதிகளும்

தன்மை	முன்னிலை	படர்க்கை
யான்(நான்)யாம்,நாம்	நீ, நீயிர் (நீர்)	தான், தாம்.
(என்,எம்,நம்(எல்லேம்)	நின்,நும்–எல்லீர்–உம்	தன், தம், எல்லார்–உம்
	(நீன்,நீம்,உன், உம்)	'எல்லாம்' என்பது பொது
என், ஏன், அல்,(அன்)	இ. ஐஇ ஆய்	அன்,ஆன்,அள்,ஆள்
அம், ஆம், எம், ஏம்	இர், ஈர், மின் (உம்)	அர், ஆர், ப. மார்
குடு துறு – கும் டும்	அசைகள்	து.று.டு.அ.ஆ.வ.
தும் றும்	மியா, இக–மோ–மதி–	இகும்–இசின்

குறிப்பு :– யாம் : நாம், தாம் நீம் என்பவற்றின்பின் 'கள்' என்பது கூடிப்பிழை வழக்காக வழங்கும். இகும், இசின் என்பவை பொது அசைகள்

இடப்பாகுபாட்டுச் சொற்கள்

சேய்மை நிலை (படர்க்கை)	அன்மை நிலை (தன்மை)	இடைமை நிலை (முன்னிலை)
அ, ஆ, ஆன், அன்றி	இ, ஈ, ஈன், (இன்றி)	உ, ஊ, ஊன் (உன்றி)
அதோளி	இதோளி	உதோளி
ஆண்டு, ஆண்டை	ஈண்டு, ஈண்டை	(ஊண்டு–ஊண்டை)
அவண், அங்கு,	இவண், இங்கு	உவண் (உங்கு)
ஆங்கு	ஈங்கு	ஊங்கு
அம்மை (அம்பர்)	இம்மை, இம்பர்	உம்மை, உம்பர்
அணி	(இணி)	(உணி)

காலம் பற்றியவை

அன்று, அற்றை	இன்று, இற்றை	(உன்று–உற்றை)

தன்மை பற்றியவை

அற்று, அனை,	இற்று, இனை,	உற்று, உனை,
அன்ன	இன்ன	உன்ன
அனைத்து	இனைத்து	உனைத்து
அங்ஙனம், ஆங்ஙனம்	இங்ஙனம், ஈங்ஙனம்	உங்ஙனம், ஊங்ஙனம்
அங்கனம், ஆங்கனம்	இங்கனம், ஈங்கனம்	உங்கனம், ஊங்கனம்

இடம் பற்றிய முறைப்பெயர் – உறவுப் பெயர்கள்

படர்க்கை	முன்னிலை	தன்மை
தாய், தந்தை, தன்னை	ஞாய், ஒய், நுந்தை (உந்தை) (உன்னை, நுன்னை)	யாய், என்னை, எந்தை
தம்முன், தம்பின்		எம்முன், எம்பின் எங்கை
தங்கை, தவ்வை, தமக்கை	நும்முன், உம்முன் நும்பின், உம்பின்	எவ்வை, எமக்கை
தமன், தமள், தமர்	நுங்கை, உங்கை நுவ்வை	எமன், எமள், எமர்
தம்மான், தம்மாள் தம்மார்	உவ்வை, நுமக்கை உமக்கை நுமன், நுமள், நுமர், நும்மான் நும்மாள், நும்மார்	எம்மான், எம்மாள் எம்மார்

சுட்டுப் பெயர்கள்

மூஇடப் பொதுப்பெயர்	தன்மை முன்னிலை	படர்க்கை
ஐ, ஆய், நங்கை, நம்பி அன்னை, அத்தன், அவ்வை, நமன், நமள், நமர்	இவன், இவள், இவர் இது, இவை (இந்த, இத்தை) உவன், உவள், உவர் உது, உவை (உந்த–உத்தை)	அவன், அவள், அவர், அது, அவை, அவ் அந்த, அத்தை

அடைப்புக் குறிக்குள் உள்ளவை வழக்கில் இல்லாதவை.

இனி, வழுவழக்கை ஒட்டி இடைக் காலத்து நூல் செய்தோர் யாங்கள், எங்கள், நாங்கள், நீங்கள், தங்கள், தாங்கள் எனவும் அவர்கள், அவைகள் எனவும் பன்மைப் பெயர் 'கள்' விகுதி பெறும் எனக் கொண்டனர்.

'கள்' ஈறு அஃறிணை இயற்பெயர்களைப் பிற சார்பின்றிப் பன்மையுணர்த்தற்குரியதாக மட்டுமே தொன்னூலார் கொண்டனர். திராவிட

மொழிக் குழுவினுள் சில கள்ளீற்றினைக் கொண்டுள்ளன. தெலுங்கு தவிர்ந்த ஏனைய திராவிட மொழிகள் திணை என்னும் இலக்கணப் பகுப்பைக் கொண்டவனவல்ல. சமற்கிருதத்தை ஒட்டி ஆண், பெண், அலி என்னும் பால் வகுப்பினை ஏற்றுக் கொண்டவை. ஆதலின், அவை வட்டார வழக்கினை ஏற்றுக் கள்விகுதியைக் கொண்டுள்ளன. இம்மொழி வரலாற்றை உணராமல் பவணந்தி முனிவர் தமிழின்கண் உயர்திணைப் பன்மைக்கும் கள் விகுதி வருமென விதி கூறினார்.

உயர்திணைப் பன்மைப்பெயர், சுட்டுப்பெயர், அஃறிணைப் பன்மைச்சுட்டுப் பெயர்களின் பின் வரும் 'கள்' என்னும் ஒட்டுச் சொல் பன்மை விகுதிக்குப் பின், விகுதிப் பொருளைச் சிறப்பித்து நிற்பதன்றி, ஒருமைப் பெயரின் பின் வந்து பன்மைப் பொருள் சுட்டுதல் இல்லை என்பதைக் காணலாம்.

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார் கொல் மற்றையவர்கள் தவம்" என வந்த கள்ளீறு அர், ஆர் என்னும் பன்மை விகுதியைச் சிறப்பித்து நிற்றலைக் காணலாம். இவ்வாறு வந்தன கள், சென்றனகள் எனப் பெரியோர் தம் இலக்கியத்துள் வருவனவும். விகுதிப்பொருள் விகுதியாக நிற்பதையும் காணலாம். எனவே பன்மை விகுதிக்குப் பின்வரும் 'கள்' என்பது விகுதியை மிகுபன்மையாக்க வருவதோர் இடைச் சொல்லாகக் கொள்ளுதலே நேரிதாகும். இங்ஙனம் சான்றோர் வழக்கினுள் அமைந்ததன் காரணம் என்னையெனின் ?

உயர்திணை இருபாற்கும் பொதுவாக வரும் ஒருவர் என்னும் சொல் அர் ஈறு பெற்றுவருதலானும், ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியாகத் தந்தையார் வந்தார், தாயார் வந்தார், ஆசிரியர் வந்தார், அரசர் வந்தார் என ஒருவரையே பன்மை வாய்ப்பட்டான் வழங்கலானும், 'அர்' ஈறு கருத்து வகையான் ஒருமை சுட்டிற்றோ என்னும் ஐயம் நீங்க, அது பன்மையே சுட்டிநின்றது என்பதைப் புலப்படுத்த கள்ளீற்றினை அமைத்துக் கூறினார் எனலாம்.

மூவிடப் பெயர் – சுட்டுப் பெயர் முறைப் பெயர் உறவுப் பெயர்களின் அமைப்பினை ஊன்றி நோக்கின் அவை உயிரெழுத்தின் முக்கோணமாகிய அ, இ, உ என்னும் சுட்டுக்கள் இடமுணர்த்தி நிற்க,

அவை ஊர்ந்த மெய்யெழுத்துக்களும் அவற்றைச் சார்ந்த விகுதி இடைச் சொற்களும் பொருளையும் ஒருமை, பன்மையாகிய பாலையும் உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

(மூவிடப் பெயர்)

யான்		நீ	ஈ	தான்	
யாம்	ஆய்ன்	நீயிர்	இர்	தாம்	ஆன்
நாம்	ந்	நின்	இந்ன்	தான்	த்ம்
என்	எம்	நும்	உம்	தம்	அ
எம்					
நம்					

இவற்றை ஆராயின் ஆ எ, ஈ இ, உ அ, ஆகிய உயிர் எழுத்துக்கள் இடங்களையும் ய் ந் த் ஆகிய ஒற்றுக்கள் பொருளையும் ன்–ம், இர் ஆகிய விகுதிகள் ஒருமை பன்மையாகிய எண்ணையும் குறித்து நிற்றலைக் காணலாம். பொருளைச் சுட்டும் மெய்களுள் யகரம் தன்மைக்கே உரிமையாக நிற்றலையும், தகரம் படர்க்கைக்கே உரியதாக நிற்றலையும், நகரம் தன்மை–முன்னிலை ஈரிடத்தும் நிற்றலையும் காணலாம்.

தன்மைப் பெயர்

தன்மையிடத்து யான் யாம் நாம் என்பவை எழுவாய்ப் பெயராகவும் என், எம். நம் என்பவை வேற்றுமை ஏற்கும் பெயராகவும் அமைந்துள்ளன. 'நான்' என்னுமொரு பெயர் தன்மைக்கண் தொல்லோரான் கொள்ளப்படவில்லை. மூவிடவினைமுற்று விகுதிகளை நோக்குமிடத்து என், ஏன், அல் என்பவை ஒருமைக்கும் அம், ஆம் எம்,ஏம் என்பவை பன்மைக்குமாக அமைந்துள்ளன. அவையன்றிக் காலத்தைத் தம்முள் அடக்கிய மரூஉ விகுதியாக ஒருமைக்குக் கு,டு,து,று என்பவையும், பன்மைக்கு கும், டும், தும், றும் என்பவையும் உள்ளன. அவை பற்றிப் பின்னர் ஆராயப்படும்.

மூவிடப் பெயர்கள் சுட்டெழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டவை என்பது, அவன் இவன் உவன், எந்தை, நுந்தை, தந்தை, எமர் நுமர் தமர் முதலாய சுட்டுப் பெயர். முறைப்பெயர் உறவுப் பெயர்களான் அறியக் கிடத்தலின் தன்மைப் பெயர்க்கண் அமைந்துள்ள சுட்டெழுத்து யாதென இனி நோக்குவாம்.

தான், தாம், தன், தம் என்னும் படர்க்கைப் பெயர்களில் ஒருமை பன்மை காட்டும் னகரமும் மகரமும் நீங்க, எஞ்சி நிற்பவை தகரமும் அகரமும் அதன் நீட்சியுமாகும். அவற்றுள் தகர ஒற்றுப்பொருளைக் காட்டி நிற்க, அகரமே இடத்தை உணர்த்தி நிற்பது விளங்கும. நீ, நின், நீயிர், நும் என்னும் முன்னிலைப் பெயர்களுள் ன், இர், ம் என்பவை பாலுணர்த்தி நிற்பதையும், நகரம் பொருளை உணர்த்தி நிற்பதையும், எஞ்சிய இகரகமும் உகரமும் இடமுணர்த்தி நிற்றலையும் தெரியலாம். ஈகாரம் இகரத்தின் நீட்சியேயாம். எனவே முன்னிலைக்கண் இகரம் உகரம் ஆகிய இரண்டு சுட்டெழுத்துக்கள் இடம் குறித்து நிற்பதைத் தெரியலாம்.

இ, உ ஆகியவற்றுள் உரிமையுடையதுயாது ? பிறவாற்றான் அமைந்தது யாது? என நோக்குவாம். இகர உகரம் இரண்டும் யாண்டும் படர்க்கைக்கண் வருதலில்லை. தன்மைக் கண்ணும் காணப்படவில்லை. எனினும், தன்மைக்கண் வேற்றுமைப்பெயர்களுள் எகரம் உள்ளது. எழுவாய்ப் பெயருள் அகர ஆகாரங்கள் உள்ளன. எகரம் இகரத்தின் திரிபாகக் கொள்ளுதற்கு ஏற்கும். ஆக, ஒராற்றான் இகரம் தன்மைக்கும் உரியதாக அமைதலின் முன்னிலைக்குச் சிறப்புரிமையுடைய சுட்டு உகரமே என்பது விளங்கும். வழக்கின்கண் உன், உம் என்பவை முன்னிலை சுட்டி வருதல் இதனை வலியுறுத்தும்.

மற்று, அவன் இவன் உவன், அங்கு இங்கு உங்கு முதலிய சுட்டுப் பெயர்களை நோக்குமிடத்து, அகரம் சேய்மையையும் இகரம் அண்மையையும், உகரம் இடைப்பட்ட இடத்தையும் குறித்து வழங்குதலைக் காணலாம். அம்முறைமையான் அகரம் படர்க்கையையும் இகரம் தன்மையையும் உகரம் முன்னிலையையும் உணர்த்தும் சுட்டுக்கள் என்பது புலனாகின்றது. இவ்வாற்றான் தன்மைக்கண் அமைந்துள்ள எகரம் இகரத்தின் திரிபே என்பதில் குறையில்லை. இகரம் எகரமாதல் இருவகை வழக்கினும் நிகழ்வதொன்றே என்பதை இருமை→ எருமை. இலி→எலி இகழ்ச்சி →ஏச்சு, இளைத்தல்→எய்த்தல் என அமைந்துள்ளமையானும், இலை – எலை என வழங்கலானும் தெரியலாம். மற்றும் எகரம் எஞ்சாமையை உணர்த்தி சுட்டெழுத்தின் திரிபாக நிற்றலை, ஏதுவாயினும் ஆக, எதனையும் இகழற்க, எதனானும் அஞ்சேம், எதற்கும் பயனுண்டு என்னும் வழக்கான் உணரலாம். மற்றும் ஒருவன் ஒருவனை விளிக்குங்கால் விளிக்கப்பட்டவன் தன்னையுணர்த்த ஏன் எனக் கூறுதலையும், தன்மை வினைமுற்று விகுதியாக என், ஏன், எம், ஏம் என்பவை அமைந்திருந்தலையும் நோக்க எகரம் இகரத்தின் திரிபே என்பது புலனாகும்.

மற்று, தன்மை இடத்திற்கு இயைபுடைய இகரத்தைத் தவிர்த்து எகரத்தை நூலோர் அமைத்துக் கொண்டமைக்குக் காரணம், இவன் இவள் இங்கு ஈங்கு முதலிய சுட்டுப் பெயர், இடப் பெயர்களில் உள்ள இகரம் தன்மையை வரைந்துணர்த்தாமல் முன்னிலையையும் சேர்த்து உணர்த்துதலானும், முன்னிலை வினைகட்குரிய விகுதிகள் உன் உம் உர் என அமையாமல், இ இர் ஐ என அமைந்துள்ளமையானும் இடம் பிறழாத உகரச் சுட்டொடு இகரத்தையும் முன்னிலைக்கே அமைத்துக் கொண்டனராவர்.

இனி யான், யாம், நாம் என்னும் தன்மைப் பெயர்களில் உள்ள யகர மெய்யும் நகர மெய்யும் பொருளை உணர்த்தி நிற்பவை என்பதில் ஐயமில்லை. படர்க்கைக்கண் பொருளை உணர்த்தும் எழுத்தாகத் தகர மெய்யும் முன்னிலைக்கண் பொருளை உணர்த்தும் எழுத்தாக நகர மெய்யுமாக ஒவ்வொன்று மட்டுமே உரிமை பெற்று நிற்கத் தன்மைக்கண் இரண்டு மெய்கள் அமைந்துள்ள காரணத்தை நோக்குவாம். யகர நகரங்களுள் யகரம் தன்மைக்கே உரியதாக நிற்றலையும், நகரம் முன்னிலைக்குரியதாக நிற்றலையும் காணலாம். இங்ஙனம் முன்னிலைக்குரிய நகரத்தைத் தன்மைக்கண் சேர்த்துக் கொண்டமைக்குக் காரணம், தன்மை என்பது ஒரு பொருளாக வன்றிப் பலவாக அவ்வொன்றே பல்குதலில்லை. அதனால், தன்மைப் பன்மை என்பது முன்னிலைப் பொருளையும் படர்க்கைப் பொருளையும் அகப்படுத்திய நிலையில் பெறும் குறியீடு என்பது விளங்கும். அவ்வழி, முன்னிலை இல்லாத படர்க்கைப் பொருளைத் தன்னொடு கூட்டிக் கூறுமிடத்துத் தனித்தன்மை என்றும், முன்னிலைப் பொருளை அகப்படுத்துக் கொண்டு கூறுமிடத்து உளப்பாட்டுத் தன்மை என்றும் இலக்கண நூலார் விளக்குவர். அந்நெறியில் யாம் என்பது படர்க்கையாரை உளப்படுத்தற்கும், நாம் என்பது முன்னிலையாரை அகப்படுத்தற்கும் அமைத்துக் கொள்ளப்பட்டனவாகும். எனவே நகர மெய் தனக்குரிய முன்னிலைப் பொருளை இழக்காமல் தன்மைப் பன்மை விகுதியொடு கூடித் தன்மைப் பன்மைப் பெயராக அமைந்துள்ளது. தன்மை ஒருமை என்னும் பொழுது ஒரு பொருள் மட்டுமேயுள்ளமையின் நகரமெய் கூடாதாயிற்று. எனவே 'நான்' என்பது பொருள் நோக்கில் பிழை என்பது நன்கு உணரப்படும்.

இவ் அறிவியலமைப்பினை ஓராதார் யாம் என்பதற்கு ஒருமை யான் எனவும் நாம் என்பதற்கு ஒருமை நான் எனவும் சொல் வடிவு பற்றி வழங்கலாயினர். மற்றும் நாம் என்பது வேற்றுமைக்கண் நம் எனத் திரிதலைப்

போல நான் என்பது வேற்றுமைக்கண் நன் எனத் திரியாமல் நிற்பதையும், யான் என்பதன் திரிபாகிய என் என்பது மட்டுமே வேற்றுமைக்குரியதாக நிற்பதையும் நோக்க, நான் என்பது பிழைபட நேர்ந்த வடிவம் என்பது புலனாகும். மேலும், தன்மை ஒருமை வினை முற்று விகுதிகளின் அமைப்பாலும் இதனைத் தெளியலாம்.

தன்மைப் பன்மை வினைவிகுதிகளாக உள்ளவை எட்டு இடைச்சொற்கள். அவற்றுள் அம் ஆம் எம் ஏம் என்பவை கால இடைநிலைகளுக்குப் பின் வந்து, இடமும் பாலும் உணர்த்தி நிற்பவை. கும் டும் தும் றும் என்பவை காலத்தையும் இடத்தையும் தம்முள் அடக்கிய மருஉ வடிவாய்ச் செய்யுள் வழக்கிற்குரியவையாய் முதனிலைத் தொழிற் சொல்லொடு கூடி நிற்பவை. அவை வடிவுற்று வருங்கால் எம்,ஏம் என்பவை உண்டனெம் யாம், உண்டேம் யாம் என யாம் என்பதனொடும், அம், ஆம் என்பவை உண்டனம் நாம் உண்டாம் என நாம் என்பதனொடும் பயின்று வருதலைக் காணலாம். காரணம் வேற்றுமைக்கண் யாம் என்பது எம் எனவும் நாம் என்பது நம் எனவும் திரிதலின் அவை தம்மொடு ஒற்றுமையுடைய விகுதிகளை ஏற்பனவாயின. இம்மொழியமைப்பினை ஓராமையால் இவற்றை இடைத் தெரிவின்றிப் பலரும் வழங்கி வருகின்றனர். தொடை நயமும் பிறவும் கருதி மாறிவிடுதலும் உண்டு. அவ்வழக்காறு நோக்கி இவ்விகுதிகளைப் பொதுவெனக் கருதுதல் அறிவியல் நோக்காகாது.

அம்முறைமை பற்றித் தன்மை ஒருமை விகுதிகள் உண்டனென் உண்டேன் என யான் (என்) என்பதற்கொத்து அமைந்து வருதலைக் காணலாம். நான் என்னும் வடிவம் நேர்ந்தமையை நோக்கின் அஃது போலி வகையான் நிகழ்ந்த உலக வழக்கென்பது புலனாகும். அஃதாவது, மண்யாத்த என்பது மண்ஞாத்த என்று வருங்கால் யகரத்தின் போலியாக ஞகரம் நிற்றலைக் காணலாம். மூக்கொலி மிகுந்த மலையாளத்தில் யான் என்பது 'ஞான்' என வழங்கும். அதனை நான் என்பதன் திரிபாகக் கருதிய மயக்கமே இப்போலி வழக்கிற்குக் காரணமெனலாம். சொல்லாக்க மரபினை நடுவுநின்று ஓராமல் 'நான்' என்பதே, யான்' எனத் திரிந்தது என நகைச்சுவை படைப்பாரும் உளர். நான் என்னும் வடிவத்தைப் பிறழக் கொண்டமை போன்றே தன்மை ஒருமைக்கண் 'அன்' விகுதியையும் பிறழக் கொண்டனர்.

தன்மை ஒருமைக்கண் உள்ள 'அன்' என்பது புணர்மொழிக்கண் அமைந்த அல் என்பதன் பிறழ் பிரிப்பான் நேர்ந்த பிழை வழக்காகும். அஃதாவது, காண்பல்+மன்யான், உண்பல்+நனி என வருமொழி மெல்லெழுத்தோடு புணருமிடத்து லகரம் னகரமாக வேறுபட்டுக் காண்பன் மன்–உண்பன் நனி எனப் புணருமன்றே? அவ்வழி அவற்றைப் பிரிக்குமிடத்து

நிலைமொழியை லகர ஈறாகப் பிரிக்காமல் னகர ஈறாகவே கருதிப் பிரித்து அன் ஈறு எனக் கொண்டுவிட்டனர். ஒரே விகுதி படர்க்கைக்கும் தன்மைக்கும் வருமெனல் மயங்க வைத்தல் என்னும் சிதைவாதலையும் அவர் கருதிலர். இக்குழப்பத்தால் ஏடெழுதினோரான் சான்றோர் இலக்கியத்தும் பிழை நேர்வதாயிற்று. மேலும், அன் விகுதியே அல் எனத் திரிந்ததாக ஆய்வாளர் சிலர் பிறழக் கருதுவாராயினர்.

இனி தன்மை வினைமுற்று விகுதிகளின் ஆக்கப்பாட்டினைக் காண்போம். அம் ஆம் என்பவை நாம், நம் என்பவற்றுள் பொருளை உணர்த்தும் நகரமெய் தவிர்ந்த இறுதிநிலைகளே என்பது வெளிப்படை. எம், ஏம் என்பவை யாம் என்பதன் வேற்றுமை நிலையாகிய எம் என்பதும், அதன் நீட்சியுமே என்பது தெளிவு. கும் டும் தும் றும் என்னும் பன்மை விகுதிகளும் குடுதுறு என்னும் ஒருமை விகுதிகளும் முறையே உண்கும், காண்டும், வருதும், சேறும் எனவும், உண்கு–உண்டு, வருது, சேறு எனவும் வருதலைக் காணலாம். இவற்றின் பொருள் உண்பேம், காண்பேம், வருவேம், செல்வேம், உண்பேன், காண்பேன், வருவேன் செல்வேன் என்பதாகும். இங்ஙனம், பொருளை விரித்துக் காணும் வழியேதான் அவை இடமும் காலமும் உணர்த்தி நிற்பதைக் காணவியலும். இங்ஙனம் அவற்றின் பொருளைக் கொண்டு ஆராயுமிடத்து அவையாவும் எதிர்காலத்தை உணர்த்தி நிற்றலைக் காண்கிறோம். எனவே அவற்றின்கண் உள்ள க் ட் த் ற் என்னும் ஒற்றுக்கள் காலக் குறிப்பினை உணர்த்தி நிற்கவில்லை என்பதும் உம், உ என்னும் எஞ்சிய விகுதி நிலைகள் தனித்து வாராமல் அவற்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு வருதலின் அவை இடஞ்சுட்டும் உறுப்பாக நிற்கவில்லை என்பதும் விளங்கும். மற்று இவை உண், காண், வா, செல் என்னும் தொழிற் சொற்களை முதனிலையாகக் கொண்டு நிற்றலின் குறிப்பு வினைகள் எனற்கும் ஆகா. எனவே இவை கால இடைநிலைகளையும் இடமுணர்த்தும் விகுதிகளையும் தம்முள் அடக்கிக் கொண்டு மரூஉ மொழியாய்ச் செய்யுள் வழக்கிற்குரியவையாக அமைந்துள்ளமை வெளிப்படை. ஆய்வாளர் சிலர் இவற்றின் இறுதி நிலைகளாகிய உம், உ என்பவை முறை யேபன்மையையும் ஒருமையையும் காட்டு வனவாகவும், கடதறக்கள் காலத்தைக் குறித்து நிற்பனவாகவும் கொள்வர். அங்ஙனமாயின் இவற்றுள் இடத்தை உணர்த்தும் உறுப்பு இல்லை என்றாகும். அவ்வுறுப்பு இனறேல் இவற்றை தன்மை வினை என வரைதல் எங்ஙனம் பொருந்தும்? எனவே இவை என்றிசினோர் கண்டிசினோர் என்பவற்றைப் போல ஒரு வாறு திரிந்து மருவிய மரூஉ மொழிகளே எனக் கோடலே நேரிது. இனி இவற்றிற்குரிய செஞ்சொல் யாவை என்பது பற்றி நோக்குவோம்.

கும் டும் தும் றும் என்பனவற்றுள் டும் றும் என்பவை தும் என்பதன் திரிபுகளே என்பதும், குடுதுறு என்பனவற்றுள் டு,று என்பவை 'து' என்பதன் திரிபுகளே என்பதும் "குடுதுறு என்னும் குன்றிய லுகரம்" என்னும் கிளவியாக்கச் சூத்திரத்தான் விளங்கும். எனவே கும் தும் என்பவை ஒரு முழுமையான வினையின் மரூஉவே என வைத்து நோக்குமிடத்துக், கும் என்பது கொள்வெம் என்பதன் மரூஉவாகவும், தும் என்பது துன்னுவெம் என்பதன் மரூஉ வாகவும் கொள்ளற்கும் ஏற்கும். அவை முறையே கொள்வெம் கொள்வெம் → கொள்ம் → கொம் → கும் எனவும், துன்னுவெம் → துன்வெம் → துன்ம் → தும் எனவும் திரிதல் மொழியமைப்பிற்கு ஒத்ததே. மகர ஒற்று பன்மை உணர்த்தும் என்பது அறிந்ததே. அம்முறையில் மகர ஒற்று இன்மையே ஒருமையைக் காட்டிவிடும் எனக் கொண்டமையான் கொள்வென்–துன்னுவென் என்பவற்றின் மரூஉவாயமைந்த குன் துன் என்பவற்றின் னகரம் வலியுறுத்தப் பெறவில்லை எனக் கருதலாம் தமிழின் கிளைமொழிகளுள் மூத்ததான தெலுங்கு மொழியில் வத்தும், வத்துனன்–வராயுதும், வராயுதுன் என வழங்கி வருதல் இவ்வுண்மையைப் புலப்படுத்தும்.

இனி, தன்மை ஒருமைக் கண் அமைந்துள்ள அல் ஈறு ஆகல் என்பதன் மரூஉ எனத்தகும். என்னை யெனின், அல் எதிர்காலத்திற்கு மட்டுமே வருதலும். வியங்கோள் வினையின் ஈறாகச் சிறந்து நிற்றலுமேயாம். அவ்வழி அஃது, காண்பேனாகல், வருவேனாகல் என்றாற் போல அமைந்து ஏன் என்னும் விகுதி நீங்க காண்ப்+ஆகல், வருங்+ஆகல் எனக் கூடுமிடத்து காண்பாகல் →காண்பால் →காண்பல் என ஆக்கம் பெறுதல் மொழி மரபிற்கு ஒத்ததேயாகும். மேற்கண்ட முடிவுகள் முற்ற முடிந்தவை என்பது என் கருத்தன்று – மாணாக்கர் மேலும் ஆய்ந்து கொள்வராக.

இரு வகை வழக்கிலும் தமிழிற் காணப்பெறும் முன்னிலைப் பெயர்கள் நீ (நீன், நீய்), நீயிர் (நீர், நீவிர்), நின்(உன்), நும் (உம்), (நீம்) என்பனவாகும். இலக்கிய வழக்கில் நீ, நின், நீயிர், நீர், நும் என்பனவாகும். தொல்காப்பியத்துள், நீ, நீயிர், நின், நும் என்பவையே ஏற்கப்பட்டுள. முன்னிலை வினை விகுதிகளாக வழங்கப்படுவன இ, ஐ,ஆய், இர், ஈர், மின் என்பவையாம். 'உம்' என்பது பேச்சு வழக்கில் உள்ளது.

முன்னிலைக்கண் கட்டளையாக வரும் வினையைத் தொன்னூலார், *'ஏவல் கண்ணிய வியங்கோள்'* என்பர். இடைக்கால நூலோர் அதனை ஏவல் வினையெனத் தனியாகப் பிரித்துக் கூறுவர். ஒருமைக்கண் நிகழும் ஏவல் வினை விகுதியின்றி எடுத்தலோசை பெற்ற முதனிலைத் தொழிற்செல்லாகவே வரும். அதனால் மொழி இறுதிக்கண் வருமென விதிக்கப் பெற்ற எழுத்துக்களுள் வினைக்கீறாகாத எகா வகரமொழிந்த இருபத்திரண்டு ஈறுகளும் முன்னிலை வினையீறாகக் கொள்ளப்படுவன அன்றி, விகுதிகளாக மாட்டா. ஆதலின், விகுதி இடைச் சொற்களாக உள்ளவை மட்டுமே இவ்வாய்வுரைக்கண் மேற்கொள்ளப் பெறும்.

உயிர் முக்கோணமாகிய சுட்டெழுத்துக்களுள் அகரம் படர்க்கைக்கும் உகரமும் இகரமும் முன்னிலைக்குமாக அமைத்துக் கொள்ளப்பட்டன என்பது தன்மைப்பெயர் ஆய்வின்கண் அறியப்பட்டது. ஆண்டே முன்னிலைக்கண் பொருளைக் கருதி நிற்பது நகர மெய் என்பதும், இடத்தைச் சுட்டி நிற்பவை உகரமும் இகரமும் என்பதும், சிறப்புரிமையுடையது உகரம், சார்த்து முறையான் அமைந்தது இகரம் என்பதும் ஓரளவு விளக்கப்பட்டன.

ஆக, முன்னிலைக்கு உரிமையுடைய நகரமும் உகரமும் கூடிய பெயரே தலைமைப்பாடுடையதென்பது விளங்கும். அம்முறையில் நும் என்னும் பன்மைப்பெயர் ஒன்று மட்டுமே தொல்காப்பியத்துள் காணப்படுகின்றது. நூம், நுன், நூன் என்பவை ஆக்கம் பெற்றனவா, அன்றா என்பது தெரியவில்லை. இவை இலக்கியவழக்கில் யாண்டும் காணப்பெறவில்லை. மாறாக, முன்னிலை ஒருமைக்கண் நீ–நின் என்பவையும், பன்மைக்கண் முதல் வேற்றுமைச் சொல்லாக நீயிர் (நீஇர்) என்பதும் தொல்காப்பியத்துள் அமைந்துள்ளன. மற்றும், நீயிர் என்னும் எழுவாய்ப் பெயரை நும் என்பதன் திரிபு எனத் தொல்காப்பியம் விளக்குகின்றது. இன்றைய ஆய்வாளர் பலர் தன்மைப் பெயர் படர்க்கைப் பெயர்களுள் எழுவாய்ப் பெயர்தாம் வேற்றுமை ஏற்குமிடத்துத் திரிகின்றன; ஆதலின், நீயிர் என்னும் எழுவாய்ப் பெயர்தான் நும் எனத் திரிந்ததாகக் கொள்ளல் வேண்டும்; ஏதோ ஒரு மரபினை ஒட்டித் தொல்காப்பியர் அவ்வாறு கூறுகின்றார் என்பர். பிரயோக விவேகநூலார் வேற்றுமைப் பெயர் எழுவாய்ப் பெயராகத் திரியும் வடமொழி மரபினைச் சுட்டுதற்கு இதனை எடுத்துக்காட்டாக ஆசிரியர் கூறியுள்ளதாக விளம்புவார். ஊன்றி நோக்கின், தொல்காப்பியரின் அறிவியல் நோக்குப் புலனாகும்.

அவர், இவர் முதலாய சுட்டுப் பெயர், அரசர், அந்தணர் சான்றோர் முதலாய பொருட்பெயர் ஆயவை எழுவாய்க் கண்ணும் பிற வேற்றுமை ஏற்றற் கண்ணும் ஒரே நிலைமையுடையனவாகும். எழுவாய் வடிவம் ஒன்றாகவும்

வேற்றுமை வடிவம் ஒன்றாகவும் ஆதலில்லை. மூவிடப்பெயர்கள் மட்டுமே எழுவாய் வடிவம் வேறாகவும் வேற்றுமை வடிவம் வேறாகவும் அமைத்து வருகின்றன. இவற்றை நூல் நெறியான் இனி நோக்குவோம்.

மூவிடப்பெயர்களை இலக்கண நோக்கில் வரையறை செய்ய முற்பட்ட தொன்னூலோர் தன்மைக்கண் எகரத்தை மேற்கொண்டு இகரத்தை முன்னிலையிடத்திற் சேர்த்தமைத்தனர். இது பற்றித் தன்மைப் பெயராய்வில் விளக்கப்பட்டது. ஆண்டே, முன்னிலைக்குரிய மெய் நகரம் என்பதும் உயிர் உகரம் என்பதும் விளக்கப்பட்டன. அம்முறையில் முன்னிலைக்குரியவாக வரும் பெயர்கள் நுன், நும் என்பவையாகும். அவற்றுள் நுன் என்பது உலக வழக்கில் உன் எனத் திரிந்தமையான் விலக்கப்பட்டது. (காரணம் பொருளைச் சுட்டும் நகர மெய்யை இழந்தமையே). நும் என்பது எழுவாய்க்கண் வாராமையான் சார்த்திக் கொள்ளப்பட்ட இகர உயிரின் அடிப்படையில் வினை விகுதிகளை நோக்கி – நீ–நீயிர் என்பவை முன்னிலை இடத்து எழுவாய்ப் பெயர்களாக ஆக்கம் பெறுவனவாயின.

எனவே, அடிப்படை வடிவம் நும் என்பதனை நன்குணர்ந்தமையான் இலக்கண நெறிப்படி அதன் திரிந்த வடிவமாகவே எழுவாய்ப் பெயரை உணர்த்தவேண்டி,

அல்லதன் மருங்கிற் சொல்லுங்காலை
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர
இஇடைநிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே (எழு. புள். 31)

என ஆசிரியர் விதிப்பாராயினார்.

ஏனைய இடப்பெயர்களில் எழுவாய் வடிவங்களே திரிந்து வேற்றுமை வடிவாகும் என்னும் ஆசிரியர். முன்னிலைப் பெயர் மட்டும் இங்ஙனம் திரியுமெனல் என்னை எனின்? தன்மைப்பெயர், படர்க்கைப் பெயர்களின் வினை விகுதிகள் அவற்றின் வேறுபடாமல் ஒற்றுமைப்பட்டு நிற்றுலானும், தத்தம் இடத்திற்குரிய பொருள் எழுத்துக்கள் (ய்–த்) திரிபுறாமல் அமைதலானும் அவற்றிற்குத் தொன்னூலார் அங்ஙனம் விதி கூறினர். முன்னிலைக்கண் வினை விகுதிகள் முன்னிலைக்குரிய எழுத்தாகிய உகரத்தொடு தொடர்புடையனவாக அமையாமல் இ, ஐ, ஆய், இர்–ஈர் என இகரத்தொடு தொடர்புடையவாக அமைந்து வருதலான் நும் என்பதற்கு முதலுரிமை தந்து, அதன் திரிபாக எழுவாய்ப் பெயரைக் கூறினார். இம்மரபினை மேலும் வலியுறுத்தற் பொருட்டுச் சொல்லதிகாரத்திலும் 'நும்மென் திரிபெயர்' (விளி. 26) எனக் கூறுவர்.

அங்ஙனமாயின், ஒருமைப் பெயராகிய நீ என்பது குறுகி வேற்றுமை ஏற்கும் என்றது என்னை எனின்? முன்னிலை ஒருமைக்கண் நுன், உன் என்பவற்றைத் தொல்லாசிரியன்மார் கொள்ளாமையானும், நீன் என்னும் வடிவம் இலக்கிய வழக்கிற்கையாளப் பெறாமையானும், நீயிர் என்பதன்கண் உள்ள இர் என்னும் பன்மை விகுதி நீங்கிய முதனிலையையே முன்னிலை ஒருமைப்பெயராகக் கொண்டனர். அதனான் அது குறுகி னகர ஒற்றொடு கூடி நின்று வேற்றுமை ஏற்கும் என அமைத்துக் கொண்டனர்.

பன்மைக்கண் உள்ள இர், ஈர் என்பவை நீயிர் என்பதன் கண் உள்ள இர் என்பதன் நீட்சி என்பது வெளிப்படை. வந்தனிர் வந்தீர், வாராநின்றனிர், வாராநின்றீர், வருகுவீர், வருவீர் என இவை மூன்று காலத்திற்கும் வரும். எதிர்காலச் சொற்களுள் சில காணீர், கேளீர் என எடுத்தலோசையான் ஏவலின்கண் வரும் எனினும், அவை ஏவற் பன்மையை வரைந்துணர்த்தாமையான், வரைந்துணர்த்தல் வேண்டி ஆக்கம் பெற்றதே 'மின்' என்னும் விகுதியாகும்.

'மின்' விகுதியை ஆராயின் அஃது உலக வழக்கின்கண்வாரும், கேளும் என ஏவற்பொருட்டாய் வரும். உம் ஈறு பிறிதொரு அசையுடன் கூடி மருவி ஓரிடைச் சொல்லாக நிற்பதை அறியலாம். உம்மீறு உண்ணும், கூறும் எனப் படர்க்கை முற்றாயும் பொருள் கவர்புறுமாதலின், முன்னிலையை வரைந்து சுட்டற்குப் பிறிதோரசையைப் பெற்று மருவியுள்ளமை புலனாகும். செய்யாய், பாராய், கேளாய் என்னும் ஆய் விகுதி பெற்றுவரும் சொல் சேரி வழக்கின்கண் செய்யே : பாரே : கேளே : என ஏன் என்னும் இடைச்சொல் மூக்கொலி பெற்று வழங்குதலைக் காணலாம். இவ் ஏன் என்பதே இன் எனத் திரிந்து பாரும், கேளும், உண்ணும் என்னும் உம் ஈற்றொடு கூடி, பாருமின், கேளுமின், உண்ணுமின் என அமைந்து, பின்னர் உம், இன் என்பவை இணைந்து உம் மின் உகரம் கெட 'மின்' என அமைந்திருத்தல் வேண்டும்.

'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைச்சொல்லின் உகரம் கெட்ட வழி. செய்ம்மின், கேண்மின் என வழங்குமாதலின், இலக்கண முறையான் வரையறை செய்யுமிடத்து, நூலோர் அவற்றைக் கேண்ம், உண்ம் எனப் பிரிப்பின், அவை மாற்றுப் பொருள் தருதலின் அவ்வாறு பிரிக்காமல் கேள்– உண் என முதனிலையளவாகப் பிரித்து கேண்+மின், உண்+மின், செய்+மின் என மின் என்பதனை உயர்திணைப் பன்மையைக் குறிப்பாகச் சுட்டும் பொருட்டு விகுதியாக அமைத்துக்கொண்டனர் எனத்தெரிகின்றது.

இனி முன்னிலையசையாக வரும் மியா, இக, மோ, மதி, இகும் (இ) சின் என்னும் அசையிடைச் சொற்களின் அமைப்பைக் காண்போம்.

'மியா' என்பதனை உரையசை என்பர் நூலோர். அது முதனிலைத் தொழிற் சொல்லையடுத்தே வரும் என்பதும் முன்னிலை வினை விகுதியைப் போலப் பொருள் பயந்து நிற்கும் என்பதும் நூலோர் கருத்து. கேண்மியா, சென்மியா என்பதன்கண் உள்ள 'யா' என்பது 'ஏ' என்னும் அசையிடைச் சொல்லின் திரிபேயாம். கேண்மியா, சென்மியா என்பவற்றை 'யா' எனப் பிரிப்பின் எஞ்சியவை கேண்ம், சென்ம் எனப்பன்மைப் பொருள் தருமாதலின், மகரத்தின்கண் குற்றியலிகரத்தை ஏற்றி 'மியா' எனப் பிரித்துள்ளமை புலனாகின்றது. கேண்மியா, சென்மியா என்பவற்றுள் கேள், செல் என்பவையே ஏவல் ஒருமையை உணர்த்தி விடுதலின் மியா என்பதனை விகுதியாகக் கொள்ளாமல் ஓர் அசையாகக் கொண்டனர் எனலாம்.

மோ : இவ்வாறே 'மோ' என்பதும் ஓகார வினா மகரத்தொடு கூடிக் கேண்மோ, சென்மோ என அசைநிலையாக நிற்றலைக் காணலாம். இங்ஙனம் 'மோ' எனப் பிரித்துக் கொண்டமையான் காமஞ் செப்பாது கண்டது 'மொழிமோ' எனப்பிற ஈறுகளின் முன்னும் வருவதாயிற்று.

'இக' : இக என்பது அருள்க என்னும் பொருள் தரும் ஈக என்பதன் மரூஉவாகும். இது வியங்கோள் முற்றுப் பொருளில் நிற்றலின் முன்னிலையிடத்திற்குரியதாகக் கொள்ளப்பட்டுள்ளது. இஃது ஏனை வினைமுற்று விகுதிகளைப் போலாமல், 'கண்பனி ஆன்றிக என்றி தோழி'' என ஒரு வினைத் திரிபாக வருதலின் விகுதியாகக் கொள்ளாமல் முன்னிலைப் பொருள் குறிக்கும் அசைநிலையாகக் கொண்டனர் போலும்.

'மதி' : 'மதி' என்பது கருதுதல் என்னும் பொருளுடையது. ஆகலின், முதனிலை ஏவலின் பின் வந்து வற்புறுத்துதல் பயனாக நிற்றலின் அசைநிலையாகக் கொள்ளப்பட்டுள்ளது.

'இகும்' : இவ்விடைச்சொல் 'இக' என்பதன் மூலச் சொல்லாகிய ஈக என்பதனொடு முன்னிலைப் பொருள் தரும் 'உம்' என்பது சேர்ந்து மருவியதாகும். அங்ஙனம் மருவியமையான் அஃது ஏனையிடத்திற்கும் வருவதாயிற்று எனலாம்.

'சின்' : இஃது இசின் என்பதன் முதற்குறையாகும். 'இக' என்பது உம்மொடு கூடி இகும் என மருவியது போல, இதுவும் இக என்பது இன் என்பதனொடு கூடி இகின் என்றாகிப் பின் இசின் என மருவியதாகலாம். இதுகாறும் கூறிய இவ் அசைச் சொற்களைப் பற்றிய ஆய்வுரைகள் சொற் பொருளமைவினை நோக்கி ஊகிக்கப்பட்டவையன்றி முடிந்த முடிபுகளல்ல. அறிஞர் மேலும் ஆய்ந்து கொள்வாராக.

படர்க்கைப் பெயர்

மூவிடப் பெயர்களுள் தன்மை உயர்திணைக்கே உரியதென்பதும், முன்னிலை இரு திணைக்கும் பொதுவென்பதும், படர்க்கைப் பெயர் சிறப்புவினை சிறப்புப்பெயர்களைக்கொண்டு முடியுமிடத்து ஒரு திணைக்கண் அடங்கி நிற்கும் என்பதும் தொன்னூலோர் செய்த வரையறை. இடைக்கால நூலோர் பொருட்குணங்களை நோக்காமல் சொல் வடிவங்களை நோக்கித் தன்மையும் இரு திணைப் பொது எனக் கூறிச் சென்றனர்.

வினைமுற்றுக்களைப் பாகுபாடு செய்யுமிடத்துத் தொன்னூலோர் உயர்திணைக்குரியவை, அஃறிணைக்குரியவை, இரு திணைக்கும் பொதுவாக நிற்பவை என முக்கூறு படுத்தினர். அவ்வினைச் சொற்களே வகுத்துக் கூறுமிடத்துத் தன்மை வினையை உயர்திணைக்கே உரியதாகக் கொண்டனர்.

படர்க்கைப் பெயர்களுள் தான் என்பது ஒருமைக்கும், தாம் என்பது பன்மைக்கும் உரியவாகும். அவை வேற்றுமை ஏற்குமிடத்துத் தன், தம் எனக் குறுகிவரும். வினையொடு முடியுமிடத்துத் திணையையும் பாலையும் காட்டும். அம்முறைமையான் இரு திணை ஐம்பாற் படர்க்கைப்பெயர்கட்குரிய வினைகள் அவற்றின் விகுதிகளான் இடமுணர்த்தி நிற்கும்.

இடப்பெயர்	உயர்திணையீறு	அஃறிணை
தான்–தன் (செய்யும்)	(ஒ) அன், ஆன், ஆள்,அள்	து,று,டு,(செய்யும்)
தாம்–தம்	(ப) அர், ஆர், ப, மார்	அ,ஆ,வ (செய்யும்)

'உம்' மீறு செய்யும் என்னும் வாய்பாட்டு வடிவாய்க் கால இடைச்சொல்லின்றித் தானே காலமுணர்த்தும், மற்றை ஈறுகள் கால இடைச்சொற்களொடு கூடியும், மார், ப,வ,று,டு, என்பவை தாமேயும் காலங்காட்டி வரும். ஆகார விகுதி அஃறிணையில் மட்டும் எதிர்மறையுணர்த்தி வரும். தான்–தாம் என்பவற்றுள் தகரமெய் பொருள் நிலையையும் 'ன்' ஒருமையையும் 'ம்' பன்மையையும் உணர்த்தி நிற்கும் என்பது மேலே விளக்கப்பட்டது.

இனி தான், தாம் என்பவை அவன்தான் வந்தான், அவள் தான் வந்தாள், அவன்தனைக் காணேன், அவர்தமைக் காணேன் எனவும், அதுதான் வந்தது, அதுதன்னைக் கண்டேன் எனவும், நின்றனை அழைத்தார் என்றனைக் காண்க என வருதலாலும், இவ்வாறே தம் என்பதும் பால்தொறும் இடந்தொறும் வருதலானும், இவற்றைப் படர்க்கைப் பெயரென வரைந்து கூறுதல் ஒவ்வுமோ எனின், இவ்வினா தொடர்மொழியமைப்பினையும் பொருள் நிலையினையும் ஓராமல் எழுவதாகும். என்னை? இவ்வாறு வரும் தான், தன், தாம், தம் ஆகியவை பயனிலை வினைமுதலாக நின்று பயனிலை கொள்ளாமை வெளிப்படை மற்று, அவை இல்லாமலேயே அவ்வத் தொடர்கள் கருதிய பொருளை உணர்த்தி முற்றி இருக்கும். ஆதலின், அவை படர்க்கை வடிவத்தொடு நிற்பினும் பொருளின் வேறுபட்டுள்ளமை விளங்கும். அஃதாவது, அவை கண்ணினை விழித்தான். மரத்தினை நட்டான் என்பவற்றுள் நிற்கும். இன்–அத்து என்பவற்றைப் போலச் சாரியையாக வந்துள்ளமை அறியலாம். அவற்றின் பயன் அப்பெயர்களைச் சிறப்பித்துத் தோற்றச் செய்தலாகும்.

எனவே, தான், தாம் முதலிய பெயர்கள் வேறு; தான், தாம், தன், தம், நம், நும் என வரும் சாரியைகள் வேறு என்பதை அறிக.

படர்க்கை வினைமுற்று விகுதிகள்

படர்க்கைப் பெயர்கள் இருதிணைக்கும் பொதுவாக அமைந்துள்ளமையால் அவற்றின் இடஞ்சுட்டும் உறுப்புகள் (அன்,ஆன்,அம், ஆம்) வினை விகுதிகளாக அமைதற்கு இயையாது போயின. அதனான் இருதிணை ஐம்பாற் சுட்டுப் பெயர்களின் இறுதி நிலைகள் விகுதிகளாக அமைவனவாயின. தான் வந்தனன், வந்தான், தான் வந்தனள், வந்தாள், தாம் வந்தனர், வந்தார் என்னும் வினை முற்றுக்களில் உள்ள அன்,ஆன்,அள்,ஆள், அர்,ஆர் என்பவை அவன்,அவள்,அவர் என்பவற்றின் இறுதிநிலைகளான அன்,அள்,அர் என்பவையும் அவற்றின் நீட்சியுமே ஆகும். அவ்வாறே தான் வந்து தான் வந்தன்று, தான் குண்டு கட்டு என்பவற்றில் உள்ள து,று,டு, என்பவை அது என்னும் சுட்டுப் பெயரின் இறுதி நிலையே யாகும். வந்தன்று, குண்டுகட்டு என்பவற்றில் உள்ள று,டு என்பவை தகரத்தின் திரிபுகளேயாகும். தாம் வந்தன, சென்றன என்பவற்றில் தகரத்தின் திரிபுகளே என்னும் சுட்டுப் பெயரின் முதனிலையாகும். காண்மார் – உண்மார் எனவரும் மார் ஈறு தாம் என்பதன்கண் உள்ள மகரப் புள்ளியொடு ஆர் விகுதியைச் சேர்த்து அமைத்துக் கொண்ட விகுதியாகும். அதன் பயனாவது, வினை கொண்டு

முடிவதற்கு உரியதாதலும், அர்,ஆர்,ஈறுகளான் வேறுபடுத்தற்கு இயலாத னகர ஈற்று இயற்பெயர்களையும் முறைப் பெயர்களையும் சாத்தன்மார், கொற்றன்மார், மாமன்மார், தந்தைமார், தாய்மார் எனப் பன்மைப்படுத்தலுமாம்.

உயர்திணைக்கண் வரும் பகர உயிர்மெய்யீறும் அஃறிணைக் கண் வரும் வகர உயிர்மெய்யீறும் அவ்வத்திணைகட்கே உரியனவாகும். பகர வகரங்களைப் பிரித்து அவற்றை இடைநிலையாகக் கொள்ளின் எஞ்சிய அகர ஈறு அஃறிணைக்கே உரியதாகும். இடைக்கால நூலோர் இந்நுண்மையை ஓராமல் மயங்க வைத்தனர்.

அஃறிணைக்கண் வரும் வகர உயிர்மெய் அவை என்பதன் இறுதியாகிய 'வை' என்பதன் திரிபாகும். இதற்கு ஈடாக உயர்திணைக்கண் படைத்துக் கொள்ளப்பட்டது பகர உயிர் மெய்யாகிய விகுதி எனத் தெரிகின்றது. ஆகார ஈறு உண்ணா தின்னா என எதிர்மறை பற்றி அஃறிணைக்கே உரியதாக வரும்

உண்ணான் உண்ணாள் உண்ணார் என ஆகாரம்
உயிர் திணைக்கண் இடைநிலையாகிவரும்.

செய்யும் என்னும் வாய்பாட்டு 'உம்' ஈறு அன், அர் என்பதன் திரிபாகக் கொள்ளலாம். இது பல்லோரறியும் சொல் ஒழிந்த படர்க்கை நான்கு பாலிற்கும் வருதலின் அங்ஙனம் திரித்துக் கொள்ளப்பட்டதுபோலும்.

தொன்னூலோர் நெறியினை அறிவியல் நோக்கொடு விளக்கும் தொல்காப்பியம், எழுத்ததிகாரம் நூன்மரபின் இறுதிக்கண் அ,இ,உ அம் மூன்றும் சுட்டு என விளம்புகின்றது. உயிர் எழுத்துக்களுள் இம்மூன்றும் சுட்டிடைச் சொல்லாக வரும் என்பது அதன் கருத்து. இவற்றை முதனிலையாகக் கொண்டு இருதிணை ஐம்பாற் சுட்டுப்பெயர்களும், இடம், காலம், தன்மை, உறவு முதலாயவற்றைக் குறித்துவரும் பெயர்களும் தோன்றும். பழந்தமிழில் இம்மூன்று சுட்டுக்களான் உணர்த்தப்படும் பொருள்களை ஒருங்கு குறித்துணர்த்துவதற்கு எகரம் பயன்படுத்தப்பட்டதென்பதும், பின்னர் இலக்கண முறையான் வரையறை செய்த காலத்து எகரம் எஞ்சாப்பொருள்தரும் இடைச்சொல்லாக ஆக்கிக் கொள்ளப்பட்டது என்பதும், மூவிடப்பெயர் ஆய்வுரையின்கண் விளக்கப்பட்டது. எனவே சுட்டு என்பது அ,இ,உ ஆகிய மூன்றும் அவற்றின் நீட்சியுமேயாகும்.

இவற்றின் அகரம் சேய்மையிடத்தையும், இகரம் அண்மை இடத்தையும் (தன்மையை அகப்படுத்தும் இடம் அண்மை) உகரம் அவ்இரண்டிற்கும் இடைப்பட்ட இடத்தையும் உணர்த்தும் பொருளமைப்பு டையவையாகும். சேய்மையைச் சுட்டுங்கால் தலையை அண்ணாந்து நீட்டியும், அண்மை இடத்தைச் சுட்டுங்கால் தலையைக் குனிந்து நிலன்நோக்கியும், அவற்றிற்கு இடைப்பட்ட இடங்களைச் சுட்டுங்கால் தலையைச் சிறிது முன்னீட்டிக் குனிந்தும் மக்கள் நிகழ்த்தும் மெய்ப்பாடுகளானும் பேசுதற்கியலாத ஊமையர் அவ்வாறு செய்யுமிடத்து முறையே ஆ, ஈ, ஊ என ஓசையெழுப்பிக் காட்டுதலானும் உணரலாம்.

அங்ஙனம் மெய்ப்பாட்டு (செய்கை) அடிப்படையில் எழுந்து பேச்சுமொழியாகிப் ஆக்கம் பெற்ற காலை அ, இ, உ இம்மூன்றும் அடிப்படையாக வரையறை செய்யப்பெற்றமை புலனாகும். இம்மூன்றும் அகரத்தின் முக்கோணங்களாக அமைந்துள்ளமையையும் கருதுதல் வேண்டும்.

இருதிணை ஐம்பால் சுட்டுப்பெயர்கள்

அவன் இவன் உவன்	அது இது உது
அவள் இவள் உவள்	அஃது இஃது உஃது
அவர் இவர் உவர் (கள்)	அவை இவை உவை (கள்)
	அவ் இவ் உவ்

இச்சுட்டுப் பெயர்களுள் சுட்டெழுத்துக்கள் இடங்களையும் இறுதிநிலைகள் திணை பால்களையும் குறித்து நிற்பதை அறியலாம். (இறுதி நிலைகளை இனி விகுதி என்னும் குறியீட்டான் உணர்வோம்) இவற்றில் உள்ள விகுதிகள் முறையே அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, வை, வ் என்பனவாகும், அஃது, இஃது, உஃது என்பனவற்றுள் உள்ள ஆய்தம் விரித்தல் விகாரம் பற்றிப் புணர்ச்சியிலக்கண முறையான்அமைந்ததாகும். இனி இவ்விகுதிகளுள் வ், வை என்பவை தவிர்ந்தவை அவ்வப்பால் பற்றிவரும் வினைமுற்றுக்களின் இறுதியாக அமைந்துவருதலையும் காணலாம். எனவே அவை அவ்வப்பாற் பொருள்களைக் குறித்து நிற்கும் பெயர்ச்சொற்களின் திரிபுகள் அல்லது மரூஉக்கள் என்பது புலனாகும். எனவே அவற்றின் மூலச்சொற்கள் யாவை என்பது பற்றி இனிக்காண்போம்.

உயர்திணை முப்பால் என்பவை ஆடூஉ, மகடூஉ அவ்விரண்டன் பன்மை என்பது அறிந்ததே. ஆக ஆடூஉவின் குறியீடே அன், ஆன், மகடூஉவின் குறியீடே அள், ஆள்; அவற்றின் பன்மை அர், ஆர் என்பனவாகும். ஆடூவிற்குரிய அடிப்படைப்பெயர் ஆண் மகடூவிற்குரிய அடிப்படைப்பெயர் ஆள். அவற்றுள் ஆண் என்பதன் திரிபே அன் எனல் தகும். ஆள் என்பதன் குறுக்கமே அள் என்பது தெளிவு. இனி, அர், ஆர் என்பவை அவ்இருபகுதியையும் குறித்தலான் (இரு) ஈர் என்பதன் திரிபாக ஆக்கம் பெற்றன எனக் கொள்ளலாம். அவை, அ+அன்=அவன்; அ+அள்=அவள்; அ+அர்=அவர் என வகர உடம்படுமெய்பெற்று ஒருமொழிப் புணர்ச்சியவாகலின் வகரம் இரட்டாமல் புணர்ந்து அமைந்துள்ளன.

இனி, அது, இது, உது என்னும் அஃறிணை ஒருமைக்கண் அமைந்துள்ள து என்னும் இறுதி உடைமை நிலையை உணர்த்தி வரும் ஓர் உரியடியாகும். அப்பொருளினை நோக்கியே இதனை ஆறாம் வேற்றுமை உருபாகவும் குறிப்புவினை முற்றுவிகுதியாகவும் கொண்டனர் என்பது புலனாகின்றது. அஃறிணை ஒருமை வினைமுற்று விகுதியாக அமைந்ததற்கும் அதுவே காரணமாகும். எனவே து என்னும் விகுதியே சுட்டிடைச்சொல்லைச் சார்ந்து அஃறிணை ஒருமைச் சுட்டுப்பெயராக ஆக்கம் பெற்றுள்ளது.

அவை, இவை, உவை, அவ், இவ், உவ் என்னும் அஃறிணைப் பன்மைச் சுட்டுப்பெயராக உள்ள வை, வ் என்பன ஒருமைச் சுட்டுப்பெயரை ஒப்ப வினை விகுதியின் திரிபாக அமைந்தவையேயாகும். அஃறிணைப் பன்மை வினைமுற்று விகுதிகள் அ, வ என்பனவாகும். அவற்றுள் அகரம் புணருமிடத்து வகர உடம்படுமெய் பெற்று அவ என்றாகும். மலையாளத்தில் அவ என்பதே பன்மைச் சுட்டுப் பெயராக உள்ளது. கன்னடத்திலும், தெலுங்கிலும் இவ்விகுதி முறையே அவு என்றும் ஆக்கமுற்றுள்ளது. அவ்வாறே தமிழிலும் அவை என ஐகார ஈறாக ஆக்கம் பெற்றுள்ளது எனல் தகும். மற்றொரு வடிவமாகிய அவ் என்பது புணர்மொழிகளைப் பிரித்துக்கொள்ளும் நோக்கில் அமைத்துக்கொண்டதாகத் தெரிகின்றது. அஃதாவது அவ்யானை–அவ்யானைகள், அம்மரம் – அம்மரங்கள் என்னும் புணர்மொழிகளுள் வருமொழிச்சொற்கள் ஒருமையாயும் பன்மையாயும் நிலைமொழியாகிய சுட்டுவடிவ வேறுபாடின்றியும் நிற்றலான்–அவற்றைப் பிரித்துணர்த்துமிடத்து ஒருமையாயின் அகரச்சுட்டிடைச் சொல்லாகவும், பன்மையாயின் அவ் என்ப்பிரித்துச் சுட்டுப் பெயராகவும் கொள்ளல் வேண்டுமென அமைத்துக்கொண்ட இலக்கண அடிப்படையில் ஆக்கம் பெற்றதாகக் கொள்ளலாம்.

அது இது என்னும் சுட்டுப்பெயர்கள் வருமொழி உயிர் வருமிடத்து இடையே ஆய்தம் பெறும் என அமைத்துக் கொண்டமைபோலச் சுட்டுச் சொற்கள் பன்மையைச் சுட்டுங்கால் அவ் எனப்பிரித்துக்கொள்ள வேண்டுமென இலக்கண நோக்கில் அமைத்துக் கொள்ளப்பட்டதென்பது பொருந்தும். சுட்டுப்பெயர்களுள் உகரச்சுட்டின் வழியமைந்த பெயர்கள் அருகிவழுங்கும் சில பயிலப்படாமல் ஒழிந்தன. அ, இ, உ என்பவை செய்யுளுள் நீண்டும் அன்றி இன்றி எனத்திரிந்தும் வரும். இது என்னும் பெயர் ஈது எனவும் வரும்.

இனிச்சுட்டெழுத்துக்களின் அடிப்படையில் அமைந்த இடப்பெயர், குணப்பெயர் உறவுப்பெயர்களைக் காண்போம்.

இடப்பெயர்கள்

அங்கு இங்கு உங்கு	ஆங்கு ஈங்கு ஊங்கு
ஆண்டு ஈண்டு ஊண்டு	ஆண்டை ஈண்டை ஊண்டை
அம்மை இம்மை உம்மை	அம்பர் இம்பர் உம்பர்
அவண் இவண் உவண்	ஆன் ஈன் ஊன்
அதோளி இதோளி உதோளி	அணி இணி உணி

என்பவை இடங்குறித்துவருவன. இவற்றுள் முதனிலையாக உள்ள சுட்டு எழுத்துக்கள் சேய்மை அண்மைகளை உணர்த்தி நிற்க எஞ்சிய பகுதிகள் இடமாகிய பொருளை உணர்த்த அமைந்தனவாதல் வேண்டும்.

இடம் என்பது குறிப்பிடப்படும் ஓர் ஆதாரமேயன்றி வரையறுக்கப்படுவதோர் பொருளன்மையான் சுட்டிக்கூறுவோனது மெய்ப்பாட்டுச் செய்கையானும் குறிப்பொலியானும் அவ்விடப்பெயர்கள் அமைந்துள்ளன. அஃதாவது ஆ,ஈ,ஊ என இடங்குறித்தெழுந்த உயிரிசையை அவ்வவ் இடம் நோக்கி முடித்தற்கண் வந்த துணை அசைகளாக அவை அமைந்துள்ளன.

ஆன், ஈன் என்பவற்றின் னகரம் வயின் என்பதன் குறியீடாக அமைந்துள்ளது எனத்தெரிகின்றது. அவண், இவண் என்பவை முதற்கண் தன்மையை உணர்த்திப் பின் இடப்பொருளிலும் பயில்வனவாயின எனத் தெரிகின்றது. அவற்றுள் அமைந்துள்ள வண் என்பது வண்ணம் என்பதன் குறைவடிவமெனக் கருதலாம்.

அங்கு இங்கு என்பவற்றின் இறுதி கண் என்னும் இடப்பொருளுருபின் திரிபாகலாம். அகண்–அங்கண் ஆங்க–ஆங்கு என அமைந்ததாகல் வேண்டும். ஆண்டு ஈண்டு என்பதன்கண் உள்ள இறுதி பொருட்குறியீடாகிய ஆன் ஈன் என்பவற்றொடு இணையுமிடத்து மயக்கநிலைக்கேற்ப ஆன் து ஆண் து ஆண்டு ஆண்டை என அமைந்ததாகல் வேண்டும். அம்மை இம்மை என்பவற்றின் இறுதி மண் என்பதன் மரூஉவெனத் தெரிகிறது. அ மண் அம்மண் அம்மை என்றாதல் மொழியாக்க இயல்பிற்கு மாறானதன்று. அவ்வாறே அம்பர் இம்பர் என்பவற்றின் இறுதிநிலையாகிய பர் என்பது நிலம் எனப்பொருள் தரும் பார் என்னும் பெயரின் சுருக்கமே எனக்கொள்ளலாம்.

அதோளி இதோளி என்பவை சுட்டு முதலாகிய இகர இறுதி (தொல். எழுத்.) என்னும் தொடருக்கு உரையாளர்களான் காட்டப்பட்டனவாகும். கலித்தொகையுள் ஈதோளி என்பதொரு சொல்லாட்சி காணப்படுகிறது. பிற இலக்கியங்களில் பயிலப்படவில்லை. மற்று தொல்காப்பியம் ''சுட்டு முதலாகிய இகர இறுதி'' என்கிறது. அதோளி என்பதில் சுட்டுப்பெயர் முதலாக உள்ளது. எனவே இது தொல்காப்பியம் சுட்டும் இடச்சொல்லாகத் தெரியவில்லை. இச்சொல் அது என்னும் சுட்டுப்பெயரொடு இடப்பொருள் தரும் ஏழாவதன் சொல்லுருபாகிய உள் என்பது கூடி அதோள் என ஆகிப் பின் இகரவிகுதி சேர்ந்து அதோளி என ஆக்கமுற்றதாகத் தெரிகின்றது. இனி அ அள் என்பவை தகர ஒற்றினை எழுத்துப்பேறாகக் கொண்டு அதோள் என ஆகியிருக்கலாம் என அமைதி கொள்ளலுமாம்.

குணப்பெயர் - காலப்பெயர்

அன்ன இன்ன உன்ன
அனைய இனைய உனைய
அற்று இற்று உற்று
அனைத்து இனைத்து உனைத்து

இவை தன்மை ஒப்பு இயல்பு அளவு ஆகியபொருள் பற்றி நிற்கும் குணம் சுட்டுவன

அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம்
ஆங்ஙனம் ஈங்ஙனம் ஊங்ஙனம்
அன்னணம் இன்னணம் உன்னணம்
அன்று இன்று உன்று
அற்றை இற்றை உற்றை
அளி இளி உளி

இவை காலப்பொழுதினைச் சுட்டுவன ஆங்கு ஈங்கு ஊங்கு என்பவை ஒரோவிடத்துக் காலஞ்சுட்டிவருதலும் உண்டு.

அன்ன அனைய என்பவற்றின் ஈற்றுஅகரம் ஒப்புணர்த்தி நிற்றலின் அகரத்தை ஒப்புருபாகக் கொண்டு புறனடையில் அடக்கலாம். அன்று இன்று அற்று இற்று அனைத்து இனைத்து என்பவற்றின்கண் உள்ள று து என்பவை பொருட்குறியீடாகிய 'து' என்பதேயாகும். இவற்றுள் அன்ன, அனைய, அற்று, அனைத்து என்பவை பெயர்ப்பொருளை வினைக்குறிப்பு மொழியாக நின்று சுட்டும். அவ்வாற்றான் அவ் அகரமும் துவ்வும் அது என்னும் ஆறன் உருபின் கூறாக அமைந்தனவாகக் கொள்ளலாம்.

அங்ஙனம் ஆங்ஙனம் முதலியவற்றுள் அன் ஆன் என்னும் முதனிலை தவிர்ந்த இறுதிநிலை ஙனம் என நிற்கின்றது. ஙகரம் மொழி முதலாக அமையாமையான் அஃது வேறொரு சொல்லின் திரிபென்பது வெளிப்படை. இச்சுட்டுப்பெயர்கள் நிலைமொழி வருமொழிகளாக அமைந்த தொகை மொழிகள் அல்லவென்பதும் அவர் இவன் என்றாற்போல ஒருமொழிப் புணர்ச்சி என்பதும் உளங்கொளற்பாலது. மற்றும் இவை அவன் அவள் என்பவற்றின் இறுதிநிலை பாலுணர்த்துமாறு போலாமல் ஆங்க ஆண்டு என்றாற்போல மருவி நிற்பவை என்பதையும் காணல் வேண்டும். இவற்றை மொழியாக்க நெறிப்படி நோக்காமல் வரிவடிவை மட்டும் நோக்கி இடைக்கால நூலோர் அ ஙனம் ஆ ஙனம் எனப் பிரித்து விதிகூறிச் சென்றனர். அவர் 'ஙனம்' என்பதற்குத் தன்மை எனப்பொருள் கொண்டனர். உரையாளரும் பிறரும் அவ்வாறே கொண்டு அமைவராயினர். யாவரும் முதனிலையைத் தனிச்சுட்டெழுத்தாகவே கொண்டனர். அ ஙனம் என்பவை அங்ஙனம் எனப்புணருமேனும் ஆங்ஙனம் என்பவை ஆங்ஙனம் எனப் புணர்தல் இலக்கண மரபாதலில்லை. என்னை? நெடிலின் பின்வரும் மெல்லினம் மிகுமென்னும் விதியின்மையான் என்க. மற்று ஒரு சாரார் ஙனம் என்பது கனம் என்ற சொல்லின் திரிபென்பர். கனம் என்பதற்குத் தன்மை எனப்பொருள் கொள்வார். கனம் என்பது தன்மைப்பொருளில் வருதல் இருவகைவழக்கினும் காணுமாறில்லை. எனவே ஒருசாரார் 'தனம்' என்பதன் திரிபே ஙனம் எனத்திரிந்தது எனக்கொள்வர். இக்குழப்பங்கட்கெல்லாம் காரணம் இச்சுட்டுப் பெயர்களை இருமொழிப் புணர்ச்சியாகக் கொண்டமையேயாம்.

இனி அங்ஙனம் ஆங்ஙனம் என்பவை பயின்றுவருமிடங்களை நோக்கின் அவை அவ்வாறு, அப்படி என அளவைப் பொருள்படவும், ஒப்புப்பொருள் படவும் நிற்றலைக் காணலாம். 'கனம்' என்பதற்கு 'அளவு' என்பதும் பொருளாகலின் அன் கனம் ஆன் கனம் என்னும் சொற்கள் தம்முள் இணைந்து ஒரு சொல்லாக மருவுமிடத்து அங்ஙனம, ஆங்ஙனம் என ஒலி நயம்பட அமைந்தன எனக்கோடலே நேரிதாகும்.

மற்று இங்ஙனம் ஒரு சொல்லாக மருவாமல் சிறுபான்மை ஆங்கனம் எனவும் நிற்கும். அவ்வழி அதனை இருமொழிப் புணர்ச்சியாகக் கோடலே நேரிதாகம்.

அன்னணம் இன்னணம் என வருவனவற்றுள் அணம் என்னும் இறுதிநிலை வண்ணம் என்னும் தன்மைப்பொருளுணர்த்தும் சொல்லின் மரூஉவாகலாம்.

அன்று, இன்று எனப்பொழுது சுட்டிவரும் பெயர்கள் நாள் என்னும் பொருளுடைய ஞான்று என்னும் சொல்லின் இறுதி நிலையாகிய 'ன்று' என்னும் சுட்டெழுத்தொடு கூடியமைந்தனவாகும். ஞான்று என்பதற்கு நாட்பொழுது என்பது பொருள் என்பது வெளிப்படை. அற்றை இற்றை என்பவை ஒன்று ஒற்றை ஆண்டு ஆட்டை என அமைந்தாங்கு அமைந்த திரிசொற்களாகும்.

அனி இனி உனி என்பவற்றுள் 'இனி' என்பது மட்டுமே தொல்காப்பியத்துள் கூறப்பட்டுள்ளது. அஃது, இன் என்னும் சுட்டுப்பெயரொடு குறிப்பாற் காலமுணர்த்தும் இகரம் சேர்ந்த வடிவாகத் தெரிகின்றது. அங்கு, ஆங்கு முதலியவை அன் ஆன் என்னும் சுட்டுக்களொடு ஏழாம்வேற்றுமை உருபாகிய 'கண்' என்பது கூடிமருவிய வடிவமாகும். அங்கு ஆங்கு என்பவை பெரும்பான்மை இடத்தையும் சிறுபான்மை காலத்தையும் உணர்த்தி வரும்.

கிளை (உறவு)ப் பெயர்கள்

எமன், நுமன், தமன் – எமன், நுமர், தமர் என்பவை மூவிடப்பெயர்களின் அடிப்படையில் அமைந்தவையாகும். இவற்றின் முதனிலையாகிய எம், நும், தம் என்பவை ஒருமையீறு பன்மையீறு ஆகிய இரண்டினையும் ஏற்றுவருதலின் இவற்றைப் பிரித்துப் புணர்ச்சி விதிகாணுதல் கூடாது என விதித்தனர் நூலோர்.

எல்லாம்-எல்லீர்-எல்லார் என்னும் பன்மைப் பெயர்கள்

'எல்' என்னும் முதனிலையைக் கொண்டு மூவிடப்பெயராக ஆக்கம் பெற்ற எல்லாம், எல்லீர், எல்லார் என்னும் சொற்களின் அமைப்பினை நோக்குமிடத்து எல்லீர், எல்லார் என்பவை முறையே முன்னிலைக்கும் படர்க்கைக்கும் உரியவை என்பது அவற்றின் இறுதிநிலைகளான் புலனாகும்.

அவற்றுள் படர்க்கைப்பெயர் உயர்திணைக்கே உரியது. ஏனைய முன்னிலைப் பெயர்களைப் போன்றே முன்னிலைப்பெயர் இருதிணைத் தன்மைப் பன்மைக்கும் வரும். எஞ்சிய எல்லாம் என்பது உயர்திணைத் தன்மைப் பன்மைக்கும் அஃறிணைப் படர்க்கைப் பன்மைக்கும் வரும் என்பதும் தொன்னூலோர் கொள்கை. இடைக்காலத்தே அந்நெறியினின்றும் ஒரோவிடத்துப்பிறழ்ந்த ஆட்சிகளை வழுவமைதியாகக் கொண்டனர் தொல்காப்பிய உரையாசிரியர்.

நன்னூல் முதலியவை அதனை வழாநிலையாகக் கொண்டு விதி கூறிச்சென்றன. எல்லாம் என்பது உயர்திணை மூன்றிடத்திற்கும் பொதுவாயின் எல்லீர் எல்லார் என்பவை மிகையானவையாம். அவை மிகையாகா எனின், தன்மைக்கண் வரும் சொல்லிற்குத் தன்மைக்குரிய விகுதியாகக் கொள்ளலாமெனின் அஃது அஃறிணைப்படர்க்கைப் பன்மைக்கும் உரியதாக உள்ளமையின் அங்ஙனம் கொள்ளற்கியலா மையறியலாம். இத்தடுமாற்றம் காரணமாகத் தோன்றியதே 'எல்லேம்' என்னும் படைத்து மொழி கிளவி என்பது தெரிகின்றது. இடைக்காலநூலோர் இங்ஙனம் வழுவியமைக்குக் காரணம் தன்மை இடத்தை இருதிணைப்பொதுவாகக் கொண்டமையேயாகும்.

இனி முதனிலையாக நிற்கும் 'எல்' என்பதனைப் பற்றிக் காண்போம். 'எல்' என்பதில் உள்ள எகர உயிர் எது எவன் எவள் எவை என்பவற்றைப் போல வினாப்பொருளைக் குறியாமல் அ இ உ என்னும் சுட்டிடைச் சொற்களான் உணர்த்தப்படும் பெயர்ப்பொருள்களை இடப்பொதுவாய் நின்று அவற்றை ஒருங்கு அகப்படுத்திச் சுட்டின் பயத்ததாக நிற்றலைக் காணலாம். அந்நிலைமையை நோக்கித் தொன்னூலார் இவ் எகரத்தை எஞ்சாப் பொருள் தரும் உரிச்சொல்லின் அடியாகக் கொண்டு பன்மைக் குறிப்புடைய லகர ஒற்றினைக் கூட்டி 'எல்' என ஆக்கஞ் செய்தனர் என்பது தெரிகின்றது. லகரம் பன்மைக் குறிப்புடையது என்பதனைப் பல், சில் என்னும் தொகுதிப்பெயரானும் (பல் து பற்று) பத்து என்னும் எண்ணுப்பெயரானும் அறியலாம். துளி துளியாகப் பல்குதல் காரணமாகவே அப்பெயர் அமைவதாயிற்றுப் போலும்.

----

3. மொழி முதனிலை இறுதிநிலை எழுத்துக்கள்

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் திகழும் நல்லுலக மக்கள் வழக்கும் செய்யுளுமாகப் பேசியும் வரைந்தும் வழங்கும் தமிழ் மொழியின் செம்மையினையும் செம்மாப்பினையும், செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு

முந்துநூல் கண்டு முறைப்பட ஆய்ந்து அதன் இயல்புகளைத் தொகுத்துணர்த்திய ஒல்காப் புலமைத் தொல்காப்பியனார் மொழியியலுள் ஐயந்திரிபுகள் நிகழாவண்ணம் எழுத்தியல் மரபுகளை வகுத்தமைத்துக் கொண்டு முதற்கண் அவற்றின் தனி இயல்புகளை நூன்மரபின் கண் விளங்க வரைந்து, பின்னர் அவ்வெழுத்துக்கள் பொருள் கருதி மொழியாக்கம் பெறும் இயல்பினை இரண்டாவதாகிய மொழி மரபினுள்,

"ஓரெழுத் தொருமொழி ஈரெழுத்தொ ருமொழி
இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி யுளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே"

எனக் கூறினார்.

இதன்கண் மூன்றே என்னும் ஏகாரந் தேற்றம். அவற்றுள் ஓரெழுத் தொருமொழிகள் இத்துணைய என்பார்.

"நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி"

என்றார்.

இதனான் ஆ–ஈ–ஊ–ஏ–ஐ–ஓ–ஔ ஆகிய ஏழுமே ஓரெழுத்தொரு மொழி என்பது புலனாகிறது. கா–மா–பூ முதலாயவை உயிரும் மெய்யும் கூடி நிற்பதனால் இவைபோல்வன ஓரெழுத்தொரு மொழியா ஈரெழுத்தொருமொழியா என ஐயந் தோன்றுவது இயற்கை. ஏனெனின்,

"அகர முதல் னகர இறுவாய் முப்பஃ தென்ப"

என முதற்கண் மெய்யெழுத்துக்களும் எண்ணப்பெற்றுள்ளமையின் என்க.

ஆயினும் உயிர்மெய்க் குறிலையும் உயிர்மெய் நெடிலையும் ஆசிரியர் ஓரெழுத்தாகக் கொள்வதனை

"தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்" (உயிர் மயங் : 12)
"குற்றெழுத் திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்" ("65)
"குறிலே நெடிலே குறிலிணை குறில்நெடில்" (செய்யு : 3)

என உடம்பொடு புணர்த்திக் கூறுவதனால் அறியலாம். இதனை ஒற்றுமை நயமென்பார் இயல் நூலார்.

இனி, யா, மா என்னும் ஓரெழுத்தொருமொழிகள் ஆய், ஆம் என மாறி நிற்பின் ஈரெழுத்தொருமொழியாகும். இவ்வாறு அமைவது தமிழ் மரபாகும்.

அஃதாவது தாமரை என்பது ஒரு சொல்லாகவும் தாவும் மரை எனக் கொள்ளின் இரண்டு சொல்லாகவும் பிரிப்பு முறையால் வருதல் ஒருவகை மரபு. எழுந்திருந்தான் என்பது ஒரு சொல்லாகவும் எழுந்து பின்னர் இருந்தான்

என இரண்டு சொல்லாகவும் பொருள் நோக்கு முறையால் வருவது ஒருவகை மரபு. இவ்வாறே உயிர்மெய்யெழுத்தைப் புணரியல் நோக்கில் ஈரெழுத்தாகவும் பொருளைச் சுட்டிவரும் மொழி நோக்கில் ஒரெழுத்தாகவும் கொள்வது மொழியின் மரபாகும். அதனானன்றே ஆசிரியர் இவை பற்றிய தன்மைகளை இயல் என்னாது மரபு என்று தெளியுமாறு நூன்மரபு–மொழிமரபு எனப்பெயரிட்டுக் கூறுவாராயினர். எனவே ஒரெழுத்தொருமொழி என்னும்போது தனித்து ஓர் உயிர் நெடிலாக வருவது இலக்கணமென்றும் உயிர்மெய் நெடிலாக வருவது மரபு என்றும் தெளிதல் வேண்டும்.

இனி நன்னூலாசிரியர்

"எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்" என இலக்கணம் வகுத்துக் கொண்டமையின் "ஓரெழுத் தியல் பதம் ஆறேழ் சிறப்பின" எனக் கூறினார். ஆண்டும் அவர் ஒரெழுத்துப் பதம் என்னாது இயல்பதம் என்று கூறியதன் நுட்பத்தை ஓர்தல் வேண்டும். இது நிற்க.

ஒரெழுத் தொருமொழி உயிர்மெய்யாக இருப்பின் நிலைமொழி வருமொழிகளோடு புணர்தற்கண் மெய்ம் முதலாகவும் உயிர் ஈறாகவும் கொள்ளப்படும் இதனை

"மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே" (நூன் : 18)

என்பார் ஆசிரியர். இவ்வியல்பு இரண்டிறந் திசைக்கும் தொடர் மொழிக்கும் அமையும்.

மக்களின் உணர்வுகள் எண்ணமாகிக் கருத்துக்களாகின்றன. கருத்துக்கள் சொல் வடிவமாக நிகழ்தலின் அவை சொற்களாக வெளிப்படுகின்றன. சொற்களின் கோவையே சிந்தனைகள். சொற்றொடராகும் காரியத்திற்குச் சொற்கள் காரணம். சொற்களாம் காரியத்திற்கு எழுத்துக்கள் காரணம். எழுத்தாம் காரியத்திற்கு ஒலி காரணமாம்.

எனவே ஒலியாராய்ச்சி எழுத்துச் செம்மையாக அமைவதற்கும் எழுத்தாராய்ச்சி சொற்கள் செம்மையாக அமைவதற்கும் சொல்லாராய்ச்சி சொற்றொடர்கள் (உரையும்–செய்யுளும்) செம்மையாக அமைவதற்கும் காரணங்களாகும்.

ஆகலான் ஆசிரியர் தொல்காப்பியர் சொற்றொடர் அமைப்பு நன்கு விளங்குதற் பொருட்டுச் சொற்கள் புணரும் புணரியல் மரபுகளையும் இலக்கணங்களையும் கூற எழுத்ததிகாரத்துள் ஆறு இயல்களை அமைத்துக் கொண்டுள்ளார். ஏனைய மூன்று இயல்களும் இப்புணரியலுக்கு ஓராற்றான் கருவியாகவே அமைந்துள்ளமை ஓர்ந்தறியலாம். அஃதாவது சொற்களுக்கு உறுப்பாகிய எழுத்துக்களையும் அவற்றின் இயல்களையும் நூன்மரபிலும் அவை மொழிநிலை பெற்றுவரும் முறைகளை மொழி மரபிலும்—புணருங்கால் ஏற்படும் ஒலித்திரிபுகளுக்குக் காரணம் புலப்பட அவற்றின் பிறப்பமைவிதிகளை பிறப்பியலிலும் ஆசிரியர் முதற்கண் விளங்க அமைத்துள்ளார்.

மொழிகள் தம்முள் புணருங்கால் நிலைமொழி யிறுதியும் வருமொழி முதலுமாகப் புணர்தலின் மொழிகளின் முதனிலை இறுதிநிலைகளை ஆராய்ந்து அமைத்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகலின் இவற்றை மொழி மரபினுள் வரையறை செய்து அமைக்கின்றார்.

அஃதாவது ஓரெழுத்து மொழி முதலாய மூவகை மொழிகளும் நூன் மரபிற் கூறிய முப்பத்துமூன்று எழுத்துக்களையும் உறுப்பாகக் கொண்டு இயங்குமெனினும் மெய்யெழுத்துக்கள் உயிர்ப்பொலி இல்லாதனவாகலின் உயிரோடு கூடியும் உயிரைச் சார்ந்தும் மொழிக்கு உறுப்பாதலன்றித் தனித்து வருவதலில்லை. அங்ஙனம் உயிரோடு கூடி உயிர் மெய்யாகவும் சார்ந்து ஒற்றாகவும் வரும் மெய்யெழுத்துக்களும், தனித்தியங்கும் ஆற்றலுடைய உயிரெழுத்துக்களும் ஒரு மொழியின் மூவிடத்தும் வரும். இவ்வாறு ஒரு மொழியின் மூவிடத்தும் எழுத்துக்கள் வரும் இயல்புகளை ஆராய்ந்து அவற்றை மொழிமரபினுள் விளக்குகின்றார் ஆசிரியர்.

இவற்றுள் ஒற்றெழுத்துக்கள் இடைநிற்கும் மரபினை மெய்ம்மயக்கம் பற்றியும்—ஈரொற்றுடனிலை பற்றியும் புள்ளி மயங்கியல் பற்றியும் கூறிய இலக்கணங்களால் பெறப்படவைத்தார்.

இனி அவை முதலிலும் இறுதியிலும் இடையிலும் நிற்கும் மரபினை மொழி மரபினுள் உணர்த்துவாராய், "பன்னீருயிரும்" என்னும் நூற்பா முதலாக உள்ள இருபத்து நான்கு நூற்பாக்களாற் கூறுகின்றார். அவற்றுள் முதனிலைப்பற்றிக் கூறும் நூற்பாக்கள் வருமாறு :

“பன்னீ ருயிரும் மொழிமுத லாகும்” (மொழி மரபு : 26)
“உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா” (”27)

“கதந பமவெனும் ஆவைந் தெழுத்தும்
எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே” (”28)

“சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அஐஔ வெனும் மூன்றலங் கடையே” (”29)

“உஊ ஒஓ என்னும் நான்குயிர்
வஎன் எழுத்தொடு வருதல் இல்லை” (”30)

“ஆஎஒஎனும் மூவுயிர் ஞாகரத் துரிய” (”31)

“ஆவோ டல்லது யகர முதலாது” (”32)

“முதலா ஏன தம்பெயர் முதலும்” (”33)

“குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்” (மொழி மரபு –34)

“முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅது
அப்பெயர் மருங்கின் நிலையிய லான” (”35)

இவற்றின் பொருள் :–

பன்னிரு உயிரெழுத்துக்களும் (தனித்து) மொழி முதற்கண் வரும். உயிரோடு கூடி உயிர்மெய்யாகவன்றி மெய்யெழுத்துக்கள் (தனித்து) மொழிமுதற்கண் வாரா. மெய்கள் உயிரோடு கூடி வருங்கால் க–த–ந–ப–மஎன்னும் ஐந்தும் பன்னிரண்டு உயிரோடும் கூடிவரும். சகரமெய் அ–ஐ–ஔ என்னும் மூன்றைத் தவிர ஏனைய ஒன்பது உயிர்களோடு மட்டும் கூடிவரும். வகரமெய் உ–ஊ–ஒ–ஓ என்னும் நான்கு உயிர்களைத் தவிர ஏனை எட்டு உயிர்களோடுமட்டும் கூடி முதற்கண் வரும். ஞகரமெய் ஆ–எ–ஒ என்னும் மூன்று உயிரோடு கூடி வரும்; ஏனைய ஒன்பது உயிர்களுடன் கூடிவராது. யகரமெய் ஆ என்னும் ஓர் உயிர் எழுத்துடன் கூடி வரும்; ஏனையவற்றோடு கூடி வராது.

ஈண்டு எடுத்தோதப் பெற்ற க–த–ந–ப–ம–ச–வ–ஞ–ய என்னும் ஒன்பதும் தவிர்ந்த ஏனைய ங–ட–ண–ர–ல–ழ–ள–ற–ன என்னும் ஒன்பது மெய்களும் தத்தம் பெயர் கூறுமிடத்து முதலாக நிற்கும். இவையேயன்றி மொழி முதற்கண்

வருமெனப்பட்டவை விலக்கப்பெற்ற உயிர்களோடு தம்பெயர்கூறுதற்கண் மொழி முதலாக வரும். அன்றி இவை தனித்துப் பிறபொருளைச் சுட்டும் மொழியாகவோ மொழிக்கு உறுப்பாகவோ மொழிமுதற்கண் வாரா என்க.

இனிச் சார்பெழுத்துக்களுள் ஒன்றாய குற்றியலுகரம் முறைப் பெயராகிய நுத்தை என்னும் சொல்லின்கண் முதல் நிற்கும் நகர ஒற்றை ஊர்ந்து மொழிமுதலாக வரும்; வருங்கால் மொழியிறுதிக் குற்றியலுகரம் மொழியிறுதி முற்றியலுகரச் சொல்லோடு பொருள் மாறபடுதலைப்போல மாறுபடாது; காரணம் பெயராக மட்டும் வருதலான் என்க. ஏனைய இரண்டு சார்பெழுத்துக்களும் ஒரு மொழியின் இடையே யன்றி வாராமையின் அவை பற்றி ஆராய்ச்சி இல்லை என்க.

இங்ஙனம் மொழிமுதற்கண் வருமெனப்பட்ட எழுத்துக்களை விரித்து நோக்கின் அவை உயிர் பன்னிரண்டு உயிர்மெய் எண்பத்தொன்று குற்றியலுகரம் ஒன்று ஆகத் தொண்ணூற்று நான்காக இருப்பதை அறியலாம். இவற்றைக் கீழ்வரும் அட்டவணையிற் காண்க.

1. வரிவடிவ நோக்கில் மொழி முதலெழுத்துக்கள்

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	12
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ	12
X	–	–	–	–	–	–	–	–	–	–	–	–	–
ச்	–	சா	சி	சீ	சு	சூ	செ	சே	–	சொ	சோ	–	9
ஞ்	–	ஞா	–	–	–	–	ஞெ	–	–	ஞொ	–	–	3
X	–	–	–	–	–	–	–	–	–	–	–	–	–
X	–	–	–	–	–	–	–	–	–	–	–	–	–
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ	12
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ	12
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ	12
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ	12
ய்	–	யா	–	–	–	–	–	–	–	–	–	–	1
X	–	–	–	–	–	–	–	–	–	–	–	–	–
X	–	–	–	–	–	–	–	–	–	–	–	–	–
வ்	வ	வா	வி	வீ	–	–	வெ	வே	வை	–	–	வௌ	8
X	–	–	–	–	–	–	–	–	–	–	–	–	–
X	–	–	–	–	–	–	–	–	–	–	–	–	–
X	–	–	–	–	–	–	–	–	–	–	–	–	–
X	–	–	–	–	–	–	–	–	–	–	–	–	–
குற்றியலுகரம்					நு								1
												ஆக	94

எனவே தனிமெய் பதினெட்டும் உயிர்மெய் நூற்றுமுப்பத்தாறும் மொழி முதற்கண் விலக்குண்டன. அஃதாவது முதற்கண் வாரதமுறை மையான் அம்மெய்களை உயிர் ஊராது என்பது கருத்து உயிர்மெய் இருநூற்றுப்பதினொறு என்பது வரிவடிவை நோக்கிய மரபாகும்.

இடைக்காலத்தும் பிற்காலத்தும் போலிவகையாலும் திசை வழக்காலும் தோன்றிய சமன்–ஞமன். ஞமலி–ஞீலம்–யவன் முதலாய தமிழ்ச்சொற்களையும் – சையம், யமன், யுகம், யூகம், யோகம், யௌவனம் முதலாய வட சொற்களையும் ஏற்று நன்னூலார் மொழிமுதல் எழுத்துக்களைக் கூட்டியுரைத்தார் – அன்றியும் பிரிப்பப் பிரியா ஒரு சொல்லாகிய அங்ஙனம்– இங்ஙனம் முதலாய சொற்களைப் பிரித்து 'ஙனம்' என்பதனை ஒரு சொல்லாகக் கருதிச் சுட்டு வினாக்களை முன்னிட்டுக் கொண்டு ஙகரம் அகரத்தோடு கூடி மொழி முதற்கண் வரும் என நன்னூலார் கூறினர். (அது பொருந்தா தென்பதனோடு தமிழியல்புக்குப் பேரிழிவாகும். என்பதனை எனது மெய்ம்மயக்க ஆய்வுக் கட்டுரையுள் விளக்கியுள்ளேன். மற்றும் மொழிமுதற் குற்றுகரத்தைப் பிற்கால இலக்கண நூலோர் ஏலாது விட்ட குறையை எனது மொழி முதற் குற்றியலுகரம் என்னும் கட்டுரையில் விளக்கியுள்ளேன் ஆண்டுக் காண்க.)

அடுத்து மொழியிறுதியில் நிற்கும் எழுத்துக்களைப் பற்றிக் கூறும் நூற்பாக்கள் வருமாறு :–

உயிர்ஔ எஞ்சிய இறுதியாகும் (மொழிமரப்–36)
கவவோ டியையின் ஔவு மாகும் ("38)
எஎன வருமுயிர் மெய்யீறா காது ("38)
ஒவ்வும் அற்றே நவ்வலங்க டையே ("39)
ஏஒ எனும் உயிர் ஞகாரத் தில்லை ("40)
உஊ காரம் நவவொடு நவிலா ("41)
உச்ச காரம் இருமொழிக் குரித்தே ("42)
உப்ப காரம் ஒன்றென மொழிப
இருவயின் நிலையும் பொருட்டா கும்மே ("43)
எஞ்சிய வெல்லாம் எஞ்சுத லிலவே ("44)
ஞணந மனய ரலவழ ளஎன்னும்
அப்பதி னொன்றே புள்ளி யிறுதி ("45"
உச்சகார மொடு நகாரஞ் சிவணும் ("46)

உப்பகார மொடு ஞகாரையும் அற்றே
அப்பொரு ளிரட்ட திவணை யான ("47)
வகரக் கிளவி நான்மொழி யீற்றது ("48)
மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன ("49)

இவற்றின் பொருள் :—

ஒளகாரம் ஒழிந்த உயிர் பதினொன்றும் தனித்து மொழியிறுதிக்கண் வரும்; ககர வகர மெய்களோடு கூடின் ஒளகாரம் மொழி யிறுதியில் வரும்; எகரம் (அளபெடையாகத் தனித்தன்றி) மெய்யோடு கூடி ஈற்றில் வராது; ஒகரம் நகரமெய் ஒன்றோடு மட்டும் கூடி ஈறாகும்; ஏகார ஓகாரங்கள் ஞகாரத்தோடு கூடி ஈறாகாது; ஏகார ஓகாரங்கள் ஞகாரத்தோடு கூடி ஈறாகாது; உகரமும் ஊகாரமும் நகரத்தோடும் வகரத்தோடும் கூடி ஈறாதல் இல்லை; மற்றைய அ, ஆ, இ, ஈ, ஐ என்னும் உயிர்கள் எல்லா மெய்யோடும் கூடி ஈறாக நிற்கும்.

புள்ளி எழுத்துக்களுள் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொன்றும் மொழியிறுதியில் வரும். இவற்றுள் நகரம் உச்சகாரம்போல இரண்டு சொற்களில் மட்டும் ஈறாக வரும். ஞகரம் உப்பகாரம்போல ஒருசொல்லில் ஈறாக வரும்; ஆனால் அதுபோல இரு பொருளில் வராது; ஒரு பொருளே தரும். வகரம் நான்கு சொற்களில் மட்டும் இறுதியில் வரும். னகரம் ஈரெழுத் தொருமொழி யல்லாத தொடர்மொழிகளில் அஃறிணைப் பொருள்மேல் மகரத்தோடு மயங்கா எனக் குற்றமற வரையறுக்கப் பெற்றவை ஒன்பது சொற்கள் எனக் கூறுவர் புலவர்.

இவற்றை விரித்து நோக்கின் மொழியிறுதிக்கண் தனித்து வரும் உயிர் பதினொன்று, மெய் பதினொன்று, உயிர்மெய் வரிவடிவம் நூற்றைம்பது ஆக நூற்றுஎழுபத்திரண்டாதல் புலனாம். மற்றும் சார்பெழுத்துக்களுள் குற்றியலுகரம் வல்லாறூர்ந்து இறுதியில் வரும் என்றமையின் அஃதொன்றனையும் கூட்ட நூற்றெழுபத்து மூன்றுவரிவடிவ எழுத்துக்கள் மொழியிறுதியில் வரும் என்பதைத் தெளியலாம். இவற்றை அடுத்து வரும் அட்டவணையிற் காண்க.

2. வரிவடிவ நோக்கல் மொழி இறுதி எழுத்துக்கள்

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ		11
X	க	கா	கி	கீ	கு	கூ	X	கே	கை	X	கோ	கௌ	10
X	X	X	X	X	X	X	X	X	X	X	X	X	X
X	ச	சா	சி	சீ	சு	சூ	X	சே	சை	X	சோ	X	9
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	X	X	ஞை	X	X	X	7
X	ட	டா	டி	டீ	டு	டூ	X	டே	டை	X	டோ	X	9
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	X	ணே	ணை	X	ணோ	X	9
X	த	தா	தி	தீ	து	தூ	X	தே	தை	X	தோ	X	9
ந்	ந	நா	நி	நீ	X	X	X	நே	நை	நொ	நோ	X	8
X	ப	பா	பி	பீ	பு	பூ	X	பே	பை	X	போ	X	9
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	X	மே	மை	X	மோ	X	9
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	X	யே	யை	X	யோ	X	9
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	X	ரே	ரை	X	ரோ	X	9
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	X	லே	லை	X	லோ	X	9
வ்	வ	வா	வி	வீ	X	X	X	வே	வை	X	வோ	வௌ	8
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	X	ழே	ழை	X	ழோ	X	9
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	X	ளே	ளை	X	ளோ	X	9
X	ற	றா	றி	றீ	று	றூ	X	றே	றை	X	றோ	X	9
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	X	னே	னை	X	Xா	X	9
	குற்றியலுகரம் கு சு டு து பு று												6
	மெய்												1
												ஆக	179

இங்ஙனம் வரையறுக்கப்பெற்றவை தவிர்ந்த ஏனைய உயிர்மெய் எழுத்துக்கள் தம்பெயர் கூறுதற்கண் அவை முதல் எனற்கே ஏற்புடையவாகலானும் மெய்யெழுத்துக்கள் அகரமொடு சிவணி உயிர்மெய்போல் கூறப்படுதலானும் இறுதி நிலைக்குப் புறனடை கூறாமல் எஞ்சியவெல்லாம் எஞ்சுதலிலவே எனக் கூறிச் சென்றார்.

மற்றுஞ் சகரபகரங்கள் மேல் ஏறி இறுதியாக வருவனவற்றுள் திரிபின்றி முற்றுகரமாக வழங்கும் சொற்கள் மூன்றே உள்ளமை நோக்கி அவற்றை விதந்தோதினார். ஏனைய தொடர்மொழியிறுதிக்கண் வல்லெழுத்து ஊர்ந்து குற்றியலுகரமும் வரலாம் முற்றுகரமும் வரலாம் என்பது ஆசிரியர் கருத்தென்பதை ஓராமல் இம்மூன்று சொற்களைத் தவிர ஏனையவெல்லாம் குற்றுகரமே எனத் திரியக் கொள்வார் இரெட்டியார் அவர்கள்.

இவ்வாறே கதவு களவு கனவு புதவு முதலிய விதியீற்றுச் சொற்களை இயல்பீறாகக் கருதி

"உஊகாரம் நவலொடு நவிலா"

என்னும் நூற்பாலை நிரல்நிரையாக்கிப் பொருள்கூற விழைவார் சிலர். இவை யாவும் ஆசிரியர் கருத்திற்கும் தமிழ்மொழியமைப்பிற்கும் பொருந்தா என்பதை எனது சார்பெழுத்தாராய்ச்சிக் கட்டுரையில் விளக்கமாகக் காணலாம்.

இனி இங்ஙனம் மொழி முதுனிலையாகும் எழுத்துக்கள் தொண்ணூற்று நான்கு என்றும் இறுதிநிலையாகும் எழுத்துக்கள் நூற்றெழுபத்து மூன்று என்றும் விரித்துக்கூறப் பெற்றனவாயினும் இவற்றை முதலும் ஈறுமாக உடைய சொற்கள் தம்முள் புணருங்கால் அவை உயிர்முதல் உயிரீறு மெய்ம்முதல் மெய்யீறு என இரண்டே வகையில் அடங்குதலின் ஆசிரியர்

"மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தின்
இரண்டுதலை யிட்ட முதலா கிருபஃது
அறுநான் கீற்றொடு நெறிநின் றியலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிரென் றாயீ ரியல" (புணரியல் :1)

என்றும்,

"அவற்றுள்,
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்" (புண : 2)
"குற்றிய லுகரமும் அற்றென மொழிப" (புண : 3)
"உயிர்மெய் யீறும் உயிரீற் றியற்றே" (புண :4)

என்றும் வகுத்தோதினார்.

இவற்றுள் 'இரண்டுதலை யிட்ட முதலா கிருபஃது' என்பவை உயிர் 12, உயிர் (ஊர்ந்த) மெய் 9, குற்றியலுகரம் 1. ஏனையவை விலக்கப்பட்டன. இவ்வாறு இவை விலக்குண்டதன் காரணத்தை இனிக் காண்போம்.

அறிவும் முயற்சியும் சான்ற மக்கள் உலகிலுள்ள பல்வேறுபட்ட பறவைகள் – விலங்குகள் – வாச்சியங்களைப்போல ஒலிக்கவும் பல்வேறுபட்ட மொழிகளைப் பயின்று அவ்வெழுத்தொலிகளைச் செம்மையாகப் பலுக்கவும் ஆற்றல் சான்றவர்கள். அவ்வாறிருக்கத் தமிழியல் நூலார் சில எழுத்தொலிகளை முதலிலும் ஈற்றிலும் வாராவென விலக்கியதற்குக் காரணம்

அவற்றைப் பலுக்க இயலாதென்றோ அவை பிறமொழிச் சொற்கள் போன்றவை என்றோ, அவ்வகைச் சொற்கள் தோன்றவில்லை யென்றோ கொள்ளுதற்கில்லை. பின்னர் யாது காரணம் எனின், உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றாகிய இத்தமிழ் மொழியின் அமைப்பே அதற்குக் காரணமாகும்.

அதற்குமுன் உலக மொழிகளுள் அமைந்துள்ள சொல் – சொற்றொடர் அமைதிபற்றிய சில பொதுவியல்பினையும் அம்முறையில் தமிழ் மொழி யமைப்பினையும் காணுதல் நன்றாம்.

தொடர் மொழி என்பது சொற்களாலும் சொற்கள் எழுத்துக்களாலும் எழுத்து ஒலியாலும் ஆவதனை அறிவோம். எனவே சொற்றொடர் (செய்யுள்) என்பது பல்வேறு ஒலிகளின் இடையறாத தொடர்ச்சியே என்பது தெளிவு. இஃது உலக மொழிகள் யாவற்றிற்கும் பொதுவாயினும் அவ்வொலிகள் தொடர்ந்து சொல்லாக்கம் பெற்றுத் தொடராகும் நிலையில் தம்முள் சிலபல பாகுபாடுகளையும் மரபுகளையும் அவை கொண்டு இலங்குகின்றன. அவ்வேறுபாடுகளை ஆய்ந்த ஒப்பியல் மொழி நூலார் உலக மொழிகளை மூன்று வகையாகப் பிரிப்பர். அவை

1. தனிமொழி அல்லது ஓரசைமொழி (Isolative Language)
2. புணர்மொழி அல்லது ஒட்டுநிலைமொழி (Aggulative Language)
3. உட்பிணைப்பு மொழி அல்லது குழைவுமொழி (Inflexional Language)

என்பனவாகும்.

இவற்றுள் ஓரசை மொழி என்பது சொற்கள ஒன்றொடொன்று கண்ணுற்று இணையாமல் தனித்துச் செம்மையாக நின்று தொடர்வதாகும். அஃதாவது நீ வா பார் – யார் நீ சொல் என்றாற்போல வரும். சீன மொழிக் குடும்பத்தை இதற்குப் பெரிதும் எடுத்துக் காட்டாகக் கொள்வர்.

புணர்மொழி அல்லது ஒட்டுநிலை மொழி என்பது திணை, பால், இடம் காட்டும் உறுப்புக்களும் கால இடைநிலைகள், வேற்றுமை யுருபுகள், எதிர்மறை இடைநிலைகள முதலியவை இணைந்து ஒரு சொல்லாய் அமைந்து தம்மொடும் முற்கூறிய தனி மொழிகளோடும் தொடரும். தொடருங்கால் பொருள் மாறுபடா வண்ணம் நிகழும். அஃதாவது நீவந்திங்குண்பாயாக – சாத்தன் பெரிய பையன் – அவன் பஞ்சணையில் அமர்ந்தான் என்றாற் போல

வரும். இத்தொடர்களை வந்திங்கு நீ உண்பாயாக என மாற்றலாம். பாயாக வந்திங்கு நீ உண் என்று மாற்றின் பொருள் வேறுபடும். பெரிய பையன் சாத்தன் என மாற்றலாம், பெரிய சாத்தன் பையன் என்றோ, பையன் பெரிய சாத்தன் என்றோ மாற்றின் பொருள் வேறுபடும். அமர்ந்தான் அவன் பஞ்சணையில் என மாற்றலாம்; அவன் அணையில் பஞ்சு அமர்ந்தான் என மாற்றின் பொருள் வேறுபடும். இவ்வாறு தொடர்வனவும் சாத்தனைக் கண்டேன், மரங் குறைத்தான் என்றாற்போலத் தொடர்வனவும் இவ்வகையில் அடங்கும். மைய ஆசிய மொழிகளும் திராவிட மொழிகளும் இதற்குப் பெரிதும் எடுத்துக் காட்டாகும்.

உட்பிணைப்பு மொழி அல்லது குழைவு மொழி என்பது வருதலைச் செய்யான் என்பது வாரான் என்றும், வெம்மைத் தன்மை யுடையவன் என்பது வேந்தன் என்றும், மலையை உடையவன் என்பது மலையன் என்றும், குழிந்தாழ்ந்த கண்ணை உடையது என்பது குண்டுகட்டு என்றும், நீ போவாயாக என்பது போதி என்றும் வரும் சொற்பிணைப்புகளைப் போலச் சொற்றொடர்கள் பிணைந்து ஒரு சொல் நீர்மைத்தாக வருவனவாம். சமற்கிருதம், மேலையாசிய மொழிகளுள் சில இதற்குப் பெரிதும் எடுத்துக் காட்டாக அமையும்.

இவ்வகையில் தமிழ் மொழிக்கண் இம்மூன்று தன்மைகளும் ஓரளவு காணப்படினும் புணர்மொழி அல்லது ஒட்டுநிலை மொழிப் பிரிவில் இதனை ஒப்பியல் மொழி நூலார் அடக்குவர். இப்பிரிப்புக்களாற் பெரிதும் பயனில்லை என்பார் இக்கால மொழியியலார்.

தமிழ் மொழியில் அமைந்துள்ள சொற்களை நோக்கின் ஓரெழுத்தொரு மொழிகள் யாவும் தனிமொழிகளாகவும், ஈரெழுத்தொரு மொழிகளுள் சிறுபான்மை ஒட்டுநிலை மொழிகளாகவும், இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழிகளுள் பெயர்ச் சொற்களுள் சிறுபான்மையும் குறிப்பு வினைகள் வினைமுற்றுச் சொற்களுள் பெரும்பான்மையும் உட்பிணைப்பு மொழிகளாகவும் திகழ்வதைக் காணலாம்.

ஆயினும் தமிழ்ச் சொற்கள் ஒன்றோடொன்று தொடருங்கால்

நாழி + உரி = நாடுரி,

நாள் + அன்று = ஞான்று,

ஆதன் + தந்தை = ஆந்தை. என்றாற்போல வடிவு திரிவனவும்

தேன் + இறால் = தேத்திறால்,

வேட்கை + அவா = வேணவா

என்றாற்போல வடிவு திரிவனவும்

ஒன்பது + பத்து = தொண்ணூறு

என்றாற்போல முழுதுந் திரிவனவும் உள. இவை சில விழுக்காடுகளே யாகும்.

கடலழகு, மரவடி, கற்கண்டு, பொற்றகடு என ஒலித் திரிபுகளாக இணைவனவே பெரும்பான்மையாகும். ஆதலின் தமிழ் மொழியைப் புணர்நிலை மொழி என்ற வகையில் அடக்குவது பேரளவு பொருந்துவதாகும்.

மொழி என்பது ஒலிவடிவேயாயினும் அவ்வொலி வடிவம் இறந்த காலத்தை அறியவும் எதிர்காலத்திற்கு உணர்த்தவும் பயன்படாது நிகழ் காலத்தில் அதிலும் முன்னிலைக்கண் மட்டுமே பயன்படும். இவ் இரு காலத்திற்கும் பயன்பட்டு அழியாநிலை எய்துவது வரிவடிவமே யாகும். ஆதலின் வரிவடிவைக் கொண்டு ஒலி உருவை உணரும் மக்கள் அதற்குச் சிறப்பளித்துப் போற்றுகின்றனர். கடந்த கால மொழி என்பது நூல் வடிவத்தில் உள்ளவையேயாம். பழநூல்கள் யாவும் நமக்கு முன் வாழ்ந்த பெருமக்களின் சிந்தனைக் கருவூலங்களாகும்.

எனவே கருத்துக்களைச் சொல் (ஒலி) வடிவில் தாங்கி நிகழும் மொழியை வரலாற்று மொழி மரபிற்கு மாறாகத் திரித்தாலும், சிதைத்தாலும் அவ்விழப்பு முன்னையோர்தங் கருத்துக்களுக்கே யன்றிச் சொற்களுக்கன்று என்பதை மறத்தல் கூடாது.

நிகழ் கால மக்கள் தம் கருத்துக்களைப் பின்வருவோர் உணர்ந்து கொள்ள வரிவடிவில் அமைத்துச் செல்லுகின்றனர். அம்முறையில் தமிழ்ச் சான்றோர்கள் தம் கருத்துக்கள் சிதையா வண்ணன் பின்னுள்ளோர் உணர எளிமையும் இனிமையும் கட்டுக் கோப்பும் உடையதொரு நெறியில் சொற்களை அமைத்தளிக்கக் கருதிச் செய்த வடிவக் கோட்பாடே செய்யுள் வழக்காகும்.

உரைவழக்கு முற்றிலும் நிகழ் காலத்திற்கே பயன்படுவதாலும் – வட்டாரந்தோறும் உருவம் வேறுபடுவதாலும் – சூழ்நிலைக்கேற்ப ஒலிகள் வேறுபடுவதாலும் கல்வி யறிவில்லாதார் சிதைத்தும் மாற்றியும் வழங்குவதாலும் தமிழாசிரியன்மார் எதிர்காலத்திற்குப் பயன்படுவதாகிய செய்யுள் வழக்கையே மிகச் சிறப்பாகப் போற்றுவராயினர்.

செய்யுள் என்னும் சொல்லிற்குச் செய்தல் என்பது பொருள். இத்தொழிற் பெயர் செய்யப்பட்டது என்னும் பொருளில் பா–பாட்டு–கவிதைகளை உணர்த்தும் பெயர்ச் சொல்லாக விளங்குகின்றது. இதனைத் தொல்காப்பியர் யாப்பு என்னும் பெயராலும் குறிப்பிடுவார். இதனை,

"எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்" (செய்:74)

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலொடு அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்" (செய் : 75)

"எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்
அடிவரை யில்லன ஆறென மொழிப" (செய் : 157)

என வரும் நூற்பாக்களால் அறியலாம்.

இப்பாட்டென்னும் பாவானது நால்வகைப் படுமென்பதும் அவை அறம் முதலாய மூன்று பொருளையும் பற்றிக் கூறுதற்குரிய என்பதும்,

"ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே" (செய் : 101)

"அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப" (செய் : 102)

என வரும் நூற்பாக்களால் உணரலாம்.

இவ்வாறு வரும் செய்யுளுக்கு ஆசிரியர் முப்பத்து நான்கு உறுப்புக்களை கூறுகின்றார். அவற்றுள் மாத்திரை, எழுத்து, அசை, சீர், பா, தூக்கு, தொடை, வண்ணம் என்னும் உறுப்புக்கள் ஓசையை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இதனை,

"அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தல் வல்லோ ராறே" (செய் : 10)

என்பதனாலும், எழுத்து–வண்ணம்–தொடைபற்றிக் கூறும் பிற நூற்பாக்களாலும் அறியலாம்.

இதுகாறுங் கூறியவற்றால் தமிழ்ச் சான்றோர்கள் மொழி வழக்குள் செய்யுள் வழக்கையே முதன்மையாகக் கொண்டுள்ளார் என்பதும், அச்செய்யுளுக்கு ஓசையே

அடிப்படை என்பதும், அவ்வோசை எழுத்தொலிகள் இடையறவுபடாமல் தொடர்வதால் நிகழ்வதென்பதும் இடையறவு படாமல் சொற்கள் இணையும் முறைமையைக் கூறுவதே புணரியல் என்பதும், சொற்கள் இணையுங்கால் அவை ஈறும் முதலுமாகப் புணர்தலின் அச்சொற்களில் முதலும் ஈறுமாக நிற்கும் எழுத்துக்களை ஆய்ந்து வரையறை செய்துள்ளனர் என்பதும் விளங்கும்.

எனவே மொழிக் குறுப்பாகிய முப்பத்துமூன்று எழுத்துக்களுள் சிலவற்றை முதற்கண்ணும் இறுதிக்கண்ணும் கொண்டு சிலவற்றை விலக்கியதன் காரணத்தைக் காணல்இனி எளிதாம். முதற்கண் இறுதிநிலைபற்றிக் காண்போம்.

முப்பத்துமூன்று எழுத்துக்களுள் கசடதபற எனும் வல்லெழுத்தாறும் 'ங' என்னும் மெல்லெழுத்தும் குற்றியலிகரமும் ஆய்தமும் மொழியிறுதியில் வருதல் இல்லை. காரணம்? வல்லெழுத்துக்கள் ஆறும் தடையொலிக (வெடிப்பொலிக) ளாகளின் அவை உயிர் உயிரெழுத்துக்களையோ குற்றியலுகரத்தையோ ஏற்றே வெளிப்படுதலின் விலக்குண்டன.

ஙகரம் நிலைமொழி ஈறாக நிற்பின் வருமொழி ககரத்தோடன்றி ஏனைய மெய்களோடு மயங்காமையானும் மரங்குறிது – கதங் கொண்டான் என மகர ஈறு ஙகரமாகத் திரிதலானும் அகர ஈற்றின் முன் விளங்கனி எனக்ககரம் கரமாக மிகுதலானும் இயல்பீறுயாது திரிபீறுயாது என மயக்கந் தோன்றுமாகலின் விலக்குண்டது என்க.

குற்றியலிகரமும் ஆய்தமும் சார்பெழுத்தாகலின் அவை சாரும் எழுத்துக்கள் முன்னும் பின்னும் நிற்கவேண்டி யிருத்தலின் அவை இடையேயன்றி ஈற்றிலும் முதலிலும் வாராவாயின.

அடுத்து முதனிலைப் பற்றிப் காணுங்கால் ஙடணரலழளறன என்னும் ஒன்பது மெய்கள் வருத லில்லை. காரணம் மொழியிறுதிக்கண் நிற்குஷ் பதினொரு மெய்களுடன் இவை பெரும்பான்மையும் மயங்காமையேயாம் இதனை அடுத்து வரும் மூன்றாம் அட்டவணையிற் காண்க.

3. மொழியிறுதி மெய்களோடு மயங்காதவை.

ஞ்	ங	ட	ண	ர	ல	ழ	ள	ற	ன	க	–	–	த	ந	ப	–	ய	வ
ண்	ங	0	0	ர	ல	ழ	ள	ற	ன	–	–	–	த	ந	–	–	ய	–
ந்	ங	ட	ண	ர	ல	ழ	ள	ற	ன	க	ச	ஞ	–	–	ப	ம	ய	வ
ம்	ங	ட	ண	ர	ல	ழ	ள	ற	ன	க	ச	ஞ	த	ந	–	–	ய	–
ன்	ங	ட	ண	ர	ல	ழ	ள	0	0	–	–	–	த	ந	–	–	ய	–
ய்	0	ட	ண	ர	ல	ழ	ள	ற	ன	–	–	–	–	–	–	–	ய	–
ர்	0	ட	ண	ர	ல	ழ	ள	ற	ன	–	–	–	–	–	–	–	ய	–
ல்	ங	ட	ண	ர	0	ழ	ள	ற	ன	–	–	ஞ	த	ந	–	ம	ய	–
வ்	ங	ட	ண	ர	ல	ழ	ள	ற	ன	க	ச	ஞ	த	ந	ப	ம	ய	–
ழ்	0	ட	ண	ர	ல	ழ	ள	ற	ன	–	–	–	–	–	–	–	ய	–
ள்	ங	ட	ண	ர	ல	ழ	0	ற	ன	–	–	ஞ	த	ந	–	ம	ய	–

0 இவ்வடையாளம் பின்னிற்கும் புள்ளியொடு மயங்குதற்குரியவற்றைக் குறிக்கும்.
– இவ்வடையாளம் முன்நிற்கும் புள்ளியொடு மயங்குதற்குரியவற்றைக் குறிக்கும்

அவ்வட்டணையில் நிலைமொழி யிறுதியாக உள்ள பதினொரு மெய்களின் முன் ஙகரம் யர ழக்களோடும் டகரம் ணகரத்தோடும் றகரம் னகரத்தோடும் ர ழ ஒழிந்த ஏனைய தம்மொடு தாமும் மயங்குவனவாக உள. எனினும் ய ர ழக்களின் முன்வரும் ஙகரம் புணர்ச்சிக்கண் ஞகரம் போல ஒலிபெறுதலின் ஞகரம் முதற்கண் வர ஙகரம் விலக்குண்டது.

ணகர னகரங்கள் முறையே டகர றகரங்களின் இனமாகலின் மயங்கும் எனினும் ணகர னகரங்களின் முன்வரும் தகரம் முறையே டகர றகரமாகத் திரிதலின் இயல்பு யாது திரிபு யாதென்னும் ஐயந் தோன்றிப் பொருள் கவர்படுமாதலின் தகரம் முதலாக வர டகர றகரங்கள் விலக்குண்டன. இவ்வாறே ண னக்களின் முன் வரும் நகரம் ண னக்களாகத் திரிதலின் நகரம் முதலாகி நிற்க ணகர னகரங்கள் விலக்குண்டன.

ரகர ழகரங்கள் இறுதியாக நிற்கும் அப்பதி னொன்றோடும் மயங்காமையின் விலக்குண்டன. ல ளக்கள் தம்முன் தாமன்றி இறுதியாக நிற்கும் ஏனையவற்றோடு மயங்காமையின் விலக்குண்டன என்க.

அவ்வாறாயின் மொழிக்கு முதலாக வருவனவற்றுள்ளும் சில மயங்காதன உளவே அவற்றை ஏற்றுக் கொண்டமைக்குக் காரணம் யாதெனின் மயங்காதன சிலவும் மயங்குவன பலவும் ஆதலாலும் மயங்காதவை தொடருங்கால் உரிஞ் + கொற்றா என்பது சாரியை பெற்று உரிஞு கொற்றா

என்றும் மரம் + குறிது என்பது இனமாகத் திரிந்து மரங்குறிது என்றும் தெவ் + மடங்கல் என்பது திரிந்து தெம்மடங்கல் என்றும், வெள் + மலர் என்பது தன்னினமாகத் திரிந்து வெண்மலர் என்றும் மயங்குற்குரியவாகத் தொடர்தலான் ஏற்கப் பெற்றன என்க.

இம்முறையிலும் ங ட ண ர ல ள ழ ற ன ஆகிய ஒன்பதும் மொழிக்கு முதலாகும் வாய்ப்பின்மையானும் மொழி முதல்வரும் எழுத்துக்களாகத் திரியின் அவை முன்னரே ஏற்றுக் கொள்ளப்பட்டிருத்தலினாலும் தம்முள் ஒன்றாகத் திரியின் அதனாற் பயனின்மையானும் தமிழ் மொழியமைதி காரணமாக இவை மொழி முதல் வாராவாயின என்க.

மற்று மொழிக்கு முதலாம் என்னும் ஒன்பது மெய்களுள் கதநபம என்னும் ஐந்தும் எல்லா உயிரோடும் கூடிவர ச ஞ ய வ நான்கும் சிலவற்றோடு வாராமைக்குரிய காரணத்தைக்காண்போம்.

சகர மெய் அ, ஐ, ஔ என்னும் மூன்றனோடும் வருதலில்லை. ஏன்? யகர ஞகரங்களைப் போல இடைநா இடையண்ணத்தில் தோன்றி உரசொலி பெறுவதனாலும், இவற்றை முதலாக உடைய வடசொற்கள் பெரிதும் உலக வழக்கிற் கலந்துவிட்டமையானும் எனலாம். எனினும் தமிழ் மரபிற்கேற்பச் சொற்கள் தோன்றித் திண்மையாகப் பலுக்கப்படின் கடிசொல்லில்லைக் காலத்துப்படினே என்னும் விதியால் ஏற்றுக் கொள்வதற்குத் தொல்காப்பியம் தடையாக இல்லை இதற்கு மாறாக,

"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அஐஔ வெனும் மூன்றலங் கடையே"

என்னும் நூற்பாவை 'அவை ஔ என்னும் ஒன்றலங் கடையே எனத் திரிப்பது பொருந்தாது. என்னை 'அவை' என்னும் சுட்டு பன்மையாதலின் என்க.

இனி எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரை பதிப்பிற்குக் குறிப்புரை எழுதிய மொழியியலறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்கள் தலைக் கழக இலக்கியங்களிலே சகர முதன் மொழிச் சொற்கள் காணப்படுகின்றன என்று கூறிச் சகரத்தை முதலாக உடைய பல சொற்களைக் காட்டி நன்னூல் மயிலைநாதர் உரையைத் துணையாகச் சுட்டியுள்ளார். அச்சொற்கள் யாவும் வட சொற்களாகவும் திரி சொற்களாகவுமே உள. அன்றியும் அவர் சாப்பாடு என்னும் சொல் சப்பு என்னும் வேர்ச் சொல்லடியாகப் பிறந்தது என்றும் சப்பு

என்பதில் சகரம் முதலாக வந்துள்ளது என்றும் காட்டியுள்ளார். சென்னைப் பல்கலைக் கழக அகராதியில் சாப்பாடு என்பது தெலுங்குச் சொல் என்று குறிக்கப்பட்டுள்ளது. சாப்பாடு – சப்பு என்னும் சொற்கள் முற்கால இடைக்காலத் தமிழ் இலக்கியங்களுள் யாண்டும் காணப்பெறவில்லை.

சாப்பாடு என்னும் சொல் 'சப்பாத்' என்னும் இந்துத்தானிச் சொல்லின் திரிந்த வடிவம் என்பது என் கருத்து. அதுபோலவே சப்பு என்பது sip-sup என்னும் ஆங்கிலச் சொற்களின் திரிபு என்பது என் கருத்து.

ஞ ஞி ஞீ ஞு ஞூ ஞே ஞை ஞோ ஞௌ இவற்றை நீக்கியதற்குக் காரணம் இவை முதலாக வரின் பெரிதும் நகரம்போல ஒலித்த லால் என்க. ஞிணம், ஞீலம், ஞேயம் முதலியன நகரப் போலியாக வழங்குதலால் இதனை அறியலாம்.

யகர வரியில் யா ஒன்றைத் தவிர ஏனைய வாராமைக்குக் காரணம் யகரம் இகரத்தின் சாயலையும் எகரத்தின் சாயலையும் பெறுதலான் என்க.

வகர வரியில் வு வூ வொ வோ. இவை உகர ஒகரங்களின் சாயலைப் பெறுதலான் நீக்கப் பெற்றன என்க.

இவ்வாறே மொழியிறுதிக் கண்ணும் சில மெய்களோடு சில உயிர்கள் கூடி வாராதுள்ளன.

அவற்றுள் எகரம் மெய்யோடு கூடி ஈறாகாமைக்குக் காரணம் ஈற்றின்கண் எகரம் மாத்திரை நீண்டு ஏகாரமாகவே ஒலித்தலின் என்க. மற்று ஓரெழுத் தொருமொழியாகலின் ஒகரம் நகரத்தோடு மட்டும் கூடி ஒலிக்க ஏனைய மெய்களின் மேல் ஓகாரமாகவே ஒலித்தலைக் காணலாம். ககர வகரத்தோ டன்றி ஔகாரம் மொழியிறுதிக்கண் வாராமைக்குக் காரணம் ஏனைய மெய்களின் மேல் ஏறி ஓரெழுத் தொருமொழி தோன்றாமையே என்க.

உ ஊகாரம் நகர வகரங்களோடு கூடி ஈறாகாமைக்குக் காரணம் நு நூ இவற்றை ஈறாக உடைய வடசொற்கள் உலக வழக்கிற் கலந்து விட்டமையானும் அவை றன்னகரமாகத் திரிந்து வழங்குதலானும் எனலாம். வு வூ இரண்டும் தொழிற்பெயர் விகுதியாகவும் ஆகார இறுதி குறுகிய பெயர்களின் சாரியையாகவும் வரும் உகரம் உடம்படு மெய் பெற்று 'வு' கரமாக நிற்பதனாலும் அதுவே நீளுதலாலும் இவற்றை இயல்பீறாகப் பெற்ற சொற்கள் தமிழ் மொழியில் அமையவில்லை என்க.

மேலும் இறுதியாகி நிற்கும் எனப்பட்டவற்றுள் பலவற்றுக்கு இக் காலை சொற்கள் காணப்பட வில்லை. எனவே, விலக்கப்பட்டன வற்றிற்காகப் பரிவதில் யாதும் பயனில்லை என விடுக்க.

இதுகாறுங் கூறியவாற்றான் தமிழ்மொழியானது எளிதாகப் பலுக்குவதற்கேற்ற சொற்களால் ஆகியதோ ரியற்கை மொழி என்பதும் ஓசையும் ஒலியும் பொருளும் இனிது ஒத்துத் தொடர்வதற்கேற்ற எழுத்துக்களையே சொற்களின் முதலும் ஈறுமாகக் கொண்டு திகழும் ஒட்டுநிலை மொழி என்பதும், மயங்கா ஒலி யெழுத்துக்களை வலிந்து பலுக்கின் இதன் யாப்பமைதியும் ஓசை நயமும் கெடும் என்பதும் அதனால் அறுவகைச் செய்யுளும் ஓசை யழிந்து உரைநடையாய் மாறி மரபழியும் என்பதும் அயன்மொழிச்சொல் இவை செந்தமிழ்ச் சொல் இவை எனப் பிரித்துணர இயலாமற் போவதோடு வருங்கால மொழியியலார் இதனையும் ஒரு திசை மொழி என ஆராய நேரும் என்பதும் ஆரியத்தின் வழிவந்த தென எளிதாக யாவரும் உரைக்கும் அவல நிலை எய்தும் என்பதும் தமிழ்ப்பண்பாடு - நாகரிகம் – தனித்தன்மை என்பவெல்லாம் வெற்றுரையாய் விடும் என்பதும் பிறவும் புலனாம்.

"வாள்போற் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போற் பகைவர் தொடர்பு"

எனவே தொல்காப்பியம் கூறும் எழுத்தியல் மரபுகளை நன்கு கடைப்பிடித்தல் நமது கடனாம். அம்முறையாலேயே பல்லாயிரக் கணக்கான சொற்களை உருவாக்க முடியும். அதற்கேற்ற பற்றுள்ளமும் பரந்த அறிவும் பெற்றுச் சிந்தனையை வளர்த்துப் புதிய கண்டுபிடிப்புகளை படைத்தற்கு முயலுதல் வேண்டும்.

இன்றியமையாதெனப் பிறமொழிச் சொற்களை ஏற்கும்போது தமிழ் ஒலி மரபு சொல்லாக்க மரபுகள் பிறழாவண்ணம் சமைத்து ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. இதுவே தமிழர்க்குச் சிறப்பும் தமிழ் மொழிக்குச் செழிப்புந் தரவல்ல நெறியாகும்.

"மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்." என்க.

வாழ்க தமிழ்.

----

4. தொல்காப்பிய மெய்ம்மயக்க மரபுகள்

ஆசிரியர் தொல்காப்பியர் எழுத்துக்களின் இயல்பனைத்தையும் தம் நூலின் முதற்படலமாகிய எழுத்ததிகாரத்துள் யாவரும் எளிதின் உணரும் வண்ணம் ஒன்பது இயல்களாக வகுத்தமைத்துக் கூறுகின்றார். அவற்றுள் எழுத்துக்களின் இலக்கணத்தை அவர் வகைப்படுத்திக் கூறும் முறையாவது; பொதுவாக எழுத்துக்களின் தொகை அவற்றின் பெயர் – ஒலியளவு (உரு) சிலவற்றிற்கு வரி வடிவு அவை ஒலிக்கும் இயல்பு அவை தம்முள் இணைந்தொலிக்கும் (மெய்ம்மயக்கம்) மரபு, பண்ணிசைக்கண் மிக்கொலிக்கும் நிலை அளவு பற்றியும்; சிறப்பாக மொழியைச் சார்ந்து தோன்றும் சார்பெழுத்துக்களின் இயல்பு – எழுத்துக்கள் மொழியாக்க முறுதல் – அசையின் பொருட்டுச் சில எழுத்தொலி நீளும் மரபு – தனிமொழிக் கண் முதல். இறுதிகளில் வரும் எழுத்துக்களின் மரபு பற்றியும் எழுத்துக்களின் பிறப்பியல்புகள், தனி மொழிகள் தம்முள் புணர்தற்கேற்பப் புணரும் முறைமை சாரியைப் பேறு ஆகியவை பற்றியுமாம் அவற்றுள் ஈண்டு நாம் ஆய்ந்து காண மேற்கொண்டது. எழுத்துக்கள் தம்முள் இணைந்தொலித்து நிற்கும் மெய்ம் மயக்க மரபுகளைப் பற்றியதாகும்.

முதற்கண் மெய்ம்மயக்கம் என்னும் இத்தொகைச் சொல்லின் பொருளைக் காண்போம்: மெய் என்பது ஒற்றெழுத்துக்களைக் குறிக்கும் மெய்யானது – ஒற்று – புள்ளி – உறுப்பு என்றும் ஆளப்பெறும். உயிர்மேவ இடமாக நிற்றலின் மெய்யென்பது காரணக் குறியீடாம் (மே–மேய்–மெய் என்பது இதன் வரலாறு) மயக்கம் என்பது ஒருமெய் தான் கெடாமல் தன்நிலை சிறிது திரியப் பிறிதொன்றனோடு கலந்த நிலையைக் ருறிக்கும். இதனைக் கூட்டம்கலப்பு, இணைப்பு முயக்கம் புணர்ச்சி என்று ஆளுப. இதன் அடிச்சொல் 'மாய்' என்பதாகும். (மாய் – மயல் – மயக்கு – மயக்கம் என்பது இதன் வரலாறு) இஃதொரு வினைப் பண்புச் சொல்லாகும்.

இனி ஆசிரியர் தொல்காப்பியர் எழுத்துக்களின் கூட்டத்தை மயக்கம் என்றும் புணர்ச்சி என்றும் தலைப்பிட்டுக் கூறுவர். அதனால் இச்சொற்களுக்கு உரியவாக இவர்கருதி உணர்த்தும் பொருளை வரைந்து காண்போம்.

பொதுவாக இருபொருள் தம்முட் கூடுவதனைப் புணர்ச்சி என்ப ஆசிரியர். இதனை இயைபே புணர்ச்சி (உரிப–) என்னும் நூற்பாவால் அறியலாம். அதனான் இரு சொற்கள் தம்முட் கூடுவதனை

நிறுத்த சொல்லே குறித்து வருகிளவி என்று
ஆயீரியல புணர்நிலைச் சுட்டே (எழுத்து : 107) என்றும்
மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென
ஆங்கந் நான்கே மொழி புணரியல்பே (எழு–108) என்றும்

அவர் கூறுவர் இவ்வாறு கூறுபவர், உயிரீற்றின் முன் நாற்கணமும் வந்து புணர்தலை உயிர் மயங்கியல் என்றும், புள்ளியீற்றின் முன் நாற்கணமும் வந்துபுணர்தலைப் புள்ளி மயங்கியல் என்றும் உறுகின்றார் மற்றுக் குற்றியலுகரம் நின்று நாற்கணத்தோடும் கூடுவதனைக் குற்றியலுகரப்புணரியல் என்று கூறுகின்றார். மேலும் சொல்லதிகாரத்துள் வேற்றுமைப் பொருளும் உருபும் மாறுபட்டி யைதலை வேற்றுமை மயங்கியில் என்று தலைப்பிட்டுக் கூறுகின்றார். இவற்றைச் சிறிது ஆழ்ந்து நோக்கின், நிலைமொழியும் வருமொழியும் தம்முள் இணையுங்கால் பெரும்பாலும் நிலைமொழிச் .செய்கைபற்றிய இலக்கணங் கூறும் இயலைப் புணரியல் என்றும் – வருமொழிச் செய்கை பற்றிய இலக்கணங் கூறும் இயலை மயங்கியல் என்றும் இவர் பெயரிட்டுள்ளமை புலனாகும்.

ஆகவே நிலைமொழியோடு வருமொழி வந்து இயையுங்கால் வருமொழியின் முதல் எய்தும் நிலையை மயக்கம் என்றும், நிலைமொழி வருமொழியோடு இயையுங்கால் நிலைமொழியின் ஈறு எய்தும் நிலையைப் புணர்ச்சி என்றும் கொள்ளுதல் மரபாகின்றது. ஒரு பொருட் பன்மொழிகள் ஒவ்வொன்றும் தம்முள் நிமித்த வேறுபாடுடையவை என்பதை இதனானும் அறியலாம்.

இனி அகரமுதல்னகர மீறாய எழுத்து முப்பஃதும் தம்முள் இணைந்து மொழிநிலைமை எய்துதற்கண். உயிரும் மெய்யும் (சார்பெழுத்துக்கள் இடத்தையும் பொருளையும் நோக்கி உயிராகவோ மெய்யாகவோ அடங்கிவிடும்) ஆகிய இவ் எழுத்துக்களின் இணைவை நான்கு வகையாகப் பிரிக்கலாம் அவையாவன : 1. உயிரும் உயிரும் 2. மெய்யும் மெய்யும் – உயிரும் மெய்யும் – மெய்யும் உயிரும் என்பனவாம். இவ் இணைவுகளுள் மயக்கம் என்று கூறுதற்கேற்பவற்றைக் காண்போம்.

நூன்மரபினுட் கூறப்பெற்ற இம்முப்பஃது எழுத்துக்களுள் உயிரெழுத்துப் பன்னிரண்டும் நாத ஒலியோடு கூடிய உயிர்ப்பினால் தோன்றித் தனித்தியங்கும் தன்மையுடையனவாகும் மெய்யெழுத்துப்பதினெட்டும் தனித்தியங்கும் ஆற்றலின்றி

வாயுறுப்புக்கள் ஒற்றி நின்ற அளவில் உயிரெழுத்துக்களின் உந்துதலினால் அவற்றோடு வெளிப்பட்டுத் தோன்றியும் அல்–ஆல் என அவற்றின் பின்வந்தும் தம் ஒலியைப் புலப்படுத்தும் தன்மையுடையவாகும்.

இவற்றுள் உயிரெழுத்துக்கள் ஒருமொழியின் முதலிலும் இறுதியிலும் தனித்தும் மெய்யொடு கூடி மூன்றிடத்தும் (முதல்–இடை–கடை) வரும். மெய்யெழுத்துக்கள் உயிரோடு கூடி மொழி மூவிடத்தும், தனித்து மொழியிடையிலும் ஈற்றிலும் வரும். இவை மொழியாக்கம் பெறுங்கால் ஒரெழுத்தொருமொழி ஈறெழுத்தொருமொழி – தொடர்மொழி என மூன்றுவகையாக ஆக்கம் பெறும் இவற்றுள் ஒரெழுத்து மொழி ஒரே எழுத்தலாவதாகலின் ஆண்டு மயக்கம் ஒன்றும் நிகழாது ஒற்று இடைநில்லாமையின் ஈரெழுத்து மொழிக் கண்ணும் இம்மயக்கம் நிகழாது; இறண்டிறந்திசைக்கும் தொடர் மொழிக்கண் மட்டுமேநிகழும்.

உயிரெழுத்துக்கள் தம்முன் மயங்கா ஏன் எனின்? அவை உயிர்ப்பொலியாகலின் தடையின்றித் தோன்றும். ஒரெழுத்துத் தோன்றி நிறைந்து முடிந்த பின்னர்தான் மற்றொருயிரெழுத்துத் தோன்றும். உயிரெழுத்துக்கள் தம்முன் தொடர நேரின் இடையே யகர வகரங்களை உடம்படு மெய்யாகப்கெபற்று அவற்றை ஊர்ந்து தொடரும். இன்றேல் தம்முள் இயையாமல் விட்டிசைக்கும். ஆதலின் உயிரும் உயிரும் கூடுங் கூட்டம் என்பதொன்றில்லை என்பது தெளிவாம்.

இனி மெய்யும் உயிரும் இணைந்தொலிப்பின் அவை ஓரெழுத்தாய் உயிர்மெய் என்னும் பெயர்பெற்று ஓரலகாய் நிகழும், ஒலிக்குங்காலும் ஒற்றினது இயல்பும் உயிரினது ஒலியுமாக இணைந்தொலிக்கும் இதனை மெய்யின் வழியது உயிர் தோன்றும் நிலையே (நூன் மரபு 18) என்பார் ஆசிரியர். இவ்வாறு உயிரெழுத்து மெய்யோடு கூடிவரினும். தன் இயல்பு மாறாது நிகழும். இதனை மெய்யோடியையினும் உயிரியல் திரியா (நூன் மரபு 10) என்று கூறுவர் அவர் ஈண்டு உயிரியல்யென்பது மாத்திரை அளவை உயிரியல்புதிரியாதெனவே மெய்யியல்பு திரியும் என்பது பெறப்படும் அஃதாவது மெய்யின் மாத்திரை தோன்றாதொழியும், அஃதாவது மெய் உயிரோடு வெளிப்படுங்கால் அதற்கு மாத்திரை இல்லை என்க.

மற்று மெய்யின் அளவே அரையென மொழிப'' (எழு–11) என்றமையான் இவை குறிலோடும் நெடிலோடும் கூடி ஒலிக்குங்கால் அவ்வுயிர் மெய்கள் முறையே ஒன்றரை மாத்திரையும் இரண்டரை மாத்திரையும் பெறுதல் வேண்டுமே அவ்வாறு பெறாமைக்குக் காரணம் யாதெனின்? கூறுதும்,

மெய்யெழுத்துக்கள் உயிர்ப்பொலி இல்லாதன ஆதலின் அவை தத்தம் பிறப்பிடத்தை ஒற்றி (பொருந்தி) நிற்கும் செவ்விக்கண் உயிர்ப்பொலிவுடைய அகர முதலாய எழுத்துக்கள் வந்து உந்தினாலன்றி அவை வெளிப்படா. அகர முதலாயவை கண்டத்தினின்றும் தடையின்றிப் புறப்பட்டு வாய் அங்கரத்தலும் வாயிதழ் விரிதலும், குவிதலும் ஆகிய செயலால் உருவம் விகாரப்பட்டு ஒலிக்கும் – உயிரெழுத்துக்கள் இவ்வாறு ஒலிக்குங்கால் அவை தனித்த உயிரெழுத்தாகும் ஏதாவது ஒரு மெய்யெழுத்தின் பிறம்பிடத்தைச் சார்ந்து அதனால் தடைப்பட்டு ஒலிப்பின் அம்மெய்யின் தன்மையும் உடன் செவிப்புலனாதலின் அந்நிலையில் அவை உயிர்மெய் எழுத்தெனப்படும். அவ்வாறு தடைப்படுத்திய மெய் அவ்வுயிரொலியோடு ஒருங்கிணைந்து வெளிப்படுதலின் அதற்கு மாத்திரை தேவைப்பட்வில்லை. இதனை ஆசிரியர்.

புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருஉருவாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனைஉயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயிரியல உயிர்த் தலாறே (எழுத்–17) உனக் கூறுவதனால் அறியலாம் (இந்நூற்பாவின் முதலடியில் புள்ளியிலவா என்னும் பாடம் ‘புள்ளியில்லா’ என வேறுபட்டுள்ளதைத் தனிக் கட்டுரையில் விளக்குவேன்) இனி இந்நூற்பா உயிர்மெய்களின் வரிவடிவ இலக்கணங் கூறுவதாகவும் வரிவடிவு–ஒலிவடிவு இரண்டற்கும் இலக்கணங் கூறுவதாகவும் உரையாசிரியன்மார் திரியக்கருதி உரை கூறி மயக்கியுள்ளனர்.

இந்நூற்பா உயிர்மெய்யெழுத்தின் ஒலிவடிவம் பற்றிய தென்பதை முறையாக நோக்கின் எளிதிற் புலனாகும்.

இவ் உயிர்மெய்யெழுத்தின்கண் உயிரெழுத்து நீங்கின் மெய் ஒலி தோன்றாதென்க அவ்வாறாயின் ஆசிரியர்

மெய் உயிர் நீங்கின் தன்னுருவாகும் ( ) என்ற தென்னையெனின்? அது புணர்மொழிக்கண் நிலைமொழி ஈற்றில் நின்ற மெய்யின் மேல் வருமொழி உயிரேறி ஒன்றுபட்டுப் புணரும் என்னும் விதி கூறிய பின்னர் அப்புணர்மொழியைப் பிரித்துப் பொருள் காணுங்கால் அவை உயிர்மெய்யாகிய ஒரெழுத்தாக நில்லாமல் புணர்தற்கு முன்னர் நின்றவாறு மெய் தன்னுருவம் தோன்றப் பிரிந்து நின்று பொருள்தரும் என மொழி புணர்நிலை பிரிநிலைபற்றி ஓதியதாகலின் அது தனியெழுத்தாகிய உயிர்மெய்யெழுத்துப் பற்றிய இலக்கணங் கூறியதன்று என்க.

இனி உயிர்மெய்யெழுத்தின் மெய்யொலி தோன்றுமாறாவது, பல்வேறு அளவுகளில் நீர் நிரப்பிய வள்ளங்களில் ஒருகுணிலைக் கொண்டு மோதுங்கால் வள்ளத்தினின்றும் வெளிப்படும் ஒலியானது அவ்வந் நீரளவுக்கு ஏற்ப ஒலித்தலைப் போலவும்–ஒரு குறுந்தடியைக் கொண்டு பல்வேறுபட்ட தோற்கருவிகளில் மோதுங்காலும் அவ்வொலி மோதிய இடத்தின் சார்பினால் வெவ்வேறுபட ஒலித்தலைப் போலவும் உயிரொலி எவ்வெவ் மெய்யின் பிறப்பிடத்தைப் பற்றி நின்று ஒலிக்கின்றதோ அம்மெய்யின் தன்மை புலப்பட ஒலிக்கும் ஆதலின் உயிரோடு கூடி இசைக்கும் மெய்யின் தன்மை (ஒலி) தோன்றுதலன்றி மாத்திரை பெறுதற்கு ஏதுவில்லை என்பதைத் தெளியலாம்.

அவ்வாறாயின், "மெய்யின் அளபே அரையென்மொழிா" (நூன்மரபு–11) எனக்கூறியது பொருந்துமோ எனின்? பொருந்தும் எவ்வாறெனின், மெய்யெழுத்துக்கள் ஓர் உயிரின் பின்னர்த் தோன்றி வருமாயின் அவ் உயிரொலியைச் சார்ந்து மாத்திரை பெறும். அதன் அளவு அரைமாத்திரை அசைகருதி நீட்டி இசைப்பின் அளபெடுத்தும் வரும் ஆதலின் அச்சார்புநிலையில் அது அரைமாத்திரை பெறும் என விதிக்கப்பட்டதென்க. இவ்வாறு உயிரைச் சார்ந்து நிற்கும் மெய்கள் தமக்குப் பின்னர் மெய் எழுத்துக்கள் தொடராத நிலைமையில் இறுதிநிலை மெய்யென்றும் தொடரின் இடைநிலை மெய் என்றும் பெயர்பெறும் அவை அல்–கல்–ஆல்–கால்–புகர்–புகார் எனவும் கொன்றை–கன்னி–காக்கை–வேங்கை–மகிழ்ச்சி–கிடேச்சு என ஈரெழுத்தொருமொழிகளிலும் தொடர்மொழிகளிலும் செங்கை–பொற்பூ–கண்ணாடி–புளிஞ்சோறு–களாக்கனி எனப் புணர்மொழிகளிலும் வரும்.

இவ்வாறு மெய்யெழுத்து ஓர் உயிரைச்சார்ந்து அதன்பின் தோன்றி அவ்வுயிரே பற்றுக்கோடாக நிற்றலின் முன்னின்ற அவ்வுயிரொலியானது இடையறவுபடாமல் இம்மெய் ஒலித்தற் பொருட்டு அதன்மேல் நீளும்: அவ்வுயிரொலியின் நீட்சிஇம்மெய்யின் பொருட்டாகலின் அந்நீட்சியை மெய்யின் மாத்திரையாகக் கொள்ளல் மொழியியல் மரபாகின்றது. இவ்வாறு ஒருயிரெழுத்தின் பின் எத்துணை மெய்யெழுத்துக்கள் தொன்றினாலும் அவ்வளவிற்கு முன்னின்ற உயிரானது தன் இசையை நீட்டிக் கொடுக்கும். அவ்விசை ஒற்றெழுத்துக்கு உரியதாகக் கொள்ளப்பெறும், இயற்றமிழில் இரண்டு ஒற்றுக்களுக்கு மேல் சார்ந்து நில்லா செய்யுளுள் அசை நிறைக்கவும் ஒசை நிரப்பவும் சிறிது நீண்டிசைக்கும். இசைத்தமிழில் தாளஅளவைக் கேற்ப நீளும், சில எடுத்துக்காட்டுகளைத் காண்போம்.

சீர்–சீர்த்தி–புகழ்–புகழ்ச்சி இவை இயற்றமிழ் உரைநடை

கண்ண் தண்ணெனக் கண்டும் கேட்டும். இஃது இயற்றமிழ் செய்யுள்நடை ஆதலின் கண்ண்என ணகரமெய் ஒரு மாத்திரையளவு நீண்டு நேரசையாகின்றது. (கண்ண்=தேமா)

அகர முதல எழுத்— தெல்லாமாதி
பகவன் ⌣ ⌣ ⌣ முதற்றே யுலகு ⌣ ⌣ —இக்குறட்பாவில் செப்பலோசை நிகழ்தற்காக மேலும் அரை மாத்திரை நீளும். ன் மேலும் ஒன்றரை மாத்திரை நீளும் இதனைப் பாவென்னும் உறுப்புத் தோன்ற ஒதி செவிக்கருவியான் உணர்க. (⌣– மாத்திரையின் அடையாளம்)

உயிரின்பின் வரையறையின்றி எல்லா மெய்களும் வரும் அவ்வாறு வருதல் மொழியாக்கத் தொடர்ச்சியேயன்றி ஒன்றோடொன்று மயங்கினவல்ல. அதனால் மெய்யொடு மெய் தொடரும் தொடர்ச்சியை மட்டுமே ஆசிரியர் மெய்மயக்கம் எனத் தேர்ந்து உரைப்பாராயினர். இவ்வறிவியலுண்மையை நோக்காத நச்சினார்க்கினியர் எல்லாவற்றையும் மயக்கமெனக் கருதி மயங்கி வல்லுரை கூறினார்.

வல்லெ ழுத்தென்ப கசடதபற
மெல்லெ ழுத்தென்ப ஙஞணநமன
இடையெ ழுத்தென்ப யரலவழள

எனக் கூறிப் பின்னர்,

"அம்மூவாறும் வழங்கியல் மருங்கின்
மெய்ம்மயக் குடனிலை தெரியுங்காலை" எனவும்
மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்—எனவும்
தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்
மெய்ந்நிலை மயக்கம் மானமில்லை—எனவும்

ஆசிரியர் மெய்யெழுத்துக்களை மட்டுமே சுட்டிக்கூறியுள்ளமையான் மயக்கம் என்பது மெய்ம்மயக்கம் ஒன்றை மட்டுமே குறிக்கும் என்பதைத் தெளியலாம்.

இனி மெய்ம் மயக்கம் நிகழும் இடம் முதலிய இயல்புகளைக் காண்போம்.

இம்மெய்ம்மயக்கத்தை ஒருமொழி—தொகை மொழி—புணர்மொழி ஆயவற்றுள் இடைக்கண் மட்டுமே வரும் எனக்கொண்டு இதனை இடைநிலை மெய்ம்மயக்கம் என நன்னூலாரும், பின்னூலாரும் உரையாசிரியன்மார் சிலரும் கூறியுள்ளனர். தொல்காப்பியர் இடைநிலை மயக்கம் என வரைந்து கூறினாரல்லர் என்பதை அவர் கூறியுள்ள மயக்கவிதிபற்றிய நூற்பாக்களை நோக்கின் தெளியலாம்.

இனி நச்சினார்க்கினியரும் அவர் மதம் பற்றிய சிலரும் இம்மயக்கம் ஒருமொழிக்கண்ணதே எனக் கொள்வர். உரையாசிரியர் இதனை ஒருமொழி புணர்மொழி இரண்டற்கும் பொதுவாகக்கொள்வர். ஒருசாரார் கருத்தும் இதுவேயாம். மேலும் உரையாசிரியராகிய இளம்பூரணர் மெய்ம்மயக்கம் பற்றிய விதிகள் மேற் கூறப்பெறும் புணர்ச்சி விதிகளின் ஒருசார் சுருக்கமே என்பார் இதனை

மெய்ம்மயக்கம் ஒருமொழிக்கும் புணர்மொழிக்கும் பொது
வாகலின் மேற்கூறும் புணர்மொழிச் செய்கையெல்லாம்
தலையாய அறிவினரைநோக்க ஒருவாற்றான் கூறியவா
றாயிற்று என நூன் மரபு 23ஆம் நூற்பா உரையின் வரைந்திருப்பதனால் அறியலாம். நூன்மரபிலும், மொழி மரபிலும் கூறப்பெற்றவை மேல்வரும் செய்கை ஒத்துக்களுக்குக் கருவிகளாதலின் ஓராற்றான் இளம்பூரணரின் கருத்துப் பொருந்தும்.

மெய்ம்மயக்கத்தைப் புணர்மொழிக்கும் பொதுவெனக் கொண்ட இளம்பூரணர் கருத்தை நச்சினார்க்கினியர் "ஞநமவ" என்னும் நூற்பா உரையுள் மறுத்துத் கூறுவதனால் இவர் மெய்ம் மயக்கம் ஒருமொழிக்கண்ணேதான் வரும் என்னும் கொள்கையுடையார் என்பதைத் தெளியலாம். மேலும், இவர் 22ஆம் நூற்பா உரையுள்

"அம்மூவாறும் என்னும் சூந்திரமுதலாக மெய்நிலைச்
சுட்டின்என்பதீறக் மேற்கூறும் மொழிமரபிற்குப்
பொருந்திய கருவி கூறுகின்ற தென்றுணர்க எழுத்துக்
கள் தம்முன் கூடுமாறு கூறுதலின்"
என்று வரைந்திருத்தலால் மெய்ம்மயக்கம் புணரியலை நோக்கிய கருவியன்று என்பது இவர் கருத்தென்பது புலப்படுகின்றது. அதனான் இவர் "அம்மூவாறும்", என்னும் நூற்பாவின்கண் வரும் "தெரியுங்காலை" என்னும் தொடரை மிகையெனக்கொண்டு அம்மிகையால் உயிரும், மெய்யும்,- உயிர்மெய்யும் தம்முன் தொடர்ந்து மொழியாக வருவது பற்றிய விதிகளாகவே இம்மெய்ம்மயக்க விதி கூறும் நூற்பாக்களை விளக்குகிறார். அம்முறையில் இந்நூற்பாக்களை மொழியாக்கத்திற்கு உரிய கருவிகள் என வரைந்தார். இம்முதற்கோணல் முற்றுங் கோணலாக ஆயிற்று. •

இனி மெய்ம்மயக்கத்தை வகைப்படுத்துவதில் இவர்கள் செய்துள்ள குழப்பங்களைக் காண்போம்,

இளம்பூரணம், இம்மெய்மயக்கமானது உடனிலை மெய்மயக்கம்–வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என இருவகைப்படுமெனக் கொண்டார். நச்சினார்க்கினயர், மெய்ம்மயக்கம்–உடனிலை மெய்மயக்கம் என இருவகைப்படுமெனக் கொண்டார். நன்னூலாரும் பின்னூலாரும் இளம்பூரணர் கருத்தைத் தழுவிக் கூறியுள்ளனர்.

மற்றும் இங்கே மயக்கமென்பது நின்ற எழுத்து வரும் எழுத்தோடு கூடும் நிலைபற்றியதா, அன்றி வரும் எழுத்து நின்ற எழுத்தோடு கூடும் நிலை பற்றியதா, அன்றி இரண்டும் தம்முள் ஒருசேரக் கூடும் என்பதா? இதுபற்றியும் இவ்வுரையாளர்கள் குழம்பியுள்ளனர். முதற்கண் எவ்வெழுத்துக் கூடுதலை ஆசிரியர் மயக்கம் எனக் கூறுகிறார் என்பதைப் பார்ப்போம்.

"டறலள என்னும் புள்ளி முன்னர்க்
கசப என்னும் மூவெழுத் துரிய"
"அவற்றுள்; லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்"

என்பவை முதலாக ஆசிரியர் கூறும் நூற்பாக்களை நோக்கின், நின்ற எழுத்தோடு மேல் வரும் எழுத்து வந்து புணர்தலையே ஆசிரியர் மயக்கமெனக் கூறுகின்றார் என்பதை அறியலாம்.

அன்றி நின்ற எழுத்து மேல்வரும் எழுத்தோடு சென்று புணர்தலை அவர் கருதியிருப்பின்

"டறலள நான்கும் கசபவோ டியையும்"

என்றாற்போலக் கூறியிருப்பார் அன்றி இரண்டும் தம்முன் ஒரு சேரப் புணரும் எனக் கருதியிருப்பின்

"டறலள நான்கும் கசப மூன்றும்
தம்முள் மயங்கி நிற்றற் குரிய

என்றாற் போலக் கூறியிருப்பார் என்க.

மெய்ம்மயக்கம் என்பதற்கு விளக்கம் :-

தனிமொழி அல்லது புணர்மொழிக்கண் நிற்கும் ஒரு மெய்யெழுத்தை அடுத்து ஒருமெய்யெழுத்து (இது தனி மெய்யாகவும் இருக்கலாம் உயிர் ஏறிய உயிர்மெய்யாகவும் இருக்கலாம்) வந்து கூடி இயைதலையும், இயையுங்கால் அவ்வெழுத்து எய்தும் (ஒலி) நிலையையும் ஒருசேர உணர்த்துவதே மெய்ம்மயக்கமாகும், ஈண்டு மெய்யென்பது ஒலிவடிவையேயாம் எடுத்துக்காட்டாகக் 'க' ககரமெய்யினை வந்தியையும் மெய்யாக வைத்து அதன் மயக்க இயல்பைக் காண்போம்.

ககர மெய் வல்லினத்தைச் சேர்ந்தது முதல் நா முதல் அண்ணத்தைப் பொருந்தப் பிறப்பது, இது தனக்கு முன்னின்ற மெய்யோடு மயங்குங்கால் பதினொரு மெய்களோடு மட்டுமே மயங்கும் அவை டறலள ய ரழ ங ணனக என்பன. 'மயங்கும்' நிலையாவது; தன் தன்மை திரியாமல் உள்ளவாறிருத்தல். தன் தன்மை திரிதல். சிறத்தல் என்பனவாம். எவ்வாறெனின்?

கட்க–கற்க–வெல்க–கொள்க–செய்க–துய்க்க–ஆர்கலி–பகர்க–பார்க்க–வாழ்க–புகழ்க–வீழ்க்க–வங்கம்–பாழ்ங்கிணறு–உண்க–காண்க–என்க–வன்கணம்–தொக்க(ன) காக்க.
எனவருவனவற்றுள் உள்ள ககரத்தின் ஒலி முறையே.

KA-HA-KKA-KHA-KKA-HA-KKA-GA-GGA-KGA-KKA. என ஒலித்து நிற்பதைக் காணலாம்.

இவற்றுள் வல்லெழுத்தாகிய ககரம் இயல்பான வல்லொலியாகவும் – திரிந்த மெல்லொலியாகவும் – தேய்ந்த இடையொலியாகவும் – ஊன்றிய வல்லொலியாகவும் வேறுபடக் காரணம் இது தனக்கு முன்நின்ற எழுத்தோடு தனித்தும் இரட்டித்தும் கலந்து மயங்கினமை என்பது புலனாகும்., இக்கலப்பினால் எய்தும் நிலையையே ஆசிரியர் மயக்கம் எனச் சுட்டியுள்ளார் என்பதைத் தெளியலாம்.

அவ்வாறாயின் கட்க–கற்க என்றாற் போல்வனவற்றுள் ககரம் தன்தன்மை திரியாது நிற்றலின் ஒலிமயக்கமில்லை. ஆதலின் அவை போல்வனவற்றை நீக்கி ஏனையவற்றை மட்டும் மெய்ம்மயக்கமெனக் கூறியிருக்கலாமே எனின்?

மேல்வரும் புணர்மொழிக்கண் அவைபடும் செய்கைகளை ஆசிரியர் மெய்பிறிதாதல்–மிகுதல்–குன்றல்–இயல்பு என நான்காக வகுத்துக் கூறுவார்; அவ்வழி இயல்பென்பது திரிபுடா தவற்றையன்றே? ஆண்டு அதனையும் சேர்த்தே உயிர்மயங்கியல் புள்ளிமயங்கியல் எனப் பெயரிட்டு இயல்பு புணர்ச்சிக்குவிதி கூறுவார். அவ்வாறேஈண்டும் இருநிலையையும் மயக்கமென்று தலைப்பிட்டு விதி கூறினார் எனத் தெளிக. இவ்வாறு கூறுதல் இலக்கண மரபென்க. அன்றியும் ஊன்றி நோக்கின் கட்க–கற்க என்பவற்றுள்ளும் ககரம் சிறிது ஒலி வேறுபடுதலை எஃகு செவியுடன் உணரலாம். தன்னொடு தானே மயங்குங்கால் மட்டும் ஒலிவடிவம் திரியாதென்பதை மெய்ந்நிலை சுட்டின் என்னும்– 30 நூற்பாவால் கூறுவார்.

நீரொடு பாலைச் சேர்ப்பினும் – நீரொடு நீரைச் சேர்ப்பினும் கலப்பு என்பதே வழக்காகலின் திரியினும் திரியாதாயினும் ஒன்றோடு ஒன்றுவந்து இணைதலின் மயக்கம் என்றார் எனக் கொள்க

இனி இம்மெய்ம்மயக்கம் தனிமொழி–புணர்மொழி இரண்டற்கும் பொதுவெனக்கொள்ளாமல் ஒருமொழிக்கண்ணதே என்றும் இருமொழிக்கண் ஆயின் அவை புணரியலுள் அடங்கும் என்றும் ஒருசாரர் சாதிப்பது பொருந்துமாறில்லை. ஆசிரியர் கருத்து அதுவாயின் இதனைத் தனி எழுத்துக்களைப்பற்றிய மரபுகளைக்கூறும் நூன் மரபினுல் வைக்காமல் ஒருமொழியின் முதனிலை இறுதிநிலை பற்றிய மரபுகளைக் கூறும் மொழிமரபின்கண்வைத்துக் கூறியிருப்பார் என்க. அங்ஙனமாயின்

யரழ என்னும் புள்ளி முன்னர்க்
கசதப ஙஞநம ஈரொற்றாகும்

என மொழி மரபின்கண் கூறியிருப்பது பொருந்துமோ எனின்? இந்நூற்பா மொழி இயல்புபற்றியதன்றி மயக்க விதிபற்றியதன்று என்பதை இதன்பொருளைப் பின்னர் ஆராயுமிடத்து விளங்கக் காணலாம்.

மற்று இம்மயக்கவிதி புணர்மொழிக்கும் பொதுவெனின் மெய்யீற்றின் முன் நாற்கணமும் வந்து புணரும் புணர்ச்சி விதிகள் கூறும் நூற்பாக்களால் இவ்விலக்கணம் பெறப்படுமாதலின் ஈண்டும் கூறியது மிகையாகாதோ எனின்? கூறுதும்

பெயரும் தொழிலுமாகிய சொற்கள் ஒன்றோடொன்று தொடருங்கால் அவை நிலைமொழியாயும் வருமொழியாயும் தம்முன் ஒத்தும் உறழ்ந்தும் நிறுத்த சொல்லின் ஈறாகெழுத்தொடு குறித்து வருகிளவியின் முதலெழுத்தியையப் பொருத்துவதே புணர்ச்சியாகிய மயக்கமென்றும் அப்புணர்ச்சி மூன்றுதிரிபும் ஓரியல்புமாகிய நான்கு வகையாக நிகழுமென்றும் கூறுவார் ஆசிரியர். அவ்வழி, நிலை மொழிக்கண் ஈறாகவரும் மெய்யெழுத்துக்கள் ஒன்பதே என்றும் வரையறை செய்துள்ளார் ஆசிரியர், ஈண்டுக் கசதப என்னும் நான்கைத் தவிர்த்து ஏனைய பதினான்கு மெய்களும் நிற்க இவற்றோடு டறரலளழணன என்னும் எட்டினைத்தவிர்த்து ஏனைய பத்து மெய்களும் வந்து மயங்கும் நிலைமைகளைப்பற்றிக் கூறுகின்றார் ஆதலின் புள்ளி மயங்கியலுள் புணர்ச்சிபற்றிக் கூறும் விதிகளால் இம்மயக்கம் பற்றிய

நிலைகளையெல்லாம் அறிந்து கொள்ளுதல் இயலாதென்க அன்றியும் புணர்மொழியிடத்து உயிரும், மெய்யும் எய்தும் மெய்பிறிதாதல் மிகுதல் குன்றல் இயல்பு என்னும் திரிபியல் நெறி கூறுகின்றது. ஈண்டு அம்மெய் ஒலியில் வேறுபடும் நிலையும் பற்றிக் கூறுகின்றது.

அஃதாவது "டறலள என்னும் புள்ளி முன்னர்" எனவும் "முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்" எனவும் ஈண்டுக் கூறுதலின் டகரறகரங்களை ஈறாக உடைய சொற்களும் ஙகரத்தை முதலாக உடைய சொற்களும் தமிழ்மொழிக்கண் இலவாகலின் இவைபோல்வனவற்றின் மயக்கவிதிகளைப் புணர்ச்சிவிதி கூறும் நூற்பாக்களால் தெரிந்துகோடல் இயலாதென்க.

அற்றன்று வாட்கண் – பொற்கோயில் மரங்குறிது எனவரும் புணர் சொற்களான் டகர றகரங்களின் பின் ககரம் மயங்கும் என உய்த்துணரலாமெனின்? இவற்றின் நிலைமொழிகள் வாள்–பொன் மரம் என்பவனவன்றே இவை ககரம் வருமொழியாக வந்தமையால் திரிந்துள்ளன. இவற்றுள் மகரமொழிந்த ஏனைய ளகரமும் னகரமும் யாண்டும் திரிந்தே வருதல் இல்லை வாள்கடிது–பொன்கடிது எனவும் வரும். ஈண்டுத் திரியாமல் நிற்கும் ளகரனகரங்கள் ஆண்டுத் திரிந்து நிற்கின்றன. எனவே திரிவதற்கும் திரியாமல்நிற்பதற்கும் மயக்கவிதி காரணமாக இல்லை. வேற்றுமைப் புணர்ச்சியும் அவ்வழிப் புணர்ச்சியுமாகிய பொருள் நோக்கமே காரணமாக உள்ளது. ஆதலின் புணர்ச்சி விதிகளைக்கொண்டு மெய்ம்மயக்க விதிகளை எல்லாம் தெரிந்துகொள்ளல் இயலாதென்பது வெளிப்படை. மேலும்

புணர்ச்சி விதிகள் நிறுத்த சொல்லின் ஈற்றெழுத்தையும் குறித்துவரு கிளவியின் முதலெழுத்தையும் பற்றி மட்டும் கூறுவனவாக அமைந்திருக்கவில்லை. அகம்+கை=அங்கை என நிலை மொழியின் இடையே உள்ள எழுத்துக்கெடுதலும் ஆதன்+தந்தை=ஆந்தையென நிலைமொழி இறுதி இரண்டும் கெட்டுவருமொழியின் முதலும் கெடுதலும்– பொன்+படை=பொலம்படையென நிலைமொழியீறு திரிந்து சில எழுத்துத் தோன்றுதலும்–நும்+குறியீர்=நீயிர் குறியீர் என நிலைமொழி திரிந்து வேறாதலும் ஒன்பது=நூறு=தொண்ணூறு எனப் பலவாறு திரிந்தமைதலும் கன்+தட்டு=கன்னந்தட்டு. விண்+கொட்கும்= விண்ணத்துக்கொட்கும் எனச் சாரியைபெற்றுப் புணர்தலும் ஆகிய பல்வேறு செய்கைகள் மொழி மூவிடத்தும் நிகழ்தலின் சொற்புணர்ச்சியாகிய புணர்மொழி இலக்கணம் வேறு, எழுத்துப் புணர்ச்சியாகிய மெய்ம் மயக்க இலக்கணம் வேறு என்பதை அறியலாம்.

ஆகவே இன்னின்ன மெய்களின் பின் இன்னின்ன மெய்கள் வந்து இணையும் என்னும் மெய்ம்மயக்க மரபுகள் தனிமொழி புணர்மொழி இரண்டற்கும் பொதுவே என்பது தெளிவாகும்.

இனி இவற்றை இடைநிலை மெய்ம்மயக்கம் எனப்பெயர் தந்து கூறுதல் பொருந்துமா என்பது பற்றிக் காண்போம்.

தொல்காப்பியர் இதனை இடைநிலை மெய்ம்மயக்கம் எனக் குறிப்பாகவேனும் யாண்டும் கூறிற்றிலர் அவ்வாறு அவர் கருதியிருப்பின் இவ்விதிகளை நூன்மரபில்வைத்துக் கூறாமல் மொழிமரபில் வைத்துக் கூறியிருப்பார். உரையாசிரியர் கருத்தைத்தழுவி நூல் செய்த நன்னூலார் இடைநிலை மயக்கமென்று தெளிவாகக் கூறியுள்ளார் இடைநிலை என்றுகொண்டால் இம்மயக்கம் ஒருமொழிக் கண்ணேதான் நிகழ வேண்டும். ஆனால் அவர் கூறியுள்ள விதியமைப்பு நூற்பாக்களை நோக்கின் ஒருமொழி புணர்மொழி இரண்டினும் காணவேண்டிய நிலையே உளது. உரையாசிரியராகிய சங்கரநமச்சிவாயர் இரண்டற்கும் பொதுவென்றே கூறி விளக்கியுள்ளார். அவர் புணர்மொழியாயினும் இம் மயக்கம் இடையேதான் நிகழ்கின்றதாகலின் பொருந்துமெனக் கருதினார் போலும். இது நிற்க.

தொகைமொழிகளை ஒருசொல் நடையவாகக் கருதி ஒருசாரார் விளக்கும். உரிஞ்யாது—பெய்வளை—கொல்யானை வேர்த்தலை என்றாற் போல வருவனவற்றுள் உரிஞ்யாது என்பதைத் தவிர ஏனைய ஒருசொல் நடையவாகிய தொகைமொழிகளாயினும் அவற்றுள் அமைந்துள்ள சொற்கள் இரண்டென்பதில் தடையில்லை. அவ்வழிக் காணும் மயக்கம் மொழியின் ஈறும் முதலும்பற்றி நிற்றலின் "இடைநிலை" என வரையறுப்பது பொருந்துமாறில்லை எனலாம். அற்றன்று சொல்வகையான் இரண்டாயினும் புணர்ந்த பின் ஒருசொல் நடையவாய் நிற்றலின் மயங்கும் எழுத்துக்கள் இடைநின்ற எனக் கூறல் பொருந்துமன்றோ எனின்? ஆசிரியர்

> செய்யுளிறுதிப் போலி மொழிவயின்
> னகரமகரம் ஈ ரொற்றாகும் (மொழி மரபு : 18)

என ஒரே ஒரு சொல்லின் இறுதிக்கண் நிகழும் மயக்கம்பற்றியும் சுட்டிக் கூறியுள்ளமையான் அது பொருந்தாதென்பது தெளிவாம். ஆகவே இடைநிலை மயக்கம் என்பது மிகுதிபற்றிய குறியீடெனக்கொண்டு அமைதியுறலாம்.

அடுத்து இம்மெய்மயக்கத்தை வேற்றுநிலை–உடனிலை என இருபாற்படுத்துவதும்–தனிமெய்ம்மயக்கம்–உயிருடன் கூடிய (உயிர்மெய்) உடனிலை மயக்கம் என இருபாற்படுத்துவதும். தொல்காப்பியர் கருத்திற்கும் இலக்கண முறைமைக்கும் பொருந்துவதாக இல்லை. இம்முடிவு மயக்கவிதிபற்றி ஆசிரியர் கூறியுள்ள நூற்பாக்களின் செம்பொருளைத் தேர்வதன்கண் புலனாகுமாதலின், அந்நூற்பாக்களின் நேரியபொருளை இனிமுறையே காண்போம்.

மெய்ம்மயக்கம்பற்றி ஆசிரியர் நூல்மரபின்கண் முதன் முதலாகக் கூறும் நூற்பா

அம்மூவாறும் வழங்கியல் மருங்கின்
மெயம்மயக் குடனிலை தெரியுங்காலை
டறலள வென்னும் புள்ளிமுன்னர்க்
கசப வென்னும் மூவெழுத்துரிய" என்பதாகும்

இந்நூற்பாவை உரையாளர் அனைவரும் இரண்டு நூற்பாவாக அறுத்து உரைகூறியுள்ளனர். அதற்குக் காரணம் இம்மயக்கவிதி இந்நூற்பாவோடு முடிவுறாமல் மேலுந் தொடர்ந்து செல்லுதலின் எனக் கருத வேண்டியுளது, அவர்கள் இந்நூற்பாவினுள் உள்ள முதல் இரண்டு அடிகள் மெய்ம்மயக்கமாவது இன்னது என அதன் இலக்கணத்தையும், அதன் வகையையும் கூறுவதாகக் கருதி அவ் இரண்டடிகளையும் ஒரு நூற்பாவாகப் பிரித்துரைத்துள்ளனர். டறலள முதலாக வரும் ஏனையவை மயங்கும் எழுத்துக்களைப் பற்றிக் கூறுவவனவாகக் கருதியுள்ளனர் எனத் தெரிகின்றது.

அவ்வாறு அறுத்துக்கூறியவர்கள்.முதல் இரண்டடிகளையும் அதிகாரச் சூத்திரமாகவைத்து பொருள் கூறியிருக்கலாம் கூறியிருப் பின் பகுப்புக்களைப்பற்றிய குழப்பங்கள் தவிர்ந்திருக்கும் அவ்வாறு கருதாமல், இரண்டடிக்குள்ளேயே எழுவாய் பயனிலைகளைக் காண முற்பட்டுப்பயனிலை காணாமையால் மயனிலையை வகுத்துக் கூறலாயினர். அதனான், நூற்பாவுள் இல்லாத ஆசிரியர்கருதாத பொருளை எல்லாம் இதன்கண் திணிக்க வேண்டியவராயினர். இனி அவ் இரண்டடிகளின் பொருளைக் காண்போம்.

"அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்
மெய்ம்மயக் குடனிலை தெரியுங் காலை"

அம்மூவாறும்=மேற்கூறப்பெற்ற மூவினமாகிய மெய்கள் பதினெட்டும் வழங்கியல் மருங்கின்=(அவை மொழியாக்கம் பெற்று) இரு வகை வழக்கின் கண்ணும்நிகழுமிடத்து, மெய்மயக்கு = தன்வடிவு மயங்குதற்பொருட்டு, உடனிலை = (ஒன்றன் பின் ஒன்று வந்து) சார்ந்து நிற்கும் நிலையை தெரியுங்காலை = ஆராயுமிடத்து (ப் பின் வருமாறு மயங்குதற்குரியவாகும்)

விளக்கம் :–

அம்மூவாறும் என்பது எழுவாய் உடனிலை தெரியுங்காலை என்பது வரும் நூற்பாக்கள் தோறும் சென்றியையும் வழங்கென்பது மெலித்தல் விகாரம் 'மெய்' என்றது வடிவை அஃது ஈண்டு ஒலி வடிவையும் வரிவடிவையும் சுட்டி நின்றது இதனை,

மெய்தெரி வளியிசை அளபு நுவன்றிசினே (எழு 103)

மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும் (எழு 30)

யஃகான நிற்றல் மெய் பெற்றன்றே (எழு 27)

ஒற்றுமெய் கெடுதல் தெற்றென்றற்றே (எழு 133)

என வருவனவற்றால் அறியலாம். (இதுபற்றிப் பின்னர் விளக்கப் பெறும்) ஒலி மயங்குதல் பற்றி மேலே கூறப்பெற்றது.

இனி உரையாசிரியன்மார் கருத்துக்களையும் அவை நூற்கருத்திற்கு இயையாமையையும் கண்பாம் இந்நூற்பாவிற்கு

இளம்பூரணர் :–

மேற்சொல்லப்பட்ட பதினெட்டு மெய்யும் தம்மை மொழிப் படுத்து வழங்கும் இயல்பு உளதாமிடத்து மெய்ம்மயக்க மென்றும் உடனிலைமயக்க மென்றும் இரு வகைய ஆராயுங்காலத்து. 'மெய்' என்றதனான் தனிமெய்யோடு உயிர்மெயக்கமன்றித் தனிமெய்யோடு தனிமெய் மயக்கமே கொள்க. என வரைந்துள்ளார்.

இவர் 'மெய்' என்பதற்கு பிற மெய் என்றும் உடன் என்பதற்கு ஒத்தமெய் என்றும் பொருள் கொண்டு அதனான் மயக்கம் இருவகைப்படுமென விதிப்பதே இந்நூற்பாவின் நோக்கமாகக் கூறி "இருவகைய" என்னும் பயனிலையை வருவித்துள்ளார்.

நச்சினார்க்கினியர் :

அங்ஙனம் மூன்று கூறாகப் பகுத்த பதினெட்டு மெய்யும் வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் எழுத்துக்களைக் கூட்டி மொழிப் படுத்து வழங்குதல் உளதாமிடத்துத் தனிமெய் தன்முன்னர் நின்ற பிறமெய்யோடும்

தன்மெய்யோடும் மயங்கும் நிலையும் அப்பதினெட்டும் உயிருடனே நின்று தன் முன்னர் நின்ற உயிர்மெய்யோடும் தனிமெய்யோடும் மயங்கும் நிலையும் என இரண்டாம் அவை மயங்கும் மொழியாந் தன்மை யாராயுமிடத்து எனவே தனித்து நின்ற எழுத்துடன் முன்னின்ற எழுத்துக்கள் தாம் கூடுமாறு கூறினாராயிற்று. 'தெரியுங்காலை' என்றதனான் உயிர்மெய்ம்முன்னர் உயிர்மெய்ம்மயக்கமும் உயிர்முன்னர்த் தனிமெய்மயக்கமும் கொள்க அவை அளை–ஆம்பல்–போல்வன இச்சூத்திரம் முதலாக மெய்ந்நிலை சுட்டின் ஈறாக மேற்கூறும் மொழிமரபிற்குப் பொருந்திய கருவி கூறுகின்தென்றுணர்க. எழுத்துக்கள் தம்முன் கூடுமாறு கூறுதலின் என வரைந்துள்ளார்.

இவரும் இந்நூற்பா மயக்கம் என்பதன் இயல்பு கூறுவதாகக் கருதவில்லை இளம்பூரணரைப் போன்றே மயக்கத்தின் வகை கூறுவதாகவே கருதி எடுத்தோத்தினால் இருவகையும் இலேசினால் இருவகையும் என நான்கு வகை மயக்கங் கொள்ளுகிறார். மேலும் இந்நூற்பா மொழியாக்கம் பற்றிய இயல்பைக் கூறுவதாகவும் கருதுகிறார்.

இளம்பூரணர் கொண்ட வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்னும் வகையை நச்சினார்க்கினியர் உடன்படவில்லை வேறு மெய்யாயினும் ஒத்தமெய்யாயினும் அவை மெய்ம்மயக்கம் என ஒரே வகையிலடங்கும் என்பது இவர்கருத்து. உடனிலை என்பதற்கு உயிருடன் சேர்ந்த மெய் அஃதாவது உயிர் மெய்யெழுத்து என்று பொருள் கொள்ளுகிறார்.

ஆக இருவகை யென்பதில் இருவரும் மாறுபடுகின்றனர். அதனான் ஆசிரியர் கருத்து இருவகை என்பதன்று என நாம் எளிதில் ஊகிக்கலாம். இளம்பூரணர் இம்மயக்க விதி புணரியலை நோக்கிய கருவி என்கிறார். நச்சினார்க்கினியர் மொழிமரபை நோக்கிய கருவி என்கிறார். நூன்மரபிற் கூறப்பெறுவன யாவும் பிறப்பியல் தவிர பிற ஏழற்கும் கருவியாதலை இருவரும் ஓராது முரண்பட்டுள்ளனர் இது நிற்க.

நச்சினார்க்கினியர் இந்நூற்பாவின் பதவுரையுள் நின்ற எழுத்தே வரும் எழுத்தோடு கூடி மயங்கும் எனக் கருதும்படிப் பொருள் கூறுகின்றார். பின் நூற்பாக்கள் இவர்கருத்துக்கு முரணாக இருத்தலின் "தனித்து நின்ற எழுத்துடன் முன்னின்ற எழுத்துக்கள் கூடுமாறு(ங்) கூறினாராயிற்று" எனச் சொல்லி இரண்டும் மயங்குமென அமைதி செய்து கொள்ளுகிறார் எனக்கருத வேண்டியுளது.

நச்சினார்கினியர் கருத்துப்படி எழுத்துக்கள் கூடி மொழி யாதலைப் பற்றியதாக இந்நூற்பா இருப்பின் ஆசிரியர் இதனைமொழி மரபில் வைத்துக் கூறியிருப்பார். மற்று எழுத்துக்கள் தனித்துக் தொடர்ந்தும் மொழியாதலை மொழிமரபினுள்

ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
இரண்டிற் திசைக்குந் தொடர்மொழி உளப்பட
மூன்றேமொழிநிலை தோன்றிய நெறியே

என ஆசிரியர் தெளிவாகக் கூறியுள்ளார் ஒரெழுத்தொருமொழி தவிர ஏனையிரண்டும் எழுத்துக்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து மொழியாகும் என்பார் தொடர்மொழி என உடம்பொடு புணர்த்திக் கூறியுள்ளார். அதனான் முதலும் சார்புமாகிய எழுத்துக்கள் தனித்தும் இணைந்தும் தொடர்தும் மொழிநிலைமை எய்தும் என்னும் இலக்கணம் தெற்றெனப் புலப்படும். மாறாக அம்மூவாறும் எனக் கூறப்படும் மெய்யெழுத்துக்களை மட்டும் வைத்து மொழியாக்கம் கூறுகின்றார் எனக்கருதுவது விபரீத உணர்வாகும்.

அதனானன்றே நச்சினார்க்கினியர் உடனிலை, என்பதற்கு உயிர் மெய்யெனப் பொருள் காணவும் – தெரியுங்காலை என்பதனை மிகையாகக் கருதி அதனைக்கொண்டு உயிரும், உயிர்மெய்யும் உயிரும் மெய்யும் மயங்கும் எனப்பொருள் காணவும் முற்பட்டார். இவ்வாறு வலிந்தும் நலிந்தும் பொருள் காண்பது இவரியல்பு. இதனான் இவர் நூலாசிரியருக்குப் பெருமை சேர்ப்பதாகக் கருதுகின்றார். இஃது ஆசிரியரைக் குறைவு படுத்தும் என்பதை அவர் எண்ணிலர். இவையெல்லாம் காலச்சூழலால் விளைந்தவையன்றி அவர்தம் அறிவாற்றற் குறையினால் நேர்ந்தவையல்ல என்க.

மெய்ம்மயக்கத்தை மட்டும் ஆசிரியர் விதந்து கூறியதேன்?

ஆசிரியர் உயிரோடு மெய்யும்–உயிரோடு உயிர்மெய்யும் உயிர்மெய்யோடு மெய்யும் உயிர்மெய்யோடு உயிர்மெய்யும் கூடி நிகழும் கூட்டம் பற்றி யாதும் கூறாமல் மெய்யின் முன் மெய் வந்து கூடும் மயக்கத்தைப்பற்றி மட்டும் விளக்கிக் கூறியதற்கு இலக்கணமரபு அடிப்படையில் முன்பு சிறிது கூறப்பெற்றது. ஈண்டு மொழியியல் அடிப்படையில் சிறிது விளங்கிக் கொள்ளுதல் நலமாதலின் அதுபற்றிச் சிறிது காண்போம்.

உயிரெழுத்துக்கள் தனித்தியங்கும் தன்மையவாதலின் அவை ஒன்றன்பின் ஒன்று வருதல் தொடர்ச்சியாகுமே யன்றி மயக்கமாதலில்லை

உயிர்மெய்யுள் மெய்யினது தன்மை புலப்பட ஒலிப்பது உயிர்மட்டுமேயாதலின் அதுவும் மயக்கமாகாது. உயிரின் பின்மெய்வரின் அதுவும் தொடர்ச்சியேயன்றி மயக்கமாகாது. இதனை

"இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி" என ஆசிரியர் கூறுமாற்றால் அறியலாம். இவ்வாறு ஒன்றன்பின் ஒன்று அடுக்கி வருதலை மயக்கமெனக் கருதுதல் மயக்கம் என்னும் சொற்பொருளை நன்கு அறியாமையேயாம்.

இனி மெய்யின் பின் மெய் வந்து கூடுதலே மயக்கம் என்பதனை ஓர் எடுத்துக்காட்டு வாயிலாகக் காண்போம். "இன்பம்" என்பது ஒருசொல்.

இதனுள் இன்பு அம் என ஐந்து எழுத்துகள் உள்ளன இவற்றைத் தொடர்ந்து ஒலிக்குங்கால் முதற்கண் இகர உயிர் ஒலிக்கின்றது. அதனைச் சார்ந்து னகரமும் பகரமும் புலனாகின்றன. பின்னர் அகர உயிர் பகரத்தை இடமாகக்கொண்டு ஒலிக்கின்றது. இகரத்திற்கும் அகரத்திற்கும் இடையே நிற்கும் னகரமும் பகரமும் உயிர்ப்பொலி இல்லாதவை. ஆகலின் இகர ஒலியின் துணையால் அவை இசைக்கப்பெற்றுச் செவிப்புலனாகின்றன. அஃதாவது இகரஒலி தோன்றி முடிவுறாமல் இசைத்துக்கொண்டே இருக்கும் நிலையில் னகர ஒற்றைப்பிறப்பிக்க நாவானது முன்வாயின் மேற்பல்லின் அடியைத் தொட்டு னகரத்தைத் தோற்றுவிக்கும். அதே செவ்வியில் பகர மெய்யைப் பிறப்பிக்க வாயிதழ்கள் இரண்டும் சேர்கின்றன. அக்கணமே இடையறவு படாமல் பின் அகர ஒலி சேர்ந்திருந்த வாய் இதழைப் பிரித்து அங்காத்தலைச்செய்து வெளி வருகின்றது. னகர பகரங்கள் இகர உயிரின் ஒலித் துணையோடு செவிப் புலனாகின்றன, ஈண்டு னகர உயிரின் ஒலித் துணையோடு செவிப் புலனாகின்றன. ஈண்டு னகர ஒற்றிற்காகத் தன் இசையை நீட்டும் இகர உயிர் அவ்வழி மூக்கின் வழியே தன் உயிர்ப்பைச் சிறிது வெளிப்படுத்தும்; ஆங்கே னகர ஒற்றைச் சார்ந்து பகரம் பிறக்கும்போது மூக்கின் வளியிசை உடனே கண்டத்து இசையாக மாறியபின் அகரம் வெளிப்படுகின்றது. அதனான் னகரத்தின் மென்மைத் தன்மை பகரத்தையும் சார்தலால் பகரத்தின் வன்மை குறைந்து இசைக்கின்றது. இவ்வாறு ஓர் உயிரொலியினைச் சார்ந்து இரண்டு ஒற்றுக்கள் கூடி இசைக்குங்கால் நிற்கும் மெய்யெழுத்தின் இசையோடு வரும் மெய்யின் இசைகலந்து மயங்கித்திரிபடைதலினால் மயக்கம் மெய்யெழுத்துக்களுக்கே உரியதென்பது தெளிவாகிறது அதனால் னகரத்தோடு பகரம் மயங்கிற்று எனல் இலக்கணமாகின்றது என்க.

இதனான் தனித்து நிற்கும் மெய்யெழுத்துள் மாத்திரையின்றி நிற்கும் மெய்யெழுத்து உயிரைச்சார்ந்து வருங்கால் அம்மாத்திரை பெற்று இசைக்கின்றமையைத் தெளியலாம் எனவே தனித்து நிற்கும் மெய்யோடு வந்து சேரும் உயிர்மெய் எழுத்தின்கண் உள்ள மெய்யைச்சுட்டி அம்மெய் மயங்கிற்று என இலக்கண நூலார் கூறுவதற்கும் இதுவே காரணமாயிற்றெனத் தெளிக.

இனி இன்னின்ன மெய்யொடு இன்னின்ன மெய்களே வந்து மயங்கும் என்பதற்குரிய காரணத்தையும் ஒரொடுத்துக்காட்டு வாயிலாகப் பார்ப்போம்.

ககர மெய் ட ற ல ள ய ர ழ ங ண ன க என்னும் பதினோரு மெய்களுடன் மயங்கும். ச த ப ஞ ந ம வ என்னும் ஏழு மெய்களுடன் மயங்காது.

ககரம் முதல் நா முதலண்ணத்தை நன்கு பொருந்துவதனாற் பிறப்பது. இது டகரத்தோடு மயங்குகின்றது, சகரத்தோடு மயங்குவதில்லை. ஏன்?

டகர ஒற்றைப் பிறப்பிப்பதற்காக முன் அண்ணத்தை நாநுனிவிளிம்பளவே தொட்டு நிற்கும் ஆதலின் நாவானது அப்படியே சிறிது உள்வளைந்து அடிப்பகுதியால் சகரத்தைப் பிறப்பிக்க முதலண்ணத்தை விரைந்து ஒற்றிவிடும், சகரத்தைப் பிறப்பிக்க இடைநா இடையண்ணத்தை நாவானது நன்கு பொருந்தியிருக்கும். அந்நிலையினின்றும் விடுபட்டாலன்றி நாவின் அடிப்பகுதி சகரத்தை ஒற்றுவதற்காகப் பொருந்த இயலாது. ஆதலின் ககரம் தன் இனமாகிய டகரத்தோடு மயங்குகின்றது சகரத்தோடு மயங்குதலில்லை.

இவ்வாறே ல ள ற ர ண ன இவை அண்ணத்தை நாநுனி ஒற்றவும் சிறிது வருடவும் பிறப்பன ஆதலின் இவற்றின் பின்வரும் ககரத்தை நாவானது சிறிது உள்வளைந்து ஒற்ற இடர்ப்படாது ங ய இவை அடிநா அண்ணத்தை ஒற்ற மூக்கொலியாலும் சிறிது உயிர்ப்பொலியாலும் பிறப்பன ஆதலின் அக்கணமே ககரத்தைப் பிறப்பிக்க இடர்ப்படுவதில்லை யாகலின் இவற்றோடு ககரம் மயங்கிப் பிறக்கின்றது.

இனி, தகரம் பிறக்க நாவானது முன் அண்ணத்தை நன்கு பொருந்தி நிற்பதனாலும் ஞகர நகரங்கள் சகர தகரங்களின் பிறப்பிடத்தையே ஒற்றி மூக்கொலியால் பிறப்பன ஆகலானும். இவற்றோடும் ககரம் மயங்காதாயிற்று.

ப–வ–ம மூன்றும் இதழ்பற்றிப் பிறப்பவையாதலின் இதழின் செயல் நிறைந்து முடிந்த பின்னரே நாவானது தொழிற்பட இயலுமாகலின் இவற்றோடும் சுகரம் மயங்காதாயிற்று எனத் தெரியலாம், இவ்வாறே ஏனைய ஒற்றுக்களும் தத்தம் பிறப்பிட அமைதிக்கேற்ப மயங்குதலும்–மயங்காமையும் ஆகிய நிலைமையை அடைகின்றன. இவற்றை முறைப்படி இசைத்துக் செவிகருவியாக ஓர்ந்தறியலாம்.

இதுகாறுங் கூறியவாற்றால் ஆசிரியர் புள்ளி எழுத்துக்கள் பதினெட்டும் மெய்யென்னும் ஓரினம்பற்றி அவை மொழியிடத்து வருங்கால் நின்ற ஒற்றோடு பின்வரும் ஒற்று இணையும் நிலையை அவ்வவற்றின் பிறப்பிட அடிப்படையில் நோக்கி அறிவியலுக்கியைய மயக்க விதிகூறியுள்ளார் என்பதும் வேற்றுநிலை என்றும் உடனிலை என்றும் பிரித்தல் அவர் கருத்தன்றென்பதும் மொழியியலுக்கு அதனாற்போந்த பயன் ஒன்றுமில்லை என்பதும் நச்சினார்க்கினியரின் பிரிப்பு மொழியியல் மரபுக்கும் ஆசிரியர் கருத்துக்கும் இயையாதது என்பதும் பிறவும் புலப்படும்.

இனி அடுத்து வரும் நூற்பாக்களின் பொருளைக் காண்போம். "அம்மூவாறும்" என்னும் நூற்பாவின் முதல் இரண்டடிகள் அதிகாரச்சூத்திரம் என்பது மேலே விளக்கப் பட்டதாகலின் இறுதி இரண்டு அடிகளின் பொருளைக் காண்போம்.

இது தனிச்சூத்திரமாகக்கொள்ளின் அவற்றுள் எனத் தொடங்குவதலே முறை என்க.

டறலள என்னும் புள்ளி முன்னர்க்
கசப வென்னும் மூவெழுத் துரிய

பொருள் :– (மெய் மயக்குடனிலை தெரியுங்காலை) டறலள என்னும் ஒற்றெழுத்துக்கள் நிற்க அவற்றின் மேல் கசப என்னும் மெய்கள் வந்து (தனித்தனியே) மயங்கற்கு உரியவாம்.

எ–டு :– உட்கு–கற்க–செல்க–கொள்க
வெட்சி–முயற்சி–வல்சி–நீள்சினை
தட்பம்–கற்பனை–செய்ப–கொள்ப. எனவரும்.

அடுத்த நூற்பா, அவற்றுள்,

லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்

பொருள் :– மேற்கூறிய டறலளக்களுள் டற ஒழிந்த ஏனைய லளகக்களின் மேல் யகரமும் வகரமும் வந்து மயங்கற்குரியவாம்.
எ–டு :– வில் யாழ்–வெள்யானை; செல்வம்–கள்வர்; எனவரும்.

அடுத்த நூற்பா :

ங ஞ ண ந ம ன எனும் புள்ளி முணர்த்
தத்தம் மிசைகள் ஒத்தன நிலையே

பொருள் :– (மெய்ம்மயக்குடனிலை தெரியுங்காலை) ஙஞணநமன என்னும் மெல்லொற்றுக்களின் முன் (நெடுங்கணக்கினுள்) இவற்றிற்கு மேல் இவற்றின் இனமாக நிற்கும் கசடதபற என்னும் வல்லெழுத்துக்கள் முறையேவந்து மயங்குதற்குப் பொருந்தியவையேயாகும்,
நிலை=மயங்கும் நிலை, நிலை ஒத்தனவே என ஏகரம் பிரித்துக் கூட்டப்பட்டது.
எ–டு :– பொங்கர்–தஞ்சம்–கண்டல்–பந்தர்–அம்பல்–வென்றி எனவரும்,

அடுத்த நூற்பா : அவற்றுள்

ணனஃகான் முன்னர்க்
கசஞப மயவவ் வேழும்உரிய

பொருள் :– மேற்கூறப் பெற்ற மெல்லெழுத்தா றனுள் ணகர னகரங்களின் முன்னர் அதனதன் இனமேயன்றி க் க ச ஞ ப ம ய வ என்னும் ஏழு மெய்யெழுத்துக்களும் வந்து மயங்கற்குரியவாம்.

எ–டு :– எண்கு–வெண்சாந்து–வெண்ஞான்–நண்பன்–உண்மை
மண்யாப்பு–மண்வயல், எனவும்
புன்கு–நன்செய்–வின்ஞான்–அன்பன்–நன்மை
பொன்யாழ்–பொன்வயல் எனவும் வரும்

அடுத்த நூற்பா :–

ஞ ந ம வ என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய்பெற்றன்றே

பொருள் :– (மெய்ம்மயக்குடனிலை தெரியுங்காலை) ஞ ந ம வ என்னும் ஒற்றெழுத்துக்களின் முன் யகரமெய் வந்து மயங்கி நிற்றல் பொருளுடையதேயாகும்,
மெய்=பொருள். அஃதாவது இலக்கணமாகிய பொருள். எனவே இலக்கணமாகும் என்றபடி.
எ–டு :– உரிஞ்யானை – பொருந்யாக்கை திரும்யாடு–தெவ்யாழ் என வரும்.
இவைதொகை மொழிகள் – இம்மயக்கம் தனி மொழிக்கண் வருதல் அரிது.

உரிஞ்யாது–வெரிந்யாது–சுரம்யாது–தெவ்யாது எனப் புணர்மொழியின் கண்ணும் வரும்.

இந்நூற்பாவிற்கு உரைகூறிய நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டுக்கள் ஒன்றும் வரையாமல், "இங்ஙனம் ஆசிரியர் சூத்திரஞ் செய்தலின் அக்காலத்து ஒரு மொழியாக வழங்கிய சொற்கள் உளவென்பது பெற்றாம். அவை இக்காலத்து இறந்தன" என எழுதியுள்ளார். திரு. இரெட்டியார் அவர்கள் "இவ்வொற்றுக்கள் ஒரு மொழிக்கண் மயங்கிவரும். சொற்கள் வடமொழியிலும் காணல்" அரிதெனக்கூறி அவர் உரையை மறுத்துள்ளார்.

மெய்ம்மயக்கத்தை ஒரு மொழிக்குள்ளேதான் காணவேண்டு மென்னும் விபரீதக் கோட்பாட்டால் நச்சர் இவ்வாறு உரை கூறுகின்றார் என்பதை உணரலாம்–இவர் முன்னர்ச் சிலவற்றிற்குக் காட்டியாங்குத் தொகைமொழிகளை உதாரணமாகக் காட்டியிருக்கலாம். அவ்வாறு காட்டாமைக்குக் காரணம் புலப்படவில்லை–ஒரு கால் தொல்காப்பியர் காலத்து வழங்கி இக்காலத்து வழக்கு வீழ்ந்த சொற்கள் உள எனப் பின்னர்த்தாம் அமைதி கூறுவதற்கு இஃது முன்மொழித்து கோடலாகவும் இருக்கலாம் இது நிற்க.

அடுத்து நூற்பா :– (அவற்றுள்)

மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்

பொருள் :– மேற்கூறிய ஞ நம வ க்களுள் மகரஒற்றின் முன்னர் (யகரமேயன்றி) வகரமும் வந்து மயங்கி நிற்கும்.

எ–டு :– திரும் வாழ்க்கை (இதுவினைத்தொகை) நிலம்வலிது–தரும் வளவன் என வரும்.

உம்மை இறந்தது தழிஇயஎச்சஉம்மை, இந்நூற்பாவின் முதற்கண் 'அவற்றுள்' என நின்ற கூன் ஏடெழுதுவோரால் விடப்பட்டிருந்தல் வேண்டும். என்பது மெய் 24, 26ஆம் நூற்பாக்களின் அமைப்பை நோக்கின் புலனாகும்.

அடுத்த நூற்பா :–

யாழ வென்னும் புள்ளி முன்னர்
முதலாகெழுத்து ஙகரமொடு தோன்றும்

பொருள் :– (மெய்ம்மயக்குடனிலை தெரியுங்காலை) யாழ என்னும் புள்ளி எழுத்துக்களின் முன் மொழிக்கு முதலாகும் என மேற்கூறப்பெறும் க த ந ப ம ச வ ய ஞ என்னும் ஒன்பது மெய்களும் (மொழி முதலாகாமல் புணர்ச்சி இயல்பால் தோன்றும்) ஙகர மெய்யும் வந்து மயங்கும்.

ஙகரம் ஒற்றாயல்லாது உயிர்மெய்யாக வராமையின் பிரித்தோதப் பட்டதென்க. ஒடு—எண்ணுப்பொருளில் வந்த இடைச்சொல் இதனை

என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி

ஒன்றுவழி யுடைய எண்ணினுட் பிரித்தே (சொல் : இடை.46)

என்றதனால் அறியலாம். அதனான் ஈண்டு முதலாகெழுத்தோடு எனக் கூட்டப்பட்டது. உரையாசிரியன்மார் இவ்வொடுவை உடனி கழ்ச்சிப் பொருளில் வந்ததாகக் கொண்டு பொருள் கூறினர். ஙகரம் ககரத்தோடன்றி ஏனையவற்றோடு வாராதென்பதை அவர் ஓர்ந்திலர்.

எ.டு :—

ய்	ர்	ழ்
ஆய்கவின்	ஆர்கலி	ஆழ்கடல்
தூய்து	சார்தல்	சூழ்தல்
பாய்நர்	தேர்நர்	வாழ்நர்
ஆய்ப	சேர்ப	வாழ்ப
தூய்மை	நேர்மை	தாழ்மை
கொய்சிறை	ஓர்சொல்	பாழ்சுரம்
மெய்வழி	நேர்வது	ஊழ்வினை
பாய்ஞெண்டு	ஊர்ஞெண்டு	வாழ்ஞெண்டு
செய்யவள்	போர்யானை	வீழ்யானை
வேய்ங்குழல்	ஆர்ங்கோடு	பாழ்ங்கிணறு

எனவரும். வேய்கடிது—வேர்சிறிது முதலாய புணர்மொழிகளும் ஆம் ஙகரம் புணர்ச்சி விகாரத்தால் தோன்றிக் ககரத்தின் முன் நிற்றலன்றி மொழிக்கு முதலாகமையின் உயிர்மெய்யாகி நில்லாமையின் வேய்ங்குழல் ஆர்ங்கோடு — பாழ்ங்கிணறு எனக்காட்டப்பட்டது. எனவே வேய்ஙனம்—வேர்ஙனம்— வீழ்ஙனம் எனக்காட்டுதல் நன்னூல் முதலாய பின்னூல்களின் தவறாய வழக்கேயன்றித் தொல்காப்பியநெறி ஆகாதென்க.

அவ்வாறாயின் அங்ஙனம்—இங்ஙனம்—உங்ஙனம்—ஆங்ஙனம்— ஈங்ஙனப்—ஊங்ஙனம் (எங்ஙனம்) யாங்ஙனம். எனச் சுட்டு வினாக்களையடுத்து வரும் ஙனம் என்பதை வருமொழியாக வைத்துப் புணர்த்திக் கூறுதள் எவ்வாறு பொருந்தும் எனின்? பொருந்தாது. என்னை?

இவை சுட்டு வினாக்களின் அடிப்படையிற் பிறந்த தனிச் சொற்களேயன்றி நிலைமொழி வருமொழியாக நின்று புணர்ந்த ஒட்டுச் சொற்கள் அல்ல. எல்வாறெனின்? உயர்திணை — அஃறிணை யாய ஐம்பாற்

பெயர்களுள்; அவன் அவள் அவர் அவை அது அவ்–அவை யாவன் யாவள் யாவர் யாவை முதலியவை சுட்டு வினாக்களை அடிப்படையாகக் கொண்டு பிறந்து ஒரு சொல்லாய் நிகழ்வதைப்போல, அங்கு–இங்கு–உங்கு, ஆங்கு–ஈங்கு–ஊங்கு–ஆண்டு–ஈண்டு–ஊண்டு–யாண்டு–ஆண்டை–ஈண்டை–ஊண்டை–யாண்டை, என இடப்பொருளைச் சுட்டி வரும் பெயர்ச் சொற்களும். வினாச்சொற்களும், சுட்டு முதலாய இகர ஈற்றுச் சொற்களும் எகர முதல் வினாவின் இகர இறுதிச் சொற்களும் (எழு–159) ஒருசொல்லாக வரும் தனி மொழிகளே என்று ஆசிரியர் கூறுவதை யறிவோம்.

அவ்வாறே அங்ஙனம் இங்ஙனம் முதலாய சொற்களும் சுட்டு வினாக்களின் அடிப்படையிற் பிறந்து தன்மைப் பொருளில் வழங்கும் பெயர்ச் சொற்களாதலின் இவையாவும் ஒரு சொல்லே எனத் தெரியலாம்.

அன்றி இவற்றை ஙனம் எனப்பிரிப்பின் ஆண்டு–ஆண்டை–ஆங்கு–யாங்கு என்பவற்றையும் பிரித்தல் வேண்டும். இவற்றை எவ்வாறு பிரித்தல் ஒல்லும். ஒல்லாது எனவே. அங்ஙனம் இங்ஙனம் முதலியவைகளும் பிரிப்பப்பிரியா, ஒரு சொல்லெனவே கொள்ளப்படும். "மருவின் பாத்திய" என்றும் "புணரியல் நிலையிடை உணரத் தோன்றா" என்றும் ஆசிரியர் அறிவுறுத்தினார் என்க.

இப்பொருள் நுட்பம் ஓராத நன்னூலார் அவன் இவன் யாவன் முதலாய ஒருசொற்களைப் பகுபதமாகக் கொண்டு இலக்கணங் கூறப்புக்கமையின் அங்ஙனம் முதலியவற்றையும் நிலைமொழி வருமொழியாகப் பிரித்தோதும் கடப்பாட்டிற்குள்ளானார்–ஆயினும்ஙனம் என்பது புணர்மொழிக்கண் அன்றி யாண்டும் தனித்து வாராமை நோக்கிச்

சுட்டியா எகர வினாவழி அவ்வை
ஒட்டி ஙவ்வும் முதலாகும்மே. – (நன்) என்றும்

சுட்டுவினாப் பெயர்களுள் அகர இகர எகரங்களின் பின் வகரமே உடம்படுமெய்யாக வருதலை நோக்கி

"எகர வினா முச்சுட்டின் முன்னர்
உயிரும் யகரம் எய்தின் வவ்வும்" எனவும்

விதிகற்பித்துக் கூற வேண்டியவராயினார் என்க.

இவற்றுள் எதனையும் ஓராமல் அங்ஙனம் இங்ஙனம் என்பவற்றை அங்கனம் இங்கனம் என்னும் சொல்லாக இருக்கவேண்டுமெனக் கருதி மாற்றி எழுதிக் கொண்டு அமைதியுற்றாரும் உளர், அவர்தாம் “கனம்” என்பதற்குத் தன்மை என்னும் பொருள்இருவகை வழக்கிலும் காணப்படாமையைக் கண்டிலர் போலும்.

இனி

ஆங்கனம் விரிப்பின் அளவிறந்தனவே
பாங்குற உணர்ந்தோர் பன்னுங்காலை (தொல்–செய்–51)
யாங்கனம் ஒத்தியோ வீங்குசெலல் மண்டிலம் (புறம்–7)

எனத் தொல்காப்பயத்துள்ளும் புறத்துள்ளும் வருதலின் ஆங்கனம் என்பதே பிற்காலத்து ஆங்ஙனம் எனப் பிறழ்ந்ததென்பார் கருத்தினை நோக்குவோம். இவ்விரண்டு சொற்களும் பொருளாற் சிறிது வேறுபாடுடையவை. ஆங்கனம் என்பது ஆங்கு+அன்ன+அம் எனப் பிரிப்பப் பிரியும் புணர்மொழியாய் ஒருசொல் நீர்மைப்பட்டு நிற்பதாகும்.

ஆங்கென்பது இடத்தன்மையையும் அன்ன என்பது உவமத் தன்மையும் சுட்டி இணைந்து இடம் பண்பு செயல்பற்றிவரும் ‘அம்’ என்னும் விகுதி இடைச்சொல்லோடு புணர்ந்து அவ்வாறு (போல) என்னும் பொருளில் நிற்கும். ஆங்கு என்பதற்கு ‘ஆன்’ என்பதும் அன்ன என்பதற்கு ‘அன்’ என்பதும் அடிச் சொற்களாம். அம் என்பது அகம் என்பதன் இடுங்கிய சொல்லாய் இடப்பெயர் விகுதியாகவும் ஆகும் என்பதன் இடுங்கிய சொல்லாய்ப் பண்பு முதலாய பெயர்களின் விகுதியாகவும் வரும்.

குன்றம்–பாக்கம் என இடத்தையும் நோக்கம் நீக்கம் அறம் மறம் அச்சம் எனப் பண்பு முதலாயவற்றையும் அம் விகுதி சுட்டி வருதல் காண்க.

“கணை கொடிது யாழ் கோடு செவ்விதரங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்”

என்னும் குறட்பாவில் இச்சொல் விரிந்து நிற்றலைக் காண்க.

மேலும் கனம் என்பது தனம் என்பதன் திரிபெனக் கருதுதலும் பொருந்தாது. தனம் என்பது தன்மை என்னும் பண்புப் பெயருள் மை விகுதிக்கு மாறாக அம் விகுதிபெற்று வந்த சொல் ஆயினும் மடத்தனம்–தடித்தனம் என உலக வழக்கின்கண் அன்றிச் சான்றோர் வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இஃது பெரும்பான்மையும் வாராமையறிக, மற்றும் தனம் என்பது கனம் எனத் திரிதற்கும் வாய்ப்புண்டா என்பதும் நோக்கத்தக்கது.

இனி அங்ஙனம் என்பது பிரிப்பப்பிரியா ஒட்டுச் சொல்லாய் அத்தன்மை எனும் பொருள் தருவதாகும். ஒருகால் இச்சொல் அவ்வனம் (அவ்வண்ணம்) என்பதன் போலியாக வந்திருக்கலாம் எனினும் ஆயத்தக்கது. அங்ஙனம் என்னும் சொல் ஆசிரியர் காலத்து வழங்காதிருப்பின் "மெய்நிலைச் சுட்டின்" என்னும் நூற்பாவில் எல்லா எழுத்தும் தம்முன் தாம்வருஉம் ர ழ வ ல ங் கடையே எனக் கூறியிரார். "ஙரழ வலங்கடை" எனக் கூறியிருப்பார். ஆதலான் "அங்ஙனம்" முதலியவை ஆண்டு—ஈண்டு என்றாற்போல் ஒரு சொல்லேயாம் என்பதே நேரிது.

இது காறுங் கூறியவாற்றால் "ஙனம்' என்றொரு தனிச்சொல் இல்லை என்பதும், ஆண்டு—ஆண்டை என்பவற்றை நிலைமொழி வருமொழி செய்து புணர்க்கப்படாமைபோல அங்ஙனம் இங்ஙனம் முதலியவும் பிரித்துப்புணர்க்கப்படா. அவை ஒரு சொற்களே என்பதும், அங்கனம்—இங்கனம் எனக் கருதிக்கொள்ளுதல் பொருந்தா வழக்கென்பதும்—நன்னூலை அளவையாகக் கொண்டு இடைக்கால—பிற்காலத்தவர் கூறுவன தமிழ் மரபிற்கும் தொல்காப்பியநெறிக்கும் ஏற்புடையவாகா என்பதும் பெறப்படும்.

அடுத்த நூற்பா :

> மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்
> தம்முன் தாம் வருஉம் ரழவலங்கடையே

பொருள் :— எல்லா மெய்யெழுத்துக்களும் தம் வடிவு நின்று மயங்குதலைக் கருதி ஆராயின் ரகரமும் ழகரமும் அல்லாத ஏனைய பதினாறும் தமக்கு முன்னர்த் தாம் வந்து மயங்கி நிற்கும்.
எ—டு :— மக்கள்—இங்ஙனம்—நொச்சி—மஞ்ஞை—பட்டினம்—அண்ணல்—தித்தன்—வெந்நீர்—க்ப்பல்—வெம்மை—வெய்யன்—மல்லல்—தெவ்வர்—வள்ளி—கொற்றன்—கன்னல் எனவரும், மடக்கொடி—கடுக்காய் என்றாற் போலப்புணர் மொழியுள்ளும் வரும்.

இச்சூத்திரம் எழுத்தொலி மாறுபாட்டைப் பற்றியதே தன்முன் தான்வரின் ஒலி மாற்றமின்றி இருக்கும் என்பது கருத்து.

ரகர, ழகரங்கள் வளைநாவண்ண வருடொலிகளாதலின் அவை இருமுறை தாமே ஒற்றாவாகலின் விலக்கப்பட்டன என்க.

இந்நூற்பாவிற்கு ரெட்டியாரவர்கள் உரை கூறி எடுத்துக்காட்டுகள் காட்டுமிடத்து அங்ஙனம் இங்ஙனம் ஆகிய சொற்கள் அங்கனம் இங்கனம் என்னும் சொற்களின் திரிபென்று கூறி விலக்கி விட்டு வேறு உதாரணங் காணாமையின்

"பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறு" அரங்ஙகம் மனவரும் அளபெடைச் சொற்களை உதாரணமாகக் காட்டியுள்ளார். அளபெடை என்பது ஓரெழுத்தே செய்யுட்கண் அசை நிறைத்தற்பொருட்டு நீளுதலன்றி இரண்டெழுத்துக்கள் அல்லவென்பதை அவர் எண்ணிலர். அன்றி

நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய
கூட்டி எழுஉதல் என்மனார் புலவர் என்றும்

குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்த குற்றெழுத்தே என்றும்

ஆசிரியர் கூறுதலான் இரண்டெழுத்தாகக் கொள்ளலாமெனின்–கூட்டி எழுப்புக என்றும்–நின்றிசை நிறைக்கும் என்றதன் றி அவை நின்ற எழுத்தும் வரும் எழுத்துமாகிப் புணர்ந்தனவல்ல என்பதையும் அவை குறியீடே என்பதையும் இலக்கண ஆசுரியன்மார் தெளிவுறுத்தியுள் ளமையால்–அது பொருந்ததென்பது வெளிப்படை,

"அம்மூவாறும்" (எழு–32) முதல் மெய்ந்நிலைகுட்டின் (எழு–30) என்பதீறாக உள்ள ஒன்பது (எட்டாகக் கொண்டனர் உரையாசிரியன்மார் என்பது மேலே விளக்கப்பட்டது) நூற்பாக்களால் மெய்ம்மயக்க விதிகளையெல்லாம் வகுத்துக் கூறியுள்ளமையையும் அவற்றின் செம்பொருளையும் மேலே கண்டோம்.

இனி மொழி மரபினுள் மொழியமைப்புப்பற்றிக் கூறும்

யரழ வென்னும் மூன்று முன் ஒற்றக்
கசதப ஙஞநம ஈரொற்றாகும்–(எழு–மொழி–15)

அவற்றுள்

ரகாரழகரம் குற்றொற்றாகா–" (எழு–மொழி–16)
செய்யுளிறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈறொற்றாகும்–(எழு–மொழி–18)

என்னும் மூன்று நூற்பாக்களுள் முன்னைய இரண்டும்–மெய்ம் மயக்க விதி கூறுவதாகக் கருதி உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் பொருள் கூறியுள்ளனர், இவற்றை நூன்மரபிற் கூறிய மயக்கவிதி நூற்பாக்களோடு ஒருங்கு கூறாமைக்கும்–மொழி மரபினுள் கூறியமைக்கும் காரணம், ஆண்டு வேற்றுமை நயம்பற்றிக் கூறப்பட்டது. ஈண்டு ஒற்றுமை நயம்பற்றிக் கூறப்பட்டது என்று இளம்பூரணரும், ஈரொற்று உடனிலையாதலின் ஈண்டு கூறப்பட்டது என சச்சினார்க்கினயரும் அமைதி கூறினர். வேங்கடராசுலு ரெட்டியாரவர்கள் "யரழ" என்னும் நூற்பாவிற்குப் புதுமையானதொரு விளக்கங்கூறி அடுத்த நூற்பா உரையையும் அதற்கேற்ப விளக்கியுள்ளார் இவர்தம் கருத்துக்களின் பொருத்தமின்மையும்–இவற்றின் செம்பொருளையும் இனிக்காண்போம்.

மொழிமரபினுள் ஆசிரியர் பொதுவாக எழுத்துக்கள் மொழி நிலைமை எய்தும் இயல்புகளையும் தனிமொழிக்கண் எழுத்துக்கள் நிற்கும்–இயல்புகளையும். உயிரும் மெய்யும் சார்புமாகிய எழுத்துக்கள் மொழி மூன்றிடத்தும் நிற்கும் முறைமைகளையும் பற்றியே வகுத்துக் கூறியுள்ளார், இன்றேல் நூன்மரபு – மொழி மரபு எனப் பகுக்காமல் "எழுத்தியல்" என ஓரியலாகவே வைத்துக் கூறியிருப்பார்–எனவே மொழி மரபிற் கூறும் இலக்கணங்கள் தனியெழுத்துக்களைப்பற்றி யவல்ல, மொழிக்கண்நிற்கும் எழுத்துக்களைப் பற்றியும் அம்மொழி மரபு பற்றியும் என்பது தெளிவாம்.

அதனானே தனி மெய்யெழுத்துக்களைச் சுட்டிம் பேசுங்கால் அவற்றிற்கு அகரச் சாரியை கொடுத்து மொழிநிலைமைப்படுந்தி 'வல்லெழுத்தென்ப கசடதபற" என்றாற்போல கூறினார்.

இவற்றை மொழி நிலைமைபடுத்து உயிர்மெய்யெழுத்து போலக் கூறினும் இவை உயிர்ப்பில்லாத மெய்(ஒற்று) எழுத்துக்களே என உணர்த்துவாராய்

"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் ஏன விதி கூறினார்."

இங்ஙனம் மொழிப்படுத்து மெய்யெழுத்துக்களைக் கூறுங்கால் கசடதபற–ஙஞணநமன எனத் தம்முள் மயங்காத எழுத்துக்களை வரிசைப்படுத்திக் கூறவேண்டியிருத் தலின் அதற்கு அமைதி கூறுவாராய்

தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்

மெய்ந்நிலை மயக்கம் மானமில்லை (எழுத்–மொழி–)

எனப் புறனடை செய்தார். ஈண்டு 'நிலை' என்றது மெய்யெழுத்துக்கள் மொழி மூவிடத்தும் நிற்கும் நிலையை–மயக்கம் என்றது மெய்ம் மயக்கத்தை என்க. இந்நுண்மையை ஓராமல் உரையாளர்கள் மெய்ந்நிலை மயக்கம் என்பவற்றை ஒரு தொடராகவைத்து மெய்ம்மயக்கம் எனப்பொருள் கூறிச் சென்றனர்.

மற்ற மெய்யெழுத்துக்கள் மொழி முதற்கண் வருங்கால் உயிரோடுகூடி யல்லது வாரா என விளக்குவார்

"உயிர்மெய் யன்லன மொழி முதலாகா" என விதித்தார். இதனான் மொழி இடையிலும் இறுதியிலும் வருங்கால் அவைபட்டாங்கு மெய்ம்மையாக வந்து நிற்கும் என்பதும் உணர்த்தினார். அவ்வாறு அவைமொழி இடையிலும் இறுதியிலும் வந்துநிற்குங்கால் ஒன்றேயன்றி இரண்டு வருதலும் உண்டு அங்ஙனம் இரண்டாக வருங்கால் இவை இவை இன்னவாறு வருமென அவற்றின் மரபுபற்றி

யரழ என்னும் மூன்றுமுன் ஒற்றக்

கசதப ஙஞநம ஈரொற்றாகும் என்றும்

அஙற்றுள், ரகார ழகாரம் குற்றொற்றகா. என்றும்

செய்யுளிறுதிப் போலி மொழிவயின்

னகாரமகாரம் ஈரொற்றாகும் என்றும் கூறினார்.

ஒரொற்று இடைவருதலை மயக்கவிதி கூறிய நூற்பாக்களால் உய்த்துணரவைத்தார். இறுதியில் வருதலை "மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல் என்னும் நூற்பாவாற்கொள்ள வைத்தார் ஈறொற்று உடனியைந்து வருதல் மொழியின் கண்ணதாய் வரையறையுடையவாகலின் அவற்றை விடுத்து மொழிமரபினுள் ஒதுவாராயினார். மொழியிடையே வருதலை யரழ வென்னும் நூற்பாவாலும் இறுதிவருதலை" செய்யுளிறுதிப் போலி மொழிவயின்" என்னும் நூற்பாவாலும் ஒதினார்.

இவை ஈறொற்றாய் நிற்றற் கண்ணும் நூன்மரபிற் கூறிய விதிகளின்படியே மயங்கி நிற்கும். இரண்டும் சேர்ந்து முன்னின்ற ஒற்றோடு மயங்குதலில்லை ஆதலின் ஈரொற்று உடனிலை மயக்கம் என்பதொன்றில்லை என்பது தானே புலப்படும்.

அற்றன்று இலையும் மயக்கவிதிபற்றியே எழுந்தவை எனின் முன்னர் நூன்மரபிற் கூறிய

யரழ என்னும் புள்ளி முன்னர்
முதலாகெழுத்து ஙகர மொடு தோன்றும்

என்னும் நூற்பாவிலேயே இம்மயக்கவிதி அமைந்து கிடத்தலின் ஈண்டும் கூறுதல் கூறியது கூறலாய் முடியும். இவை ஈரொற்று டனிளையாதலின் பிரித்துக் கூறப்பட்டதெனில் அந்நூற்பாவையடுத்து ஆண்டே கூறியிருப்பார் என்க. ஆண்டுக் கூறாமல் மொழி மரபின்கண் கூறியுள்ளமையாலும் ஒரு மொழிக்குள் தனி ஒற்றாக மயங்காத யகர வகரங்களை நீக்கிக் கூறியுள்ளமையாலும் இந்நூற்பா மொழியியல்பு கூற எழுந்ததே என்பது நன்கு தெளிவாகும்.

இனி இவற்றின் பொருளைக் காண்போம்.

யரழ என்னும் மூன்றுமுன் ஒற்றக்
கசதப ஙஞநம ஈரொற்றாகும்

பொருள் :– ஒரு மொழியின் இடையே யரழ என்னும் மூன்றும் ஒற்றாய் நிற்க அவற்றின் பின்னர் க ச த ப ங ஞ ந ம என்னும் ஒற்றெழுத்துக்கள் தொடர்ந்து (தனித்தனி) ஈரொற்றாய் இணைந்து நிற்கும்.

எடுத்துக்காட்டு :–
ஏய்க்கும்–வாய்ச்சி–பாய்த்துள்–வாய்ப்பு–வேய்ங்குழல்
வேய்ஞ்சிறை–பாய்ந்தான்–வேய்ம்புதல் எனவும் (இவற்றுள் வேய்ங்குழல்–பண்புத்தொகை வேயாகியகுழல் என்பது பொருள்)
வேய்ஞ்சிறை–பண்புத்தொகை–வேயாகியவேலி என்பது பொருள்
வேய்ம்புதல்–பண்புத்தொகை–வேயாகியபுதர் என்பது பொருள்
ஈர்க்கு–நேர்ச்சி–சீர்த்தி–பார்ப்பு–ஈர்ங்குழல்
கூர்ஞ்சிறை–நேர்ந்தான்–கூர்ம்பனை–எனவும்.
(இவற்றுள் ஈர்ங்குழல்–பண்புத்தொகை–தண்ணிதாய கூந்தல் என்பது பொருள்
கூர்ஞ்சிறை–பண்புத்தொகை–கூரியதாகிய சிறகு என்பது பொருள்.
கூர்ம்பனை–பண்புத்தொகை–கூரியதாகிய பனைமரம் என்பது பொருள்.
வாழ்க்கை–சூழ்ச்சி–வாழ்த்து–காழ்ப்பு
பாழ்ங்குடில்–பாழ்ஞ்சிறை–பாழ்மதில் எனவும்
இவற்றுள் பாழ்ங்குடில்–பாழ்ஞ்சிறை–பாழ்மதில் என்பவை பண்புத்தொகை பாழாகியகுடி – பாழாகியவேலி–பாழாகிய மதில் என்னும பொருளன)

மெல்லினந் தொடர்ந்த ஒருமொழிகள் அரியவாகலின் ஒருசொல் நடையவாய தொகை மொழிகள் காட்டப்பெற்றன புணர்மொழிகளாயின் மேற்கூறிய மயக்க விதியுள் அடங்குமாதலின் ஈண்டைக் காகாக என்க.

நச்சினார்க்கினியர் இந்நூற்பா மயக்கவிதி கூறியதாக கருதினார் மயக்கம் ஒருமொழிக்ககண்ணாவ தென்பது அவர் கோட்பாடாதலின், தேய்ஞ்சது என்னும் (தேய்ந்தது) பிழை வழக்கை உதாரணங் காட்டினார் தாழ்ங்குலை—நேர்ங்குலை என்னும் உதாரணங்களைக் காட்டி இவை வினைத் தொகை யென்றார் இவை தாழும்—நேரும் என்பவற்றின் திரிபாகிய செய்யும் என்னும் எச்சமாகலின் வினைத்தொகையெனல் நிரம்பாது.

இனி இரெட்டியார் அவர்கள் தனிமொழிக்கண் யகர ரகர ழகர மெய்களுக்கு முன் முறையே ஙக—ஞச—நத மா; இவை இணைந்து ஈரொற்றாய் நிற்குமென இச்சூத்திரத்திற்குப் பொருள் கூறி

	ங்க	ஞ்ச	ந்த	ம்ப
ய	--------	தேய்ஞ்சுது	மேய்ந்தது	மொய்ம்பு
ர	--------	--------	சேர்ந்தது	--------
ழ	--------	--------	வாழ்ந்தது	------ எனவரும்.

எனச் சிலவற்றிற்கு எடுத்துக்காட்டுத்தந்து ஏனைய வந்துழிக்காண்க என வரைந்துள்ளார். இதுவே ஆசியர் கருத்தாயின்

யரழ வென்னும் மூன்றுமுன் ஒற்ற
ஙஞநம கசதப ஈரொற்றாகும் —

என நூற்பாவை அமைத்திருக்கலாம்—கொண்டு கூட்டலாமெனின் இவை இவ்வாறு இரண்டிரண்டாக இணைந்து வருமென்பதை ஆசிரியர் கருத்தாயின் "ஙஞ நம கசதப இணைத்தீரொற்றாம்" என விளங்க ஒதியிருக்கலாம் மற்றும் இரெட்டியாரவர்கள் இந்நூற்பாவினுள் வரும் யரழக்களை யும் ஙஞநமக்களையும் ஒற்றாகவும் கசதபக்களை உயிர்மெய்யபகவும் கருதுகின்றார். அவ்வாறு கருதுதற்கான குறிப்பொன்றும் நூற்பாவுள் காணப்படவில்லை, ஆசிரியர் கருத்து அதுவாயின் சிறிதும் மயங்குதற்கிடனின்றி

"யரழ எனுமுன் றொற்றுமுன் ஙஞநம
இனத் துடனிணைந்தவை ஈரொற்றாகும் "என விளங்கச் சூத்திரம் வரைந்திருப்பார், மேலும் "ஞநமவ" என்னும் நூற்பா உரையுள் நச்சினார்க்கினியர் உதாரணம் இக்காலத்திறந்தன என்று கூறியுள்ளவிடத்து

அவரை மறுத்துக் கூறுமிவர் ஈண்டுச் செம்பாதிக்கும் மேல் உதாரணங்காட்டாமல் விடுத்து உதாரணம் வந்தவழிக் கண்டு கொள்க எனக் கூறுவது மாமியார் நியாயத்தை ஒத்துள்ளது. இவ்வாறு இவர் தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி உரையுள் நூற்கருத்துக்குமாறாக விளக்கங்கூறுமிடங்கள் பலவுள அலைபற்றி நேர்ந்துழிக் காட்டுவோம்.

அடுத்த நூற்பா :- அவற்றுள்

ரகார ழகாரங் குற்றொற்றாகா

இதன் பொருள் :- மேற்கூறிய யரழக்களுள் ரகரமும் ழகரமும் கசதப முதலியவற்றோடு இணைந்து ஈறொற்றாய் நிற்குங்கால் தனிக்குற்றெழுத்தைச் சார்ந்து நிற்கமாட்டா, என்பதாம்.

எனவே இவை நெட்டெழுத்தைச் சார்ந்து நிற்கும் என்பதும் யகரமாயின் தனிக்குற்றெழுத்தையும் நெட்டெழுத்தையும் சார்ந்து நிற்கும் என்பதும் பெறப்படும்.

எ.டு :- மேலே காட்டப்பெற்றன. யகரம் குற்றெழுத்தைச் சார்ந்தது நிற்றற்கு உதாரணம் :- துய்க்க—பொய்ச்சூள்—நெய்த்தோர்—துய்ப்போர்—அய்ங்கனை—அய்ஞ்சுனை—உய்ந்தான் மொய்ம்பன் எனவரும் இவற்றுள் போலி எழுத்தோடு நிற்கும் அய்ங்கணை—அய்ஞ்சுணை என்பவை பண்புத்தொகைகள் ஐந்தாகிய அம்பு—ஐந்தாகிய சுவை என்பவை பொருள்.

இனி நிகர்க்கும்—கவர்ச்சி—உவவர்த்தல்—துவர்ப்பு—பகர்ந்ததார் எனவும் முகிழ்க்கும்—புகழ்ச்சி—நிகழ்த்தும்—கவிழ்ப்பார் திகழ்ந்தார் எனவும் ரகரழகரங்கள் குறிலைச் சார்ந்து வருதலின் ஆகா என்றது பொருந்துமா றென்னை யெனின், இவை இணைக்குறிலாகலின் ஓசை வகையா (மாத்திரையா)ன் நெட்டெழுத்து இயல்பின வாகலின் பொருந்து மென்க, ஆசிரியர் இதனை

குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்
தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத் தியல

என விதந்து கூறுமாற்றான் அறியலாம்.

மற்று "ரகாரழகாரந் தனிக் குற்றொற்றாகா" எனச் சூத்திரம் செய்திருப்பின் தொடர்மொழிக்கண் வரும் என்பதுதானே பெறப்படுமாகலின் அங்ஙனம் கூறாமல் "குறுமையும் நெடுமையும்" என மற்றொரு நூற்பாக கூறியதனாற் பயன் என்னை எனின்? கூறுதும் :

மொழி மரபிற் கூறும் இலக்கணங்கள் பின்னர் வரும் புணர் மொழிச் செய்கைகட்குக் கருவியாகலின் ஆண்டு பயன்படுதல் வேண்டி ஈண்டு எதிரது போற்றிக் கூறப்பட்டதென்க அஃதாவது தொகை மரபின்கண்.

நெடிய தன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்
குறிய தன் முன்னர்த் தன்னுருபு இரட்டலும்
அறியத் தோன்றிய நெறியியல் என்ப'' (எழு—தொக—18)

என்னும் விதி, கோல்+தீது=கோறீது—கோல்+நன்று=கோனன்று வேள்+தீயன்=வேடீயன்—வேள்+நல்லன்=வேணல்லன் என வரும் நெட்டெழுத்தின் பின்வரும் ஒற்றுகட்கேயன்றி

கனல்+தீது=கனறீது புனல்+நன்று=புனனன்று
துகள்+தீது=துகடீது—துகள்+நன்று=துகணன்று

எனவும்,தோன்றல்+தீயன்=தோன்றறீயன்=தோன்றல்+நல்லன் தோன்றனல்லன் எனவும் இரண்டு முதலாகத் தொடர்ந்து நிற்கும் குற்றெழுத்துக்களுக்கும் எய்துலின்—அவிவற்றின் இயல்பினை நன்கு ஓர்ந்து தனிக்குறில் தவிரப் பிறவாறு தொடர்ந்து வருவனவற்றை அவ்விதியான் எய்துதற்பொருட்டுத் தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத்தியல என ஓதினார், ஆசிரியர் என்க.

ஆசிரியர்ஈண்டு "நெட்டெழுத்தா'' மென ஓதாது புணர்மொழிகளிலும் மொழி யாக்கங்களிலும் அவை ஓசைவகையகன் நெட்டெழுத்தின் இயல்பினைப் பெறுமென விளக்குவாராய் நெட்டெழுத்தியல என ஓதினார். இதனை ஓராத நச்சினார்க்கினியர் இந்நூற்பாவிற்கு உண்மையுரை வரைந்த இளம்பூரனாரை மறுத்து ஈண்டு எவ்வாற்றானும் இயைபிலலாததோர் உரையைக் கூறிச் சென்றார், அது நிற்க

"ரகாரழகாரங் குற்றொற்றாகா'' என்பதற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ரகார ழகாரங்கள் நெடிற்கீழ் ஒற்றாம் குறிற்கீழ் உயிர்மெய்யரம் என உரை கூறித் நகர்—தாழ்—கரு—மழு என எடுத்துக்காட்டும் வரைந்துள்ளனர். இவர்தம் கருத்து ரகார ழகாரங்கள் குறிற்கீழ்வந்து மொழியாக்கம் பெற்று நில்லாதென்பதே யாகும். அவ்வாறாயின் ஆசிரியர் அர் ஆர்ப எனவருஉம் மூன்றும் (சொல்—வினை—8) எனவும் இர் இர் மின் எனவருஉம் (சொல்—வினை—27) எனவும் தனிக்குறிலைச் சார்ந்து அர்—இர் என வருதலை ஓதினமையானும், அவை விகுதி இடைசொல்லாய் திணையும் பாலும் காட்டி நிற்கின்றமையானும் அவர்தம் கருத்து நிரம்பாதென்பது புலனாம்.

அன்றியும், 'அவற்றுள்' என இந்நூற்பா முதற்கண் சுட்டுவது வேண்டா கூறலாய் முடியும். அதனான் தனிமொழிக்கண் இடையே ஈரொற்று உடனியைந்து நிற்றற்கண் யகர ரகர ழகரங்களுள் யகரம் குறிற் பின்னரும் நெடிற் பின்னரும் வருமென்றும் ரகர ழகரங்கள் நெடிற் பின்னரும் இணைக்குறிலாய தொடர்ச்சியின் பின்னரும் வரும் என்றும் அமைப்பதே இவ் இரண்டு நூற்பாக்களின் கருத்தென்பது தெளிவாம்,

இனி அடுத்த நூற்பாவின் பொருளைப் பார்ப்போம்.

செய்யு ளிறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற்றாகும்

பொருள் :- செய்யுளுள் போலும் என்னும் மொழியின்யிறுதிக்கண் னகாரமும் மகாரமும் இணைந்து ஈரொற்றாய் நிற்கும்

ஆக மொழியிறுதியில் ஈரொற்று உடன் நிற்றல் செய்யுள் வழக்கென்று கூறியதனால் "யரழ என்னும் மூன்று முன் ஒற்ற" என்னும் நூற்பாவிற் கூறிய ஈரொற்றுக்கள் மொழியிடையே நிற்கும் என்பதும் அவை இருவகை வழக்கிற்கும் பொதுவென்பதும் பெறப்படும்.

போலிமொழி என்றது போலும் என்னும் உவம இடைச் சொல்லை. இதனைப் போலி என ஆசிரியர் வழங்குதலை

"ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும்" என்னும் நூற்பாவால் அறியலாம். இந்நூற்பாவால் அஃது அசைநிலை இடைச் சொல்லாகவும் வரும் என்று தெரியலாம்.

எ.டு :- திசையறி மீகானும் போன்ம் (பரிபாடல்)
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம் (முல்லைக்கலி–1)
பெருங்கல் லடாரும் போன்ம் எனவிரும்பி (புறம்–19) எனவரும்.

இந்நூற்பாவை செய்யுளுள் போலிமொழிவயின்யினிறுதியில் ஈறொற்றாகும் எனக்கொண்டு கூட்டாமல், செய்யுளினிறுதிக்கண் போலி மொழிவயின் என்றும் போலி மொழி இறுதி வயின் என்றும் கூட்டி உரையாளர்கள் இடர்ப்படுவர். எவ்வாறாயினும் செய்யும் என்னும் வாய்ப்பாட்டினதாகிய "போலும்" என்னும் சொல்லின்கண்ணே தான் இது நிகழும் என்பதில் அவர்கட்கு கருத்து மாறுபாடில்லை. எனினும், இடைக்காலத்தே

"மருளினும் எல்லாம் மருண்ம்" எனவும்
"கட்சியுட் காரி கலுழ்ம்" எனவும்
தோன்றி வழங்கலாயின.

இவற்றுள் மேலதனை அடக்கி நன்னூலார்

லளமெய் திரிந்த னணமுன் மகாரம்
கைந்தீ ரொற்றாம் செய்யுளுன்னே (நன்–120)

எனச் சூத்திரம் செய்தார். இவற்றைக் "கடிசொல்லில்லைக் காலத்துப்படினே" என்பதனாற் கொள்ளலாம், இவ்வாறு மொழி இடையிலும் இறுதியிலும் தனித்து ஈரொற்றாய் நிற்பனவும் மேல் வரும் உயிர்மெய்யின்கண் உள்ள ஒற்றம் முன்னர் நூன்மரபிற் கூறிய மயக்க விதிகளுக்கு முரணாமற் பொருந்தி நிற்றலைக் காணலாம்.

இதுகாறுங் கூறியவாற்றான் மூவின மெய்களும் மொழிக்கண் தம்முன் தொடர்தல் மட்டுமே மெய்ம்மயக்கம் என்பது ஆசிரியர் கருத்தென்பதும், நின்ற மெய்யொடு வருமெய் கூடி நிற்பதே மயக்கம் என்பதும், மயக்கம் ஒருமொழி தொகைமொழி தொடர்மொழி (புணர்மொழி) கட்கெல்லாம் பொதுவென்பதும், மயக்க விதி வேறு புணர்ச்சி விதி வேறு என்பதும் மயக்கவிதி கருவி, புணர்ச்சி விதி செய்கை என்பதும், மெய்ம் மயக்கத்தை இடைநிலை மயக்கம் என வரைதலும் வேற்றுநிலை, உடனிலை எனப் பிரித்தலும் ஆசிரியர் கருத்தன்று என்பதும், அங்ஙனம் இங்ஙனம் முதலாயவை பிரிப்பப் பிரியா ஒரு சொற்கள் என்பதும் ஙனம் என்பதை ஒரு சொல்லாகப் பிரித்தலும், அங்கனம், இங்கனம் எனத்திரித்தலும் ஒல்லா என்பதும், மொழி மரபிற் கூறிய ஈரொற்றுடனிலை ஒரு மொழிக்கண் இடையிலும் இறுதியிலும் ஈரொற்றுக்கள் இணைந்து தனித்து நிற்குமென மொழி யியல்பு கூறியதன்றி மயக்க விதி கூறியதன்று என்பதும் பிறவும் பெறப்படும்.

-----

5. தொல்காப்பியம் கூறும் எழுத்து வடிவம்

தமிழ்ப்பல்கலைக்கழகம் கருத்தரங்கம் 27–12–1982

பாயிரம் :-

தொல்காப்பியத்தை நினைக்குங்கால் பல்வேறு எண்ணங்கள் அறிஞர், ஆய்வாளர், உரையாளர் தம் கருத்துக்கள் என் சிந்தையை மொய்க்கின்றன.

தொல்காப்பியர் தமிழரா ஆரியரா? தென்னரா வடவரா? சமணரா பவுத்தரா வைதிகரா? ஒருவரா பலரா? கி.முவினரா–கி.பியினரா? இயற்பெயரா சிறப்புப் பெயரா? தொல்காப்பியம் முதனூலா வழிநூலா சார்புநூலா மொழிபெயர்ப்பு நூலா? ஒரே காலத்திற் செய்யப்பட்டதா காலந்தோறும் சேர்க்கப்பட்டதா? சிதைவுண்டா சிதைந்தவை செப்பனிடப்பட்டுள்ளவா? இடைச்செருகல் உண்டா? திருத்தப்பட்டுள்ளதா? ஒருவர் செய்ததா பலர் செய்ததா? தொகுப்பு நூலா? இப்படிப் பல ஆய்வுரைகள் ஐயவுரைகள். மேலும் தொல்காப்பியர் என ஒருவரில்லை அஃதொரு ஒழுக்கநூல் வரலாற்றுநூல் என்னும் விருப்புரைகளும் உள.

இவை பற்றி என் கருத்தாக யாதொன்றும் கூறாமல் எல்லோர்க்கும் ஒப்ப முடிந்த கருத்தை மட்டும் நினைவுபடுத்தி மேற்கூறுவேன். அதாவது

தொல்காப்பியம் ஏறக்குறைய 1610 நூற்பாக்களைக் கொண்ட 27 இயல்களும் மூன்றதிகாரமுமாக அமைந்துள்ளதொரு இயற்றமிழ் இலக்கணநூல் இன்றைக்குள்ள இலக்கண நூல்களில் தொன்மையானது; முதன்மையானது; முழுமையானது. பாட்டுந் தொகையுமாகிய சங்க இலக்கியங்கட்கு இலக்கண அளவையாக இருப்பது என்பதேயாகும்.

இனி இந்நூலைப்பற்றி எழுந்துள்ள உரைகளுள் இளம்பூரணர் அல்லது உரையாசிரியர் உரையே முந்தியது; நூல் முழுமைக்கும் உள்ளது. அதன்பின் சேனாவரையர், தெய்வச்சிலையார் பேராசிரியர் கல்லாடர் நச்சினார்க்கினியர் முதலானோர் உரைகள். இவை யாவும் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டிற்கு முந்தியவை – பிந்தியவற்றுள் குறிப்பிடத்தக்கவை சிவஞானமுனிவர் – நாவலர் சோமசுந்தரபாரதியார், பி.சா.சுப்பிரமணிய சாத்திரியார். வேங்கடராசுலுரெட்டியார் இவர்கள் சில பகுதிகட்குச் செய்தவுரைகள்.

ஆய்வுரை தொகுப்புரைகள் பலவுள. குறிப்பிடத்தக்கவை எசு. வையாபுரிப்பிள்ளை, இரா. இராகவையங்கார், மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளை முதலானோர் ஆய்வுரைகளும் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் அவர்கள் தொகுப்பாய்வுரைகளுமாம்.

இங்கே உரையாசிரியர் அல்லது இளம்பூரணர் உரைபற்றி எனது சிறிய கருத்தொன்றைத் தாழ் மையொடு தெரிவித்துக்கொள்கிறேன். அஃதாவது இற்றைக்குள்ள இளம்பூரணம் நக்கீரரின் களவியலுரையைப் போல–

கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பயிலப் பெற்று வந்து பதினோராம் நூற்றாண்டு இறுதியில் பதிவு செய்யப் பெற்றிருக்கலாம் என்பது என் கருத்து. சமண—பவுத்த சமயப் பேரறிஞர்களாலும் துறவியராலும் தென்னகத்தில் அமைக்கப்பெற்ற சங்கங்கள் சமய நோக்கொடு கல்வித் தொண்டுகள் ஆற்றி வந்துள்ளன. இவற்றினின்று தோன்றியவை, அவிநயனார், மகேசுரனார், வாய்ப்பியனார் முதலானோரின் யாப்பிலக்கண நூல்களும் – பிற நூல்களும் ஆம் – அவற்றுள் ஒரு கல்விக் கழகத்தின் தலைவராக அமர்ந்து தொல்காப்பிய உரைகண்டவர் இளம்பூரணர், அவர் உரையே வழிவழியாகப் பயிலப் பெற்று வந்திருத்தல் வேண்டும். இக்கருத்து அவ்வுரையுள் காணப்பெறும் சில தடையங்களாலும் பின் வந்த உரையாளர்களின் கூற்றுக்களாலும் தோன்றியதே தவிர வரன்முறையாக ஆய்ந்து முடிவு செய்யப்பட்டதன்று. இம்முறையில் ஆராயின் பல உண்மைகள் கிட்டும் என்பது என் கருத்து.

இனி, தொல்காப்பியத்தை முதனூலாகக் கொண்டு பின் எழுந்த நன்னூல், நேமிநாதம், நம்பியகப்பொருள் விளக்கம் யாப்பருங்கலம் முதலான நூல்களும் புடைநூலாக எழுந்த வீரசோழியமும் பிறவும் தமிழ்மொழி இயல்பும் தொல்காப்பிய மரபும் ஓர்ந்து செய்யப்பட்டவையல்ல என்பது என் கருத்து உரைகளும் ஐம்பது விழுக்காட்டிற்குக் குறையாமல் அவ்வகையைச் சார்ந்தனவே. இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த ஆய்வுரைகட்கும் இது பொருந்தும்.

எனவே தமிழ் மரபொடு அறிவியலுக்குப் பொருந்தத் தொல்காப்பியத்தின் கருத்தைத் தெரிந்துணர அவாவி முப்பது ஆண்டுகளாக யான் கண்டவற்றுள் எழுத்திலக்கணத்துள் எழுத்துவடிவம் பற்றிய ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற முற்படுகின்றேன்.

நோக்குரை :–

எழுத்ததிகாரத்திற்கு (மொழியியலார் ஆய்வுரைகள் நீங்க) இளம்பூரணம் முதல் இதுகாறும் வந்துள்ள உரைக்கோட்பாடுகள் கருத்து முரண்பாடுகள் ஒருபுறமிருக்கப் பாடத்திரிபுகளும், ஏடெழுதுவோரால் நேர்ந்திருக்கலாம் என்னும் பிழைகளும் நூலாசிரியர் கருத்தையே திசை மாறச் செய்துள்ளன. அதனான் ஆங்காங்கே இது பற்றி ஆய்ந்துரைப்பதை மேற்கொள்ளாமல் நூல் முழுமைக்கும் ஒரு காண்டிகை உரை எழுதும் கடப்பாட்டிற்காளானேன்.

திரிபுற்ற பாடமாக யான் கருதுபவற்றுள் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றேன். விளக்கம் வேண்டின் பின்னர்ப் பணிவோடு தெரிவிப்பேன்.

புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருவுருவாகி அகரமோ டுயிர்த்தலும் (நூன்மரபு – 17)
மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் (நூன்மரபு – 15)
"எகர ஒகரத்தியற்கையும் அற்றே" (நூன்–16)
"ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும்" (மொழி–6)
"வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்"
வேற்றுமையல் வழிப் புணர்மொழி நிலையும்
பெயருந்தொழிலும் பிரிந்தொருங்க இசைப்ப -----

உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும் (புண–38)
ஔ எனவரூஉம் உயிரிறு சொல்லும்
ஞநமவ என்னும் புள்ளியிறுதியும் (தொகை–10)
வாழியவென்னும் சேயவென் கிளவி (உயிர்மய–9)
வகாரமிசையும் மகாரங் குறுகும் (புள்ளி–35)
மகன் வினை கிளப்பின் முதனிலையியற்றே (புள்ளி–64)
நூறென் கிளவி ஒன்று முதலொன்பாற்கு
ஈறுசினை ஒழிய இனவொற்று மிகுமே (கு.உ.புண–) என்பன

இனி இயலுக்கு ஒவ்வாத, அதிகாரத்திற்கு ஒவ்வாத உரை விளக்கங்களும் உள, இவையாவும் தனித்தனித் தலைப்பிற் கூற வேண்டியவை. ஈண்டு இடைப்பிற வரலாக யான் கூறியவற்றைப் பொறுத்தருள வேண்டிப் பொருளுரையை மேற்கொள்கின்றேன்.

பொருளுரை :-

மொழிஎன்பது உயர்திணையாய மக்கள் தம் கருத்தை உணர்த்த ஒலிகளால் அமைத்துக் கொண்ட கருவியேயாம். கருத்துக்கள் உருவம் அருவம் அருஉருவமாகிய பொருளை இடமாகக் கொண்டு வினைபயன் மெய் உரு முதலியவை பற்றி எழுபவை. அவற்றை ஒலிகளால் சுட்டி உணர்த்துங்கால் அவற்றின் ஒரு கூற்றினை வரைந்துணர்த்தும் ஒலி அல்லது ஒலிகளே சொல் எனப்படுகின்றது. எடுத்துக்காட்டாக 'ஆ' என்பது ஒரொலிச் சொல். ஆண், கா என்பவை ஈரொலி, ஆணி மூவொலி, காணி நான்கொலி, காணின் ஐந்தொலி, காணலை ஆறொலி, ஏனையவும் இவ்வாறே.

இவ்வாறு ஒரு சொல்லை வரையறுத்துணர்த்தும் ஒலிகள் ஒரே ஒலியின் இடைமாற்றங்களா? தனித்தனி ஒலிகளா? இவற்றை நுணுகி ஆராய்ந்து கூறுவதே எழுத்தின் வரையறை இலக்கணம். இதனை வியக்கத்தக்க முறையில் கூறுகின்றது தொல்காப்பியம்.

கருத்துக்களைச் செவிப்புலனாக்கும் சொல் ஒவ்வொன்றும் உணர்வை அடிப்படையாகக் கொண்டது. ஆதலின் வளியொடு கூடி உள்ளிருந்து புறப்படும் நாதம் கண்டத்தினின்றும் வெளிப்படுத்தும் ஓசை ஒன்றேயாயினும் அதனை வெளிப்படுத்துங்கால் அதற்குக் கொடுக்கும் அடர்த்தியும் தளர்த்தியும் உயர்ச்சியும் தாழ்ச்சியும் கால அளவும் நாவும் வாயிதழ்களும் எய்தும் கோணமும் தொழிற்பாடும் வெவ்வேறு இசை ஒலிகளாகச் செவிப்புலனாகின்றன. இதனை,

"உந்திமுதலா முந்துவளி தோன்றி

உறுப்புற்றமையை -------- சொல்லுங்காலை
வேறுவேறியல" எனக் கூறுகிறது தொல்காப்பியம்.

உயிர்எழுத்து :-

இவ்வாறு வெளிப்படுங்கால் ஒருமுறை எழும் ஒரு முயற்சியில் ஓர் உருவமுள்ள ஓரோசையே பிறக்கும். வேறுபடுத்தவேண்டின் அம்முயற்சியை நிறுத்தி வாயுறுப்புக்களின் நிலைகளை மாற்றி அடுத்த முயற்சி செய்தல் வேண்டும். இவ்வாறு மாறி மாறி எழும் முயற்சியானும் வாயுறுப்புக்களின் கோணங்காளனும் உயிர்ப்பிசைகள் உயிர்எழுத்தாக அமைகின்றன என்பதைத் தொல்காப்பியம்.

"பன்னீருயிரும் தம்நிலை திரியா
மிடற்றுப்பிறந்த வளியின் இசைக்கும்" எனவும்
அவற்றுள், அ ஆ ஆயிரண்டங் காந்தியலும் எனவும்
"இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்
அப்பாலைந்தும் அவற்றோரன்ன
அவைதாம்
அண்பல் முதல் நா விளிம்புறலுடைய" எனவும்
"உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்
அப்பாலைந்தும் இதழ் குவிந்தியலும்" எனவும்
"தத்தம் திரிபே சிறிய என்ப" எனவும் கூறுகின்றது.

இவற்றால் அ ஆ முதலியவை மாத்திரை யளவானன்றிப் பிறப்பிக்கும் முயற்சி வேறுபாட்டினாலும் வேறு வேறு எழுத்தாக ஆகின்றன என்பதைத் தெளிவுபடுத்துகிறது தொல்காப்பியம்.

பிறப்பு முயற்சியானன்றி மாத்திரையளவையான் மட்டும் எழுத்து வேறுபடுதலில்லை என்பதனை

"நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய
கட்டி எழுஉதல் என்மனார் புலவர்" என்பதனால்

உய்த்துணரவைக்கின்றது.

இம்முயற்சி வகையினால் தமிழ்மொழிக்கன் பன்னிரண்டு உயிர் எழுத்துக்கள் அமைந்துள்ளன. அவற்றுள் முயற்சி ஒன்றாகவும் கோணம் இரண்டாகவும் அமைந்தவை ஐ – ஔ என்னும் இரண்டுமே. அதனான் அவற்றிற்கு வேறு இரண்டு இரண்டு உயிர்ப்பிசைகள் போலியாக வருகின்றன. என்பதை,

அகரஇகரம் ஐகாரமாகும் என்றும்
அகரஉகரம் ஔகாரமாகும் என்றும்

கூறுகின்றது. இவை (ஐ–ஔ) பிற ஒலிகளொடு இயையுங்கால் முற்கூறு அகரஓசையாகவும் பிற்கூறு முறையே இகர உகர ஓசையாகவும் நிற்கும் என்பதை

"ஐ ஔ என்னும் ஆயிரெழுத்திற்கு
இகர உதரம் இசை நிறைவாகும்" என்பதனாலும்

புணர்ச்சி விதிகள் கூறும் முறையாலும் புலப்படுத்துகின்றது.

மற்றும் இகரஉயிரும் யகரமெய்யும் ஒலி ஒற்றுமை உடைய வாகலின் சொல்லிறுதிக்கண் ஒன்றற்கொன்று மாற்றாக வரும். இதனை

இகரயகரம் இறுதி விரவும் எனக் கூறும், அதனான்
அகரத்திம்பர் யகரப்புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும், என்றும் அவ்வழி அவை

தமக்குரிய ஒன்றரை மாத்திரையிற் சுருங்கி ஒரு மாத்திரையளவாய் நிற்றலும் உண்டு என்றும் கூறுகிறது. இதனை "ஓரளபாகும் இடனுமாருண்டே தேருங்காலை மொழி வயினான எனப்புலப்படுத்துகின்றது.

இவ்உயிர்ப் பிசைகள் நுரையீரலின்றும் வெளிப்படும் மூச்சுக்காற்று, குரல்வளையில் உள்ள ஒலியூக்கிகளால் வெளிப்பட்டுச் செவிப்புலனாகின்றன

என்பது மொழியியலார் கொள்கை. ஓசை என்பது ஆகாய பூதத்தின் தன் மாத்திரையாதலின் நாதம் உந்தியில் தோன்றி மூச்சுக் காற்றொடு கலந்து வளியிசையாய் மாறித் தலையிலும் மிடற்றிலும் நெஞ்சிலும் நிலைபெற்று வெளிப்படும் என்கின்றது தொல்காப்பியம். இதனை

"உந்திமுதலா முந்துவளி தோன்றித்
தலையிலும் மிடற்றுலும் நெஞ்சிலும் நிலைஇ"
"எழுந்து புறத்திசைக்கும் மெய்தெரிவளியிசை"

என்பவற்றால் அறியலாம் (வளி–ஓசைக்காற்று)

உயிரைக் கருவிகளால் காண இயலாமை பற்றி அதன் உண்மையை மறுப்பதற்கில்லை – வளியிசை – உந்தி – தலை என்பவை பற்றி இன்றைய மொழியியலார்க்குக் கருத்து வேறுபாடுண்டு. காலம் தொல்காப்பிய மெய்ம்மையைப்புலப்படுத்தும் என்பது என் நம்புகை.

மெய்யெழுத்தும் – உயிர்மெய்யெழுத்தும் :–

உயிர்ப்பிசைகள் ஒவ்வொன்றும் வாயுறுப்புக்களால் தடையின்றி வெளிவரரின்அவை உயிர்எழுத்துக்களாதல் வெளிப்படை. அவை அவற்றால் தடையுறும்போது தடைப்பட்டு அத்தடை நீங்கியபின் தடைப்பட்ட இடத்தினின்று வெளிவரும் உயிர்ப்பிசைகள் தம் அளவில் திரியாமல் இசையில் திரிபுற்று ஒலிக்கும். அவ்வாறு தடைப்படுத்தும் இடங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரொலியமைப்பினை உடையனவாக உள. தடைப்படுத்தும் நாவும் இதழும் அண்ணத் தொடும் பல்லொடுங் கூடி உருக்கொள்ளுகின்ற நிலையே மெய்யின் வடிவாகும் என்கின்றது தொல்காப்பியம்.

இதனைப் "புள்ளியிலவா எல்லாமெய்யும்
உருவுருவாகி" (அகரமொடு உயிர்த்தலும்)

என்பதனாற் புலப்படுத்துகிறது. இவ்வாறு மெய்வடிவு கொள்வதைப் பிறப்பியலில் பதினொரு சூத்திரங்களால் விளக்குகின்றது. அவையாவன :–

"ககாரஙகாரம் முதல்நா அண்ணம்" என்பது முதலாக
அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
"கண்ணுற்றடைய யகாரம் பிறக்கும்" என்பது வரை

உள்ளனவாம். மகரக் குறுக்கத்தின் வடிவத்தை ஒலிப்பொடு கூட்டிக் கூற வேண்டிய நிலை ஏற்பட்டமையின் அதனை

"உட்பெறுபுள்ளி உருவாகும்மே" என நூன்மரபின் கண் கூறியது.

இங்ஙனம் உருக்கொண்ட மெய், உயிர்ப்பிசையின் துணையாலன்றி வெளிப்படுதல் இயையாமையின் அகரம் முதலாய பன்னிரண்டு உயிர்ப்பிசைகளையும் துணைக்கொண்டு வெளிவரும் என்றும், அந்நிலையில் அவை உயிர்மெய் (உயிர்க்கும் மெய்) எனப் பெயர்பெறும் என்றும் துணையாக ஒன்றுபட்டிசைக்கும் உயிர்ப்பிசைகள் அவ்வம்மெய்களின் பிறப்பிடத்தையே தமக்கு இடமாகக் கொண்டு பிறக்கும் என்றும் தெளிவுபடுத்துகிறது. இவற்றை—

புள்ளியிலவா எல்லாமெய்யும்
உருவுருவாகி அகரமொடு யிர்த்தலும்
ஏனை உயிரொ டுருவுதிரிந்துயிர்த்தலும்
ஆயீரியல உயிர்த்தலாறே என்பதனாலும்
"மெய்யின்வழியது உயிர்தோன்றும் நிலையே"

என்பதனாலும் புலப்படுத்துகின்றது.

இதனை ஒருவாற்றான் உணர்ந்த நச்சினார்க்கினியர் "மெய்பதினெட்டினையும் இயக்கித் தான் அருவாய் வடிவின்றி நிற்றலின் உயிராயிற்று. இவை மெய்க்கு உயிராய் நின்று மெய்களை இயக்குமேல் உயிர் எனவேறோர் எழுத்தின்றாம் பிறவெனின் மெய்யின் நிற்கும் உயிரும் தனியே நிற்கும் உயிரும் வேறென உணர்க" என நூன் மரபு எட்டாஞ் சூத்திர உரையில் கூறுவார். அவர் மதம் வேறாயினும் சில உண்மைகள் அவர்க்குப்புலப்பட்டுள்ளமை அவர் உரையுள் ஆங்காங்குக் காணக் கிடைக்கின்றன. இனி இது நிற்க.

ஓர் உயிர்ப்பிசை தோன்றி முடிவுறாமல் இசைத்துக் கொண்டிருக்கும் நிலையில் மெய் உருக்கொள்ளுமாயின் அவ்உயிர்ப்பிசையின் சார்பால் மெய்யொலி செவிப்புலனாகும். இங்ஙனம் ஒலிப்பொடு நிற்றல் மெய்யின் இலக்கணம் என்கின்றது தொல்காப்பியம். இதனை

மெய்யின் இயற்கை புள்ளியொடும் நிலையல் என்று கூறுவதனால் அறியலாம். மெய்பதினெட்டனுள் கசடதபறங என்னும் எழுமெய்கள் நன்கு தடையுறுதலான் அவை இரண்டு உயிர்ப்பிசைகளுக்கு இடையே நின்றன்றிச் செவிப்புலனாகா. ஏனைய ஞணநமன யரலவழள என்னும் பதினொன்றும் ஒருயிர்ப்பிசையின்பின் இறுதியாக நின்று நன்கு செவிப்புலனாம். இந்நுண்மையைத் தொல்காப்பியம்

மெய்யீறெல்லாம் புள்ளியொடுநிலையல் என்பதனான் உய்த்துணர வைக்கிறது.

உயிர்ப்பிசையானது முன்னோ பின்னோ வந்தாலன்றி மெய் இயங்காது என்பதனை

மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் என்று தெளிவுபடுத்துகிறது. இவ் அகரம் சாரியை; உயிர் எழுத்தன்று.

சார்பெழுத்து :-

தடையற்ற உயிர்ப்பிசையாகாமல் மெய்யினைச் சார்ந்து பிறத்தலான் குற்றியலிகரமும் குற்றியலுகரமும்; உயிர்ப்பிசையாகத் தோன்றி மெய்யின் கண் சென்று முடிதலான் ஆய்தமும். நேரே உயிருமாகாமல்–மெய்யுமாகாமல் அவ்விரண்டனையும் சார்ந்து அரை மாத்திரையளவே ஒலிப்புப் பெறுதலின் சார்பெழுத்தாகின்றன என்பதைச்

சார்ந்து வரல் மரபின் மூன்று (நூன்–1) எனவும்

சார்ந்து வரினல்லது தமக்கியல் பிலவெனத்

தேர்ந்துவெளிப்படுத்த ஏனை மூன்றும் (பிறப்–19) என்றும்

கூறி, அவை சார்ந்து வருமாற்றைப் பின்வருமாறு கூறுகின்றது.

குற்றியலிகரம் :

யாவென்சினைமிசை மகரம் ஊர்ந்து நிற்றல் வேண்டுமென்றும் யகரம் வருவழி இகரம் குறுகும் உகரக் கிளவிதுவரத் தோன்றாது என்றும்,

குற்றியலுகரம் :

நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழி ஈறீறும் வல்லாறூர்ந்து நிற்றல் வேண்டும் என்றும்

ஆய்தம் :

குறியதன் முன்னர் உரிரொடுபுணர்ந்த வல்லாறன் மிசைத்தே என்றும் கூறித் தெளிவுபடுத்துகின்றது. (உயிரொடுபுணர்ந்த என்றது உயிர்ப்பிசையொடு கூடி நின்ற என்றவாறு) இவை முழு மாத்திரை பெற்று இசைப்பின் உயிர் மெய்யும்–உயிருமாய் மாறிவிடும் என்பதையும் உய்த்துணரவைக்கிறது. அதனான் மாத்திரையளவிற்கு

"மெய்யின் அளபே அரையெனமொழிப" என்பதனோடு மாட்டெறிந்து "அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே" என்றும்புள்ளி பெறுதற்கு. "மெய்யின் இயற்கை புள்ளியொடும் நிலையல்" என்பதனொடு மாட்டெறிந்து

"இகரஉகரத்தியற்கையும் அற்றே" என்றும் கூறுகின்றது (எகர ஒகரத் தியற்கையு மற்றே என்பது திரிந்து விட்ட பாடம்)

வரிவடிவம் :

எழுத்துக்களின் ஒலிவடிவங்களுக்குக் கூறிய இலக்கண முறைமை வரிவடிவங்களுக்கும் பொருந்துமாறு நிற்கின்றமை தவிரத் தொல்காப்பியம் வரிவடிவிற்கென விதந்து எந்த ஒரு எழுத்திற்கும் இலக்கணம் கூறவில்லை என்பது என் கருத்து. வரிவடிவம் கூற முற்படின் அது கடைபோகாதது மட்டுமன்றிக் காலத்தால் நில்லாததுமாகிவிடும்.

தொல்காப்பியத்துள் வரிவடிவம் பற்றிய சூத்திரங்களாக, மரபாகக் கருதப்படுபவை வருமாறு

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்"
எகர ஒகரத்தியற் கையுமற்றே
உட்பெறுபுள்ளி உருவாகும்மே
ஆய்தம் என்ற முப்பாற் புள்ளி என்பனவும்
புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருவுருவாகி அகரமொடுயிர்த்தலும்
ஏனை உயிரொடு உருவு திரிந்துயிர்த்தலும்
ஆயீரியல உயிர்த்த லாறே" என்பதுமாகும்.

இலக்கணநூலின் நோக்கமும் பயனும் ஒருமொழி காலந்தொறும் வழங்குவோருடைய சோர்வு முதலியவற்றாலும் அயல்மொழிகளின் ஊடுருவல்களாலும் சிதைந்து விடாமல் காப்பதும் கடந்த காலச் சான்றோர்களின் கருத்துக்களைப் பிழையன்றி உணர்ந்து அம்மொழியை வளப்படுத்தத் துணைபுரிவதுமாகும்.

இறந்தகாலச் செய்திகளை உணரவும், நிகழ்காலச் செய்திகளை எதிர்காலத்திற்க உணர்த்தவும் ஒலியுருவங்கள் பயன்படா. வரிவடிவங்களே பயன்படும் என்பது யாவரும் அறிந்த ஒன்று. அதனான் ஒலிவடிவங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் நிலை வந்த போது ஒவ்வொரு மொழியாளரும் தாம் வழங்கும் ஒலி உருவங்களுக்கு வரிவடிவம் அமைத்துக் கொள்வது இன்றியமையாத இயல்பாகும்.

அவ்வரிவடிவங்கள் அவ்வக்காலங்களில் வாய்ந்த கருவிகளுக்கேற்ப அமைந்து காலந்தொறும் மரபு திரியாமல் செம்மையோடு வளர்ந்து வருவது இயற்கை.

தொல்காப்பியர் பல நூல்களைப் பயின்றிருக்கின்றார். அவர் காலத்தில் ஒரு வடிவம் வழக்கில் இருந்திருக்கும் என்பது உறுதி. அது பற்றி இன்றைக்குத் தெரிந்து கொள்வதற்கு இயலவில்லை. சங்க காலத்துவரிவடிவங்களும் கிட்டவில்லை.

இன்றைக்குக் கிடைத்துள்ள கல்வெட்டு செப்பேடுகளின் வரிவடிங்களை நோக்கினால் அவை காலந்தொறும் வேறுபட்டு வளர்ந்துள்ளமை புலனாகும். பனை ஓலை வரிவடிவங்கள் பெரிதும் மாறுபடாமல் அழகு பெற்று வளர்ந்துள்ளமையும் அச்சுப்பொறி வந்த காலத்தில் ஓரளவு மாற்றத்தொடு இன்றைக்கும் வழங்கி வருதலையும் காணலாம்.

'ஆ' என ஓர் ஒலியை ஒலிக்கச் சொன்னால் மக்கள் அனைவரும் ஒரே இயல்பாக ஒலிப்பார் – எழுதச் சொன்னால் மொழிதொறும் வேறுபடுதலேயன்றி ஒரே மொழிக்குள்ளும் வேறுபடும். அதனான் வரி வடிவு கூறுவதனாற் பயனின்மை அறியலாம்.

மற்று தொல்காப்பியம் முதனூலன்று தொல்காப்பியர் எழுத்தைப் பற்றித் தொடங்கும் பொழுதே "எழுத்தெனப்படுப அகரமுதல் னகர இறுவாய் முப்பஃதென்ப" என்றே தொடங்குகின்றார். அதனான் எழுத்து நெடுங் கணக்கும் வரிவடிவும் செம்மையாக வழக்கில் இருந்தமை தெரியலாம். இலக்கண நூலாசிரியர் பலர் செய்தவற்றை ஆராய்ந்து சுருக்கமாகத் தொகுத்து வரைந்ததே தொல்காப்பியர் செய்ததெனப் பாயிரங்கூறுகின்றது.

இந்நிலையில் அப்பேரறிஞர்களும் பயிலும் மாணவர்களும் உயிர்மெய்க்கும்–தனிமெய்க்கும் வேறுபாடறியாமலும் எகரஏகாரங்களுக்கும் ஒகர ஓகாரங்கட்கும் வேறுபாடறியாமலும் எழுதிவந்தனர் என்பது பொருந்துமாறில்லை. அங்ஙனம் எழுதிவந்த காலத்து வேறுபாட்டினை எப்படி உணர்ந்தனர் உணர்த்தினர்? இதற்கு இப்படி ஒரு விளக்கம் உண்டு. அஃதாவது

வடமொழியில் எகர ஒகரக்குற்றெழுத்துக்கள் இல்லை. தமிழ் மொழியில் உண்மையினால் அவற்றின் வேறுபாட்டினைச் சுட்ட வேண்டிற்று என்பது. அவ்வாறானால் ஏனையவற்றிற்கு வடமொழியில் உள்ள வரிவடிவமே தமிழிலும் மேற்கொள்ளப்பட்டதென்று ஆகுமன்றோ? அது நிற்க. 'ழறன' என்றும் மெய்யெழுத்துக்களும் வடமொழியில் இல்லை. அவற்றிற்கு வரிவடிவம் கூறவேண்டாமா? எனவே இவ்விளக்கம் பொருந்துமாறில்லை.

மற்று வரிவடிவே கூற முற்பட்டிருப்பின் மெய்யின் வடிவம் புள்ளியிட்டமைத்தல் என்றோ புள்ளியொடமைதல் மெய்யின் வடிவே என்றோ வடிவத்தைச் சுட்டிச் சூத்திரம் செய்திருப்பார் ஆசிரியர். அவ்வாறின்றி மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் என்று கூறுகின்றார். இயற்கை என்பதற்கு வடிவு என்றும் பொருள் உண்டா என்பதும் காணல் வேண்டும்.

உயிர் எழுத்துக்கட்கு மாத்திரையும் ஓசையியல்பும் ஒருங்கு கூறிய ஆசிரியர் மெய்யெழுத்திற்கு மாத்திரைமட்டும் கூறுவது நிறைவுடையதாகுமா? உயிரெழுத்தின் ஓசையை இசை என்று குறிப்பிட்டமைபோல மெய்யெழுத்தின் ஓசையைப் புள்ளி என்று கூறுவதாகக் கொள்ளலே ஏற்புடைத்தாகின்றது. ஒலிப்பினைப் புள்ளி என்று குறியீடு செய்தமைக்குக் காரணம் வரிவடிவிற்கும் அது பொருந்தி வரல் வேண்டுமென்பதற்காக எனக் கொள்ளல் வேண்டும்.

ஒலி எழுத்து ஒவ்வொன்றிற்கும் வரிவடிவம் உண்டு. 'எழுத்து' என்னும் குறியீடே அவ்விருதன்மையும் அமைந்துள்ளமை காட்டும். வரிவடிவுள் சிறு சிறு வேறுபாடும் ஒலி வேறுபாட்டினைக் காட்டும் ஆதலின் ஒலிப்பினைச் சுட்டாத வரிவடிவம் என்பதொன்றில்லை.

"நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய

கட்டி எழூஉக" என்னும்போது ஓசையைக் கூட்டி எழுப்புக என்பதோடு வரிவடிவில் அதற்குரிய அடையாளமும் செய்து கொள்க என்பது பெறப்பட்டதன்றோ? இன்றேல் "குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்

நெட்டெழுத்திம்பர் ஒத்தகுற்றெழுத்தே"

என்னும் சூத்திரம் நெட்டெழுத்திற்கும் நெட்டெழுத்தளபெடைக்கும் வரி வடிவ வேற்றுமை கூறுகின்றது என்று கூறவேண்டி வரும்.

வாயுறுப்புக்களால் வடிவமைந்த மெய்யெழுத்துக்கள் உயிர் ஓசையின்றி இயங்காமையின் மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் என்றார். ஆண்டு அகரம் ஒரு மாத்திரையளவினதாகலின் மெய்யின் அளபே அரை என்பதனை எண்ணி ஐயுறாமலும் ஒலிப்பில்லாதவை எங்ஙனம் எழுத்தாகும் என்னும் ஐயந்தோன்றாமலும் மெய்யினது தன்மை ஒலிப்பொடுநிற்றலாம் என்பதை விளக்க மெய்யின் இயற்கை புள்ளியொடும் நிலையல் எனப்பட்டது. ஒரு மாத்திரையளவினதாகிய சாரியை அகரம் இன்றி அரை மாத்திரை பெறுதலைச் சுட்டுவதே 'புள்ளி' என்னும் குறியீடு என்பது இதனாற் புலப்படும்.

சார்பெழுத்துக்களும் இவ்வாறே அரைமாத்திரை ஒலிப்புப் பெறுதலின் மெய்யெழுத்திலக்கணத்தொடு மாட்டெறிந்து கூறப்பட்டது. சார்பெழுத்துக்களை அறிமுகப்படுத்தும் போதே ஆய்தத்தை முப்பாற் புள்ளி என விளக்கியமையின் அதனை நீக்கி ஏனைய குற்றியலிகரத்தையும் குற்றியலுகரத்தையும் விதந்து

"இகர உகரத்தியற்கையுமற்றே" எனக் கூறினார் ஆசிரியர்.

இச்சூத்திரத்திற் கூறிய இகர உகரங்கள் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் எனக் கருதாமல் உயிர் வரிசையில் உள்ள இகர உகரமாக எண்ணி அவை புள்ளி பெறுதற்கு வாய்ப்பில்லையே என மயங்கி எகர ஒகரத்தியற்கையுமற்றே என இருக்கலாம் எனத் திருத்திக்கொண்டனர் போலும். இத்திருத்தம் உரையாசிரியர் காலத்திற்கும் முன்பே நிகழ்ந்திருக்கலாம்.

மற்று ஆய்தத்தைப் பிரித்து ஓதியதற்குக் காரணம் அவற்றைப் போல மெய்யினை ஊர்ந்தோ உயிரேற இடந்தந்தோ நில்லாமல் தனித் தன்மையுடையதாக இருப்பது மட்டுமன்றிச் தன்னளவிற் சுருங்குதலோ குற்றியலுகரம் போல ஒரோவழி மாத்திரை இழத்தலோ இல்லை. மேலும் அவை ஒலி வேறுபடுவதில்லை. ஆய்த ஒலி தனக்கு மேல் நின்ற உயிர்களுக்கு ஏற்ப மூவகையான ஒலியைப் பெறுகின்றது. அஃதாவது அகர இகர உகரங்களைச் சார்ந்து வருங்கால் அவ்வவ் ஒலிகளைப் பெறும். இதனை அஃஇஃ உஃ என ஒலித்துக் காணலாம் அதனான் ஆய்தம் என்ற முப்பாற்புள்ளி என ஆசிரியர் விளக்கினார்.

இதனான் மெய்யெழுத்துக்கள் தம் முன்னின்ற மெய்களை நோக்கி ஒலிமயங்குமாறு போல இதுவும் மயங்கும் என உய்த்துணரவைத்தார். இவ்ஒலிவடிவ இலக்கணத்தானே வரிவடிவ அமைதியையும் தன் சதுரப்பாட்டினால் தோன்ற வைத்தார்.

இவ்வாறே அரைமாத்திரை ஒலிப்புடைய மகரத்திற்கும் கால் மாத்திரை ஒலிப்புடைய மகரக் குறுக்கத்திற்கும் ஒலிப்பு முறையில் உள்ள வேறுபாட்டைச் சுட்டுவதே "உட்பெறுபுள்ளி உருவாகும்மே" என்னும் சூத்திரம். அதனை வரிவடிவிற்கும் ஒக்குமாறு கூறியுள்ளமை ஆசிரியரின் பெருந்திறலைக் காட்டும்.

இனித் தமிழ்மொழியைத் தவிர ஏனைய மேலை ஆரிய மொழிகளிலும் சமற்கிருதத்திலும் மெய்யெழுத்துக்கள் மொழிமுதற்கண் வரும் இரண்டு–மூன்று மெய்கள் இணைந்தும் வரும். காரணம், அம்மொழிகள் மெய்யினை ஒலிப்புடையதாக அமைத்துக் கொண்டுள்ளன. அஃதாவது உயிர்ப்பிசையை மெய்யின் முன்னோ பின்னோ தந்து ஒலித்து அவ் இசையை அதற்கு உரியதாக்கிக் கொண்டுள்ளன. அதனான் சமற்கிருதத்தில் மெய்யெழுத்திற்கு மாத்திரை ஒன்றரையாக உள்ளது.

தமிழ் நூலார் உயிரினது சார்பின்றி வேறெவ்வாற்றானும் மெய் ஒலிக்காதென்றும் மெய்ம்மையை ஓர்ந்து

"உயிர்மெய்யல்லன மொழிமுதலாகா" என விதித்த அறிவியல் நோக்கு வியக்கத்தக்கது.

ஒலிப்பின்றி உருக்கொண்டு நிற்கும் மெய்யின் கண் உயிர்ப்பிசை கூடி உயிர்மெய்யாய் வெளிப்படுதலின் உயிர்மெய் ஏன் ஒன்றரை மாத்திரையும் இரண்டரை மாத்திரையும் ஆகவில்லை என்னும் வினாவிற்கு இடமே இல்லை. உயிர் மெய்யைச் செவிப்புலனாக ஒலித்து இவ்வுண்மையைக் காணலாம்.

எனவே தொல்காப்பியம் கூறும் இலக்கணம் யாவும் ஒலிவடிவிற்கே என்பதும் ஒப்பக்கூறல் என்னும் உத்தி வகையான் அவ்இலக்கணமே வரிவடிவைச் செய்து கொள்ள ஏற்புடையதாக உள்ளதென்பதும் புலனாம். அறிஞர் உலகம் ஆய்ந்து ஆவன புரிய வேண்டி முடிக்கின்றேன். நன்றி. வணக்கம்.

-----

6. மெய்ம்மயக்கங்கள்

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி.
புதிய தமிழியல் எழுத்தியல் கருத்தரங்கு – அக்டோபர் 5–7, 1990

தமிழிலக்கண நெறிமுறைகளை வகுத்த பண்டைச் சான்றோர் பேச்சு நடையாகிய உலக வழக்கு இலக்கிய நடையாகிய செய்யுள் வழக்கு என்னும் இருவகையையும் நோக்கிச செய்யுள் வழக்கிற்கே தலைமை தந்துள்ளமை தொல்காப்பியப் பாயிரத்தாலும் நூலாலும் புலனாகின்றது.

பேச்சுவழக்கு அவ்வப்பொழுது தோன்றி அழிவது. செய்யுள் வழக்கு நிகழ்வு எதிர்வு ஆகியமுக் காலத்தும் நின்று நிகழ்வது. பேச்சுவழக்கு வட்டாரந்தொறும் வேறுபடும். எழுத்து வழக்குப் பெரும்பான்மையும் அங்ஙனம் வேறுபடுவதில்லை. பேச்சுவழக்கு உலகியல் நடைமுறையை அடிப்படையாகக் கொள்வது. செய்யுள் வழக்கு அறம் பொருள் இன்பம் வீடென்றும் ஆண்மைப் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு ஓசை நயமமைந்த பாக்களால் நிகழ்வது. பண்டை காலத்துக் கல்விப் பயிற்சிக்காக அமைந்த நூல்கள் யாவும்

யாதேனும் ஒருபாவகையைச் சார்ந்தே அமைந்துள்ளமை காணலாம். வசனம் என்னும் உரைநடை அவ்விலக்கிய இலக்கணங்களின் பொருளை எளிமைப்படுத்தி விளக்க எழுந்த வகையாகவே உள்ளது. அன்றிப் பிறமொழிநூல்களை மொழிபெயர்த்தமைத்தவையும் சமய தத்துவ நூல்களும் சிறுபான்மை உரைநடையில் அமைந்துள்ளன.

இனி அறக்கொடை முதலிய பற்றி எழுந்த கல்வெட்டுக்களும் செப்பேட்டுச் சாசனங்களும் பேச்சுவழக்குமிக்க உரைநடையில் அமைந்துள்ளமையும் அவற்றுள் மெய்க்கீர்த்திப் பகுதி செய்யுள் நடையில் அமைந்திருப்பதையும் காணலாம்.

பல்வகை இலக்கியப் படைப்புக்கள் உரைநடையில் எழுந்த காலம் பத்தொன்பதாவது நூற்றாண்டு என்பது யாவரும் அறிவர். இத்திருப்பம் மேலை நாட்டாரின் ஆட்சி அவர்தம் இலக்கியச் செல்வாக்கு. கல்விக் கூடங்களில் பயிற்றிய பல்வகைப் பாடநூல்கள் அரசியல் சமுதாயவியல் பற்றி எழுந்த பத்திரிகைகள் காரணமாக அமைந்துள்ளமை தேற்றம்.

பண்டைத்தமிழ் இலக்கண விதிமுறைகளை ஆராயுமிடத்து அவை எவ்வகை இலக்கியங்களை நோக்கி எவ்வகைக் குறிக்கோளுடன் அமைக்கப்பெற்றன எனத் தெளிதல் வேண்டும். தொல்காப்பியம் முதல் இடைக்காலப் பிற்காலத்தமிழ் இலக்கண நூல்கள் வரை யாவும் செய்யுள் வழக்கை நோக்கி அமைந்துள்ளமை காணலாம். அவ்இலக்கண நூல்களில் அயல்மொழி பற்றிய இலக்கணம் புறனடைகள் யாவும் ஆரியமொழி என்னும் வடமொழி பற்றியவையாகவே அமைந்துள்ளமை காணலாம். காரணம் வடமொழி பல துறையில் மேலாதிக்கம் பெற்றுக் கல்வித்துறையிலும் ஊடுருவியதேயாகும். மேலும் தமிழில் அயல்மொழிக் கலப்பு என்ற நிலையில் வடமொழி மட்டுமே தமில் நூலோரான் கொள்ளப்பட்டிருந்தமை தெளிவு.

19ஆம் நூற்றாண்டு முதலாக இன்றைவரை ஆட்சித்துறை நீதித்துறை கல்வித்துறை முதலியவற்றில் மேலாதிக்கங் கொண்டுள்ளமொழி ஆங்கிலமே. கல்வித்துறையில் ஆங்கிலேய அரசு வகுத்த நெறி முறைகளே பெரும்பான்மையும் இன்றளவும் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

இன்றைய இலக்கியப்படைப்புக்களை நோக்கின் பெரும்பாலானவை பத்திரிகை வாயிலாகத் தோன்றியுள்ளமையும் ஒவ்வொரு துறையிலும் பல பத்திரிகைகள் இயங்கி வருவதையும் காணலாம். சிறுகதை, புதினம், உரைப்பா

முதலிய கலை இலக்கியங்கள் பத்திரிகைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையே. கல்வித்துறை பாடநூல்கள் சில ஆய்வுக்கட்டுரை நூல்களைத் தவிர பெரும்பான்மையும் இதழ்கள் வாயிலாக வந்தவையேயாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழில் எவ்வளவு வடமொழிக்கலப்பு ஏற்பட்டுள்ளதோ அவ்வளவிற்கும் மேலாக ஒரு நூற்றாண்டில் தமிழில் ஆங்கில மொழிக் கலப்பு ஏற்பட்டுள்ளது. பேச்சு வழக்கில் இந்நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள மாற்றம் மிகப்பெரியதாகும்.

இவற்றையெல்லாம் நோக்கியே தமிழில் புதிய இலக்கண நெறிகளை வகுத்தல் வேண்டும். பேச்சுவழக்கில் குமரிமுதல் வடஆர்க்காடு வரையுள்ள பல்வேறு வட்டார வழக்குகளையும் காணுதல் வேண்டும்.

இன்றையநிலையில் தமிழ் வளர்ச்சி என்று நோக்குமிடத்துத் தமிழ் மரபை ஒட்டி ஆக்கம் பெற்றுள்ள சொற்களும், சொற்றொடர் அமைவுகளும் மிகச் சிலவே. பெரும்பான்மை மொழிபெயர்புச் சொற்களேயாம். அன்றிச் சிதைந்தும் சிதையாமலும் வழக்கிலும் நாளிதழ் திங்களிதழ் முதலியவற்றினும் பயின்று வரும் ஆங்கிலச் சொற்களுமேயாகும்.

தமிழில் வடமொழிக் கலப்பு எனக் காணுமிடத்துத் தொல்காப்பியம் செய்யுளிலக்கியத்துள் அறுவகைப் பெயர்களை மேற்கொள்ளும் முறைமைபற்றியே கூறுகின்றது என்பது புலனாகின்றது. உரைநடையில் தருக்கம் முதலிய மொழி பெயர்ப்புக்கள் வடமொழிச் சொற்களை ஆண்டு உள்ளவாறே எழுத்துப் பெயர்த்துக் கூறுவதனையும் காணலாம்.

இன்றைக்கு உலகிடைப் பல்வேறு மொழிகளில் வெளிவரும் கலை இலக்கியம். அறிவியற்சிந்தனைகள் யாவும் நமக்கு ஆங்கில மொழிவாயிலாக அறிமுகமாகின்றன. எடுத்துக்காட்டாக ஈபுருமொழியில் தோன்றிய பைபிள் விவிலியம் என்னும் பேரால் ஆங்கிலவாயிலாக மொழி பெயர்க்கப் பட்டுள்ளமையையும் பெயர்சொற்கள் தமிழ் ஒலியமைப்பிற்கேற்பத் திரிக்கப்பட்டுள்ளமையையும் கருதலாம். அம்முறையிலேயே இன்றைக்கு மெய்ம்மயக்கம் பற்றிய கோட்பாடுகளை ஆராய்வது நிலைபேறான பயனைத்தரும்.

மெய்ம்மயக்கம் : மெய்ம்மயக்கமாவது ஒருமொழி தொடர்மொழி ஆக்கத்தின்கன் புள்ளிமெய்களும் உயர்மெய்களும் ஒன்றன்பின் ஒன்றுதொடரும் நிலைமையைப் பற்றியதாகும். தொடர்மொழி ஆக்கத்தின்கண் சொல்லும் குறித்துவரு கிளவியும் புணருமிடத்து நிகழும் திரிபுகளும் மெய்ம்மயக்க விதிகட்கு உட்பட்டனவேயாகும். மெய்ம்மயக்கக் கோட்பாடு நால்வகைச் சொற்களானும் படைக்கப்பெறும் வெண்பா முதலாகிய செய்யுளிலக்கியங்கள் அவற்றிற்கு ஓதப் பெறும் செப்பல் அகவல் முதலாகிய பாவோசைகள் விட்டிசையாமல் அமைதல் வேண்டுமென்பது பற்றியதேயாகும்.

தொல்காப்பியத்தில் காணும் மெய்ம்மயக்கம் பற்றிய விதிகள் இருமை நோக்குடையவாய் இருத்தலைக் காணலாம். முதலாவது எழுத்தொலிமயக்கம் இரண்டாவது அவை இணைந்து வரும் முறைமை. உரையாசிரியன்மாரும் இடைக்கால இலக்கண நூலாசிரியன் மாரும் இன்றைய ஆய்வாளர் உட்பட அனைவரும் இரண்டாவது நிலையைப் பற்றியதாக மட்டுமே கொண்டுள்ளனர். மெய்ம்மயக்கத்தை ஒலியமைப்பு ஒலித்திரிபுகளைக் கூறும் நூான்மரபில் அமைந்துள்ளமை நோக்கின் ஒலித்திரிபே அதன் தலையாய நோக்கென்பது புலப்படும். இணைந்து வரும்நிலை மொழிமரபிற் கூறப்படுவதையும் நோக்குதல் வேண்டும். மேலும் மெய்ம்மயக்கம் ஒருமொழி புணர்மொழிகட்குப் பொதுவெனக் கொள்ளாமல் நச்சினார்கினியர் போன்றோர் தனிமொழிக்கே கொண்டு இடர்ப்படுவர்.

மற்றும் புள்ளிமெய்களுக்குப் பின்வரும் புள்ளிமெய்–உயிர் மெய்ம்மயக்கம் பற்றிக் கூறிய தொல்காப்பியர் உயிர்க்குப்பின் வரும் உயிர்மெய், உயிர் மெய்க்குப் பின்வரும் உயிர்மெய்ம்மயக்கம் பற்றிக் கூறாமல் சென்றார் காரணம் அம்மயக்கத்தான் நால்வகைச் செய்யுளோசைகட்குயாதொருதிரிபும் நேராமையேயாகும். பின்வந்த இலக்கணநூலாகும் தொல்காப்பியம் கூறிய விதிகளையே கூறிச்சென்றனர். அம்முறையிற் பதினெட்டுப்புள்ளிமெய்களின் பின்வரும் உயிர் மெய்களின் மயக்கவிதிகள் பின்வருமாறு அமைந்துள்ளன. புள்ளிமெய்களின் பின் உயிர்மெய்ம்மயக்கம் :

	தம்மொடுதாம்	தம்மொடுபிற	ஒற்றாக மயங்குவன
க்	க		
ங்	ங	க	
ச்	ச		

ஞ்	ஞ	ச ய	
ட்	ட	க ச ப	
ண்	ண	ட க ச ஞ	
		ப ம ய வ	
த்	த		
ந்	ந	த ய	
ப்	ப		
ம்	ம	பயவ	
ய்	ய	கசதபஞநமவ	க்ச்த்ப்ங்ஞ்ந்ம்
ர்		கசதபஞநமவய	க்ச்த்ப்ங்ஞ்ந்ம்
ல்	ல	கசபவய	
வ்	வ	ய	
ழ்		கசதபஞநமவய	க்ச்த்ப்ங்ஞ்ந்ம்
ள்	ள	கசபவய	
ற்	ற	கசப	
ன்	ன	றகசஞபமயவ	

பதினெட்டுப்புள்ளிமெய்களும் தனிமொழியிடையிலும் புணர்மொழி யிடையிலும் வரும் அவற்றுள் யரழ என்னும் மூன்று புள்ளிமெய்கள் மட்டும் கசதபஙஞநம என்னும் எட்டுப்புள்ளி மெய்களொடு இணைந்துவரும் பிறயாவும் உயிர்மெய்யெழுத்தொடு இணைந்துவரும். கசதப என்னும் நான்கும் பிற உயிர்மெய்யெழுத்தொடு இணைந்துவாரா. ரழ என்னும் இரண்டும் தம்மொடுதாமே இணைந்துவாரா பிற உயிர்மெய்களொடு மட்டுமே இணைந்துவரும். மேலும் ரழ என்பவை குற்றெழுத்தைச் சார்ந்து நில்லா என விதிகள் செய்யப்பட்டுள்ளன.

மொழிமுதற்கண் கசதபஞநமவய என்னும் ஒன்பது உயிர்மெய்கள் மட்டுமே வரும் இறுதிக்கண் ஞணநமனய ரலவழள என்னும் பதினொரு புள்ளிமெய்கள் மட்டுமே வரும் என வரையறுத்துள்ளமைக்குக் காரணம் இம்மெய்ம்மயக்கக் கோட்பாடேயாகும். இவ்வரையறைக்கு மாறாக வரும் சொற்கள் தமிழ் அல்ல என்பதும் அவை பிற மொழிச்சொற்கள் என்பதும் தெரியப்படும்.

எனவே நாட்யம், புண்யம் மான்யம் பாக்யம், ரத்னம் கல்யாணம், வர்ணம் என்றாற்போல வரும் பிராகிருத வடமொழிச் சொற்களை இடையே இகர உகரங்களைச் சாரியை நிலையிற்கூட்டி நாட்டியம், புண்ணியம் இரத்தினம்

வருணம் எனத் தமிழ் ஓசைக்கேற்ப ஆக்கிப் புறனடைவிதி கூறியுள்ளனர் இலக்கண நூலார்.

பேச்சு வழக்கில் சொல்றார், சொல்றாங், காட்னார், பாட்னார் பண்றார் என வழங்குதலைக் கேட்கலாம். அவை எழுத்து நடையாகும்போது அவ்வாறு பதிவு பெறுதலில்லையாகலின் குறுவழக்கும் கொச்சைவழக்கும் நோக்கி மெய்ம்மயக்கங்களை அமைத்தல் வேண்டுவதில்லை. நாடகநடையில் மட்டும் அவை ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்றையநிலையில் மருத்துவவியல் பொறியியல், வானியல் முதலாய அறிவியற் கலைச்சொற்களையும் பிறமொழியாளர்தம் இயற்பெயர், நாடுமுதலியவற்றின் பெயர் ஆகியவற்றை மேற்கொள்ளுமிடத்தும் தமிழ்கூறும் மெய்ம்மயக்க விதிகளைக் கடைப் பிடிக்க வேண்டுவதில்லை. மெய்ம்மயக்கவிதிகள் மட்டுமின்றி முதனிலை இறுதிநிலைப்பற்றிய தமிழ் மரபுகளையும் கடைப்பிடிக்கவேண்டியதில்லை. காரணம் அவை தமிழ்மொழிக்குக் கூறப்பெற்ற வரையறையே தவிர அயல்மொழிகட்கு இல்லையாதலின் எடுத்துக்காட்டாக மாக்மில்லன் அலக்சாண்டர் மில்டன், அப்துல்லா பிர்லா பட்நாயக் என்றாற்போல வரும் அயல்மொழிச்சொற்களை மாக்குமில்லன் அலக்குச்சாண்டர் மில்லுடன் அப்புதுல்லா பிருலா பட்டுநாயக்கு என ஆக்கினாலும் அவை தமிழ் ஆவதில்லை அவை தமிழோசையாக மாற வேண்டுமெனின் மாகமல்லன், அழகுசேந்தர் என்றாற்போல ஆக்குதல் வேண்டும். அவ்வாக்கம் செய்யுள்மரபை நோக்கியதாகலின் இன்றைக்கு அம்முறை பயன்படாதென்பது தெளிவு. மேலும் அறிவியற்கலைச்சொற்களை அங்ஙனம் திரிக்க இயலாதென்பதையும் கருதுதல் வேண்டும்.

பற்று ஜேஸஸ்–ஆப்ரஹாம், ஜோஸப், ஜோர்டான் மாத்யூ போன்ற பெயர்கள் இயேசு ஆபிரகாம், யூசேப்பு யோர்தான் மத்தேயு என விவிலிய நூலின்கண் மாற்றப்பட்டுள்ளனவே எனின் அங்ஙனம் திரித்துகொள்வதற்கு நன்னூல் முதலாய பிற்கால இலக்கண நூல்களில் கூறப்படும் வடமொழியாக்க விதிகளே போதுமானவையாதலின் அதுபற்றி மெய்ம்மயக்கவிதிகளை வகுக்க வேண்டியதில்லை. அவற்றை உள்ளவாறே எழுதுதற்கு ஏற்பத் தமிழ் எழுத்துக்களிற் சில குறியீடு செய்துகொள்வதேசாலும்.

மற்று இங்கிலாந்து, செருமணி, உருசியா என்றாற் போன்ற சில திரிபுகள் பெரிதும் பொருள் மாறுபாடு செய்வதில்லை. ஓரளவு தமிழோசையும்

பெறுகின்றன. ஸ்காட்லாண்ட் ஜார்ஜ் போன்ற சொற்களை இசுக்காத்து லாந்து சாருசு எனத் திரிப்பின் அவை மனநிறைவு கொள்ளா. எனவே அயல் மொழிச்சொற்களைக் கையாளுமிடத்து ஓர் வரையறை செய்துகொள்ள வேண்டுவது இன்றியமையாததாகும். மொழிபெயர்க்கத்தக்க சொற்களைத் தவிர்ந்த ஏனைய கலைச்சொற்களை அவ்வாறே ஏற்பதுதான் நலம்.

முடிபுரை : அகம், ஊசல், ஓடம், ஓதல், ஈபவர் எனவும் பாகம், பாசி, மாடம், புதவம், கோபம் எனவும் உயிர் உயிர்மெய்களின் பின்வரும் கசடதப என்னும் வல்லின உயிர்மெய்கள் வன்மைகுறைந்து இடைமைத்தன்மை பெறுதலை வேறுபடுத்திக் கூறலாம். இம்மயக்கத்தைப் பண்டை இலாக்கணநூலார் வேறுபடுத்திக் கூறாமைக்குக் காரணம் அம்மயக்கம் செய்யுளோசைகளைச் சிதையாமையேயாகும். வல்லெழுத்துள் றகரம் இரட்டித்து வருமிடத்து கூற்றம் கூட்றம் நேற்று நேட்று என டகரத்தின் சாயலைப் பெறுதலைச் சுட்டிக்காட்டலாம் எனினும் அதனாற் பெரும்பயன் யாதுமில்லை. விரும்பின் ஒருவிதியாகச் செய்து கூறலாம்.

இனிப்புணர்மொழியிடத்து றகரமாகவும் டகரமாகவும் திரியும் லகரளகரங்களைத் திரிக்காமல் கல்க்கண்டு புல்த்தரை வாள்த்தடங்கள் என்றே கூறலாம். எழுதலாம் என்பது ஒருசாரார் கருத்து அவர் எழுத்துக்களின் பிறப்பிட அமைவினையும் விரைந்து கூறுங்கால் அத்திரிபு இயற்கையாக நிகழ்வதனையும் கருதாமல் அங்ஙனம் கூறுவர். அவரே கற்கள், முட்கள் என்றாற்போல்வனவற்றை விருப்பப்படி எழுதுவர்.

எனவே கவர்பொருளும் பிழைபொருளும் நேராத வகையில் மெய்ம்மயக்கங்களைக் கையாளுவதில் குறையில்லை அவ்வாறு இறுதிநிலை வரையறையையும் அயல்மொழிகளைத் தமிழ் எழுத்துக்களாற் கூறுமிடத்தும் கடைப்பிடிக்க வேண்டுவதில்லை என்பது எனது கருத்து அறிஞர் பெருமக்கள் ஆய்ந்து முடிவு செய்வார்களாக. வணக்கம்.

------

7. எழுத்து வரிவடிவும் திரிபுகளும்

தமிழ்ப்பல்கலைக்கழகக் கருத்தரங்குக்கட்டுரை 22–3–1988

இருதிணைப் பொருளையும் அவற்றின் நிலைகளையும் இயக்கங்களையும் ஒருவர் ஒருவர்க்குப் புலப்படுத்த மக்களான் தோற்றுவிக்கப்பட்ட மொழி

முதற்கண் செவிப்புலனாகும் ஒலிக்கூட்டங்களான் ஆக்கம் பெற்றதாகும். அது கொண்டு பல்லாண்டுகட்குப் பின்னர்க் கட்புலனாக உருவாக்கப்பட்டதே எழுத்துமொழியாகும். பேச்சுமொழி முன்னிலை இடத்திற்கும், நிகழ்காலத்திற்கும் மட்டும் பயன்பட்ட நிலையினின்றும் வளர்ந்து படர்க்கையிடத்திற்கும் எதிர்காலத்திற்கும் பயன்படவேண்டிச் சமைத்துக் கொள்ளப்பட்டது எழுத்துமொழியாகும். எழுத்துமொழி அழியாததாகும். அதனை அழியாமற் காப்பது எழுதப்டும் கருவிகளைப் பேணும் நிலையைப் பொருத்ததாகும்.

வரிவடிவ எழுத்துகளின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய வரலாறு யாவரும் ஏற்கும் வண்ணம் தெளிவுபடக் கூறற்கு அரியதொன்றாக உள்ளது. ஒரு பொருளையோ கருத்தையோ சொல்வடிவான் உணரவும், உணர்த்தவும் இயன்றதொரு கால எல்லையிற்றான் அச்சொல்லுக்கு வரிவடிவ அடையாளம் அமைக்கும் சிந்தனை தோன்றும். முதற்கண் ஒரு சொல்லுக்கு ஓர் அடையாளமாக அமைந்து பின்னர் எழுத்தொலி அடையாளங்கள் தோன்றும். அங்ஙனம் எழுத்துக்களை வகைப்படுத்தி அவற்றிற்கு வரிவடிவ அடையாளம் அமைக்கும் சிந்தனை தோன்றும். முதற்கண் ஒரு சொல்லுக்கு ஓர் அடையாளமாக அமைந்து பின்னர் எழுத்தொலி அடையாளங்கள் தோன்றும். அங்ஙனம் எழுத்துக்களை வகைப்படுத்தி அவற்றிற்கு வரிவடிவம் அமைப்பது என்பது ஓர் அரிய செயலேயாகும்.

அங்ஙனம் ஒரு மொழியின்கண் முதற்கண் அமைத்துக் கொள்ளப்பட்ட வரிவடிவம் எழுதும் கருவி, எழுதப்படும் கருவி வளர்ச்சிகட்கு ஏற்ப வேறுபடும். கையால் எழுதும் பயிற்சிக்கு ஏற்பக் காலந்தொறும் வேறுபடும். அங்ஙனம் வேறுபட்டு வளர்ந்து ஒரு காலத்திற் செம்மையுறும். செம்மையுற்ற வடிவங்கள் மக்களின் அறிவு வளர்ச்சிக்கேற்பத் திருத்தங்களும் பெறும். மேற்கூறிய கருத்துக்கள் உலக மொழி யாவற்றிற்கும் பொதுவானதொரு மரபாகும்.

தமிழ்மொழியமைப்பினையும் அதனைக் கையாளும் முறைமையும் பற்றி அறிவியலடிப்படையில் மிக நுட்பமாகவும் தெளிவாகவும் இலக்கண நெறியான் வகுத்துக்கூறும் தொல்காப்பியம் தனக்கு முன் வழங்கிய பல நூல்களையும் நூன்மரபுகளையும் சுட்டிக் கூறுவதனை நோக்குமிடத்து இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழில் செம்மையான எழுத்து வரிவடிவங்கள் அமைந்திருத்தல் வேண்டுமென்பது புலனாகிறது.

எனினும் வரலாற்றுக் காலத்திற்கு முன்னைய வரிவடிவங்களையோ தொல்காப்பியர் கால வரிவடிவங்களையோ இன்றைக்குக் கட்புலனாக அறியக்கூடிய ஆதாரங்கள் ஒன்றுமில்லை. காரணம் எழுதப்படும் கருவிகள் காலத்தால் அழியும் தன்மையுடையனவாக அமைந்தமையேயாம். கல் எழுத்துக்களும் காலத்தான் அழிதற்கும் மறைதற்கும் உரியனவேயாம். செம்பு முதலாய மாழைகளில் எழுதியனவும அவ்வாறேயாம். மாழைகள் அழிக்கப்படுவதற்கு உரியனவாகும்.

இன்றைக்கு அழிவினின்று உய்ந்துகிடைத்துள்ள கல்வெட்டுக்களாலும் சங்ககால இலக்கியங்களாலும் வரிவடிவ எழுத்துக்களைப் பற்றியும் அவை எழுதப்பெற்ற முறைகள் பற்றியும் எழுதப்பட்ட கருவிகள் பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்ளலாம்.

விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுகல் (ஐங்.352)
செல்லுந்தேயத்துப் பெயர்மருங் கறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த (மலைபடு.395)
கூருளிகுயின்ற கோடுமாய் எழுத்து (அகம்.297)

என்றாற்போலப் பயின்றுவரும் சங்க இலக்கியத் தொடர்கள் வரிவடிவ எழுத்தினைப்பற்றி ஐயமற அறிவிக்கின்றன.

எனினும் சான்றுகளோடு தெளிவாக அமைந்த எழுத்து வரிவடிவங்கள் கி.பி க்குப் பின்னர்தான் கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடி ஆகிய கருவிகள் வாயிலாக நமக்குக் கிட்டியுள்ளன. அவற்றுள்ளும் ஓலைச்சுவடி ஆகிய கருவிகள் வாயிலாக நமக்குக் கிட்டியுள்ளன. அவற்றுள்ளும் ஓலைச்சுவடிகளைப் பொறுத்தவரை 16–17 ஆம் நூற்றாண்டுகளில் அமைந்தவையே பழமையானவையாக உள்ளன. காரணம் ஓலைகள் மடிந்து ஒடிந்து சிகையும் இயல்பினவாதலான் என்க.

இதுகாறும் கூறிய சில குறிப்புக்களான் வரிவடிவங்கள் காலந்தொறும் திருத்தம் பெற்று அமையும் தன்மையன என்பது விளங்கும்.

பண்டை நூல்களை ஓலைச் சுவடிகளில் எழுதிப் பயிலும் மாணாக்கர் அவற்றைப் படி எடுக்குந்தொறும் சிலகுறை நிறைகள் நேரலாம். அதனான் பாடத்திரிபுகள் உண்டாவது இயல்பே. அங்ஙனம் ஒரு நூல் காலந்தொறும்

ஓலைகளிற் பெயர்த்து எழுதப்பட்டு எழுதப்பட்டு வந்து இன்றைக்கு நாம் காணும் வடிவத்திற்றோற்றமளிக்கின்றது. உலோக அச்சு எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பெற்று அச்சிடத் தொடங்கிய காலத்தில் உள்ள வரிவடிவங்களும் காலந்தொறும் மாறி வந்துள்ளமையைக் காணலாம்.

இன்றைக்குப் பன்னூறாண்டுகட்கு முன்பிருந்தே இலக்கண இலக்கிய நூல்களை வளப்படுத்தப் பெற்ற ஓலைகளில் எழுதப்பெற்று வந்துள்ளமையை சங்கப்பாக்களுள் வரும் குறிப்புக்களான் அறியலாம். இன்றைக்கு அச்சுவாயிலாகப் பதிவு செய்யப்பெற்று நாம் பயிலும் நூல்கள் யாவும் ஓலைச் சுவடிகளினின்றும் சிறுபான்மை கல்வெட்டுப்படிகளினின்றும் பெயர்த்தெழுதிப் பதிவு செய்யப்பெற்றவையே. தமிழ் எழுத்துக்களான் ஆன ஓலைச்சுவடிகள் இன்றைக்கு உலகில் பல்வேறு நாடுகளில் கல்விக்கூடங்களில் உள்ளன. நமது நாட்டிலும் பல்வேறிடங்களில் நூற்றுக்கணக்கான சுவடிகள் உள்ளன. அண்மையில் தமிழ் வளர்ச்சி கருதித் தோன்றிய தமிழ்ப்பல்கலைக்கழகம் அதற்கென்றே ஒரு புலத்தை நிறுவி அரிய ஓலைச் சுவடிகளைத் திரட்டி ஆராய்ந்து வேண்டுவனவற்றை வெளியிடும் பணியை மேற்கொண்டு அரும்பணியாற்றிவருவதை நாமறிவோம். இற்றைக்குத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் மட்டும் இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம் முதலாய பல துறைப்பட்ட ஓலைச் சுவடிகள் 1725 உள்ளன.

இனி ஓலைச்சுவடிகளைப் பெயர்த்தெழுதுங்கால் நேரும் சில சிக்கல்களைக் கூறுமிடத்து அவையாவும் படைப்பாசிரியன் தன் கைப்பட எழுதியவை அல்ல. படைத்த காலத்து ஒரு சிலர் தன் கைப்பட எழுதியிருக்கலாம். பல தான் கூறத் தன் மாணவர்களான் எழுதப்பட்டவையேயாகும். அங்ஙனம் ஆசிரியரோ, ஆசிரியன் கூற மாணாக்கரோ எழுதிய சுவடியே முதற்சுவடி பாடஞ்சொல்லுங்கால் மாணாக்கர் எழுதிக்கொண்ட சுவடிகள் முதலாவது பெயர்ப்புச் சுவடியாகும். அவை சிலவும் பலவுமாக இருக்கும். மாணாக்கரின் தரத்திற்கேற்ப அவற்றுள் சில மாற்றங்கள் அமையும். இவ்வாறே கால காலந்தோறும் பயில்வோருக்குத் தக சுவடிகள் பெருகும் அருகும்.

இனி ஏடு பெயர்த்து எழுதுவோர் யாவரும் அந்நூற் பயிற்சியுடையார் எனற்கியலாது. கூலி பெற்று எழுதுவோரும் உண்டு. இந்நிலையிற்றான் பாடவேறுபாடுகளும் பிழைகளும் தோன்றும். பெயர்த்தெழுதுவோர் தம்

அறிவற்றலுக்கேற்பச் சில பல திருத்தங்களைச் செய்துகொள்வதும் சிலவற்றைக் கூட்டுவதும் குறைப்பதும் செய்தல் இயற்கையே. மேற்கூறிய பல நிலைமைகளுக்குட்பட்டவையே இன்றுநாம் அச்சிட்டுப்பயிலும் பழந்தமிழ் நூல்கள்யாவும்.

ஓலை எழுத்தும் ஒப்புமைவடிவமும்

எழுத்தொலிகளை உணர்த்தும் வரிவடிவ அடையாளங்கள் யாவும் கையினால் வரைந்து எழுதுவதற்கேற்ப அமைத்துக் கொள்ளப்பட்டவையே ஆகும். அவையாவும் வட்டம், கோணம், சதுரம், கீற்று, புள்ளி, ஒற்று என்னும் அடிப்படை வடிவங்களைக்கொண்டு அமைந்தவையே. ஒருமொழிக்கண் வரையறைப்பட்ட எழுத்தொலிகள் எவ்வளவோ அவ்வளவு அடையாளங்கள் அமையும். எழுத்துக்களின் எண்ணிக்கைப் பெருக்கிற்கேற்ப அடையாள வேறுபாடுகள் நுட்பமாக அமையும்.

இனி எழுத்து அடையாளங்கள் எழுதும் கருவி, எழுதப்படும் கருவிகளுக்கு ஏற்பவும் அமையும். கல்லிற் பொறிக்கப்படும் அடையாளத்திற்கும், செம்பு முதலாய தகடுகளில் செதுக்கப்பெறும் எழுத்தடையாளத்திற்கும், திரைச்சீலை அல்லது துணிகளில் எழுதப்பெறும் அடையாளத்திற்கும் ஓலைகளில் வரையப்பெறும் அடையாளத்திற்கும் வேறுபாடுகள் உண்டு. சில கூறுகளைத் தவிர பல கூறுகள் வேறுபடும். கல்லெழுத்துக்கள் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பெறா. தகட்டிற் சிறுபான்மை பிணைக்கப்பெறும். எனவே கையெழுத்துக்கள் பிற எழுத்துக்களினின்றும் பெரிதும் வேறுபட்டமையும் என்பதை நினைதல் வேண்டும். மற்றும் வட்ட வடிவங்கள் கல்லெழுத்துக்களில் தவிர்க்கப்பெறும். நேர்க்கீற்றும், வளைகீற்றும் புள்ளியுமே பயின்றுவரும். ஓலையில் வட்ட வடிவங்கள் பயின்று வரும். புள்ளியும் ஒற்றும் தவிர்க்கப்பெறும்.

இனி எழுத்து வடிவங்களைப் பொறுத்தவரை கிழக்காசிய மொழி எழுத்துக்கள், மேற்காசிய மொழி எழுத்துக்கள், ஐரோப்பிய, அமெரிக்க மொழி எழுத்துக்கள், இந்திய மொழி எழுத்துக்கள் என நான்கு வகையாகப் பிரிக்கலாம். ஒவ்வொன்றும் தமக்குள் பெரிதும் வேறுபாடுடையவை. இந்திய மொழிகளுள் தென்னிந்திய மொழி எழுத்துக்கள் ஏறத்தாழ ஒரு நெறியினை உடையவையாகும். அவற்றுள் தமிழ் மொழி எழுத்துக்களை மட்டும் சிறிது காண்போம்.

தமிழ் மொழியில் அடிப்படை எழுத்துக்களும் அவற்றின் வடிவங்களும் தனியாகவும் இணைத்தும் எழுதப்பட்டு வந்துள்ளன. அஃதாவது உயிரெழுத்து வடிவம், மெய்யெழுத்து வடிவம் இரண்டும் கூடிய உயிர்மெய் எழுத்துவடிவம். அம்முறையான் தமிழில் வரிவடிவம் பல்கியதோடல்லாமல் சிக்கலுக்கும் உட்படுவனவாயின. உயிரெழுத்து வடிவங்களுள் எ, ஏ, ஒ, ஓ, என்பவையும் மெய்யெழுத்து வடிவங்களுள் கசத–ஞந–பயமழ–லவ– என்பவையும் பெரிதும் ஒற்றுமை உடையவை. உயிர் மெய் வடிவ அடையாளங்கள் யாவும் ஒரு நெறியை உடையனவல்ல. காரணம் குழப்பமின்றி வரைந்துணர வேண்டிப் பல்வேறு நெறிகளில் அமைக்கப் பெற்றமையேயாகும். உயிர்மெய் ஆகார நெட்டெழுத்தின் துணைவடிவமும் மெய்யுள் இடையினரகரமும் ஒற்றுமையுடையவை. இவை யாவும் ஓலை எழுத்துக்களில் அமைந்துள்ள வடிவம் பற்றியவை யாகும். இன்றைய அச்சுவடிவங்களும் அவற்றைச் சார்ந்தவையேயாகும்.

தமிழ் மொழி எழுத்து வடிவங்கள் தனித்தனி வடிவங்களேயாயினும் கையால் எழுதுவோர் அவற்றைப் பிணைத்து எழுதும் வழக்கினை மேற்கொண்ட மையான் பல சிக்கலுக்கு உட்படுவனவாயின. மேலும் தமிழ்மொழி ஓசையை அடிப்படையாகக் கொண்ட தாதலின், புணர்ச்சி விகாரங்களுக்கு உட்படும் கடப்பாட்டினதாக உள்ளது. அவ்வகையில் ஓலைச் சுவடியைப் படிப்போரும் படியெடுப்போரும் பிழை புரிதற்கு வாய்ப்புடையதாயிற்று.

சில எடுத்துக்காட்டுகள்

உடம்படுமெய் : நாவாடிற்று – நா ஆடிற்று

பிறழ்பிரிப்பு : பணியாரம்மா – பணியாரம் மா – மா தேவா

குற்றுகரப்பிரிப்பு : மருதுவந்தான் – மருது உவந்தான்
வந்து ஆட்கொண்டான் – வந்தாள் கொண்டான்

னகரப்புணர்ச்சி : அவனல்லன் – அவன் நல்லன், அவன் அல்லன்

ணகரப்புணர்ச்சி : கண்ணீர்வந்தது – கண்நீர், கள்நீர்

இலக்கணம் அறியார் : மலர்கழல் – மலர்க்கழல்

அரைகுறையறிவோர்: வயிறு – வயறு, மன்னன் – மண்ணன்
கவிஞர்கோயிலன் – கவிஞர்கோ இலன்

கல்லார் செய்பிழை : எழுத்துமாற்றம் ஆலிநாடர் – ஆவிநாடார்.

பாடுபெற்றார்–மாடுபெற்றார், நாகுயர்ந்தது–நாடுயர்ந்தது, பொருது சென்றான்–பொறாது சென்றான், கன்னிவந்தாள்–கள்ளிவந்தாள், பாடிவீடு–மாடிவீடு

பொருள் மாற்றம் : வலம்படுவென்றி–வளம்படுவெற்றி, அளிக்கத்தக்கவன் – அழிக்கத்தக்கவன், கொளைவல்பர்ணன், – கொலைவல்பாணன், கட்டுர் சென்றான் – காட்டுர் சென்றான், கழுதுநீண்டது – கழுத்துநீண்டது, தொல்செருவு –தோல்செருப்பு.

சுவடி எழுத்துணராமை : பரவினான் – பாவிநான், காமலர் – கரமலர், நன்வாய்ச்சென்றான் – நனவாய்ச்சென்றான், நேர்வாய் என்றான் – நோவாய் என்றான்.

இவ்வாறு நேரும் பிழைகளை ஓர்ந்து ஓலைச்சுவடிகளைப் பயின்றறிதல் வேண்டும்.

-----

8. இலக்கணவிளக்கச் சூறாவளி

அண்ணாமலைப்பல்கலைக்கழகம் 6–2–1988

இலக்கணக்கருத்தரங்கு (ஒரு கண்ணோட்டம்)

தமிழகத்தில் மதுரை நாயக்க மன்னர், தஞ்சை மராட்டிய மன்னர் ஆட்சிக்காலத்தில் அவர்தம் அரசவைகளைச் சார்ந்தும்சில குறுநில மன்னர் பெருநிலக்கிழார்களைச் சார்ந்தும் தமிழ்ப் புலவோர் தமிழறிஞன்மார் வாழ்ந்து தமிழ்மொழிக்கு ஓரளவு பணிசெய்து வந்துள்ளனார். அக்காலத்துச் சமயப் பணிக்காகத் தோன்றிய சைவ வைணவ மடங்களும் சமய இலக்கியங்களோடு தமிழிலக்கண ஆராய்ச்சியும் சிற்றிலக்கியப்படைப்புக்களும் செய்து வந்துள்ளன. தமிழ் மொழி வளர்ச்சியைப் பொருத்தவரை தஞ்சை மாவட்டத்தில் அமைந்து விளங்கும் தருமபுர ஆதீனமடம், திருவாவடுதுறை மடம், திருப்பணந்தாள் காசிமடம் மூன்றும் குறிப்பிடத்தக்கவை. இம்மடங்கள் சமயப் பணியை மேற்கொண்ட தவசியர் முனிவர் ஆகியோர்க்கேயன்றிப் பொதுமக்களுக்கும், கல்வியறிவையும் சமய ஒழுக்கத்தையும் அளித்து வந்துள்ளன. தனிப்பட்ட புலவர் பெருமக்களைப் போற்றியும் பேணியும் தமிழ் வளர்ச்சிக்குத் துணைபுரிந்துவந்துள்ளன. வருகின்றன.

இக்கட்டுரைக்குக் காரணமாக விளங்கும் இரு நூல்களும் இரண்டு பெரிய மடங்களொடு தொடர்புடையனவாகும். சூறாவளிக்கு இலக்காகிய இலக்கண விளக்கம் என்னும் நூல் தருமபுரமடத்தைச் சார்ந்து அவ் ஆதீனத் துணையோடு திருவாரூர் வைத்தியநாதநாவலர் என்னும் வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பட்டதாகும். இதனைத் தூற்ற எழுந்த இலக்கண விளக்கச்

சூறாவளி என்னும் ஆய்வுக்கட்டுரை நூல் திருவாவடுதுறை மடத்தில் துறவு மேற்கொண்டு முனிவராக அம்மடத்திற்றொண்டுபுரிந்து வந்த சிவஞான சுவாமிகள் என்னும் மாதவச் சிவஞானமுனிவரால் இயற்றப்பட்டதாகும்.

இவ்வரலாற்றுக் குறிப்பை நினைவூட்டியதற்குக் காரணம் இச்சூறாவளியை முனிவர் எழுப்பியதற்கு இந்நிலைய வேறுபாடும் ஒருகாரணமாதல் கூடும் என்னும் கருத்தேயாம். மற்று நாவலர் முதியவர், இல்லறத்தார், போதகாசிரியர் தமிழ் நூற்பயிற்சியே சிறப்பாக உடையவர். முனிவர் இளையவர். துறவறத்தார் நூலாசிரியர் உரையாசிரியர் வடமொழிப் பயிற்சியும் சிறப்பாக உடையவர். இக்குறிப்புக்களும் சூறாவளி எழுந்தகாரணத்தைநோக்க உதவும்.

இகலும், மாறுபாடும் எல்லாத் துறைகளிலும் காணப்படும் ஓர் இயற்கை நியதியேயாகும். பிறதுறை மாறுபாடுகள் நன்மைபயத்தல் அரிது. அறிவுத்துறையின்கண் தோன்றும் கருத்து வேறுபாடுகள் தீமைபயத்தல் அரிது. கல்வித்துறையில் எழும் கருத்து மாறுபாடுகள் மக்களின் சிந்தனையை வளர்ப்பவை மொழி இலக்கியத்திற்கு ஆக்கந்தருபவை. உண்மையை நோக்கிச் செலுத்துபவை அறிவுக்கு விருந்தாபவை. ஆதலின் நல்லறிஞர் யாவரும் மொழி இலக்கிய இலக்கணத் துறையில் எழும் மாறுபட்ட கருத்துக்களை விரும்பி ஏற்கின்றனர்.

ஒரு நூலைச் செம்மையாக உணர அதுபற்றி எழுந்த விளக்கவுரைகளைக் காட்டிலும் மறுப்புரைகளே பெரிதும் துணைபுரியும் என்பதை அறிஞருலகம் அறியும். அம்மரபு முறையில் இவ் இலக்கணவிளக்கச் சூறாவளி தமிழிலக்கணத்துறைக்குக் கிட்டியதொரு செல்வமாகும். தமிழ் வரலாற்றை நோக்கின் மறுப்புரை என்பது தொல்காப்பிய உரை தொடங்கி இன்றளவும் காணப்படும் ஒன்றாயினும் 17,18–ஆம் நூற்றாண்டுகளில் அஃது ஒரு தனித்துறையாகவே வளர்க்கப்பட்டுள்ளமையைக் காணலாம் நூலாக்க வரலாற்றுள் முதனுல், வழிநூல், சார்புநூல் என்பனவற்றொடு எதிர் நூல் என்னுமோர் வகையும் உண்டு. அதனொடு மறுப்பு நூல் என்னுமொரு வகையை இவ் இலக்கண விளக்கச் சூறாவளி படைத்துள்ளது. ஆயினும் அவ்வகை பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பின் சிறப்பாக வளரவில்லை.

தமிழலக்கண வரலாற்றினை ஆழ்ந்து நோக்கின் தொல்காப்பியத்திற்குப் பின்னர் வழி நூல்கள் யாதும் தோன்றப் பெறாமையை

அறியலாம். நன்னூலை வழி நூலாகக் கருதுவர் பலர். அது எழுபது விழுக்காடு தொல்காப்பியத்தின்ின்று வேறுபட்டுள்ளமையைக் காணலாம். வீரசோழியம் முதலாய இடைக்கால நூல்கள் யாவும் சார்பு நூல்களேயாகும். இலக்கண விளக்கம், முதலாய பிற்கால நூல்கள் யாவும் நன்னூல், நம்பியகப் பொருள் புறப்பொருள் வெண்பாமாலை யாப்பருங்கலம் தண்டியலங்காரம் முதலியவற்றின் வழி நூல்களேயன்றித் தொல்காப்பியத்திற்கு வழி நூல் எனற்காகா.

இனி இவ் இலக்கண விளக்கச் சூறாவளி நூலை ஊன்றி நோக்கின் இஃது இலக்கண விளக்க நூலை மட்டும் துற்றுவதற்கெழுந்ததன்று இதனை முன்னிறுத்தி மறைமுகமாக நன்னூலையும் அதன் உரைகளையும் தூற்றுவதே என்பது விளங்கும். இளம்பூரணர் முதலாய தொல்காப்பிய உரையாசிரியன் மார் கருத்துக்களையும், கோட்பாடுகளையும் சாற்றத்தொல்காப்பியப் பாயிரவிருத்தி—தொல்காப்பிய முதற்சூத்திரவிருத்தி உரைகளை எழுதிய முனிவர்—அவற்றையே இச்சூறாவளியுள் பல இடங்களிற் சுட்டிக் கூறுகின்றார். தொல்காப்பியம் பாணினீயம் முதலாய வடமொழி நூல்களுக்கு இணையானது என்பதும், தமிழ் மொழிக்கெனச் சிறப்பாக அமைந்த சில மரபுகள் தவிரப் பிறயாவும் வடநூற் கோட்பாடுகளுக்கு ஒத்தவை என்பதும் முனிவரின் கருத்தாகும். அதனான் வடமொழியில் ஆழ்ந்த புலமையுடையோரே தொல்காப்பியத்தை உணர்ந்துரைக்க இயலுமென்பது அவர் கருத்து என்பதைப் பாயிரவிருத்தி—முதற்சூத்திர விருத்தியுரைகளான் தெரியலாம். அவ்விருத்திதியுரைகளுள் மறுக்கப்படும் பல கருத்துக்கள் நன்னூலுள் அமைந்திருத்தலைக்கண்டு நன்னூலுக்குப் புத்துரை எழுதுவாராயினார். காரணம் திருவாவடுதுறை மடத்தைச் சார்ந்தவரும் அவ் ஆதீனத்தலைவராற் போற்றப் பெற்றவரும் ஈசான மடத்துத் தலைவரும் வடமொழி தென்மொழிகளில் தன்னை யொந்த பெரும் புலமையுடைய வருமாகத் திகழ்ந்த சுவாமிநாத தேசிகர் தாம் இயற்றிய இலக்கணக் கொத்து நூலுள் நன்னூலைப் பாராட்டிக் கூறியுள்ளமையும் அவர்தம் மாணாக்கர் சங்கரநமச்சி வாயப்பிள்ளையை நன்னூல் விருத்தியுரை செய்யச் சொல்லித் துணைபுரிந்த துமேயாம். அதனான் நன்னூலில் தன் கருத்தைப் புகுத்தியும் அமைதிகாட்டியும் உரைவிளக்கஞ் செய்துள்ளார். எனினும் நன்னூலின் குறைபாடுகள் தன் மனத்தை உறுத்திக் கொண்டிருந்தமையான் அதனை வெளிப்படுத்த இவ் இலக்கணவிளக்க நூலைக் கருவியாக்கிக் கொண்டமையை

ஊன்றி நோக்கின் அறியலாம். அது காரணமாகவே ஐந்திலக்கணமும் முற்ற அமைந்த நூலுள் எழுத்தும் சொல்லுமாகிய இரண்டதிகாரத்தையே எடுத்துச் சூறாவளியில் பறக்கவிட்டுள்ளார் என்க.

இனி இலக்கண விளக்கம் எழுந்த வரலாற்றை நோக்கின் தருமபுர மடத்திலமர்ந்து மாணவர்க்குப் பாடங்கற்பிக்கும் பணியை நாவலர் மேற்கொண்ட காலை ஐந்திலக்கண நூல்களையும் ஒருங்குகூறும் நூல்களின்மையான் வீரசோழியம் தமிழ் மரபின் நீங்கி வடமொழி மரபைத் தாங்கி வேண்டுமளவு விளக்கமின்றி அமைந்திருத்தமையானும் தொல்காப்பியச் செய்யுளியல் உணர்தற்கரிதாக இருத்தலொடு அம் மரபுகளைப் புலவோர் கைவிட்டமையானும் அணியிலக்கணம் என்பதொரு வகை கூறப்படாமையானும் நாவலர் காலத்திற் பயிற்சியிலிருந்த நான்னூல் நம்பியகப் பொருள் விளக்கம். புறப் பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலக்காரிகை தண்டியலங்காரம் ஆகிய நூல்களைக் கொண்டுபாடம் சொல்லும் கடப்பாட்டிற்காளாயினார்.

நன்னூல் முதலாய அந்நூல்களுள் தொல்காப்பியம் கூறும் பல அரிய இலக்கணங்கள் இல்லாமையான் அவற்றையும் சேர்ந்துப் பாடஞ் சொல்லுதற்காகத் தொகுத்த இலக்கணக் குறிப்புக்களை ஒருநூல் வடிவில் அமைத்துக்கொண்டு கூறுவாராயினார் பின்னர் அக்கருத்துக்களைச் சூத்திரயாப்பில் அமைந்து வேண்டும் விளக்கங்களைச் சேர்த்து இலக்கண விளக்கம் எனப் பெயரிட்டுள்ளார் என்பது நாவலர் பரம்பரை சோமசுந்தர தேசிகர் எழுதியுள்ள வரலாற்றால் புலனாகின்றது. எனவே வைத்தியநாத நாவலர் இதனை ஒரு புதிய படைப்பு நூலாகக் கருதவில்லை தொகுப்பு நூலாகவே கருதினார் என்பது தெரிகின்றது. பின்னர் அதனைச் செப்பனிட்டு பதிப்புச் செய்த அவர்மாணாக்கர் போன்றோர் தொல்காப்பியம் போன்று முழுமையாக இருத்தல் கருதிக் குட்டித் தொல்காப்பியம் எனப்பாராட்டி உரைப்பாராயினர். இப்படி ஒருநூல் தருமபுரமடத்திலிருந்து வெளிவருதல் திருவாவடுதுறை மடத்தில் இருந்த மாணாக்கர்க்கு பொறுக்கவில்லை போலும் அதனான் சிவஞான முனிவரைக் கொண்டு சூறாவளியைக் கிளப்பினர் என அக்காலத்துப் பலரின் கருத்தென அவர் வரலாறு கூறுகின்றது. இது நிற்க.

இலக்கண விளக்க எழுத்ததிகாரச் சொல்லதிகாரங்களிற் காணப்பெறும் கருத்துக்களும் கோட்பாடுகளும் பெரும்பான்மை நன்னூலையும் தொல்காப்பிய உரையாசிரியன் மார் கருத்துக்களையும்

தொகுத்துத் தொல்காப்பியச் சூத்திரயாப்பு முறையினைப் பின்பற்றியமை ந்தனவேயாம் சிறுபான்மை நாவலர் கருத்துக்களும் உண்டு.

சூறாவளியால் தூற்றப்படுவனவற்றுள் பெரும்பான்மை நன்னூற் கருத்துக்களே சிறுபான்மைநாவலர் கூறும்விளக்கம் பற்றியும் சூத்திரயாப்புப் பற்றியவையுமாகும்.

இலக்கண விளக்க எழுத்ததிகாரம் 158 நூற்பாக்களையுடையது அவற்றுள் 42 இடங்களும், சொல்லதிகாரம் 372 நூற்பாக்களையுடையது அவற்றுள் 41 இடங்களும் சூறாவளிக்கு இலக்காகியுள்ளன. அவற்றுள் பதினான்கு இடங்களில் விருத்தியுட் கூறினாம் ஆண்டுக்கண்டு கொள்க என்று சுட்டப்பட்டுள்ளது. மற்றும் சூறாவளியான் தூற்றப்படும் கருத்துக்கள் யாவும் பிழையுடையன என்பது எல்லோர்க்கும் ஒப்ப முடிந்தவையல்ல பல திரித்துக் கூறப்பட்டுள்ளவை. சிலபிழையற்றவை எனத்தஞ்சை சரசுவதி மஹால் நூலகத்திற்காக இலக்கண விளக்கத்தைச் சிறந்த குறிப்புரைகளொடு பதிப் பித்தளித்த திருவையாறு வித்துவான் வே. கோபாலையர் அவர்கள் தக்க சான்றுகளோடு விளக்கிக் காட்டியுள்ளார்.

இலக்கணவிளக்கத்துள் காணப்படும் கோட்பாடுகள் யாவும் நன்னூல், தொல்காப்பியம் தொல்காப்பிய உரையாளர்தம் கொள்கைகளே யாதலின் நாவலரான் பிறழ உணர்ந்து கொள்ளப்பட்டவைதவிர பிறவற்றைப்பற்றிய மறுப்புரைகள் நன்னூலையும் தொல்காப்பிய உரையாசிரியன் மாரையுமே சென்று சேரும் சில கருத்துக்கள் முனிவரே நன்னூலுள் கூறியவையாதலின் அவை அவரையே சென்று சேரும்.

இச்சூறாவளியான் ஓர் இலக்கண நூலை எவ்வாறு ஆராய்வது என்பதையும் மறுப்புரை எழுதும் முறையையும் தெளிவாக அறியலாம்.
ஓர் எடுத்துக்காட்டு

குற்றியலிகரம் குற்றியலுகரம்
ஆய்தமொடுயிர் மெய் ஈரளவு ஐஔ
மஃகான் குறுக்கம் உள்ளுறுத் தொன்பதும்
சார்பின் பால என்மனார் அவற்றுள்
உயிர்மெய் இரட்டுநூற்றெட்டு உயிரளபுஏழ்
ஒற்றளபு பதினொன்று ஒன்று ஒன்று ஏனைய
ஆயிருநூ ற்றெண் ணைந்துமதன் விரியே (எழுத்-5)

சூறாவளி :

ஆசிரியர் தொல்காப்பியனார் சார்பெழுத்து மூன்றே என்று வரையறுத்திருப்பவும் தாம் அவரினும் நுண்ணுணர்வு உடையார் போன்று நன்னூலார் கூறிய சொல்பற்றிச் சில முதல் எழுத்துக்களையும் இம் மூன்றனொடு கூட்டிச் சார்பு எழுத்து எனக் கொண்டார். அது பொருந்தாமை விருத்தியுள் விரித்துக் காட்டினாம். முதல் எழுத்துக்களே தம்மொடு தாம் சார்ந்தும், இடம் சார்ந்தும் பற்றுக் கோடு சார்ந்தும் வருதலான் சார்பெழுத்து எனக் காரணக் குறி ஆயிற்றெனின் அஃது ஆய்தத்திற்குப் பொருந்தாமையின் அவ்வியாத்திக் குற்றமும், ஆங்கால் என்பனதம் மொடு தாம் சார்ந்து வருதலின் அதிவியாத்திக்குற்றமும் ஆமாறு காண்க.

இடவேற்றுமையான் குற்றுகரம் முப்பதாறாதல் சாலும் என்பதும் விருத்தியுட் காட்டினாம்

சார்பெழுத்துப்பற்றி இதனுள் நாவலர் தம் கருத்தாகக் கூறியது ஒன்றும் இல்லை. நன்னூலையும் தொல்காப்பியத்தையும் இணைத்துக் கூறியுள்ளார். இவர்கருத்தாகக் கூறியது சிலவற்றை ஒத்துக் கொண்டு சிலவற்றை நீக்கியது மட்டுமே முழுமையாக ஒருவரையும் பின்பற்றாத குற்றம் மட்டுமே கூறத்தக்கது. குறியீடுபற்றிய விளக்கம் இச்சூத்திரவுரையுள் இல்லை. ஆங்காங்கே தனித்துக் கூறியவற்றை முனிவர் ஒருசேரக் கூறிக் குற்றஞ்சுமத்துகிறார்.

ஆய்வுரை :

சார்பெழுத்துக்களைப் பத்தாகக் கொண்டு கூறிய நன்னூற் சூத்திரத்திற்கு இவர் கூறிய அமைதி, 'தொல்காப்பியர் செய்கை ஒன்றையே கருதி மூன்றென்றார் நன்னூலார் செய்கையும் செய்யுளியலும் நோக்கிப் பத்தென்றார் என்பது நன்னூலார் செய்யுளியல் பற்றி இலக்கணம் செய்யாதிருப்பவும் அங்ஙனங்கூறியவர் இலக்கண விளக்க ஆசிரியரைக் குற்றம் கூறியது தன்னைத்தான் கூறியதாகும்.

இடம் கருதி எழுத்துக்களை எண்ணுதல் பிழையெனக் கண்டு தொல்காப்பியரை ஒத்துக்கூறிய நாவலரை மறுத்துக் குற்றியலுகரம் முப்பதாறாகும் என்றது. முறையாகக் கூறிய ஒன்றைத்தன் கொள்கையை சிறந்ததெனக் கொண்டு கூறிய ஒவ்வாமறுப்பாகும். கடல்—அழகு கடலழகு என்றாற்போல மெய்யொடு கூடிய உயிர்வேண்டுமிடத்து இரண்டாகப் பிரியும்

என்பதனை அறிந்தும் வரிவடிவு நோக்கி உயர்மெய் இருநூற்றுப் பதினாறு என்ற பிழையான கொள்கையை ஏற்றுக் கொண்டு உயிர்மெய்யை ஒரு சார்பெழுத்தாகக் கொள்ளும் முனிவர் குறியீடுபற்றி நாவலர் கூறிய விளக்கத்தை மறுப்பது மேற்கோள்மலைவாகும்.

இவ்வாறு இவர் சூறாவளிக் கண்ஒவ்வாக் கருத்துக்கள் பல வாதலை மொழியியலையும் தொல்காப்பியத்தையும் நோக்கி அறியலாம்.

------

9. தொல்காப்பிய நெறியில் செய்யுள் உறுப்புக்கள்

உலகத்தமிழராய்ச்சி நிறுவன இலக்கணக்கருத்தரங்கக்கட்டுரை

முன்னுரை : தென்னக மொழிகட்கெல்லாம் தாயாகிய செந்தமிழ் மொழி அமைப்பினைக் கூறும் இலக்கண நூல்களுள் தொன்மையும் முன்மையும் சான்ற தொல்காப்பியம். தமிழ் இலக்கிய ஆக்கம் பற்றிக் கூறும் பொருளதிகாரத் தின்கண் செய்யுள் புனையும் நெறி பற்றிச் செய்யுளியல் என்னும் தலைப்பில் இருநூற்று நாற்பத்திரண்டு நூற்பாக்களால் செய்யுள் இலக்கணம் பற்றிச் சுருக்கமாகக் கூறுகின்றது.

தனிச் செய்யுள் தொடர்நிலைச் செய்யுள் எனுப் இருவகையும் அடங்கச் செய்யுள் இலக்கணத்தை முப்பத்து நான்கு உறுப்புக்களாக வகுத்துக் கூறுகின்றது. அவ்வுறுப்புக்களுள் சிலவும் பலவும் அமைந்து செய்யுட்கள் உருவாவதை அவற்றான் புலப்படுத்துகின்றது. இக்காலத்தார் இலக்கியம் என்னும் சொல்லால் உணர்த்தும் பொருளையே தொல்காப்பியம் செய்யுள் என்னுபெயராற் கூறுகின்றது. தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புக்களைப் பற்றிய கோட்பாடுகளைத் தெரிந்து கொள்ள ஓர்உவம வாயிலாக உட்புகுவோம்.

பக்குவம் செய்து மக்கள் உண்ணும் உணவு வகைகளுள் பொங்கல் என்பதும் ஒன்று. அது இயற்கைப் பொருள்களினின்று ஆக்கிக் கொள்ளப்படுவதாகும். பொங்கல் காரியம் அக்காரியம் உருப்பெற அடிப்படையாக அமைந்த பொருள்கள் பல. அது நெல்லரிசி, வெல்லம், மிளகு நெய் முதலியவற்றை நீர், நெருப்பு முதலியவற்றான் பக்குவப்படுத்தப்பட்டதாகும். பொங்கல் பல்வேறு சுவைகளில் மூலப்பொருள்களால் ஆக்கம் பெறும், வெல்லப்பொங்கல், கற்கண்டுப்பொங்கல்,

வெண்பொங்கல் மிளகுப் பொங்கல் என வகைப்படும். இவ்வகைகள் குறிப்பிடப்படும் ஒரு பொருள்பற்றி அமையும். நெல்லை உமியும் தவிடும் நீக்கி அரிசியாக்கி நீரில் நெருப்பால் கலத்திலிட்டு வேகவைத்து வேகுமிடத்துத்துணைப் பொருள்களைக் கூட்டிப்பக்குவப்படுத்தி உருவாக்கப்படும்.

பொங்கலாகிய காரியம் உருவானபின் வெல்லம் முதலிய பொருள்கள் நெல்லரிசியாலான சோற்றொடு இரண்டறக் கலந்து நிற்கும் வேகவைத்த நிலை அதற்குள் மறைந்துவிடும். சுவைப்போனுக்கு வேகவைத்த நிலை புலப்படும். அதனை; உண்பவன் குழைந்துவிட்டது, விரைத்து விட்டது புகை சூழ்ந்து விட்டது என்றாற்போலக் கூறுவதனால் அறியலாம்.

இனி, பொங்கலாகிய காரியத்திற்குக் கருவியாக அமைந்தவை பற்றி நோக்கின் தவிடு நீக்கிய அரிசி, கட்டி வெல்லம், ஏலம், நெய் முதலியவை முதற்கருவி. முதற்கருவி என்பது காரியத்தொடு ஒன்றுபட்டிருப்பது, நீர், நெருப்பு துணைக்கருவி–கலம், துடுப்பு முதலியவையும் சமைத்தவனும் துணைக்கருவிகளேயாம். துணைக்கருவி என்பது காரியத்தினின்று நீங்கியிருப்பது. உண்ணுதலாகிய பயனின்றிப் பொங்கல் உருவாகாதாதலின் உண்போன் நிமித்தக்கருவி:

இவ்வுவம வாயிலாக நாம் அறிவது ஒரு காரியம் உருப்பெறக் கருவியும் செய்கையும் அடிப்படையானவை என்பதாகும். கருவிகளே மற்றொரு கோணத்தில் உறுப்பு எனப்படும். உறுப்புக்கள் காரியப் பட்ட பொருள்களுக்கேற்ப வெளிப்படையாகவும் மறைவாக (குறிப்பாக)வும் அமைந்திருக்கும். அம்முறையில் உறுப்புக்களைப் புற உறுப்பு அகவுறுப்பு என வகுத்துக் கூறுவர்.

ஒரு பொருளின் இலக்கண முறையிற் கூறுமிடத்துச் சிலர் புற உறுப்புக்களை மட்டுமே கணக்கிடுவர் நல்லறிஞர் அக உறுப்புக்களையும் சேர்த்தே கணக்கிடுவர். ஒரு பிரிவை மட்டும் கூறுதல் பாவை என்னுமிடத்து தலை, உடல், கை, கால் முகம், கண், மூக்கு, செவி என்னும் அவற்றொடு. என்பு, நாம்பு, மூளை, மஞ்சை, குருதி என்னும் உள்ளுறுப்புக்களைக் கூட்டியும் கூறுதல். புறவுறுப்புக் கூறுதலாகும். மனிதனின் அகவுறுப்புக்கள் புலனுணர்வு மனவுணர்வு, சிந்தனை உயிர் அல்லது ஆன்மா முதலியனவாகும். இவற்றையும்

கூட்டிக் கூறினாலன்றி மனிதன் என்பதற்குரிய இலக்கணம் நிறைவுறாது. மேலும் அகவுறுப்புக்களுக்குத் துணையாக அமைவனவே புற உறுப்புக்களாகும் என்பதனைத் தெளிதல் வேண்டும்.

தாரியம் என்பது பொருளைக் குறிக்கும் அப்பொருள்கள் காட்சிப்பொருள், கருத்துப்பொருள் என வகைப்படும். சிலவும் பலவுமாகிய சினைகளால் நிறைந்து ஒருவராகத்திகழ்வது பொருள் அதனான் பொருளை உறுப்பி, அங்கி முதல் என வழங்குவர். உறுப்புக்களால் அமைந்தது உறுப்பி அங்கங்களால் அமைந்தது அங்கி சினைகளால் நிறைந்தது முதல் முதலுக்குப் பிண்டம் என்பதும் ஒருபெயர். மேலும் அங்கியாகத்திகழும் பொருள்கள் இயற்கைப் பொருள் செயற்கை பொருள் என்றும் அவ்இருநிலைமைகளாலும் அமைந்த பொருள் என்றும் முத்திறப்படும். மற்றும் உருவப்பபொருள் அருவப்பொருள் அருஉருவப்பொருள் என முத்திறப்படும். இவற்றின் உறுப்புக்கள் வடிவம், குணம், செயல் பயன் என்னும் நான்கனுள் அடங்கும். அருவப்பொருளின் வடிவும் செயலும் வெளிப்படையாகத் தோன்ற மாட்டா. ஏனைய இரண்டும் தோன்றும்.

அம்முறையில் மொழி என்னும் பொருள் ஒலி வகையான் இயற்கையும் ஒலிகளைச் சொற்களாகப் படைத்துக் கொள்ளும் நிலையில் செயற்கையுமாக அமைந்துள்ளது. மேலும் மொழி பேச்சுமொழியாகிய உருவமும் எழுத்துமொழியாகிய வடிவமும் பெறுதலின் வடிவம் குணம் செயல் பயன் என்னும் நான்கு உறுப்புக்களாலும் நிறைந்ததொரு முதற்பொருளாகத் திகழ்கின்றது மற்று, இயற்கையும் செயற்கையுமாக அமைந்துள்ள மொழிகளைக் கொண்டு ஒரு புலவன் இலக்கியம் படைக்குமிடத்து இலக்கியம் செயற்கையுள் செயற்கை என்னும் சிறப்பு நிலையை அடைகின்றது. அதனைத் தொல்காப்பியம் இலக்கியத்தைச் செய்யுள் என்றும் நூல் என்றும் குறியீடு செய்து உணர்த்துகின்றது. மற்றும் இலக்கியம் கருத்துக்களுக்கு இடமாக நிற்றலின் நிலம் என்றும் கூறுகின்றது. செய்யுள் யாதானும் ஓர் குறிக்கோளை அஃதாவது இலக்கைச் சுட்டி நிற்றலின் இலக்கியம் என்னும் குறியீடு பெறுகின்றது. இலக்கியம் என்னும் சொல் படைக்கப்பெற்ற பொருள் எல்லாவற்றிற்கும் உரிய பொதுப்பெயராகும்.

அவ்வாற்றான் இலக்கியம் என்னும் செய்யுள் தன்னுள் கொண்டுதிகழும்உறுப்புக்களைத் தொன்னூலார் ஆய்ந்துணர்ந்து கூறிய செய்யுள் உறுப்புக்களைத் தொல்காப்பியம் சுருக்கமாக விளக்குகின்றது. அவற்றைப்பற்றிக் குறிப்பாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மொழி என்னும் குறியீட்டுப்பெயர் வடமொழி, தென்மொழி தெலுங்குமொழி, இந்தி மொழி ஆங்கில மொழி என ஒரு நாட்டவரின் பாஷையையும் – ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொருமொழி, இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி எனத் தனி ஒரு சொல்லையும் குறித்து வழங்குமாறு போல எட்டுத் தொகை, பத்துப்பாட்டு திருக்குறள் சிலப்பதிகாரம் சிந்தாமணி கம்பராமாயணம், பெரியபுராணம் -என்றாற்போன்ற இலக்கியங்களும்,

ஆசிரியப்பா முதலிய பாக்களும் செய்யுள் என்னும் குறியீட்டாற் சுட்டப்படுகின்றன. அவற்றை இடம் நோக்கி உணர்தல் வேண்டும்.

"நல்லிசைப்புலவர் செய்யுளுறுப்பென
வல்லிதிற்கூறி வகுத்து ரைத்த னரே" (செய்–1)

"செய்யுள் மொழியான் சீர்புணைந்து யாப்பின்
அவ்வகைதானே அழகெனப் படுமே" (செய்–228)

"இனச் சுட்டில்லபப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்காறல்லாச் செய்யுளாறே" (கிளவியாக்கம் 18)

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே". (எச்சவியல் 1)

என்னுமிடங்களில் இலக்கியத்தையும்

நெடுவெண்பாட்டே குறுவெண்பாடடே
கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளொடு
ஒத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின (செய்–114)

துகளொடும் பொருளொடும் புணர்ந்தன்றாயியன்
செவியுறைச் செய்யுள் என்மனார் புலவர் (செய்–124)

வசையொடும் நசையொடும் புணர்ந்தன்றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர் (செய்–125)

என்னுமிடங்களில் பாக்களையும் உணர்த்திவந்தன.

மற்றும் 'பா' என்னும் உறுப்பு அகவல் செப்பல் முதலிய நால்வகை ஓசையை குறிக்கும் குறியீட்டுப் பெயர். அது அவ் ஓசைகளைப் பெற்றுவரும் ஆசிரியம், வெள்ளை, கலி, வஞ்சி என்னும் பாட்டிற்கும் உரிய பெயர்களாக ஆளப்படும் மேலும் பா என்பது பாட்டு எனவும் ஆளப்படும். பாட்டு என்பதற்குரிய நேர்பொருள் (பண்+து=பாட்டு) பண்ணினை உடையது என்பதாகும் அது பரிபாட்டுக்கு ஒக்கும் . வெண்பா முதலிய ஏனைய பாடல்களைச் சுட்டுமிடத்து மரபாகக் கொள்ளப்படும்.

அம்முறையில் வெண்பா முதலிய அறுவகைப்பாட்டிற்கும் அப்பாடல்களால் ஆகிய இலக்கியத்திற்கும் உரிய உறுப்புக்கள் எல்லாம் செய்யுளுறுப்பு என வழங்கப்படும்.

அஃதாவது எழுத்து அசை சீர் அடி முதலியவை வெண்பாமுதலிய பாக்களுக்கு உறுப்பாகும். வெண்பா முதலிய பாக்கள் இலக்கியத்திற்கு உறுப்பாகும் எனினும் யாவும் செய்யுளுறுப்பு எனல் நூல் நெறி மரபாகும். மேற்கூறப்பெற்ற மரபுகளை முதற்கண் தெளிந்து தொல்காப்பியம் கூறும் செய்யுளுறுப்புக்கள் பற்றிய இலக்கணங்களைப் புரிந்து கொள்ளல் வேண்டும்.

மேலும் நூற்பயனாகிய அறமுதலாய மும்முதற் பொருள்களை அகப்பொருள் புறப்பொருள் என்னும் முறையில் வகுத்து அவற்றை ஒருபுலவனால் நாடகவழக்கும் உலகியல் வழக்கும் அமையப் படைக்கப்படுவதே இலக்கியம் எனப்படுதலின் கைக்கிளை முதலாய அகத்திணைகளும் கைகோள்களும் வெட்சி முதலாய ஏழுபுறத்திணைகளும் அவற்றிற்குரிய மாந்தர்களும் அவர்தம் அளவளாவல்களும் அவற்றிற்குரிய இடங்களும் காலமும் பயனும் இலக்கிய உறுப்புக்களாக அமைகின்றன அவவாற்றான் அவற்றைச் செய்யுளுறுப்புக்களாகத் தொல்காப்பியம் வகுத்துக் கூறுகின்றது.

அம்முறையில்அவை பொருள் பற்றிய உறுப்புக்கள் கருவியுறுப்புக்கள் வடிவம் பற்றிய உறுப்புக்கள் அவற்றைப் புனையும் செய்கையாகிய யாப்புப் பற்றிய உறுப்புக்கள் எனப் பொதுவாக நாக்கு வகைப்படுகின்றன. இவற்றுள் வடிவம் பற்றிய உறுப்புக்களும் செய்கை பற்றிய உறுப்புக்களும் கருவி உறுப்புக்களும் பொருள் உறுப்புக்களை இலக்கியமாகக் காரியப்படுத்தும்.

வடமொழி முதலிய அயல்மொழிகளும் இடைக்காலத்திற்றோன்றிய யாப்ருங்கலம் முதலிய இலக்கண நூல்களும் வடிவ உறுப்புக்களால் காரியப்படும் வெண்பா முதலிய பாக்களையே செய்யுள் எனக் கொண்டு தமிழ்இலக்கணம் கூறுகின்றன. தொல்காப்பியம் வெண்பா முதலிய பாக்களையும் பாடுபொருள்களையும் உறுப்புக்களாகச் சுட்டி அவற்றின் காரியமாகிய இலக்கியங்களையே செய்யுள் எனக் கொண்டு உறுப்புக்களை வகுத்துக் கூறுகின்றது. இவ்வேறுபாடு நன்குணர்ந்து தெளிந்தாலன்றித் தொல்காப்பியம் கூறும் செய்யுளிலக்கணம் தெற்றெனப் புலப்படாது. மேலும்

பா உறுப்புக்களாகக் கூறப்படும் எழுத்து அசை சீர் அடி பற்றிய இலக்கணங்கள் யாப்பருங்கலம், காரிகை முதலிய இடைக்கால நூல்கள் கூறும் இலக்கணங்களினின்று பெரிதும் வேறுபட்டவை. இடைக்கால நூல்கள் தளையை ஒரு உறுப்பாகக் கொண்டு தளையடிப்படையில் பாவோசைகளுக்கு இலக்கணங்கூறுகின்றன. தொல்காப்பியம் தளையைச் சீர்களின் செயலாக மட்டுமே கொண்டு சீர்களின் அடிப்படையில் ஓசைகளை வகுத்துக் கூறுகின்றது. மேலும் யாப்பருங்கலம் முதலியவை வடமொழியையும் பாலிமொழியையும தழுவி வகுத்து கொண்ட தாழிசை துறை விருத்தம் என்னும் பாவினங்கள் தொல்காப்பிய மரபில் சேராதவை. ஆதலின் யாப்பருங்கலம் முதலிய பிற்கால நூல்களின் அடிப்படையில் தொல்காப்பியச் செய்யுளியலைப் புரிந்து கொள்ள முயல்வது. குழப்பத்தைத் தருமென்க.

தொல்காப்பியம் கூறும் செய்யுள் (இலக்கிய) வகை

செய்யுள் என்னும் இலக்கியங்களைத் தொல்காப்பியம் பாட்டு, உரை, நூல் வாய்மொழி (மந்திரம்) பிசி அங்கதம் (கூற்றிடை வைத்த குறிப்பு,) முது சொல் என ஏழுவகையாக வகுத்துணர்த்துகின்றது.

அவற்றுள் பாட்டு என்பது ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, பரிபாட்டு என ஆறுவகைப்படும். பாட்டின் இயலவாகவரும் பண்ணத்தி என்பதனை அவற்றொடு சேர்ப்பின் பாட்டின் வகை ஏழாக அமையும்.

பாட்டுரைநூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர்தண் பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர் (செய்–75)

ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற்றென்ப பாவகை விரியே (செய்–101)

மருட்பா ஏனை இருசாரல்லது
தானிது வென்னும் தனிநிலையின்றே (செய்–81)

பரிபாடல்லே தொகைநிலை வகையின்
இதுபா என்னும் இயல் நெறியின்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப (செய்–116)

பாட்டிடைக் கலந்த பொருளவாகிப்
பாட்டின் இயல பண்ணத்திய்யே (செய்–173)

'உரை' என்பது தனித்தும் பாடலுக்கு இடையேயும் செய்யுளுக்கு ஊடேயும் வரும்.

"பாட்டிடைவைத்த குறிப்பினனும்
பாவின் றெழுந்த கிளவியானும்
பொருள் மரபில்லாப் பொய்ம்மொழியானும்
பொருளொடு புணர்ந்த நகை மொழியானுமென்று
உரைவகை நடையே நான்கென மொழிப" (செய்–166)

'நூல்' என்பது இலக்கணப்பனுவலைக் குறிக்கும். அதன் இலக்கணமாவது

நூல் எனப்படுவது நுவலுங்காலை
முதலும் முடிவும் மாறு கோளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உள்நின்றகன்ற உரைபொடு புணர்ந்து
நுண்ணிதின் விளக்கல் அதுவ தன் பண்பே" (செய்–159)

"அதுவே தானும் ஒரு நால்வகைத்தே" (செய்–160)

ஒரு பொருள் நுதலிய சூத்திரத்தானும்
இனமொழி கிளந்த ஒத்தினனும்
பொதுமொழி கிளந்த படலத்தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத்தானுமென்று
ஆங்கனைமரபின் இயலும் என்ப. (செய்–161)

பின்னர் சூத்திரம் முதலியி நான்கற்கும் இலக்கணங் கூறுகின்றது. இவற்றின் மரபுகளை மரபியலுள் விரித்துக் கூறுகின்றது.

ஏழுவகை இலக்கியங்களுள் பாட்டு என்னும் செய்யுள் தவிர்ந்தவை அடிவரையின்றியும் வரும் என்கின்றது. (சூ.158)

செய்யுள் உறுப்புக்கள்

மாத்திரை	தொடை	களம்	பாட்டு	இயைபு
எழுத்து	நோக்கு	காலம்	வண்ணம்	புலன்
அசை	பா	பயன்	....	இழைபு
சீர்	அளவு	மெய்ப்பாடு	அம்மை	
அடி	திணை	எச்சம்	அழகு	
யாப்பு	கைகோள்	முன்னம்	தொன்மை	
மரபு	கூற்று	பொருள்வகை	தோல்	
தூக்கு	கேட்போர்	துறை	விருந்து	

இவற்றுள் அம்மை முதலிய எட்டினையும் யாப்பருங்கலம் முதலிய நூல்களின் உரையாசிரியன்மார் வனப்பு என்று கூறுகின்றனர் அவர் தம் கருத்தை ஏற்றுப் பேராசிரியர்"வனப்பியல்தானே வகுக்குங்காலை" எனத் தொடங்குகின்றார். இளம்பூரணர் நச்சினார்க்கினியர் உரைகளில் இவ்வடிகாணப்படவில்லை.

இனிஇம் முப்பத்து நான்கினையும் செயற்பாடும் பயன்பாடும் நோக்கி நால்வகையாகப் பிரித்துக் காணலாம். அவை வருமாறு.

வடிவஉறுப்பு (புறக்கருவி)	செய்கை உறுப்பு யாப்பமைவு	அமைப்புறுப்பு அகக்கருவி	பொருளுறுப்பு (முதல்கருஉரி)
எழுத்து	மாத்திரை	அம்மை	திணை
அசை	நோக்கு	அழகு	கைகோள்
சீர்	பா(ஓசை)	தொன்மை	கூற்று
அடி	மெய்ப்பாடு	தோல்	கேட்போர்
தொடை	வண்ணம்	விருந்து	களம்
அளவு	எச்சம்	புலன்	காலம்
மாட்டு	முன்னம்	இயைபு	பயன்
மரபு	பொருள்வகை	இழைவு	....
தூக்கு	துறை	யாப்பு	

இவற்றுள் எழுத்து முதலாய ஒன்பதும் பா என்னும் செய்யுளுக்கு உறுப்பாக வரும். இவற்றுள் எழுத்து அசைக்கும், அசை சீர்க்கும் சீர் அடிக்கும் தொடை அடிக்கும் பாவிற்கும் உறுப்பாகவரும் இவற்றிற்கு மரபு (சொற்கள்) உறுப்பாகும் அளவும் மாட்டும் தூக்கும் பாவிற்கு நேரே உறுப்பாக வரும்.

அம்மை முதலிய ஒன்பதும் பாவிற்கும் அவற்றாலாகிய செய்யுட்கும் (இலக்கியத்திற்கும்) கருவியுறுப்பாகவரும். செய்கை உறுப்புக்களுள் மாத்திரை என்பது பாவிற்கு (ஓசைக்கு)ம், வண்ணத்திற்கும் உறுப்பாகவரும் மெய்ப்பாடும் நோக்கும் பொருளுக்குத் துணை உறுப்பாக வரும். எச்சமும் முன்னமும் கூற்றுக்கு உறுப்பாக வரும், பொருள்வகையும் துறையும் திணைக்கும் கை கோளுக்கும் உறுப்பாக வரும் இங்ஙனம் இயைந்து யாவும் செய்யுளுக்கு (இலக்கியத்திற்கு) உறுப்பாக அமையும்.

ஒருபாட்டு அல்லது இலக்கியத்திற்கும் இவை எல்லாம் உறுப்பாக வரல் வேண்டுமென்பது நியதியன்று. அவ்வப்பாடற்கும் இலக்கியத்திற்கும் ஏற்பனவரும். எழுத்து அசை, சீர், திணை, கூற்று, களம், காலம், பயன், யாப்பு என்பவை எல்லாச் செய்யுள்கட்கும் கட்டாயமாக வரும்.

உறுப்புக்களின் இலக்கணமும் - விளக்கமும்

1. *மாத்திரை* : மாத்திரை என்பது எழுத்துக்களின் ஒலியளவு : அது நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய கூட்டி எழூஉதல் (எழுத்-6) என்பதனானும் அளபிறந்திசைத்தலும் ஒற்றிசை நீடலும் (எழுத்-33) ஒற்றளபெடுப்பினும் (செய்17) எனவும் ஐகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் எனவும் கூறுமாற்றான். எழுத்தொலி இசைகள் பெருகியும் குறுகியும் அகவலோசை முதலிய நூல்வகையும் நிரம்பி நிற்கும் அவ்வாற்றான் மாத்திரை செய்யுளுக்கு உறுப்பாக அமைந்தது.

2. *எழுத்து* : அசையாகவும் அசைக்கு உறுப்பாகவும் வருதலின் உறுப்பாயின.

3. *அசை* : உயிரும், ஒற்றும் உயிர்மெய்யும் சார்புமாகிய எழுத்துக்கள் தனித்தும் இணைந்தும் சீர்க்கு உறுப்பாக நிற்றலின் உறுப்பாயிற்று. தொல்காப்பியம் நேர், நிரை, நேர்பு, நிரைபு என நான்கசைகள் கூறும்.

4. *சீர்* : ஓரசையாயும் ஈரசை, மூவசைகள் இணைந்தும் இயற்சீர் ஆசிரிய உரிச்சீர் வெண்சீர், வஞ்சியுரிச் சீர் சொற்சீர் அசைச்சீர்களாகி அடிக்கு உறுப்பாக நிற்றலான் செய்யுளுறுப்பாக அமைந்தது.
எ-டு : கற்க ..... தக . யாதானும் நாடாமால் .... கல்லாதவாறு.
தொல்காப்பியம் எண்பத்து நான்கு சீர்கள் கூறுகின்றது.

5. *அடி* : நான்கு சீர்களைக் கொண்ட ஒரு தொடர் அடி என்பது தொல் காப்பியக் கொள்கை. நாற்சீர் கொண்டது அடி எனப்படுமே. அடியின்சிறப்பே பாட்டெனப்படுமே என்பது. இலக்கணமாகக் கூறப்பட்டுள்ளது. அதனான் சீர்களை உறுப்பாகக் கொண்டு நிகழ்வது அடி எனப்படும். சீர்களை எண்ணிக் கூறுமிடத்து இருசீரடி முச்சீரடி நாற்சீரடி ஐஞ்சீர் அடி அறுசீரடி எனக் கூறப்படும். நாற்சீர் கொண்ட அடியை அளவடி நேரடி என்றுகூறும். நாற்சீர்களில் அமையும் எழுத்தெண்ணிக்கை அடிப்படையில் குறளடி, சிந்தடி அளவடி நெடிலடி கழி நெடிலடி என ஐந்து வகைப்படுத்துக்கின்றது. இடைக்கால நூல்கள் சீர்களைக் கணக்கிட்டுக் குறளடி முதலிய ஐந்தடிகளைக் கூறுகின்றன. பேராசிரியர் முதலியனோர் எழுத்தளவையான் கூறப்படும் அடிகளைக் கட்டளை அடி என்றும் சீர் அளவையாற் கூறப்படும் நிலையில் சீர் வகையடி என்றும் கொண்டு உரை கூறியுள்ளனர்.

தொல்காப்பியம் ஓரிடத்திலேனும் கட்டளையடி என்ற சொல்லைப்பயன்படுத்தவில்லை. பாக்கள் அடிகளான் வரையறை செய்யப்படுதலின் அடி செய்யுளுக்கு உறுப்பாக அமைகின்றது.

6. யாப்பு : எழுத்து முதலாகக் கூறப்படும் உறுப்புக்களுள் ஏற்பன கொண்டு புலவன் தான் கூறக் கருதியவற்றைச் செய்யுளுக்குக் கூறப்படும். இலக்கண - நெறிபிறழாமல் செய்யும் செய்கை யாப்பு எனப்படும். அம்முறையில் யாப்பு செய்யுளுறுப்பாக அமைகின்றது.

“எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்” என்பது இலக்கணம் (செய்–78)

பாட்டு உரை முதலாய எழுவகை இலக்கியங்களும் யாப்பின் வழி அமைந்து வரும் (செய்–79) என்பதனனும் உணரலாம்.

7. மரபு : இயற்சொல் திரிசொல் திசைச் சொல் வடசொல் என்னும் நால்வகைச் சொற்களையும் யாப்பு வழியாகச் செய்யுட் கண் நாட்டப்பெறும். நெறிமுறைகள் மரபு எனப்படும். பொருளுக்குச் சொற்கள் கருவியாதலின் அம்முறையில் அவற்றைப் பயன்படுத்தும் நெறி செய்யுளுறுப்பபாக அமைகின்றது. “மரபேதானும், நாற்சொல்லியலான் யாப்ப வழிப்பட்டன்று” (செய் 80) என்பது இதன் இக்கணமாகும்.

8. தூக்கு : சீர்களால் ஓசை அடுக்கி அடியாக முடியுமிடத்து அச்சீர்களால் எழும் ஓசைமுடிவு தூக்கு எனப்படும். அது சீரமைப்பிற்கேற்ப அகவல் செப்பல் துள்ளல் தூங்கல் என்னும் பாஓசைகளை உண்டாக்கும் அங்ஙனம்ஓசைகளைத் தூக்கிநிற்கும் நிலை தூக்கு எனப்பட்டுச் செய்யுளுறுப்பாக அமைகின்றது. ‘தூக்கு’ என்பதற்குரிய வரைவிலக்கண நூற்பா ஏடெழுதினோரால் விடப்பட்டிருகலாம். எனக்கருத வேண்டியுளது. காரணம் நால்வகை ஓசைகளைப் பற்றிய இலக்கண நூற்பாக்களின் பின் “தூக்கியல் வகையே ஆங்கென மொழிப” (செய்–87) என ஆசிரியர் கூறுதலான் உணரப்படுகின்றது.

9. தொடை : சந்தநயமும் நூல்நயமும் படச் சீரொடு சீரையும் அடியொடு அடியையும் தொடுக்கும்யாப்பியற் செய்கை தொடை எனப்படுகின்றது. திட்டமிட்டுத் தொடுத்தலின் தொடையாயிற்று. தொடை மோனை, இயைபு,

முரண் எதுகை அளபெடை முதலியனவாகும். தொடைநாற் சீர்கொண்ட அளவடிக்கண் தளைவழுவில்லாத அறுநூற்றிருபத்தைந்து அடிகளில் பயின்றுவரும் என்றும் சீர்நிலையிலும் அடிநிலையிலும் அவற்றைப் பெருக்கப் பதின்மூவாயிரத்து எழுநூறு அளவாக வரும் என்றும் கூறுகின்றது. (தொடைபற்றிய தொகை கூறும் நூற்பா பாடவேறுபாடுகளால் குழப்பம் பெற்றுள்ளது. இதன் செம்மையான பாடத்தையும் விளக்கத்தையும் எனது ஆராய்ச்சிக்காண்டி கையுரையுள் காண்க) அம்முறையில் தொடை செய்யுளுறுப்பாக அமைகின்றது.

10. நோக்கு : எழுத்து முதலாக அசை சீர் என அமைந்து வரும் அடிகளில் உள்ள சொற்கள் வெளிப்படையும் குறிப்புமாகப் பொருள்களைப் பெற்றிருந்தலின் அவற்றைச் சிந்திக்கச் சிந்திக்கப் பொருள் விரிந்து செல்லும் அம்முறையில் அமையும் செய்யுள் நோக்குடைத்தாதலின் நோக்கு செய்யுளுறுப்பாக அமைந்துள்ளது. "மாத்திரை முதலா அடிநிலைகாறும் நோக்குதல் காரணம் நோக்கெனப்படுமே" (செய்–104) என்பது இதன் இலக்கணம்.
எ.டு அகரமுதல எழுத்தெல்லாம் .... பகவன் முதற்றே உலகு. இக்குறட்பாவை நோக்க நோக்க இவ்வுவமத்தால் கடவுள் தத்துவம் விரிந்து செல்வதைக் காணலாம்.

11. பா : தூக்கு என்னும் அகவல் முதலாய ஓசைகளைப் பெற்றுவரும் அடிகளான் அமைந்த செய்யுள் 'பா' எனப்படும். இலக்கியமாகிய செய்யுட்கு அவை உறுப்பாகலின் பா செய்யுளுறுப்பாயிற்று.
"ஆசிரியம் வஞ்சி வெண்பாக்கலியென, நாலியற்றென்ப பாவகை நெரியே" என்பது இலக்கணம் (செய்–105) சிறுபான்மை பாட்டு எனவும் வழங்கப்பெறும்.

12. அளவு : குறள் வெண்பா அளவியல் வெண்பா, பஃறொடை வெண்பா சமனிலை வஞ்சி வியனிலை வஞ்சி எனவும் கொச்சகக் கலி வெண் கலி எனவும் அவற்றின் உறுப்புகள் அராகம், அம்போதரங்கம் எனவும் வேறுபடுதல் ஓசையும் அளவும் பறிறி நிற்றலின் 'அளவு' செய்யுள் உறுப்பாகக் கொள்ளப்பட்டுள்ளது. எ.டு. நெடுவெண்பாட்டு முந்நாலடித்தே குறுவெண்பாட்டிற்கு அளவு ஏழு சீரே (செய்–157) என்றாற் போலவரும்.

13. திணை : முதல்கரு உரி என்னும் பொருள்களை உடையது திணை. முதல் கரு உரி என்பவையே செய்யுட்குப் பாடுபொருளாக அமைதலின் திணை செய்யுள் உறுப்பாயிற்று.

14. கைகோள் : அகத்திணையின் உட்பிரிவாகிய களவு கற்பு என்னும் ஒழுக்கம் பற்றியவையே அகப்பொருள் இலக்கியமாகத் திகழ்தலின் கைகோள் செய்யுளுறுப்பாயிற்று.

15. கூற்று : அகத்திணை, புறத்திணை ஒழுகலாறுகள் மாந்தரைப் பற்றியதாதலின் அம்மாற்றம் உணர்வுகள் கூற்றாக வெளிப்படுதலின் கூற்று செய்யயுளுறுப்பாயிற்று. இது தலைவன் கூற்று, இது தலைவி கூற்று என்றாற்போலவரும்.

16. கேட்போர் : கேட்போரையின்றிக் கூற்று நிகழாதாகலின் கேட்போர் என்பது செய்யுளுறுப்பாக அமைந்தது.

17. களம் : களம் என்பது இடம். தலைவன் முதலாய மாந்தர் தம் ஒழுகலாறுகள் யாதானும் ஓர் இடம் பற்றியே நிற்குமாதலின் அந்நிகழ்ச்சியின்
"ஒரு நெறிப்பட்டாங்கு ஓரியல் முடியும்
கரும நிகழ்ச்சி இடனென மொழிப" (செய் 200) என்பது இலக்கணம் எ.டு. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை மாதர்கொல் மாலும் என் நெஞ்சு" இது தலைவன் கூற்று. இது புணர்ச்சிக்கு முன் நிகழும் காட்சியினிடத்து என வரும். ஈண்டு இடமென்றது. கருமநிகழ்ச்சி யாகிய இயைபினையாகும்.

18. காலம் : உரிப்பொருள் நிகழ்ச்சிக்குரிய காலம் "பொருள் நிகழ்வுரைப்பது காலம்" என்பது இலக்கணம் (செய்–201)

19. பயன் : உரிப்பொருள் மாந்தர் நிகழ்த்தும் ஒழுக்கத்தானும் கூற்றுக்களானும் அவ்வம்மாந்தர் எய்தும் நுகர்வும் அவ்விலக்கியங்களைப் பயில்வோர் எய்தும் நுகர்வும் பயன் எனப்படும். இததன் இலக்கணம் "இது நனிபயக்கும் இதன்மா றென்னும் தொகை நிலைக்கிளவி பயன் எனப்படுமே" (செய்–202) என்பதாகும்.

20. மெய்ப்பாடு : இலக்கிய மாந்தர் எய்தும் உணர்வும் பயில்வோர் எய்தும் உணர்வும் மெய்பாடுகளாம். நகை, அழுகை, இளிவரல், மருட்கை அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் உணர்வுகளே இலக்கியத்தின் பயனாகலின் மெய்ப்பாடு செய்யுளுறுப்பாயிற்று.

21. எச்சம் : செய்யுள் என்பது தேர்ந்த சொற்களால் சுருங்கக் கூறும் கலையாதலின் யாவும் விரித்துக் கூறப்படா. கூறியவற்றினின்றும் விளங்கிக் கொள்ளுமாறு கூறுதல் வேண்டும். அங்ஙனம் விரித்துக் கூறப்படாமல் நிற்பவை எச்சம் எனப்படும்.

எ.டு. இளைதாக முள்மரங் கொல்ககளையுநர், கைகொல்லும் காழ்த்த விடத்து. என்பழிப்பகைவரை அவர் வலிமை பெறாத காலத்திலேயே வெல்க என்பது குறிப்பெச்சமாக நின்றது.

"சொல்லொடும் பொருளொடும் முடிவு கொள் இயற்கை
புல்லிய கிளவி எச்சமாகும்" (செய்–205) என்பதிதன் இலக்கணமாம்.

22. முன்னம் : இலக்கிய மாந்தர் கூற்று நிகழ்த்துமிடத்து இக்கூற்று (மொழிநடைகருத்து) இவர்க்குரியது என உணருமாறு புலவன் அமைப்பது முன்னம் என்னும் உறுப்பாகும்.

"இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரியதென்று அவ்விடத்தவரவர்க்கு உரைப்பது முன்னம்" (செய்–206) என்பது இதன் இலக்கணமாகும்.

23. பொருள்வகை : ஒருதிணைக்குரியவாகக் கூறப்பட்ட கருப்பொருள் உரிப்பொருள்கள் ஓரேவழி பிறநிலத்தின் கண்ணும் வரும் வருமாயினும் ஏனைய வற்றால் திணையுணருமாறு உரிப்பொருள் பொதுப்பட வருதல் பொருள்வகை என்னும் உறுப்பாம்.

"இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்றிவை இழுக்கு நெறியின்றி இதுவாகு இத்திணைக்கு உரிப்பொருள் என்னாது. பொதுவாய் நிற்றல் பொருள் வகை என்ப" (செய்–207) என்பதிதன் இலக்கணமாம்.

24. துறை : பொருள்வகை என்னும் உறுப்பு; கருப்பொருள் உரிப்பொருள்கள் நிலம் பிறழ்து வரும் எனப்பட்டதாயினும் பொருள்நிகழ்ச்சியால் இச்செய்யுளின் உரிப்பொருள் இதுவே எனத்தெரியும் வண்ணம் மரபு பிறழாமல் அமைப்பது துறை என்னும் உறுப்பாம். இதன் இலக்கணம்

"அவ்வம் பாக்களும் விலங்கு மன்றிப்
தத்தம் இயலான் மரபொடு முடியின்
அத்திறந்தானே துறை எனப்படுமே" (செய்–208) என்பதாகும்.

25. மாட்டு : ஒரு புலவன் செய்யுள் செய்யுமிடத்து ஒன்றற்குரிய செய்திகளைப் பலபட விரித்துக் கூறுமிடத்து வினை முதலும் பயனும் இவை

எனக் கூட்டி முடித்துக் கொள்ளுமாறு அமைத்தல் வேண்டும் அங்ஙனம் இயைபு படுத்தும் நிலை மாட்டு எனப்படும். இதன் இலக்கணம். .

"அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நியைினும்
இயன்று பொருள் முடியத் தந்தனர் உரைத்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்" (செய்–209) என்பது இவ்வுறுப்பு மிக்க அடிகளை கொண்டு அமையும் ஆசிரியப்பா வஞ்சிப்பாக்களில் மட்டும் வரும். கொண்டுகூட்டு என்னும் பொருள்கோள்வேறு, மாட்டு என்னும் இவ்வுறுப்பு வேறு.

26. வண்ணம் : எழுத்தொலி ஓசைகள் பற்றியும், சொல்லமைப்புப் பற்றியும் சீர் அமைப்புப் பற்றியும் தொடை நயம் பற்றியும் வண்ணங்கள் வரும். இதனை இருபது வகையாகப் பிரித்துக் கூறுகின்றது தொல்காப்பியம் தத்த–தாத்த–தன்ன, தய்ய என இசைபற்றிவரும் வண்ணம் வேறு இலக்கிய நடைபற்றி வரும் இவ்வண்ணங்கள் வேறெண அறிக.

இவற்றுடன் தனிச்செய்யுள் தொடர்நிலைச் செய்யுட்களில் வரும் இலக்கியம் ஆகிய இரண்டற்கும் பொதுவாக வரும் உறுப்புக்களை எட்டாக வகைப்படுத்திக் கூறுகின்றது இவைஎட்டனையும் வனப்பு என அடக்கிப் பேராசிரியர் உரைகூறும் அடிகாணப்படவில்லை. இடைக்கால வழக்குப் பற்றி இவற்றை வனப்பு எனப் பேராசிரியர் கொண்டுள்ளார். இனி அவற்றின் இயல்புகளைப் பார்ப்போம்.

27. அம்மை : எளிய இனிய வயழக்குச் சொற்கள் மலியச் சீர்களைத் தொடுத்துக் குறைந்த அடிகளால் இயற்றப்படின் அவைய அம்மை எனப்படும்.
"சின்மென்மொழியாற் சீர்புனைந்தியாப்பின்
அம்மைதானே அடிநிமிர்பின்றே" (செய்–234) என்பதிதன் இலக்கணமாம்.

28. அழகு : இயற்சொல் முதலாய நால்வகைச் செய்யுளீட்டச் சொற்கள் தொடைநயம்படச் சீர்களைப்புனைந்து யாப்பின் அவ்வகைச் செய்யுள் அழகு என்னும் உறுப்பாகும்." செய்யுள் மொழியான் சீர்புனைந்து யாப்பின் அவ்வகைதானே அழகெனப்படுமே" (செய்–235) என்பதிதன் இலக்கணம்.

29. தொன்மை : அடிவரையறையின்றி இடையிடையே உரைநடைவிரவி வருமாறு. பழைய வரலாறுளுகளை அமைத்துக் கூறும்இலக்கிய வகை தொன்மை எனப்படும். தொன்மைதானே; உரையொடுபுணர்ந்த பழமை மேற்றே (செய்–236) என்பது இதன் இலக்கணமாம்.

30. தோல் : இனிய ஓசையமைந்த சொற்களால் உயர்ந்த பொருளைப்பற்றிக் கூறலும், விரிந்த சொற்களால் பலவாய அடிகளை அமைத்துக் கூறலும் தோல் என்னும் இலக்கிய உறுப்பாகும். இதன் இலக்கணம்.

இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோல் என மொழிப தொன்மொழிப் புலவர். (செய் 237) என்பதாகும்.

31. விருந்து : அவ்வக்காலத்துப் புதியனவாகத் தோன்றி வழங்கும் செய்திகளைப் புனைந்து கூறுவது விருந்து என்னும் உறுப்பாகும். இதன் இலக்கணம். விருந்தேதானும், புதுவதுகிளந்த யாப்பின்மேற்றே" (செய் 238) என்பதாகும்.

32. இயைபு : விட்டிசையின்றிச், சொற்களைப் புணரியல் விதிப்படி இளயத்துயாப்பது இயையெனப்படும். இதன் இலக்கணம், ஞகாரை முதலானகார ஈறாக மொழியிறுதி நிற்கும் புள்ளி எழுத்துப் பதினொன்றையும் வருமொழியொடு புணர்த்தியாப்பது இயைபென்னும் உறுப்பாகும். இதன் இலக்கணம். "ஞகாரை முதலா னகாரை ஈற்றுப் புள்ளியிறுதி இயைபெனப்படுமே" என்பதாகும். உரையாசிரியன் மார் இப்புள்ளி மெய்கள் செய்யுளின் ஈறாகநிற்குமாறு அமைத்தல் என்பார். ஞ ந வ ஆகிய ஈறுகள் அங்ஙனம் நிற்றற்குரிய வல்ல ஆகலின் அவர் கருத்துப் பொருந்து மாறில்லை.

33. புலன் : சேரிகளில் வழங்கும் செம்மை பெறாத சொற்களான் மிக வெளிப்படையாக அமைவது புலன் என்றும் உறுப்பாம். இதன் இலக்கணமாவது, "சேரிமொழியாற் செவ்விதிற்கிளந்து, தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின் புலனெனமொழிப புலனுணர்ந்தோரே" (செய்–240) என்பதாகும்.

34. இழைபு : வல்லெழுத்து மிக்க சொற்களைத் தொடர்ந்து அமைக்காமல் மெல்லின இடையின எழுத்துக்கள் கலந்துவருமாறு எழுத்தளவையான் வரும் குறளடி முதலிய அடிகளான் எடுத்த லோசைப்பட நடைபெறுமாறு இயற்றுதல் இழைபென்னும் உறுப்பமைந்த செய்யுட்களாகும். இதன் இலக்கணம்.

ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து
ஓங்கிய மொழியான் ஆங்ஙனம் ஒழுகின்
இழைபின் இலக்கணம் அமைந்ததாகும் (செய்–241)

எ.டு.	வண்டு சென்று முண்டகத்து	5 எழுத்து
	விண்டு நின்ற கொங்கு நன்கு	4 எழுத்து.
	கொண்டுவந்து வந்து நின்று	4 எழுத்து
	மண்டுமென்று கண்டுகொள்ளே	5 எழுத்து
	அரும்பற முல்லை அலர்ந்தன தேனைச்	12 எழுத்து
	சுரும்புண வந்தவை சூழும் – விரும்பி	12 எழுத்து
	அதிர்ந்தன காரும் அருளிலாக் கூற்றம்	12 எழுத்து
	எதிர்ந்திடின் யார்தகைப்பா ரீங்கு இது	

பன்னிரண்டெழுத்து அளவடியான் வந்த வெண்பா.

இங்ஙனம் மாத்திரை முதல் இழைபு ஈறாக அமைந்த முப்பத்து நான்கு உறுப்புகளுள் செய்கை உறுப்பும் யாப்புறுப்பும் எல்லாச் செய்யுளுக்கும் உரியவாய் ஏற்ற பெற்றி ஏனையவை அமைந்து. தனி நிலையாகவும் தொடர்நிலையாகவும செய்யுட்கள் வரும். செய்யுள் என்பது இலக்கியம் என்பதை மறவாது கடைப்பிடித்துச் செய்யுளுறுப்பின் இயல்புகளை உணர்தல் வேண்டும்.

------

10. உரிச்சொல்

தமிழ் உலகில் உயர்தனிச் செம்மொழி எனக் கருதப்பெறும் மொழிகளுள் ஒன்று. இன்றும் இருவகை வழக்கிலும் பயின்றுவருவது. சிறந்த இலக்கணக் கோட்பாடுகளையுடையது. இலக்கணக் கோட்பாடுகளுள் சில பிறமொழிகளொடு ஒத்தும் சில வேறுபட்டும் இலங்குவது. நூலார் இலக்கியச் சொல் வகையை இயற்சொல், திரிசொல், திசைச்சொல் வடசொல் என நான்காகவும் இலக்கணச் சொல்வகையைப் பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் என நான்காகவும் வகுத்துக் கூறுகின்றனர். இலக்கணச் சொல்வகையுள் பெயர்ச் சொல்லும் வினைச் சொல்லும் தலையாயவை; இடைச்சொல் அவற்றிற்குத் துணையாகவும் உரிச்சொல் அவற்றிற்கு அடியாகவும் அமைந்தவை என்பர். இதனைத் தொல்காப்பியம்

"சொல் எனப்படுப பெயரேவினை என்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே"
"இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்று வழிமருங்கின் தோன்றும் என்ப" என்கின்றது.

வடமொழியுள் சொற்களை நாமம், ஆக்யாதம், நிபாதம், உபசர்க்கம் என நான்குவகையாகக் கூறுவர் இவற்றுள் உபசர்க்கம் என்பது சொல்வகையன்று. ஏனையவற்றின் பால் ஒட்டாக வருவது. நாமம் என்பது தமிழில் பெயர்ச்சொல்லையும் ஆக்யாதம் என்பது வினைச்சொல்லையும் ஒக்கும். நிபாதம் இடைச்சொல்லொடு ஓரளவு ஒக்கும். தமிழ்நூலார் கூறும் நோக்கில் வட மொழியுள் உரிச்சொல் என்றொரு வகையில்லை. எனினும் சொல் மூலங்களைத் தாது என வகுத்துப் பெயரடிகளைச் சுப்புத்தாது என்றும் ஏனையவற்றைத் தாது என்றும் கூறுவர்.

தமிழ் இலக்கண அமைப்பு முறைகள் வடமொழியைப் பின்பற்றி அமைத்துக் கொள்ளப் பெற்றவையே என்பது இடைக்காலப், பிற்கால நூலோர்க்கும் உரையாசிரியன்மார்க்கும் கருத்தாக இருந்தமையான் தொல்காப்பியம் கூறும் உரிச்சொற் கோட்பாடுகளை வடமொழியொடு ஒப்பிட்டுக் காணும் நிலை இல்லாது போயிற்று. அதனான் உரிச்சொல் என்பவை செய்யுட் சொல் எனவும் பல்வகைக் குணப் பெயராக வரும் எனவும்கூறிச் சென்றனர்.

சொற்கள் யாவும் ஓசையாகத் தோன்றித் தனித்தும் ஒட்டுக்கள் இணைந்து தொடர்ந்தும் தோன்றும் அவை பொருளை உணர்த்துமிடத்து மொழி எனப்படும். அம்மொழிகள் தனித்தும் இடைச்சொற்களொடு இணைந்தும் ஒரு கருத்தை உணர்த்துமிடத்துச் சொல் எனப்படும். அவை ஒருவரது கூற்றில் அமைந்து வருமிடத்துக் கேட்போர் அதனைப் பெயர்ச்சொல் அல்லது வினைச் சொல் என்று உணர்வர். எடுத்துக்காட்டாகத் நலங்கிள்ளி, நெடுஞ்செழியன் செங்குட்டுவன், என்ற வழி இவை பெயர்ச் சொற்கள் என்றும் செய்தான், செய்திருக்கிறான். உண்டிருப்பான் என்றவழி இவை வினைச் சொற்கள் என்றும் உணர்கின்றோம். இவை தனி ஒரு எழுத்தாலோ, தனி அசையாலோ அமைந்தவையல்ல. பல அசைகள் இணைந்து பொருளைத்தருவனவாகும். இச்சொற்களைப் பிரித்து நோக்கின் பெயர்ச்சொற்களில் அமைந்துள்ள அசைகள் நல்—அம்—கிள்—இ, நெடு—உம்—செழு—இ—அன் செம்—குள்—து வ்—அன் எனவும் வினைச் சொற்களில் செய்—த்—ஆன், செய்—த்—உ – இரு—ப் —ஆன் உண்—ட்—உ—இரு—ப்—ஆன் எனவும் நிற்றலைக் காணலாம்.

இவற்றுள் நல், அம்,கிள், நெடு,செழு, செம், குள், செய், இரு, உண் என்பவை தனித்து நிற்பின் பொருள்தாரா; மேலனவற்றொடு இணைந்து

வருமிடத்துத் திணை, பால், இடம், காலம் முதலியனவற்றைச் சுட்டும் பொருளினவாய் நிற்றலைத் தெரியலாம்.

இச்சொற்களில் நல், கிள், நெடு, செழு என்பவை பெயர்நிலையிலும் செய், உண், இரு என்பவை வினை நிலையிலும் உள்ளன. இவை எவ்விடத்து வரினும் இப்பொருள்களையே தருமாயின், பெயர் வினை, என அடக்கிவிடலாம். இவை யாண்டும் ஒரே பொருளைத்தருவனவாக வருதல் இல்லை. நல் என்பது நல்கு, நலி எனவினைக்கு அடிச்சொல்லாயும் கிள் என்பது கிள்ளை கிளவி எனப் பெயர்க்கு அடிச்சொல்லாயும் கிளந்தான், கிள்ளினான் என வினைக்கு அடிச்சொல்லாயும் வருகின்றது. இவ்வாறே செய் என்பது செய்யோன், நன்செய், புன்செய் எனவும் உண் என்பது உணவு உண்டி எனவும் பெயராகவும் வருகின்றன. எனவே முதனிலையாக நிற்கும் அடிச்சொற்கள் பெயர், வினை, இடை என்னும் மூன்றற்கும் பொதுவாக நிற்கும். ஆ மேய்ந்தது. இவன் பெரியன் ஆவான் ஆ என் செய்வேன் அவனா? எனவரும் இங்ஙனம் அடிச்சொற்கள் மூவகைச் சொற்களுக்கும் உரிமை பூண்டு பொதுப்பட நிற்றலின் அத்தகையனவற்றை இலக்கண நோக்கில் வரையறை செய்யுமிடத்து அவற்றை உரிச்சொல் என வகைப்படுத்துரைத்தனர் நூலோர்.

எனவே உரிச்சொல் என்பவை பெயர், வினை, இடை என்னும் மூவகைச் சொற்களுக்கும் மூலமாய் அடியாய் நிற்பவை என்பது புலனாகின்றது. மற்று உரிச்சொற்கள் அங்ஙனம் அடிச் சொற்களாக வருதலொடு அவற்றிற்கு அடையாக அவற்றைச் சிறப்பித்தும் வரும். அடிச்சொல்லாக நிற்கும் உரிச்சொற்கள் திணை, பால் இடம் காலம் காட்டும் இடைச்சொற்களொடு இணைந்தபின் அவை பெயர்ச்சொல் என்றும் வினைச்சொல் என்றும் ஆக்கம்பெற்று விடுதலின் அடைநிலையில் நிற்கும் சொற்கள் உரிச்சொல் என்னும் தகவு சிதையாமல் நிற்கும் எடுத்துக்காட்டாக நனிபேதை, தவப்பெரியன், தடந்தோள், கடிமணம் எனவரும். இங்ஙனம் அடையாக வரும் நனி, தவ, தட, கடி என்பவையே நால்வகைச் சொற்களுள் ஒன்றாக நிற்கும் உரிச்சொற்களாம்.

எனவே பெயர், வினை, இடை ஆகிய சொற்களுக்கு அடிச்சொல்லாக நிற்கும் உரிச்சொல் நிலை வேறு. பெயர்வினைகளுக்கு அடையாக நிற்கும் நிலைவேறு என்பது போதரும். தத்தம் பொருள் தரும் உரிச்சொற்கள் இடைநிலை இறுதிநிலை இடைச்சொற்களொடு கூடிப் பெயர்ப் பொருளையும்

வினைப்பொருளையும் தருமிடத்துப் பெயர்ப்போலி—வினைப்போலி எனப்படும். அஃதாவது தவ என்னும் மிகுதிப்பொருள் தரும் உரிச்சொல் அம் என்னும் இறுதி நிலைபெற்றுத் தவம் என்றும் சி என்னும் இறுதிநிலை பெற்றுத் தவசி எனவும் வருமிடத்துப் பெயர்ப்போலி எனப்படும். சால் என்னும் மிகுதிப் பொருள்தரும் உரிச்சொல், சால்பு எனப்பெயராயும், சான்றான் என வினையாயும் வரும். ஏனையவும் பொருந்துமாற்றான் இவ்வாறுவரும்.

உரிச்சொல்லின் மூலம் ஒரு நேரசை மொழியாக நிற்கும். அஃதாவது உயிர், உயிர்மெய்கள் குறில், நெடில் தனித்தும் ஒற்றடுத்தும் நிற்கும். அவற்றுள் பொருள்தருவன நிரம்பிய உரியடி என்றும் பொருள் பயவாதன நிரம்பா உரியடி என்றும் கொள்ளப்படும் நிரம்பா உரியடிகள் பொருள் தருதற்கேற்ப மேலும் ஓர் உயிரையோ உயிர்மெய்யையோ ஏற்று நிரம்பிவரும் இதனைத் தொல்காப்பியம். "உயிரும் புள்ளியும் இறுதியாகிக் குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி நெறிப்படவாராக் குறைச் சொற்கிளவி" (தொல்–குற்–புண–76) எனக் கூறுகின்றது. சில எடுத்துக்காட்டுகள் வருமாறு :– ஆ(பசு) கா.(சோலை) கால்(காற்று) ஆல்(மரம்) நா, பூ, போ, நெல், செல், காண், கேள், இவை நிறையுரிச் சொல்லடிகள், உ,எ,கி,கே, அட்,கச், போத்–பாக் இவை நிரம்பாத குறை உரியடிகள் இவற்றொடு ண், ல், ள், உ என்னும் ஓரெழுத்தைச் சேர்க்க உண்,எல், கிள், கேள் அடு, கச்சு, போது, பாக்கு என நிரம்பும். ஒரு நேரசையாக நிற்கும் குறையுரி அடிச்சொல்லொடு எழுத்துக்கள் இணையுமிடத்து நெடிற்பின்னும் நெடில் ஒன்றின் பின்னும் உயிரும், உயிர்மெய்யும் வரின் அவை ஈரசையாயும், குறில், குறில் ஒற்றின்பின் உயிர், உயிர்மெய்கள்வரின் அவை நிரையசையாயும் நிரம்பி நிற்கும். சில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு:–

உற் என்னும் குறையுரிச் சொல் உறு, உற என உகரம், அகரம் பெற்று நிற்றல் நிறப்பியநிலை. அது உற்று, உற்ற உற்றது, உறுதல், உறல் எனவரின் வினையும் வினைப்பெயருமாம், உறவு, உறவை, உறவொடு என உருபேற்கும் நிலையில் பெயராம் உறுபொருள், உறுகால் என அடையாகவரின் உரிச்சொல்லாம். கா என்னும் ஒரெழுத்தொருமொழி. குறிப்படிப்படையில் தோன்றிச் சோலையையும், காவுதடியையும், நிறுத்தலளவையையும் உணர்த்திப் பெயராயும் என் உயியரைக்கா. இதனைத் தோன்மிசைக்காவு என ஏவல்வினையாயும் காத்தல் எனத்தல் விகுதியொடு கூடித்தொழிற் பெயராயும் காத்தான், காக்கிறான், கரப்பான் என இடைநிலை இறுதிநிலை இடைச்சொற்களொடு கூடி முற்றுவினையாயும் இவளிவட்காண்டிகா என முன்னிலை இடைச்சொல்லாயும் வந்தது. இவை போல்வன அடைஉரிச்சொல்லாக

வாரா. ஆர் என்னும் புள்ளியீற்று நிறை உரிச்சொல் குறிப்படியாகத்தோன்றி ஆத்திப்பூவையும், கொன்றையையும் வண்டிச் சக்கரத்தின் உறுப்பையும் உணர்த்திப் பெயராயும் இடைநிலை இறுதி நிலை இடைச் சொற்களொடு கூடி ஆர்த்தான்,ஆர்ந்தான் எனவினை முற்றாயும் ஆர்க எனவியங்கோளாயும் "எல்லா உயிரொடும் செல்மார் முதலே" என அசையிடைச் சொல்லாயும் வந்தது. 'வள்' என்னும் நெறிப்பட வாராக் குறையுரிச்சொல் குறிப்படியாகத் தோன்றி பொருட்குறை நிரப்பும் எழுத்துக்கள் கூட வளி, வளை, வளம் வளார் வள்ளி, வள்ளை வள்ளல், வளவன் என்னும் பெயர்ச்சொற்களுக்கு அடிநிலையாயும், வள்வார்முரசம் எனப்பெயரடையாயும் வள்வள் எனக்குரைத்தநாய் என ஓசைக் குறிப்பிடைச் சொல்லாயும் வட்டு, வட்டை, வட்டம் என்பவற்றிற்கு மூலமாயும் வந்தது.

பரவ், பழிச் என்னும் உரிச்சொற்கள் உகரம் பெற்றுப் பரவு பழிச்சு, என ஏவல் வினையாயும் பரவல், பழிச்சல் எனத் தொழிற்பெயராயும் பரவினான் பழிச்சினான் என வினைமுற்றாயும் வந்தன – 'பர் என் என்னும் உரியடி. பரவை (கடல்) பரப்பு (நிலம்) எனப் பெயராயும் பரவு பரப்பு என வினையாயும் வரும். இங்ஙனம் உரிச்சொற்கள் பல்வேறு கோணங்களில் நிற்றலை அறிவியற் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்தறிந்த தொல்காப்பியர் உரிச்சொல்லின் பொதுவிலக்கணத்தைப் பினவருமாறு கூறுகின்றார்.

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடுமாறி
ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட்கு உரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபிற் சென்று நிலை மருங்கின்
எச்சொல்லாயினும் பொருள் வேறுகிளத்தல்(உரி–1)

இந்நூற்பா உரிச்சொற்களுக்குரிய பொதுவிலக்கணத்தை நான்கு கூறாக உணர்த்துகின்றது. அவை வருமாறு :–

(1) உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு என்னும் உணர்வடிப்படையில் தோன்றும் (2) தனித்து நிற்பதோடன்றிப் பெயராதற்கு முதனிலையாயும், வினையாதற்கு முதனிலையாயும் தன்வடிவம் தடுமாறும் இயல்பினதாக நிற்கும் (3) வடிவான் ஒன்றுபட்டு நிற்கும் சொல் ஒன்றே பலபொருட்கு உரித்தாகத் தோன்றி வரும் (4) ஒருபொருளுக்கே பல உரிச்சொற்கள் உரிமையுடையனவாக நிற்கும் என்பனவாகும்.

அவற்றின் பொருள்நிலையை நன்குணர்ந்த நல்லாசிரியர் அருகியனவாய் வழக்கில் பெரிதும் பயின்று வழங்கப்பெறாத சொற்களை எடுத்து அவற்றின் பொருளைக் கூறுமிடத்து அவை எச்சொல்லாக இருப்பினும் முன்னர்ப் பயின்று வழங்கப்படும் சொற்களொடு சார்த்திக் கேட்போர் பொருளைத் திரிபின்றி உணருமாறு விளக்கிக் கூறுதல் வேண்டும்.

"தத்தம் மரபின் சென்றுநிலை மருங்கின் எச்சொல்லாயினும்" என்றது பெயர்வினைகட்கு முதனிலையாக வருபவை பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் பிரிந்து சென்று விடுதலின் தனித்தும் பெயர்வினைகட்கு அடையாயும் நிற்கும் உரிச்சொற்களையாம். உரிச்சொற்கள் பெயர்வினைகட்கு முதனிலையாகவும் பெயர்ப்போலியாகவும் வினைப் போலியாகவும் தனித்தும் பெயர்வினைகட்கு அடையாயும் வந்து இயற்சொல், திரிசொல் திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகை இலக்கியச் சொற்களாக நிற்றலின் அவற்றைச் சுட்டி எச்சொல்லாயினும் எனப்பட்டது. இவ் இலக்கண நெறிமுறைமைகளைச் சில எடுத்துக்காட்டுவாயிலாகக் காணலாம்.

"உறு" என்னும் உரிச்சொல் குறிப்பு அடிப்படையில் தோன்றியதாகும் உரிச்சொல்லாக நிற்குமிடத்து இதன் பொருள் மிகுதி (அளவில் மிக்கது) என்பதாகும் இஃது உறுபுனல், உறுவளி எனப் பெயரடையாக வருமிடத்து இப்பொருளைத் தரும். மற்று உறுதி உறுவர், உறுகண், உறுப்பு உறவு உறுதல் உறீ உறை எனவெவ்வேறு இறுதி நிலை இடைச்சொற்களைப் பெற்றும், உற்று, உற்றார் உற்ற என ஒற்று இரட்டித்தும் உறற்க எனப்பிறிதுபிறி தேற்றும் வரும் அங்ஙனம் வருங்கால் பெயர்க்கும் வினைக்கும் முதனிலையாக நின்று பல்வேறு பொருட்கு உரிமை பூண்டுவருதலைக் காணலாம். உறு என்பது பெயர்வினைகட்கு முதனிலையாக நிற்குமிடத்துப் பொருந்துதல், அடைதல், செல்லுதல், சேர்த்தல், மோதுதல் வருந்துதல் முதலிய பொருள்களையும் அடை உரிச்சொல்லாக நிற்குமிடத்து மிகுதி என்னும் ஒரே ஒரு பொருளையும் தருதலை உணரலாம்.

இங்ஙனம் உரிச்சொல்லாக நிற்குமிடத்து ஒருபொருளாயும் பெயர்வினைகட்கு முதனிலையாக நிற்குமிடத்து வேறுபொருளையும் தருவனவற்றை வெளிப்படை உரிச்சொல் என்றும் கூறுவர். இவற்றைச் சில எடுத்துக்காட்டு வாயிலாகக் காண்போம்.

'கொள்' என்னும் வினையடியுரிச்சொல்லுக்கு, ஏற்றல் அகப்படுத்தல் என்பவைபொருள் இது கொள்(கொள்ளு) கொள்கை கொள்ளல், கொள்ளி, கொளை, கொள்ளை எனப்பெயராயும் கொண்டான், கொள்ளான் எனவினையாயும் வருமிடத்தும் குறிக்கோள் மாறுகோள் கோள்வல்லார், கொள்கலம் எனத்தனித்துவருமிடத்தும் ஒரே பொருளில் நிற்றலைக் காணலாம்.

மாலை என்னும் உரிச்சொல் இவறன்மாலையன் என்னுமிடத்துத் தன்மை என்னும் பொருளும் மாலை வந்தான் என்னுமிடத்து காலப்பொருளையும், மாலையணிந்தான் என்னுமிடத்துப் பொருட்பெயரையும் உணர்த்திற்று. 'கழி' என்பது உரிச்சொல்லாக வருமிடத்து கழிகண்ணோட்டம் என மிகுதிப் பொருளையும் உப்பங்கழி என்னுமிடத்து இடப்பொருளையும் பொழுது கழிந்தது என்னும் நீக்கப் பொருளையும் தருகின்றது. இங்ஙனம் உரிச்சொற்கள் பல்வேறு நிலைகளில் வருதலின் தொல்காப்பியர் பல உரிச்சொற்களை எடுத்துக் காட்டி இருவகை நிலைகளையும் விளக்குகின்றார்.
ஓய், கவர்பு, உறு, கழி – போல்வன வெளிப்படவாரா உரிச்சொற்கள்
நல், வெல், கெழு, கொழு – போல்வன வெளிப்படை உரிச்சொற்கள்
மழ குழ, நொசி, நுழை – போல்வன பெயரடையா கவரும் உரிச்சொற்கள்
பழுது நன்று, வயா – போல்வன வினையடையாக வரும் உரிச்சொற்கள்
உரு, வறிது, பயப்பு, சாயல் – போல்வன பெயர்ப் போலியாகவரும் உரிச்சொற்கள்.
வம்பு, துவன்று, ஏற்றம், படர் – போல்வன வினைப் போலியாகவரும் உரிச்சொற்கள்
குரு, கெழு, தட, கய, நளி – போல்வன பண்புணர்த்தும் உரிச்சொற்கள்
கம்பலை, சிலைத்தல், இரங்கல் – போல்வன இசையுணர்த்தும் உரிச்சொற்கள்
உறு, தவ, நனி, பையுள், சிறுமை – போல்வன குறிப்புணர்த்தும் உரிச்சொற்கள்
உகப்பு, உவப்பு, வியல், வய – போல்வன ஒருபொருளுணர்த்தும் உரிச்சொற்கள்
மத, மட, கடி – போல்வன – பல பொருளுணர்த்தும் உரிச்சொற்கள்

உரிச்சொற்களின் தோற்றத்திற்கு அடிப்படை இருதிணைப் பொருள்களையும் உணரும் உணர்ச்சி. அவ்வுணர்ச்சி சிந்தையைப் பற்றுமிடத்து ஒலிவடிவம் பெறும் அவ்வடிவம் அறிவின் அடிப்படையில் மொழியாக வெளிப்படும். உணர்வு ஐம்பொறிவாயிலாக மனத்தைப் பற்றி எழுவது புலன்களுள் கண்ணும் செவியும் தலையாயவை இதனை மெய்ப்பாட்டியலுள்

"கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடைமாந்தர்க்கல்லது தெரியின்
நன்னயப்பொருள் கோள் எண்ணரும் குரைத்தே" என ஒதுமாற்றான் உணரலாம். அதனான் அப்பொறிகளுக்குரிய இசையையும் பண்பையும் சிறப்பித்து ஏனைய புலன்களையும் மனத்தையும் குறிப்பினுள் அடக்கி இசையினும் குறிப்பினும் பண்பினும் சொற்கள் தோன்றி வருமென்றார் எனவே எல்லா உரிச்சொற்களும் இம்மூன்றனடிப்படையில் தோன்றும் எனத்தெளிதல் வேண்டும். ஒரு சொல் இம்மூன்றனுள் ஒன்றோ அல்லது இரண்டோ அல்லது மூன்றோ சிறந்திருக்கும் உரையாசிரியன்மார் சிறப்பான ஒன்றனை மட்டும் சுட்டிப்பொருள் விளக்கம் செய்து போந்தனர்.

நிரம்பிய உரிச்சொல் – நிரம்பா உரிச்சொல்

மொழிக்கு முதலாகவரும் என வரையறுக்கப் பெற்ற உயிர் 12 உயிர்மெய் 84 ஆகிய 96 எழுத்துகளின் பின் மொழி இறுதியில் வாரா எனப் பெற்ற க் ச் ட் த் ப் ற் ங் ஏழு புள்ளியும் வந்து ஓரசையாக நிற்குமிடத்து அவை பொருள் நிரம்பி நில்லா. அவை மேலும் ஓர் உயிரையோ உயிர்மெய்யையோ கூடித்தாம் நிரம்பிய உரிச்சொல்லாகும். மொழி இறுதியில் வரும் எனப் பெற்ற ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்னும் பதினொரு புள்ளியும் மெய்யும் குற்றிலுகரமும் கூடி நிற்குமிடத்துப் பெரும்பாலானவை பொருள் தந்து நிரம்பிய உரிச்சொற்களாக நிற்கும் சில குறையுரிச்சொற்களாக நிற்கும். எடுத்துக்காட்டாக 'ஆ' என்னும் உயிரெழுத்தின் பின் பதினெட்டுப் புள்ளிமெய்களைச் சேர்த்து நிறுத்துமிடத்துப் பின்வருமாறு அமையும். அவற்றுள் நிறை உரிச்சொல் தவிர்ந்தவை ஓர் உயிரையோ உயிர்மெய்யையோ கூடி நிரம்பும்.

ஆக் குறை : உயிர்; உயிர்மெய் சேரின் ஆகு – ஆக்கை என நிறையும்
ஆங் குறை X ; உயிர்மெய் சேரின் ஆங்கு என நிறையும்
ஆச் குறை : உயிர்; உயிர்மெய் சேரின்
ஆசு,ஆசை ஆச்சி, ஆச்சா என நிறையும்
ஆஞ் குறை : X ; உயிர்மெய் சேரின் ஆஞ்சி என நிறையும்
ஆட் குறை : உயிர்; உயிர்மெய் சேரின்
ஆடி,ஆடு,ஆடை ஆட்சி என நிறையும்
ஆண் நிறை : உயிர்; உயிர்மெய் சேரின்
ஆண், ஆணி,ஆண்டு என நிறையும்
ஆத் குறை : உயிர்; உயிர்மெய் சேரின் ஆதி, ஆத்தி ஆதன் என நிறையும்
ஆந் குறை : X ; உயிர்மெய் சேரின் ஆந்தை என நிறையும்

ஆப் குறை : X ; உயிர்மெய் சேரின் ஆப்பு என நிறையும்
ஆம் நிறை : உயிர்; உயிர்மெய் சேரின்
ஆம்(நீர்) ஆமை, ஆம்பி என நிறையும்
ஆய் நிறை : உயிர்; உயிர்மெய் சேரின் ஆய்(தாய்) ஆய்ச்சி என நிறையும்
ஆர் நிறை : உயிர்; உயிர்மெய் சேரின்
ஆர் (முத்து) ஆரை, ஆர்ப்பு என நிறையும்
ஆல் நிறை : உயிர்; உயிர்மெய் சேரின்
ஆல்(மரம்)ஆலி, ஆலை என நிறையும்
ஆவ் குறை : உயிர்; உயிர்மெய் சேரின் ஆவி என நிறையும்
ஆழ் நிறை : உயிர்; உயிர்மெய் சேரின் ஆழ்(ஆழ்தல்)ஆழி என நிறையும்
ஆள் நிறை : உயிர்; உயிர்மெய் சேரின் ஆள்(ஒருவர்)ஆளி என நிறையும்
ஆற் குறை : உயிர்; உயிர்மெய் சேரின் ஆறு – ஆற்று என நிறையும்
ஆன் நிறை : உயிர்; உயிர்மெய் சேரின் ஆன்(பசு) ஆனி, ஆனை,
என நிறையும்

இம்முறையில் மொழி முதலாகவரும் 96 எழுத்துக்களை நிறுத்திப் பதினெட்டும் புள்ளி மெய்களைச் சேர்ப்பின் 1728 . அடிச் சொற்கள் வரும் அவற்றுள் நிரம்பிய அடிச்சொற்கள் தவிர்ந்தவற்றிற்கு ஏற்புடைய உயிர், உயிர்மெய்களைச் சேர்க்கப் பொருள் தருவன வெல்லாம் பெயர் – வினைகட்கு ஏற்குமாற்றான் முதனிலையாக (பகுதியாக) நிற்கும். இடைநிலை இறுதிநிலை இடைச்சொற்களைச் சேர்ப்பின் திணைபால், இடம், காலம் காட்டும் பெயர்ச்சொல்லாகவும் வினைச் சொல்லாகவும் வரும். வாய்பாட்டளவில் பொருள் நிரம்பாத குறையுரி அடிகளுடன் பொருந்தும் உயிர், உயிர்மெய்யின் பின் பதினெட்டுப் புள்ளிமெய்களைச் சேர்ப்பின் சிலநிரம்பி நிற்கும் சில நிரம்பாமலிருக்கும். இவற்றிற்கு நிரம்பும் முறையில் எழுத்துக்களைக் கூட்டல் வேண்டும்.

கக்–கக்கு	கத்–கது	கல்–(மலை)
கங்–கங்கு	கந்–கந்து	கவ்–(கௌ)
கச்–கச்சை	கப்–கப்பு	கழ்–கழி
கஞ்–கஞல்	கம்–(நீர்) (தொழில்)	கள்–களி
கட்–கடி	கய்–(கை)	கற்–கறி
கண்–(விழி)	கர்–கரி	கன் – கனி

எனவரும்.

இவற்றுள் கங்கு, கச்சை, கந்து, கப்பு, கம், என்பவை பெயராயும் கக்கு, கஞல், கது, கவ் என்பவை வினையடியாயும் ஏனைய கடி கண், கய், கரி கல் கழி, கள், கறி, கனி என்பவை பெயராயும் வினையடியாயும் வரும். வருமாறு கங்கு கரையில்லாத கடல், கச்சை கட்டினான், கப்பும் கிளையுமாகமாக வளர்ந்தது. கம்மாளன், கம்மியன் எனவும் கக்கினான், கஞலும், கதுவினான், கவ்வினான் எனவும், கல்மலை, நிலத்தைக்கல்லினான் எனவும், –கழிகானல் பொழுது கழிந்தது. கள்ளுண்டான், களித்தான் கறி சமைத்தான், மிளகைக் கறித்தான், கனிதின்றான், பழம் கனிந்தது எனவும் வரும்.

பொருளும் பொருளுணர்வும்

நிரம்பிய உரிச்சொற்கள் சிலவற்றின் பொருள் வெளிப்படையாக நில்லாது. அச்சொற்களின் பொருளை வெளிப்படையான சொற்களால் விளக்குதல் முறைமையாகும். அங்ஙனம் விளக்க எடுத்துக்கொண்ட சொற்கும் பொருள் விளக்கம் செய்வது என்பது ஓர் எல்லைக்கு உட்படல் வேண்டும். மேலும் மேலும் விளக்கிக் கொண்டே செல்லின் அதற்கு எல்லை இல்லை குறிப்பு பண்பு என்னும் உணர்வினாற் படைத்துக்கொள்ளப் பெற்ற காரணக் குறியீடுகளே தவிர. பொருளுக்கும் அச்சொற்களின் எழுத்தொலிகட்கும் நேர்முக இயைபுயாதுமில்லை. இதனைத் தொல்காப்பியம் "பொருட்குப் பொருள் தெரியின் அது வரம்பின்றே" (உரி–95) என்கின்றது. அஃதாவது 'யாண்' என்னும் உரிச்சொல் வெளிப்பட வாராத சொல் இதன் பொருள் கவின் என்பதாகும்" யாணுக்கவினாகும்" இதனை விளக்கும் நூற்பா கவின் என்பதற்குப் பொருள் தெரியாத ஒருவன் கவின் என்பதன் பொருள் யாது? என வினவின் அழகு என்று விளக்கலாம். அதன் பொருள்யாது என மீண்டும் வினிவின் முருகு' எனலாம். இவ்வாறு வினாவிக்கொண்டே செல்லின் வினா முற்றுப்பெறாதாகலின் வினவியோன் உணரும் வண்ணம் பொருளை விளக்க வேண்டும் இதனைத் தொல்காப்பியம் "பொருட்குத் திரிபில்லை உணர்த்தவல்லின்"(உரி 96) என்கின்றது.

உணர்த்தும் முறைமையாவது! கடுங்காற்று என்ற விடத்துக் கடும் என்பதன் பொருளை ஒருவன் உணர இயலாதபோது. கடுமையான காற்று மிகுதியான காற்று என விளக்குதல் வேண்டும். அவ்வழியும் அவன் உணரானாயின் புயல் போன்ற பெருங்காற்று என்னும் உவமவாயிலாகவோ மரங்களெல்லாம் சாயுமாறு வீசும் பெருங்காற்று என்னும் விளக்க உரையாலோ உணர்த்தல் வேண்டும். அவ்வளவிலும் உணரானாயின் பெருங்காற்று வீசுமிடத்து அவனைக் கொண்டு சென்று நிறுத்துவது தவிர வேறு வழியில்லை.

அதனான் சொல்லின்பொருள் அதனை உணர்வோரின் கல்வி, அறிவு, துய்ப்பு ஆகியவற்றை ஒட்டியே அமையும். இதனைத் தொல்காப்பியம் "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" (உரி–97) என்கின்றது.

உரிச்சொற்கள் யாவும் இசை, குறிப்பு, பண்பு என்னும் உணர்வடிப்படையில் உயர்ந்தோரான் படைக்கப் பெற்றுள்ளமையான் அவையாவும் அக்காரணங்களையுடையனவே என்பது போதரும். எனினும் சில சொற்கள் இசை குறிப்பு பண்பு என்பனவற்றுள் எதனடியாகப் படைக்கப்பெற்றவை எனத் தெளிவாக விளங்குதலில்லை. சிலவற்றுள் இரண்டும் சிலவற்றுள் மூன்றும் அமைந்திருக்கும். அவை எல்லாம் எல்லாச் சொற்களிலும் வெளிப்படையாகத் தோன்றுவதில்லை அதனான் சொற்களுள் இடுகுறி என்பது யாதுமில்லை. சிலவெளிப்படையாக விளங்கும். சில விளங்காஎல்லாம் காரணம் பற்றியவையே இதனைத் தொல்காப்பியம்

மொழிப்பொருள் காரணம் விழிப்பத் தோன்றா (உரி 98) என்கிறது. இதனான் சமற்கிருதத்திற் போலத்தமிழில் இடுகுறிப்பெயர்களும் உண்டுகொல் என ஐயுறற்க என வலியுறுத்தப் பெறுகின்றது. சில எடுத்துக்காட்டுகள்

கம்பலை, சும்மை, சிலைத்தல் போன்றவை இசை (ஒசை அடிப்படையில் தோன்றியவை. கம், சும், சிலை (சில்) என்பவை ஒலிக்குறிப்புணர்த்தும் உறுகால், தவப்பெரியன், பையுள் உற்றான் சிறுமையுற்றான் என்றாற்போல்பவை மிகுதி, துன்பம், அவலம் ஆகிய பொருள் உணர்த்தும் அவற்றின் கண் அப்பொருள் கண்டுணரப்படுதலின் இவை போல்வன குறிப்படிப்படையில் தோன்றினவையாம், தடமருப்பெருமை, குருமணித்தாலி பசலையுற்றாள் என்பவற்றுள் தட, குரு, பச என்பவை அவ்வப்பொருளில் அமைந்துகிடக்கும் பண்பினைத் தெளிவாகக் கட்டுதலின் இவை பண்படிப்படையில் தோன்றியனவாகும்.

நளி என்பது நளியிரு முந்நீர் என வருமிடத்து நிறைவையும் செறிவையும் ஒருங்கு சுட்டுதலின் இவைபோல்வன பண்பும் குறிப்பும் ஒருங்குடையனவாகும்.

அழுங்கல் என்னும் உரிச்சொல் ஆரவாரம் என்னும் பொருளில் இசைபற்றியும் வருந்துதல் என்னும் பொருளில் குறிப்புப் பற்றியும் வருதலின் "கம்பலை சும்மை கலியே அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும். என்றார் ஆசிரியர்

அவ்வாறே "கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பொருள" என்று கூறிப் பின்னர் "நிறுத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப" எனவும் "மதவே மடனும் வலியுமாகும்" என்று கூறிப்பின்னர், "மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே" என்றும் விளம்பினார்.

இனி, பெயர்ப்போலியாயும் வினைப் போலியாயும் ஆக்கம் பெறும் உரிச்சொற்களுள் சில ஓரசையாய் நின்று சாரியை போலப் பின்ஒட்டுப்பெற்றும் ஈரசைகளாயும் இரண்டு அடிச்சொற்களாலும் அமைந்து வரும். சில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு :-

உறு என்பது குறிப்படிப்படையில் மிகுதிப் பொருளுணர்த்தும் ஓர் உரிச்சொல் இதன் மூலச் சொல் உற் அது சாரியைபோல ஓர் உகரத்தைப் பெற்று உறு என அமைந்தது. 'எறுழ்' என்பது வலிமைப்பொருள்தரும் உரிச்சொல்: இஃது ஏறு+ஊழ் என்னும் இரண்டு மூலங்களால் இணைந்து ஒருநிரையசையாக நின்றது. 'இன்னல்' என்பது துன்பம் என்னும் பொருள்தரும் ஓர் உரிச்சொல் இஃது இன்+அல்-(இன்=இனிமை. அல் எதிர்மறைச் சொல் - இனிமை அல்லாதது என்பது பொருள்) என்னும் இருசொற்கால் ஆனதொரு உரிச்சொல். இங்ஙனம் பிரித்து நோக்குதல் சொல்லாக்க மரபுகளை உணர்தற்குரிய நெறியே தவிர நிலை மொழி வருமொழியாக நின்று புணர்ந்தவையல்ல. ஒரு தனிச்சொற்களேயாம் இதனைத் தொல்காப்பியம் எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல் பின்றே" (உரி) என்கிறது. இவண் என்றது உரிச்சொற்களை உணர்த்தி நின்றது இக்கோட் பாட்டினை அன்னவையெல்லாம் மருவின் பரத்திய; புணரியல் நிலையிடை உணரத்தோன்றா (தொல்-குற்-புண-76) என எழுத்ததிகாரத்துள் வலியுறுத்தினார் ஆசிரியர். உற்+உ என்பது உற்று என்றும் எறு+ஊழ் என்பது ஏறுவூழ் என்றன் றே வரல் வேண்டும் அதனான் ஒருசொற்புணர்ச்சிகளை மருவின் பரத்திய என்று உணர்த்தினார்.

செல்லல் என்பது உரிச்சொல்லாக நிற்குமிடத்துத் துன்பம் என்னும் பொருளைத்தரும் இப்பொருள் இச்சொல்லின் கண் எவ்வாறு அமைந்தது இதனைப் பிரித்தால் செல்+அல் எனப்பிரியும். பொருள்காணின் செல்=இடி அல்=அலைத்தல். இடியைப் போல அலைத்தல் செய்வது எனக் காணலாம். அல்லல் என்பது துன்பம் என்னும் பொருள்தரும் ஓர் உரிச்சொல் இப்பொருள் இதன்கண் எவ்வாறு அமைந்துள்ளது. அலைத்தல் என்பதன் முதனிலையாகிய அல் என்பது இரட்டித்து மிக்கத்துன்பம் எனப் பொருள் தருதலைக் காணலாம் 'அல்' என்பது துன்பப் பொருள் தருதலை அலந்தான், அலமந்தான் அலக்கண் அலமரல் அலுப்பு என்னும் சொற்களால் உணரலாம்.

நன்னூலார் கருத்து

பவணந்திமுனிவர் தாம்பயின்ற வடமொழி நூல்களுள் உரிச்சொல் என்னும் கோட்பாடு இன்மையானும் இளம்பூரணர் உரைவழித் தொல்காப் பியத்தைக் கற்றமையானும், சமண முனிவர்கள் இயற்றிய சொற்பொருள் தொகுப்பாகிய நிகண்டுகளுள் உரிச்சொல் நிகண்டு என்பதும் ஒன்றாகலானும். உரிச்சொல் என்பது பண்புப் பெயர் விளக்கம் எனக்கருதி நன்னூலில் உரிச்சொல்லியலை அமைத்துப் பின்வருமாறு கூறுகின்றார்.

ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை
ஒருவாசெய்யுட் குரியன உரிச்சொல். (நன்–உரி–1)

என்றும் பண்பு என்பதனை விளக்குமிடத்து

உயிர் உயிர் அல்லதாம் பொருட்குணம் பண்பே. (நன்–உரி–2)

என்றும் கூறுகிறார். அவற்றை வகுத்துக் கூறுமிடத்துத் தொழிற் சொற்களை தொழிற் பண்பு எனக்கூறி அமைத்து இறுதியாக

இன்னது இன்னுழி இன்னணமியலு
என்றிசை நூலுள் குண குணிப்பெயர்கள்
சொல்லாம் பரத்தலின் பிங்கல முதலா
நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே'' (நன் –உரி–19)

எனக் கூறிச்சென்றார்.

ஒருமொழியில் அமைந்துள்ள சொல்லாக்க மரபுகளையும் நெறிமுறைகளையும் எடுத்துக்காட்டிப் புதிய சொற்களைப் படைத்துக் கொள்வதற்குவழிக்காட்டும் உரிச்சொல்லிலக்கணத்தை ஓர்ந்து கொள்ளாத தொல்காப்பிய உரையாளர்களால் திசைமாறிய உரிச்சொல் இலக்கணம் பவணந்தியாரால் புத்தேளிர் நாட்டில் இறைகொண்டது.

-----

11. எச்சவினைக் கோட்பாடுகள்

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனக்கருத்தரங்குக் கட்டுரை

எச்சவினை என்னும் பண்புத்தொகை மொழி நிறைவுறாத வினைச் சொல்லைக் குறிக்கும், குறையாக நிற்கும் கால(வினை)ச் சொல் என்பது இதன் பொருள் தொகை என்னும் சொல் கூடியமைதலையும் மறைந்து நிற்றலையும் இடத்திற்கேற்ப உணர்த்திவருதலைப்போல எச்சம் என்னும் சொல்லும் ஒரு பொருளின் கூறுகளுள் சில குறைவுபட்டிருத்தலையும் ஒன்றனது முழுமையால் ஒரு பகுதி பிரிந்து குறைந்து நிற்பதையும் பொருள்

நிலைக்கேற்ப உணர்த்திவரும் (தொல்+எச்=34) தொல்காப்பியத்துள் வினையெச்சம் பெயரெச்சம் என்பவை குறியீட்டு நிலையில் முதற்பொருளிலும் கொண்டு முடியும் நிலையில் இரண்டாவது பொருளிலும் அமைந்துள்ளன.

வினைச்சொல் :– வினைச்சொல் என்பது வழங்குதற் பயத்தவாய் இடப்படும் பெயர்ச் சொற்களான் சுட்டப்படும் இருதிணைப்பொருள்களின் செயல்பற்றியோ அவற்றின் தன்மை, குணநிலைகள் பற்றியோ வழங்கப்படும் குறியீடாகும் செயலும் தன்மைநிலைகளும் அப்பொருள்களின் புடைபெயர்ச்சி (நிலை மாற்றம்)யை அடிப்படையாகக் கொண்டவையாகும். அவற்றுள் செயல் பற்றிய புடைபெயர்ச்சி என்பது ஐம்பொறிகளானும் மனத்தானும் அறியவும் உணரவும்படும் நிலையில் அசைவு அல்லது நிலைவேறுபடுதலை உடையதாகும் தன்மை நிலைபற்றிய புடைபெயர்ச்சி என்பது அப்பொருள் கொண்டுள்ள அல்லது பெற்றுள்ள பண்பு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு பிறிதொருநிறைவினைச் சொல்லான் விளக்கம் பெறும் நிலையினை உடையதாகும்.

எ.டு : சாத்தன் நடந்தான் நடக்கிறான் நடப்பான் நடவான், உண்டான் பதித்தான் அறிந்தான் எனச் செயல்பற்றிவருவனவும், சாத்தன், நல்லன், கரியன் குழையன் எனத்தன்மையும் உடைமையும் பற்றிவருவனவாகும். சாத்தன்நல்லன் முதலியவை குறிப்பு வினைமுற்றுக்களாம் அவை. நல்லனாயினான், நல்லனாவான், நல்லனாகிறான் எனத் தெரிநிலை வினைகளான் விரியும்.

அங்ஙனம் அறியவும் உணரவும்படும் நிலை மூவகைக் காலக் கூறுகளோடு தொடர்புடையதாகலின் புடைபெயர்ச்சி என்பது காலத்தொடு கூடிய நிலையினை உடையதாகும் அங்ஙனம் காலத்தொடு கூடித் திணை பால் இடம் உணர்த்தி நிற்கும் சொற்களே வினைமுற்றுச் சொற்கள் எனப்படும. கலமுணர்த்தாமல் தொழில் வேறுபாடுகளை மட்டும் உணர்த்தும் நிலையில் (நடத்தல், உண்ணல், இருத்தல்) தொழிற்பெயர் அல்லது வினைப்பெயர் எனப்பெறும். தொழிற் பெயர்களின் முதனிலையொடு கால முணர்த்தும் உறுப்புக்கள் அமையின் அவை தெரிநிலைவினை எனப்பெறும் பொருட்பெயர்களை முதனிலையாகக் கொண்டு விகுதி பெற்று ஒரு எழுவாய்க்கும் பயனிலையாகவருவன குறிப்புவினை எனப்பெறும்.

குறிப்பு வினைகள் மூன்று காலத்திற்கும் பொதுவாக நின்று ஆதல் என்னும் ஆக்கவினையொடு புணர்ந்து ஒருகாலத்திற்குரியவாக வரும் சாத்தன் நல்லனாயினன், நல்லனாகின்றான் நல்லனாவான், நல்லனாகான் *என்றாற்போல வரும்.*

ஒருவினை முதலின்றி வினை நிகழாதாகலின் வினை என்பது கருத்தாவொடு தொடர்புற்றே தன்னைப் புலப்படுத்தும் கருத்தா தன்மை முன்னிலை படர்க்கை என்னும் இடம்பற்றி நிற்கும் கருத்தா ஐம்பாலாக அமைந்துள்ளமையான் முழுமையானதொரு(முற்று) வினைச்சொல் தெரிநிலைவினையாயின் தொழில்நிலை காலம் பால் எண் இடம் என்னும் ஐந்து உறுப்புக்களோடு அமைந்திருக்கும் குறிப்புவினையாயின் காலம் குறிப்பாகவும் ஏனைய பொருட்பெயர் பால் எண் இடம் வளிப்படை யாகவும் காட்டி நிற்கும். பால் என்பது ஆடூஉ, மகடூஉ பல்லோர் ஒன்று, பல என்பனவாம் அவையே ஒருமை பன்மை என்னும் எண்களையும் உணர்த்தும் வினைச்சொல்லுள் பால் உணர்த்தும் விகுதியே இடத்தையும் உணர்த்தும் எனவே அவ்வுறுப்புக்களைச் சொல்வடிவிற்காணுமிடத்து தொழில் பற்றிய உறுப்பு முதனிலையாயும் காலம் பற்றிய உறுப்பு இடைநிலையாயும் பாலிடம் காட்டும் உறுப்பு இறுதிநிலையாயும் நிற்கும் குறிப்புவினையும் தொழிற் பெயர் தவிர்ந்த ஏனைய ஐவகைப் பெயர்களும் முதனிலையாக நிற்கும் காலம் குறிப்பாகவும் ஏனைய பாலிடங்கள் வெளிப்படையாகவும் நிற்கும். காலம் மேல் வரும் விளக்கவினையாற் புலப்படும்.

வினையெச்சம்– பெயரெச்சம். தெரிநிலை குறிப்பு என்னும் இருவகை *வினைமுற்றுக்களும் காரணப்பெயராக* அமையுமிடத்து அவைவினை யாலணையும் பெயர் எனப்படும். அம்முறையில் தெரிநிலை வினைச்சொல் பாலிடங்காட்டும் இறுதிநிலை குன்றியவிடத்து வினையெச்சப் பெயரெச்ச விகுதிகளை ஏற்று வினையெச்சமாகவும் பெயரெச்சமாகவும் நிற்கும் வினைமுற்று விகுதி குன்றிய விடத்து வினையெச்சமாயும் வினையாலணையும் பெயர் விகுதி குன்றிய வழிப்பெயரெச்சமாயும் நிற்றலின் அவ்வக்குறியீட்டினைப் பெறுகின்றன. குறிப்புவினை முற்றுக்கள் பெயரடியாகத் தோன்றுவனவாதலின் அவை விகுதி குன்றிய நிலையில் பெயராக நின்றுவிடும் அன்றி இன்றி என்னும் சொற்களைத் தவிரக் குறிப்புவினையெச்சம் பெயரடியாகத் தோன்றாது பெயரெச்சம் மட்டுமே தோன்றும் எ.டு. நல்ல மாணவன், கரிய குதிரை, பெரிய கடல் எனக் குறிப்புவினைப் பெயரெச்சம் வரும் பெருங்கடல், கருங்குதிரை என்னும் பண்புத்தொகைகள் விரியுமிடத்துப் பெயரெச்சமாகவே விரியும்.

தெரிநிலை வினைமுற்றுச் சொற்களில் பாலிடங்காட்டும் விகுதி குன்றி எச்சமாகின்ற நிலையில் சிலவிகுதிக்ளை ஏற்கும் அவற்றை, வாய்பாட்டு அமைப்பில் இலக்கணநூல் கூறும் அவையாவன :– செய்து, செய்பு, செய்யூஉ, செய்யா, செயின், செய, செய்யிய, செய்யியர் செயற்கு என்பனவாம் இவையே யன்றி முன்பின், கால்,வழி என்றாற் போன்ற இடைச்சொற்களும் விகுதிநிலையில் வரும் முற்றுச் சொற்களில் உள்ள பால் இடங்காட்டும் விகுதிகள் குன்றி எச்சமாக நிற்கின்ற நிலையில் இதுவினையெச்சம், இது பெயரெச்சம் என்று உணருமாறு அவை ஓரிரு எழுத்துக்ளுடன் கூடியோ இறுதி விகாரப்பட்டோ செம்மையுறும் அங்ஙனம் கூடிநிற்கும் அவ்அசைகளை அவற்றின் விகுதிகளாகக் கூறுதல் இலக்கணமரபாகும்.

முற்றுச் சொற்களின் இடைநிற்கும் உறுப்புக்களே காலங்களை வரையறுத்துணர்த்துகின்றன. அங்ஙனம் இடைநிலைகளாலன்றி குடுதுறு, கும்டும் தும்றும் உம் என்னும் இறுதி நிலைகளும் காலமுணர்த்திவரும் உம் ஈறு இடத்திற்கேற்ப முற்றாயும் பெயரெச்சமாயும் வரும்.

உண்டல் உறங்கல் என்னும் தொழில்களை ஒன்றற்கு உரியதாக வரையறுக்கும் விகுதிகள் கால இடைநிலைகளை அடுத்து வரும் அன், ஆன், அள் ஆள், அர் ஆர், து று டு அ ஆ வ, ப ஆகிய பாலுணர்த்தும் விகுதிகள் ஆகும். ஆதலின் அவ்விகுதிகளொடு கூடியவை ஒன்றற்குரிய முற்று வினையாக அமையும் அவ்விகுதிகள் நீங்கிய வழி அவை பாற்பொதுவாக ஆகி விடுகின்றன. அதனான் எச்சவினைகள் பொதுப்பட நின்று முடிக்கும் சிறப்பு வினை, சிறப்புப் பெயர் ஆகியவற்றின் பால்களுக்கு உரியனவாக நிகழ்கின்றன. அவற்றுள் வினையெச்சவினைகள் தாம் கொண்டு முடியும் வினைமுற்றின் பொருட்சூழலுக்கேற்ப வடிவத்திரிபினையும் பொருளமைதியை பெறும்.

அம்முறை பற்றி அவற்றை நூலோர் வாய்ப்பாட்டு வடிவங்களாகவும் குறிப்பிடைச்சொற்கள் இணைந்த கூட்டுச் சொற்களாகவும் வகைப்படுத்துக் கூறுகின்றனர் அவ்வகையில் தொல்காப்பியம் கூறும் வினையெச்ச வடிவங்கள் பற்றி இனிக்காண்போம்.

வினையெச்சவாய்பாடுகள் :– தொல்காப்பியம் செய்து, செய்யூஉ, செய்பு, செய்தென, செய்யியர் செய்யிய செயின் செய, செயற்கு என்பவற்றை விதந்தும் செய்யா என்பதனை உடம்பொடு புணர்த்தியும் ஒன்பதும்

ஒன்றும் ஆகப் பத்து வாய்ப்பாட்டு வடிவங்களையும், பின், முன், கால், வழி கடை இடத்து என்னும் ஆறு இடைச்சொற்களை இணைப்பிடைச் சொல்லாகவும் கூறுகின்றது. அன்னபிற என்பதனான் சிலவற்றை வழக்கு நோக்கிக் கொள்ளுமாறும் கூறுகின்றது. அவ்வகையில் உரையாசிரியன்மார் வான், பான், பாக்கு ஆல், எல், உம் மல், மே, மை என்பனவற்றை எடுத்துக் காட்டுகின்றனர். அவற்றுடன் போது, பொழுது உடன், அளவில் படி ஆறு வண்ணம் தொறும், இல் கையில் எனவரும் பெயர்களையும் வினை எச்ச இணைப்பு இடைச்சொல்லாகக் கொள்ளலாம் எனச் சில ஆய்வாளர் கூறுகின்றனர். வாய்பாட்டுச் சொற்களின் இறுதி இடைச்சொல் என்னும் நேசக்கிற் காணின் அவை து, ஊ, உ, பு,து என இயர் இய ஆன் இன் அ, அற்கு ஆ ஏ என்னும் வடிவில் உள்ளமை காணலாம்.

தெரிநிலைப்பெயரெச்சம் :— தொல்காப்பியத்துள் பெயரெச்சவினை செய்யும், செய்த என்னும் இரண்டு வாய்பாடுகளாகவும் பிற்காலநூல்களில் செய்த செய்கின்ற செய்யும் என்னும் மூன்று வாய்பாடுகளாகவும் கூறப்பட்டுள்ளன. அவற்றின்கண் த, கின்ற, உம் என்பவை விகுதி இடைச்சொற்களாக அமைந்துள்ளன. இவை முற்றுச் சொற்களில் காலமுணர்த்தும் இடைச்சொற்களாக அமைந்திருப்பவையேயாகும். இவை அறுவகைப்பெயர்ச் சொற்களைக் கொண்டுமுடியும். இவை செய்தவன், செய்கின்றவன் செய்பவன் என்னும் வினையாலணையும் பெயர்களின் விகுதிகுன்றிய குறை வடிவங்களே என்பதை அறியலாம். இனிக் குறிப்பு வினைப் பெயரெச்சம் நல்லகுதிரை, புதிய நூல் என அகரவிகுதிபெற்று மூன்றுகாலத்திற்கும் பொதுப்பட நிற்கும் (பிற விளக்கம் பின்னர்க் கூறப்படும்)

எச்சங்களின் கால உறுப்பு : வினைச்சொற்களில் காலமுணர்த்தும் இடைநிலை இறுதிநிலைகளை முற்றாக வரையறுத்தற்காகாமையான் தொல்காப்பியம்'' வினைசெயல் மருங்கின் காலமொடுவருநவும்'' என உய்த்துணர்ந்து கொள்ளுமாறு கூறிச் சென்றது. எனினும் உரையாசிரியன்மார் ஓரளவு வரையறை செய்து த்ட், ற் இன் என்பவை இறந்தகாலத்திற்கும் ஆநின்று கின்று கிறு என்பவை நிகழ்காலத்திற்கும் ப் வ் க் என்பவை எதிர்காலத்திற்கும் உரிய இடைநிலைகளாக வரும் என்று கூறியுள்ளனர். இறுதிநிலையாகிய விகுதிகளுள் து தும் ப என்பவை இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் டு, டும் என்பவை இறந்தகாலத்தையும் கு, கும், இ, மார் என்பவை எதிர்காலத்தையும் உம் நிகழ்வு எதிர்வுகளையும் உணர்த்துவனவாக விளக்கியுள்ளனர் அவ்வாற்றான் வினையெச்சங்களும் கொண்டு முடியும் சொற்பொருளுக்கு ஏற்பக் காலத்தை விளக்குகின்றன. இனி வினையெச்ச வாய்பாடுகளை முறையாகக் காண்போம்.

வாய்பாடென்பது தேமா புளிமா என்பன போலப் பொருண்மை பற்றியதாகும். வடிவு பற்றியதன்று எனினும் வடிவ ஒற்றுமையும் சிறுபான்மை காணப்படும்.

செய்து :— பார்த்து வந்தான், கேட்டுச் சென்றான் நின்று பார்த்தான் என்பவற்றுள் பார்த்து, கேட்டு, நின்று என்பவையும் அஞ்சி ஓடி போய் என்பனவும் செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சமாம். செய்து (செய்+த்+உ) என்பதில் த் கடந்த காலத்தை உணர்த்தும் உறுப்பாயும் 'உ' எச்சநிலையை உணர்த்தும் விகுதியாகவும் அமைந்துள்ளன. இறந்த காலத்தை உணர்த்தும் தகரமெய்யை ஏற்க இயலாத வினையடிகள் இன் என்பதின் கடைக்குறையாகிய இகரத்தையும் ஏற்கும். இவ் இகரம் ஓரெழுத்து வினையடிகளின்கண் யகர ஒற்றாகத் திரிந்து நிற்கும். அவ்வாற்றான் அஞ்சி, ஓடி, போய் என்பவை செய்து என்னும் எச்சமாக அமைகின்றன. உரையாசிரியன்மார் இவற்றை உகரத்தின் திரிபாகக் கருதுவர். மொழியியல் நோக்கில் அவர் கருத்துப் பொருந்துமாறில்லை.

செய்யூஉ :— (இஃது அளபெடை வடிவாகவே இருத்தல் வேண்டும் இதன் அமைப்பினை ஓராமல் சிலர் அளபெடைக் குறியீட்டை நெகிழ விடுவர்) இது செய்து என்னும் வாய்பாட்டு எச்சப் பொருளில் அளபெடை வடிவமாக வரும் வாய்பாடாகும். காணூஉ(கண்டு) உடீஇ(உடுத்து) உரைஇ(உரைத்து) என இறந்தகாலம் பற்றி வரும். அவ்இறந்தகால நிகழ்ச்சியின் விரைவு இடையீடின்மை ஆகியவற்றை உணர்த்துவது இதன்பயனாகும்.

செய்பு :— இதுவும் செய்து என்னும் வாய்பாட்டுப் பொருளில் சிறிது வேறுபட்டு "ஏர்கொடிப் பாசரும்பு பரிய ஊர்பு இழிபு நெய்தல் மயக்கிவந்தன்று" (ஐங் 101–2) தெரிபு தெரிபு குத்தின ஏறு(கலி103) புரிபு புரிபு தொகுத்தனர் தொழூஉ(கலி–104) எனவரும். இவ் எச்சம் உணர்த்தும் தொழில் முடிக்குஞ் சொற்குரிய தொழிலுக்குத் துணையாக ஒருங்கு நிகழும் காலக்குறிப்புடையது. மேலும் இது

"படரடைபு நடுங்கப் புலம் பொடுவந்த புன்கண் மாலை" (நற் 117–6) ஏதுப் பொருட்டாகவும் வருதலின் இறந்த காலத்திற்குரிய தகர ஒற்று நீங்கிப் பகர ஒற்றாக அமைந்துளது எனலாம். இவ்எச்சத்தின் நுட்பத்தைக் கருதாமல் உண்குபுவந்தான் என்றாற் போல செய்து என்னும் வாய்பாட்டுப் பொருளிலேயே சிலர் ஆளுவர்.

செய்து, செய்யூஉ, செய்பு என்னும் இம்மூன்றும் தரம் கொண்டு முடியும் வினை நிகழ்ச்சிக்கு முன்னிகழ்வதாக உள்ளமையின் பொதுவாக இறந்தகாலத்திற்குரியவையாக ஓதப்படுகின்றன. இம்மூன்றும் தம் வினை முதல் வினையோ டேயே முடியும். சினைவினையாயின்தம் முதல் வினையொடும் முடியலாம் என்பது நூலோர் கொள்கை. அவ்விதியினின்று நெகிழ்ந்து வருவனவற்றைச் செய என்னும் எச்சத்திரிபாகவும் முற்றுவாய்பாட்டின் திரிபாகவும் கொண்டு விளக்குவர். இதற்கு வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய (சொல்) என்பதை விதியாகக் காட்டுவர்.

சான்றோர் பல்கி–நாடு புன்புலத்ததுவே(புறம்–117) ஞாயிறுபட்டு *வந்தான்.* எனவருவனவற்றைச் செயவெனச்சமாகத் திரிப்பதற்கு ஒவ்வா. 'கூவுவித்து' எனச் செயப்பாட்டு வினையாக்குவார் சிவஞானமுனிவர் அதுவும் பொருளமைப்பிற்கு ஒவ்வாமையறியலாம். செயவெனச்சம் காரணப் பொருட்டாக வருதலின் ஒவ்வாமை கருதி முற்றாகவே விரிப்பர். அது கோழி கூவியது. பொழுதும் புலர்ந்தது என்னும் இருதொடர்களை ஒருங்கிணைக்குமிடத்து நிகழும் குறைபாடாகலின் இவ்வாறு வருவனவற்றை வழுவமைதியாக அமைக்கலாம்.

யான் வந்து அவன் யோனான். எனப் பேச்சு வழக்கில் வரும் செய்தென்னும் வாய்பாடு யான் வந்ததனால் என்னும் பொருளுடையதாயின் 'செய்பு' என்பதன் திரிபாகக் கொள்லாம். வந்த பின் போனான் என்பது பொருளாயின் வந்தபின் என்னும் பெயரெச்சத்தொடரின் மரூஉவாகக் கொள்ளலாம்.

யான் வந்து பன்னாட்களாயின. என்றாற் போல்வன யான்வந்தேன். அதன்பின் பன்னாட்களாயின என்னும் இருதொடர்கள் இணைந்த கலவைத் தொடராகலின் இவ்வாறு வருவனவற்றை வழுவமைதித் தொடராகக் கொள்ளல் தகும். யான்பாடி அவன்பாடினான் என்றாற் போல் வருவனவற்றையும் அவ்வாறே கொள்ளலாம். யான் சொல்லி அவன் எழுதினான் என்பவை போல்வன யான் சொல்ல அவன் எழுதினான் எனச் செம்மையுறுவதற்கு ஏற்பனவாதலின் அவ்வாறு வருவன வழூத் தொடர்களேயாம்.

இவையிரண்டும் வியங்கோட்பொருளிலும் வரும், ஆண்டு இவை வினையெச்சமாகா வினைமுற்றுக்களே யாகும் செய்யியர் என்பது தொழிற் பெயராகவும் வரும். கடுவை நவைப்படீஇயர் மாதோ அக–145–14 இறீஇயர்

யான் வந்து பன்னாட்கள் ஆயின இப்பொழுது, யான்உண்டு பன்னாட்களாயின இனி உண்பேன் உண்ணேன் முன்பு இங்குவந்தேன். அதன்பின் பன்னாட்கள் ஆயின உங்களை முன்பு கண்டிருந்தேன்.

செய்தென : இது செய்தென்னும் வாய்பாட்டின் பின் என் என்னும் இடைச்சொல் இணைந்தவடிவமாகும். இது முடிக்குஞ்சொல்லான் உணரப்படும் தொழில் விளைவிற்குக் காரணமாதலை உணர்த்தி இறந்தகாலம் பற்றி வருகின்றது. எ.டு. உண்டெனப்பசி கெட்டது. எனினும் என என்பது என என்னும் இடைச்சொற்பொருளைத் தாராமல் காரணப்பொருள் தந்து நிற்றலின் உண்டேன். புக்கேன் என்னும் தன்மைவினை பொருள்தந்து நிற்றலின் உண்டேன். புக்கேன் என்னும் தன்மை வினை விகுதியாகிய ஏன் என்பது முதல் குறுகி அகரத்தொடு கூடிக் காரணப்பொருள் தரும். வினையெச்சவிகுதி இடைச்சொல்லாக மூன்றிடத்திற்கும் பொதுவாக அமைந்ததுள்ளது. எனக்கருதலாம். இது மேலும் ஆராய்தற்குரியது. ச.அகத்தியலிங்கம் இதனை வினைஎச்சமாகக் கொள்வது அவ்வளவு பொருத்தமாக இல்லை என்பார்(மொழியியல்) சோலை புக்கென வெப்பம் நீங்கிற்று என்பது யான் சோலை புக்கேன் அதனான் வெப்பபம் நீங்கிற்று என்னும் தொடர்களின் இணைப்பாக நிற்றலைக் காணலாம்.

செய்யியர், செய்யிய : இவை செய் என்னும் முதனிலையொடு இயர் இய என்பவை இணைந்து முடிக்குஞ் சொல்லான் உணரப்படும் தொழிலுக்குத் தாம் காரணம் என்பது படவருகின்றன. இவற்றில் உள்ள இகரம் எதிர்காலம் உணர்த்தும் விகுதியாகவும் அகரம் எச்சத்தை உணர்த்தும் விகுதியாகவும் அமைந்துள்ளமை காணலாம். இவை கொடு, செல் என்பனபோன்ற முதனிலைகளொடு வருமிடத்துக் கொடீய கொடீயர் செலீய, செலீயர் என நீண்டு வரும். அளபெடுத்தும் இந்நீட்சி சொற்பொருள் கவலாமைப் பொருட்டென்பது விளங்கும். ஒத்த பொருளில் வரும் இவற்றை இரண்டுவாய்பாடாகக் கொண்டமைக்குத் தெளிவான காரணம் தெரியவில்லை. எனினும் இயர் என்பதனை உயர்திணைப் பொருளிலும் இய என்பதனை அஃறிணைப் பொருளிலும் ஆளுதல் வேண்டி அமைத்துக் கொண்டதாகக் கருதலாம்.

என் உயிரே(புறம்–210–9) என்பவை வியங்கோள். பசலை உணீஇயர் வேண்டும். (குறு–27–4) என்னுமிடத்துத் தொழிற்பெயராக அமைகின்றது.

செயின் : இவ்வாய்பாட்டெச்சம் பெரும்பான்மையும் காரணப்பொருட்டாய் எதிர்காலம் பற்றிவருகின்றது இதன் கால முணர்த்தும் உறுப்பு வெளிப்படையா இல்லை (செய்+இன்=செயின்–செய்யின்) இன் என்பதே காலத்தையும் காரணத்தையும் ஒருங்குணர்த்தி நிற்கின்றது. பெயர்ப்பொருளை ஏதுப்பொருட்டாக வேற்றுமை செய்யும் இன் என்னும் மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு வினையை அடுத்துவருங்கால் அது வினைஎச்ச உருபாகச் செயல்படுகின்றது எனலாம். எ.டு: மழை பெய்யின் *குளம் நிறையும். மெய் உணரின் வீடு எளிதாம் பேச்சுவழக்கில் இன் இல்லாகத்* திரிந்தும் வரும். நடப்பு இருப்பு காண்பு எனவரும். புகரவிகுதித் தொழிற்பெயரொடு நடப்பின், இருப்பின், காண்பின் எனவரும். இவ்வாறு வருமிடத்துப் பகரம் கால இடைநிலையன்று நடக்கின் இருக்கின் காணின் என்பவையே இவற்றின் *செம்மையான வடிவமாகும்.* நடத்தலின், இருத்தலின் *காணலின் எனத் தல்* விகுதி பெற்ற தொழிற் பெயரொடுவரும் இன் மூன்றாவதன் சொல்லுரு பரவுதல்லது வினை யெச்ச உருபாகாது.

இவ்விகுதி ஆக்கச் சொல்லொடு கூடி ஆயின் என அமைந்து செய்யும் என்னும் *வாய்பாட்டு முற்றுச் சொல்லொடு கூடிக் காணுமாயின், தின்னுமாயின்* என ஒருசொல் நிர்மைத்தாய் காணின் தின்னின் என்னும் பொருள்படவும் வரும். அங்ஙனம் செய்யுமென்னும் முற்றொடுவருமிடத்து இன்(என்) ஏல் எனத் திரிந்து "இன்றுநம் ஆனுள் வருமேல் அவன் வாயில் கொன்றையந்தீங்குழல் கேளாமோ தோழி" (சிலம்பு) என்றாற்போல வரும். ஆய்வாளர் சிலர் 'ஏல்' என்பதைத் தனிவிகுதியாகவே கொள்வர். பொருளான் வேறுபடாமையின் இன்னின் திரிபாகக் கொள்ளுதலே நேரிது.

செய : செயவென்னும் வாய்பாட்டெச்சம் மழைபெய்யக் குளம் நிறைய மழைபெய்தது எனக் காரணகாரியப் பொருளில் இறந்த காலம் பற்றியும் முரசதிரப் போரிட்டான். ஞாயிறுபட வந்தான் என இது நிகழா நிற்க இது நிகழ்ந்தது என்னும் பொருளில் நிகழ்காலம் பற்றியும் உண்ணவந்தான் காணவந்தான் என நோக்குப்பொருளில் எதிர்காலம் பற்றியும் வரும். இவ் அகரம் காலக் குறிப்பைத்தன்னுள் அடக்கிக் கொண்டுவரும். இது சில புள்ளியீற்று முதனிலைகளின்பின்னும் ஒரெழுத்து வினை முதனிலைகளின் *பின்னும்* எதிர்காலத்திற்குரிய ப் வ் க் என்னும் ஒற்றுக்களை ஊர்ந்து கேட்ப, பார்க்க, நோவ எனவரும்.

செயற்கு : இவ்வாய் பாட்டெச்சம் இன்னதற்கு என்னும் நோக்குப் *பொருளில்* எதிர்காலம் பற்றி உணற்குவந்தான், தினற்குவந்தான் *எனவரும்.*

இஃது ஏனையவாய்பாட்டெச்சங்களைப் போலத் தொழில் முதனிலைச் சொல்லை அடியாகக் கொள்ளாமல் தொழிற்பெயரை அடிப்படையாகக் கொண்டுவருகிறது. இதன்விகுதியாக நிற்கும் குகரம் காலத்தை உள்ளடக்கிய எச்சக்குறிப்புணர்த்தும் இடைச்சொல்லாக நிற்கிறது. இதனை நான்காம் வேற்றுமை உருபாக வேசிலர் கருதுகின்றனர்.

உருபேற்ற தொழிற்பெயர்க்கும் இவ்வாய்பாட்டெச்சத்திற்கும் பொருள் வேறுபாடு உண்டு. பின் முன் கால் கடை என்னும் ஈற்றான் வருபவை பொருள் தரும் முறைமையான் வினையெச்ச ஈறாகவும் பெயரெச்சத்திற்கு பெயராகவும் வேறுபடுதல் போல இக்குகரமும் வேறுபடுகின்றது. பின் முன்முதலாயவை எச்சவினை ஈறாக வருமிடத்துப் பெயரெச்சவடிவங்களை மட்டுமே அடுத்துவரும் பெராகவருமிடத்து சாத்தன் பின் – வீட்டின் பின் என எல்லாச் சொற்களையும் அடுத்துவரும் அவற்றைப் போல நான்கனுருபாகிய குகரம் எல்லாப் பெயர்களையும் ஊர்ந்துவரும். இக்குகரம் தொழிற்பெயரை மட்டுமே அடுத்துவரும் உருபு குகரம் கோடற் பொருள் பற்றியே வரும். கூலிக்கு வேலை செய்தான் எனத் தொழிற்பெயரல்லாத பிறபெயர்களை அடுத்துப் பொருட்டுப்பொருளில் வரும். அது கூலிக்கு நெல் உண்ணற்கு உணவு எனப் பெயரொடும் முடியும். உண்ணற்கு வந்தான் என் புழிக்கு வேற்றுமையுருபாயின் தன்னைப் பிறிது ஒருபொருள் உணவாகக் கொள்ளுதற்குவந்தான் எனப் கோடற்பொருள்தரும். வினைஎச்சவிகுதியாயின் உண்ணுதற்பொருட்டு வந்தான் என நோக்குப் பொருள்தரும். இஃது உண்ணவந்தான் என்னும் செயவெனெச்சத்தின் ஒரு கூறொடு ஒப்பவருதலின் வினையெச்சமாகக் கொண்டனர் தொன்னூலோர். இனி, காணவந்தான், சொல்லவந்தான், கேட்கவந்தான் எனும் தொடர்களைவிரிக்குமிடத்து, காணுதற்கு வந்தான், சொல்லுதற்கு வந்தான் கேட்பதற்கு வந்தான் எனக் குகரத்தைக் கொடுத்துவிரித்தலை நோக்கிச் 'செயற்கு' என்னும் எச்சத்தை நாக்கனுருபேற்ற தொழிற் பெயராகவேகருதி விட்டனர் எனலாம். எனவே குவ்வுருபேற்ற தொழிற்பெயர் வேறு செயற்கு என்னும் வினையெச்சம் வேறு என்பது விளங்கும்.

செய்யா : செய்யா என்னும் வாய்பாட்டெச்சம் தான்கொள்ளும் முடிவிற்கேற்பப் பெயரெச்சமாயும், வினையெச்சமாயும் வருகிறது. பெயரெச்சமாதற்கண் எதிர்மறையாயும்–வினையெச்சமாதற்கண் எதிர்மறை உடன்பாடு ஆகிய இருநிலைமைத்தாயும் அமைகின்றது. இதனது இப்பொது

நிலைமை நோக்கியே வினையெச்சவாய்பாடுகளைக் கூறுமிடத்து அவற்றொடு சேர்த்துக் கூறாமல் எழுத்ததிகாரத்தில் (ஆ.222) உடம்பொடுபுணர்த்தி ஆசிரியர் தொல்காப்பியனார் கூறினாராதல் வேண்டும். ஆண்டஃது எதிர்மறைகுறித்து நிற்பதாகவே சேனாவரையர் கருதுகின்றார் என்பது உடன்பாட்டில் வருவதனை அவர் செய்யூ என்னும் வாய்பாட்டின் திரிபாகக் கூறுவதனாற் அறியலாம்.(சொல் 227ஆம் சூத்திர உரை)

இது பெயரெச்சஎதிர்மறையிலும் வினைஎச்ச உடன்பாட்டிலும் இறந்தகாலத்திற்கும் உரியதாக வருகிறது. பெயரெச்சமாக வருமிடத்து தகரம் கெட்டு நிற்பது போல வினையெச்ச எதர்மறைக்கண் து–மல் என்னும் விகுதிகள் கெட்டு நிற்பதாகக் கருதுவர். (பெ–மாதையன்–மொழியியல்–78)

வாய்பாட்டெச்சங்கள் முற்றுவினைகளின் குறைச்சொற்களேயாதலின் அவற்றைக் கால எச்சங்கள் எனப்பொருந்தும். படித்துவிட்டுவந்தான்–படிக்கவைக்க வந்தான் என்றாற்போல்வன. சிறப்புப் பொருள் கருதி இணைவன வாதலின் அவற்றைப் படித்து விடல் படிக்கவைத்தல் என ஒருசொல் நீர்மைத்தாய வினைச்சொற்களாகக் கொள்ளல்தரும்.

தொடர்மொழிவினை எச்சம் : கூட்டுச் சொற்களாக அமைந்து வினைமுற்றுச்சொற்களை அவாவி அவற்றைக் கொண்டுமுடியும். ஒருசாரன இவ்வகை வினையெச்சங்களாகும். இங்ஙனம் காலத்தைக்கருதி மரபாக வருவன வாய்பாட்டு வினையெச்சஇயல்பின எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. இவற்றை

"பின்முன் கால்கடை வழி இடத்து என்னும்
அன்னமர பிற்காலங் கண்ணிய
என்னகிளவியும் அவற்றியல்பினவே" என(சொல்–230)

இறுதிநிலைகளைச் சுட்டிக்கூறுகின்றது. இச்சொற்கள் பெயராயின் வினையெச்சமாதற்கேலாமையான் இவை இறுதிநிலைகளே என்பதும் முதனிலைகள் வேறுள என்பதும் பெறப்படும். அம்முதனிலைகள் பெயர்களாகவோ வினைமுற்றுக்களாகவோ நிற்றற்காகாமையான் அவை பெயரெச்ச வடிவாக அமையும் குறைச்சொற்களே என்பது வழக்கு நோக்கி உய்த்துணரப்படும். அங்ஙனம் பெயரெச்ச வடிவாக அமையும் சொல்லும் இவ்விறுதிநிலைச் சொல்லும் பிளவுபடாமல் ஒன்றி ஒருசொல் நீர்மைத்தாக அமைந்துவினை முற்றுச் சொல்லை அவாவி நிற்குமிடத்து வினைஎச்சமாகச் செயலாற்றுகின்றன. இனி இவற்றின் காலக்குறிப்பினையும் பொருளமைதியையும் காண்போம். காலக்குறிப்பு :

பின் : கற்றபின் நிற்க அதற்குத்தக. எனவும் கூறி நின்றபின் என இது இறப்பு நிகழ்வு எதிர்விற்கு ஏற்ப வருகின்றது.
முன் : மருந்து தின்னாமுன் நோய் தீர்ந்தது–தீரும் என இதுவும் மூன்று காலத்திற்கும் ஏற்ப வருகின்றது.
கால் : வணங்கிநாம் விடுத்தக்கால்–நாடுங்கால் என இஃது இறப்பும் எதிர்வும் பற்றி வருகின்றது.
கடை : தொடர்கூரத் துவாவாமைவந்தக் கடை என இஃது இறந்தகாலம் பற்றி வருகின்றது.
வழி : விடுவழிவிடுவழிச் சென்றாங்கவர் தொடுவழி தொடுவழிநீங்கின்றாற் பசப்பே–ஆடுவழி ஆடுவழி அகலேன் மன்னே. என இது மூன்று காலத்திற்கும் ஏற்பவருகின்றது.
இடத்து : களையுநர் கைகொல்லும் காழ்த்தவிடத்து – உற்றவிடத்துதவுவர்–வருமிடத்துக் காண்மின்–என இது மூன்று காலத்திற்கும் ஏற்பவருகின்றது.

இங்ஙனம் பொருள் கொள்ளாமல் கற்றபின்னர், தின்னும் முன்னர், விடுத்தகாலை, வந்த எல்லையில், ஆடுமிடத்து தாழ்த்தபொழுதில் எனப் பொருள்விரிக்கின் அவை பெயரெச்சமும் அது கொண்டு முடியும் பெயருமாக அமைந்த இருசொற்றொடர்களாகும். பின்முதலியவை பின் வந்தான், முன்சென்றான், அக்கால் வந்தான் (கால்=காலம்) கடைநின்றான், வழிச்சென்றான் இடத்திருந்தான் எனவரின் அவைவினைமுற்றுப்பயனிலை கொண்டு முடியும் பெயர்களேயாம்.

இனி வழக்கின் முன் பயின்றுவரும் பொழுது (போது) அளவு வரை, படி, வண்ணம், ஆறு, தோறும், உடன் முதலாய சொற்கள் செய்த–செய்யும் என்னும் பெயரெச்சங்களின் பின் இணைந்து வினை முற்றுக்களை அவாவி முடியுமிடத்து அவற்றையெல்லாம் மேற்கூறிய இறுதிநிலை இடைச்சொற்களாக ஏற்று அக்கூட்டுச் சொற்களை வினையெச்சங்களாகக் கொள்ளல் தகும் என்பது ஒருசார் ஆய்வாளர் கருத்து (பெ. மாதையன் மொழியியல் 1985) அவை வருமாறு :–

உறங்கும் போது கண்டேன்
சொன்னபொழுதில் வந்தான்
பார்க்குமளவில் மகிழ்ந்தான்
சொன்னவரை செய்தான்
பேசுகின்றவரையில் படித்தான்
அவன் சொன்னபடியால் வந்தேன்

பேசும் வண்ணம் நடக்கிறான்
சொன்னவாறு செய்தான்
எண்ணும் தொறும் மகிழ்ந்தான்
சொன்னவுடன் செய்தேன்.

இத்தொடர்களில் வரும் போது முதலியவற்றை வினைஎச்ச இறுதி இடைச்சொற்களாகக் கொள்ளுதற்குச் சில இடர்பாடுகள் உள.

கற்றபின் என்பது கற்கின் எனவும் தின்னாமுன் என்பது தின்ன எனவும் பொருள் பயந்து நிற்றலைப்போலப் போது முதலியவை பொருள் தந்து ஒருசொல் நீர்மைத்தாக நில்லாமையோடு அவற்றின் பெயர்ப்பொருளோடேயே விளக்கம் செய்யப்படுதலின், போது முதலியவற்றை இடைச்சொல்லாகக் கோடற்கு வாய்ப்பில்லாமற் போகின்றது. உறங்கும் போதில் வந்தான், சொன்னபடியால் வந்தேன் என்னும் தொடர்களில் உள்ளபோதில், படியால் என்பவை போது+இல் எனப் காலப் பெயரும் ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபுமாகவும் படி+ஆல் எனத் தன்மை பெயரும் மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபுமாகவும் அமைந்து அப்பொருள்களையே விளக்கிநிற்றலின் அவற்றைத் தனியொரு இடைச்சொல்லாகக் கொள்ளுதற்கு வாய்ப்பின்மை விளங்கும். இனி

மழைபெய்தால் நெல்விளையும், அவன்கூப்பிட்டதும் வந்தான் அவன் உண்கையில் பார்த்தேன். எனவரும் தொடர்களில் உள்ள பெய்தால் – கூப்பிட்டதும் உண்கையில் என்பவற்றைச் செய்தால் செய்ததும் செய்கையில் என்னும் வாய்பாடாகக் கொள்ளலாம் என்னும் ஆய்வாளர்(பெ.மாதையன் மொழியியல் 19) கருத்துப் பொருந்துமா என்பதைக் காணல் வேண்டும்.

பெய்தால் என்பது பெய்யின் என்னும் காரணப்பொருள் தருதலின் அதனைச் செயின் என்னும் வாய்பாட்டின் உலகியல் திரிபாகக் கோடலே நேரிது (ஆல்பற்றி முற்கூறிய விளக்கம் காண்க) கூப்பிட்டதும் என்பது கூப்பிட்ட அளவில் (கூப்பிட்ட மாத்திரத்தில் என்பது சேரிவழக்கு) என்னும் பொருள்பட நிற்றலின் அளவு என்னும் பொருள் உம்மை இடைச்சொல்லுக்கு உரியதாக நிற்கின்றது. உம்மை இடைச்சொல்லுக்கு எண்ணுப் பொருள் உண்டாதலின் அளவு என்பது அதன் பரியாயப் பெயராக வந்ததாகக் கொள்ளலாம். இவ்உம்மை அவனைக் கண்டதும் ஓடிவிட்டான். என உடன் என்னும் பொருளிலும் வருகின்றது. இவ்உம்மை இடைச்சொல்லை செய்து என்னும் வாய்பாட்டுடன் இணைத்துத் தனி ஒரு வாய்பாடாகக் கொள்ளலாமா என்பது ஆராயத்தக்கது.

இனி உண்கையில் பார்க்கையில் என்பனவற்றை உண்+கையில். பார்+கையில் எனப்பிரித்தல் பிறழ்பிரிப்பாகத் தோன்றுகின்றது. அவற்றை உண்கை+இல். பார்க்கை+இல் எனப்பிரித்தலே நேரிது. உண்கை+பார்க்கை என்பவை கொள்கை என்பனபோலக் கை விகுதி பெற்ற தொழிற் பெயர்களாகும்.

உம் என்பது உடன் என்னும் பொருளில் இடையீடின்மை உணர்த்தலின் கண்டதும் உணர்ந்தான்–கண்டதும் இல்லை கேட்டதும் இல்லை என இருவினைகளொடும் முடிதலின் செய்தென என்னும் வாய்படு போல செய்ததும் என்பதொருவாய்பாடு கொள்ளலாம். அவை இல் என்னும் ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபொடு கூடி நின்று வினைமுற்றுப் பயனிலை கொண்டு முடிந்தன எனலே நேரிது.

இனி, "பின்முன்" என்ற நூற்பாவின் அன்னபிறவாக உரையாசிரியன்மார் கொண்ட வான், பான், பாக்கு, உம், ஆல், ஏல், து(தே) மல், மே மை ஆகியவற்றைக் காண்போம்.

வான்–பான் : இவை பண்ணிய ஈகைப்பயன் கொள்வானடலால் (பரி–7–57) காண்பான்யான் தங்கினேன் (கலி 97–7) என எதிர்காலம் பற்றி முடிக்குஞ்சொல் உணர்த்தும் தொழிலுக்குப் பின் நிகழ்வதாக ஏதுப்பொருள்பற்றி வருகின்றன. எனவே கொள்வான், காண்பான் என்பவற்றில் உள்ள வகரபகர மெய்கள் காலக்குறிப்புணர்த்தி நிற்பன என்பது விளங்குகின்றது. எஞ்சிய ஆன் ஈறே எச்சவிகுதியாக நின்று வினையெச்சப்பொருள் உணர்த்திநிற்கிறதெனலாம். சேனாவரையர் இவற்றை ஆன் ஈறாகவே கூறுதல் கருதத்தக்கது. இவ்எச்சம் காரணப்பொருளில் வருதலான் சொல்லுருபாக மூன்றாம் வேற்றுமைக் கண்வரும் ஆன் என்னும் இடைச்சொல்லே வினையை அடுத்துவந்து எச்சஉருபாக நிற்கின்றது எனக்கொள்ளலாம்.

பாக்கு : இவ் ஈற்றெச்சம் முன்பழந்தமிழிற் காணப்படவில்லை. அஞ்சுதும் வேபாக்கறிந்து கண்ணும் எழுத்தும் கரப்பாக்கறிந்து எனத் திருக்குறளில் பயின்று வருகின்றது. இவற்றைப் பரிமேழுகர் தொழிற்பெயராகவே கொண்டு உரைகூறி விளக்கமும் தருகிறார். இச்சொல்லை ஆயின் இது (பால்+கு=பாற்கு–பாக்கு) பாற்கு என்பதன் மருஉவாகக் காணப்படுகின்றது

இதன் பொருள் குறிப்பிடப்படும் ஒன்றனது பகுதிக்கு என்பதாகும். வேபாக்கறிந்து = வேதலின் பாற்படுதலையறிந்து. அல்லது பரலாதலை அறிந்து எனப்பொருள் விரிதலின் இது வினைஎச்ச மாகாமை அறியலாம். உரையாசிரியன்மார் உண்பாக்குச் சென்றான்–புனல்தரும் செல்வம் தருபாக்குச் சென்றார் எனப் பொருட்டுப் பொருளில் எடுத்துக் காட்டுத்தருதலான் வினைஎச்சமாகக் கொள்ளப்பட்டுள்ளமை தெரிகின்றது. நச்சினார்க்கினியர் பாக்கு என்பதனொடு வாக்கு என்பதனையும் உடன் சுட்டுகிறார். அதனான் இச்சொல் ஆக்கு என்பதன் திரிபாக அவர்கருதினாராதல் வேண்டும். அந்நோக்கில் ஆக்கு என்பது செயற்கு என்பதன் மாற்றுவடிவமாகக் கொள்ள இடந்தருகிறது. இதனைத் தொழிற் பெயர்விகுதியாகக் கோடலே நேரிது.

உம் : நனவிற்புணர்ச்சி நடக்கலும் ஆங்கே (குறிஞ்சிக்கலி–3) நடக்கின் என்பது இதன் பொருளாதலின் நச்சினார்க்கினியர் இதனைப் செயின்ஈற்றின் திரிபாகக் கொள்வார் அளவில், உடன் என்னும் பொருள் பற்றியும் உம் மீறுவருதல் மேற்கூறப்பட்டது.

ஆல், ஏல் என்பவை முன்னர் ஆராயயப்பட்டன. இவற்றை தனிவிகுதிகளாகக் கோடல் அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை.

எதிர்மறை எச்சம் : இருவகை எச்சத்தின் கண்ணும் எதிர்மறை உணர்த்தும் ஆகார இடைச்செல்லின் பின்னர் இணையும் விகுதிகளான் பெரெச்சமும் வினையெச்சமும் அமைகின்றன.

உண்ணாத காணாத எனத்தகரம் எதிர்மறைப் பெயரெச்ச விகுதியாக வருகிறது. இத்தகரம் பெரும்பான்மையும் கெட்டு நிற்கிறது. எதிர்மறை மூன்று காலத்திற்கும் பொதுவாதலின் தகரமெய் ஈண்டுக் காலக்குறிப்பையும் அகரம் எச்ச நிலையையும் உணர்த்துகின்றன எனலாம்.

உண்ணாது காணாது எனவும் உண்ணாமல் காணாமல் எனவும் உண்ணுமேல் காணாமே எனவும் து, மல், மே என்பவை வினை எதிர்மறை வினைஎச்சத்தின்கண் விகுதியாக வருகின்றன. உண்ணா என்பது உண்ணாதே வந்தான் எனவும் வரும். ஆண்டு ஏகாரம் தேற்றம் பொருள் தருவதாக உள்ளது. உண்ணாமே என்பது உண்ணாமை என ஐகாரமாகவும் வருகின்றது. அதனை ஏகாரத்தின் திரிபாகக் கருதலாம்.

உண்ணாது என்பதனை குதிரை உண்ணாது எனவரும். அஃறிணை ஒருமை வினைமுற்றே–முற்றெச்சமாக வருமிடத்துப் பாற்பொதுவாய் ஏனைப்பால்களொடும் வருவதாகக் கொள்ளலாம். மல், மே என்பவை உண்ணா–தின்னா என்னும் அஃறிணைப்பன்மை வினைமுற்றின் பின் ஏற்புப் பொருள்தரும் ஆகும் என்பதன் மரூஉ வாய் (ஆகும்→ஆம்→ம்) அமைந்த மகர ஒற்று அல், ஐ என்னும் அசை இடைச்சொற்களொடு கூடி மல்–மை என எச்சவிகுதிகளாக அமைந்தனவாகக் கருதலாம். வழக்கின்கண் வரும் உண்ணாமலே –உண்ணாமலேயே என்பவற்றுள் உள்ள ஏகாரங்கள் தேற்றப்பொருளினவாகும். இவை எவ்வெவ் வுடன்பாட்டெச்சித்தின் எதிர்மறை என்பது விரிவாக ஆராயப்படல் வேண்டும்.

இதுகாறும் வினையெச்சம் பற்றிக் கூறியகருத்துககள் பெரும்பான்மையும் மரபிலக்கணத்தைத் தழுவியவையாகும். மொழியியல் நோக்கிற்கும் இவை பொருந்தும் அறிஞர் பெருமக்கள் மேலும் ஆராய்வாராக.

இந்நூலாசிரியர் தஞ்சாவூர் கரந்தையில் விசயாம்பாள் சந்திரசேகரனார்க்கு இரண்டாவது மகனாக 18-01-1924இல் பிறந்தார். கரந்தைத் தமிழ்ச்சங்கப் புலவர் கல்லூரியிற் பயின்று 1950இல் புலவர் பட்டயம் பெற்று அக்கல்லூரியிலேயே பேராசிரியராகவும் துணை முதல்வராகவும் பணியாற்றி 1982இல் பணியினின்று ஓய்வு பெற்றார். பின்னர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சங்க இலக்கிய அகராதித்துறையில் பணியாற்றினார். கரந்தைத் தமிழ்ச் சங்கப் பணிகளிலும் நூல் வெளியீடுகளிலும் பங்கேற்றும் "தமிழ்ப் பொழில்" பதிப்பாசிரியராகவும் அமர்ந்து தொண்டாற்றி வருகிறார்.

தஞ்சைத் தொல்காப்பியர் கழகத்தின் தலைவராக இருந்து பல்லாண்டுகள் தொண்டு புரிந்தார். "கரந்தைக் கோவை" முதலிய இலக்கியங்களையும் "புலவருள்ளம்" "ஆதிமந்தி" முதலிய கவிதை நாடகங்களையும் படைத்துள்ளார். இவை தமிழகப் பல்கலைக் கழகங்களில் இளங்கலை, முதுகலைப் பாடலநூல்களாக ஏற்கப்பெற்றுள்ளன. பல்வேறு இயல் இசைக்கருத்தரங்கங்களில் பங்கேற்றுக் கட்டுரைகள் பலவரைந்துள்ளார் பன்னூறு கவியரங்குகளிற் பங்கேற்றும் தலைமை தாங்கியும் கவிதைப் பணியாற்றியுள்ளார் தமிழிசைப் பாடல்கள் பல படைத்துள்ளார் வானொலியில் பல இலக்கியப் பேச்சுக்கள் நிகழ்த்தியுள்ளார். நாடகங்களில் நடித்துள்ளார் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திற்குப் பல நூல்கள் பதிப்பித்துத் தந்துள்ளார்.

தொல்காப்பியம் மூன்றதிகாரங்கட்கும் அறிவியல் நோக்கில் ஆராய்ச்சிக் காண்டிகையுரை வரைந்து வெளியிட்டுள்ளார். தென்னூல் என்னும் பெயரில் புதிய இலக்கண நூலைப் படைத்துள்ளார் முத்தமிழ்த் தொண்டாற்றி வரும் இவருக்கு இலக்கிய மன்றங்கள் பல பாவலரேறு, கவிஞர் கோ செஞ்சொற் கவிவலவன், தொல்காப்பிய பேரறிஞர், தொல்காப்பியச் சுடர், தொல்காப்பியச் செம்மல் முதலிய பட்டங்கள் வழங்கிப் பாராட்டியுள்ளன. தமிழக அரசு பாரதிதாசன் விருதும் மதுரைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பேரவைச் செம்மல் விருதும் வழங்கிச் சிறப்பித்துள்ளன. உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் விருதளித்துப் பாராட்டியுள்ளது.

அன்னைத் தமிழுக்கு அரிய பணிகள் ஆற்றி உலகப் புகழை ஈட்டியுள்ள புலவர் பாவலரேறு பாலசுந்தரனார் வளமெலாம் பெற்று வாழ்க என வாழ்த்துவோமாக.

இந்நாள் இருவகை வழக்கிலும் பயின்று வரும் சொற்களுள் ஏறத்தாழ மூவாயிரம் சொற்களுக்குப் பொருள் விளக்கங்கள் தரும் "மொட்டும் மலரும்" என்னும் மூன்று தொகுதிகளும், எழுத்து, சொல், பொருள், யாப்பு பற்றிய இலக்கணக் கலைச் சொற்பொருள் விளக்க அகராதிகளும் "மொழியாக்க நெறி மரபிலக்கணம்". "மடைமாறிய தமிழ் இலக்கண நூல்கள்" "மொழி இலக்கண வரலாற்றுச் சிந்தனைகள்" "தமிழிலக்கண நுண்மைகள்" என்னும் நூல்களும் வெளிவருகின்றன.

தமிழ்த் தொண்டர் கோ. முத்துப்பிள்ளை- சென்னை.